


Follow us:

வாரவெளியீடு

# தமிழன்

THAMILAN

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 05, இதழ் : 07 சோபகிருது வருடம், ஆவணி மாதம் 03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
(20.08.2023) ஹிஜ்ரி-1445, ஸபர் - 02, 0115886187 - பக்கங்கள் 18+8+8+8

விலை ரூ.130

## ஹோமாகமவில் தீப்பிடித்த இரசாயன தொழிற்சாலைக்கு முறையான அனுமதியில்லை



13 ஆம் பக்கம்

## 'வெடி'மணியம்



2009இல் நரித்தனமாக இந்தியா சிறிலங்காவோடு கைகோர்த்து "தமிழ்மக்களை" கொன்றொழித்த வரலாறை ஒருத்தராலும் மறக்கமுடியாது.

முக்கியமாக இந்திய உளவுத்துறையான "றோ" சிறிலங்காவுக்கு வழங்கிய தகவல்களின் அடிப்படையில்தான் விடுதலைப்புலிகளின் கப்பல்களை அழித்தார்கள்.

இறுதியுத்தத்தில் இந்தியா நேரடியாக களமிறங்கி "இனவழிப்பு" யுத்தத்தின் பங்காளியானார்கள்.

12 ஆம் பக்கம்

# குருந்தூர்மலையில் பொங்கிய தமிழர்!



02 ஆம் பக்கம்

## தொல்லியல் திணைக்கள நிபந்தனைகளைப் பின்பற்றி சிறப்பாக இடம்பெற்றது வழிபாடு

**விஜயரத்தினம் சரவணன்**

முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் பொலிஸார் மற்றும் கல்கமுவ சாந்தபோதி தேரர் ஆகியோரின் குழப்ப முயற்சிகளுக்கு மத்தியில் சைவத் தமிழ் மக்களால் தொல்பொருள் திணைக்களத்தின் நிபந்தனைகளுக்கு அமைவாக மிகச் சிறப்பாக வெள்ளிக்கிழமை (18)... ,

## உள்ளே










## நெல்கொள்வனவு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விசேட நடவடிக்கைகள்

**கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர**



02 பக்கம்



இந்தியாவின் 77ஆவது சுதந்திர தினம் கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் கொண்டாடப்பட்டபோது பாரத மாதாவை உருவகித்து இடம்பெற்ற நர்த்தனக் காட்சி. (படப்பிடிப்பு - சமன் அபேசிறிவர்தன)

## நுண் கடன் பிரச்சினைகள் உலக வங்கியிடம் முன்வைப்பு

**சஜித் ஏற்பாட்டில்**



எதிர்க்கட்சித் தலைவரின் தலையீட்டின் ஊடாக நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையாளர்களின் பிரச்சினைகள் உலக வங்கியிடம் முன்வைக்கப்பட்டன.

நுண், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் நீண்டகாலமாக எதிர்கொண்டுள்ள பல நிதி மற்றும் கடன் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு எடுத்துரைத்தார்.

02 ஆம் பக்கம்

## மாகாண நிர்வாகச் செயற்பாடுகளில் இணைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு

**ஜனாதிபதி ரணில் அறிவிப்பு**



உள்ளூராட்சி சபை, மாகாண சபை மற்றும் மத்திய அரசாங்கம் ஆகிய மூன்று பிரிவுகளிலும் சேவைகள் வழங்குவதில் ஏற்படும் பண விரயத்தைத் தவிர்க்க, இந்த மூன்று பொறிமுறைகளின் செயற்பாடுகளை மையப்படுத்தி, புதிய பொறிமுறையொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

02 ஆம் பக்கம்

## போதைப்பொருளுக்கெதிராக காத்தான்குடியில் ஆர்ப்பாட்டம்



02 ஆம் பக்கம்

## யாழ். துணைவேந்தராக மீண்டும் சிறிசற்குணராஜா



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் ஓகஸ்ட் 28ஆம் திகதிமுதல் அடுத்து வரும் மூன்று ...

02 ஆம் பக்கம்

## "மோடி ஆட்சி பலவீனமான ஆட்சி" மீனவர் மாநாட்டில் ஸ்டாலின் சாடல்



"பிரதமர் மோடியின் ஆட்சியிலும் மீனவர்கள் மீதான தாக்குதல் தொடரவே செய்கிறதென்றால் என்ன அர்த்தம்? மோடி ஆட்சி பலவீனமான ஆட்சி என்று அர்த்தம்" என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் பகுதியில் மீனவர் நல மாநாடு (வெள்ளிக்கிழமை)

02 பக்கம்

## பாராளுமன்றம் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் கூடும்



பாராளுமன்றத்தை எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை கூட்டுவதற்கு கடந்த 11ஆம் திகதி சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

13 ஆம் பக்கம்



## குருந்தூர்மலையில்...

பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அதேவேளை, வெளிமாவட்டங்களிலிருந்து பெருந்திரளான பெரும்பான்மை இனத்தவர்கள் பஸ்கள் மூலம் அழைத்துவரப்பட்டு, குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி அமைக்கப்பட்டுள்ள விகாரையில், பௌத்த வழிபாடுகளும் மேற்கொள்ளப் பட்டன.

இந்நிலையில் குருந்தூர்மலைக்குச் செல்லும் வழிகளிலும், குருந்தூர்மலையைச் சூழவும் பாரிய அளவில் பொலிஸார், கலகம் அடக்கும் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலேயே இந்த வழிபாடுகள் இடம்பெற்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கடந்த மாதம் ஜூலை மாதம் 14ஆம் திகதி குருந்தூர்மலையில் சைவத் தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு முயற்சித்தபோது, பெரும்பான்மை இனத்தவர்களாலும், பௌத்த தேரர்களாலும், பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களத்தாலும் குறித்த பொங்கல் வழிபாட்டிற்கு தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

இந்நிலையில் இவ்வாறு சைவ வழிபாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தப்பட்டதற்காக பெரும்பான்மை இனத்தவர்கள், பொலிஸார், தொல்லியல் திணைக்களம், பௌத்த தேரர்களுக்கு எதிராக முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனால் கடந்த மாதம் 14ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதுடன், கடந்த ஜூலை மாதம் 17ஆம் திகதி சைவ வழிபாடுகளுக்கு இடையூறு ஏற்படுத்தியமை தொடர்பில் வவுனியாவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய காரியாலயத்தில் ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினாலும், அரசியல் பிரதிநிதிகளாலும் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டும் இருந்தன.

அந்தவகையில் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டிற்கு அமைவாக முல்லைத்தீவு பொலிஸார், கடந்த ஜூலை மாதம் 20ஆம் திகதி முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றில் இந்த விடயத்தைச் சமர்ப்பித்தனர்.

குறித்த விடயத்தை ஆராய்ந்த நீதவான், பொலிஸார் மற்றும் தொல்லியல் திணைக்களம் என்பவற்றின் விளக்கங்களைக் கோருவதற்காக இம்மாதம் 08ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்திருந்தார்.

இந்நிலையில் கடந்த 08ஆம் திகதியன்று முல்லைத்தீவு நீதிமன்றில் தமது தரப்பு விளக்கங்களைச் சமர்ப்பிப்பதற்கு மன்றில் முன்னிலையாகியிருந்த தொல்லியல் திணைக்களம், குருந்தூர்மலையில் சைவத் தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ள முடியுமெனவும், தாம் அதற்குத் தடையில்லை எனவும் தெரிவித்திருந்தனர்.

இவ்வாறான சூழலில் குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினரும், தமிழ் அரசியல் பிரதிநிதிகள் சிலரும் இணைந்து, மீண்டும் குருந்தூர் மலையில் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்வதற்கான திகதியை அறிவித்திருந்தனர்.

இவ்வாறு சைவத் தமிழ் மக்களின் பொங்கல் வழிபாட்டிற்கான அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து, பௌத்த தேரர்களும், சில பெரும்பான்மை இனத்தவர்களும் குருந்தூர்மலை ஆபத்தில் எனும் தொனிப்பொருளில் சமூக வலைத்தளங்களில் பதிவிட்டிருந்ததுடன், பொங்கல் வழிபாடு இடம்பெறும் தினமான இம்மாதம் 18ஆம் திகதி மற்றும் 19, 20 ஆகிய திகதிகளில் குருந்தூர்மலையில் பௌத்த வழிபாடுகளுக்கும் பெரும்பான்மையின மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த பொங்கல் வழிபாடு இடம்பெற்றால் இனங்களுக்கிடையில் மோதல்கள் ஏற்பட வாய்ப்பிருப்பதாகச் சுட்டிக்காட்டி கடந்த 16 ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் தொல்லியல் திணைக்களப் பணிப்பாளரால் முறைப்பாடொன்று பதிவுசெய்யப்பட்டிருந்தது.

குறித்த விடயத்தினை அன்றைய தினமே உடனடியாக நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்த முல்லைத்தீவு பொலிஸார், நீதிமன்றிடம் குறித்த பொங்கல் வழிபாட்டிற்கு தடைக்கட்டளை வழங்குமாறும் கோரியிருந்தனர்.

இதனை ஆராய்ந்த முல்லைத்தீவு நீதிமன்று வழிபாட்டுரிமையை தடுக்கமுடியாதெனச் சுட்டிக்காட்டி பொலிஸாரின் தடையுத்தரவுக் கோரிக்கையை நிராகரித்ததுடன், குருந்தூர்மலையில் சட்டத்தை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பொலிஸாருக்கு அதிகாரமிருப்பதாக தெரிவித்தது.

இதனைத் தொடர்ந்து கடந்த 17ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் குறித்த பொங்கல் வழிபாடு தொடர்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் தொல்லியல் திணைக்களம் பொங்கல் வழிபாடுகளுக்கு சில நிபந்தனைகளையும் விதித்திருந்தது.

அந்தவகையில் வெள்ளிக்கிழமை (18) குருந்தூர்மலையில் சைவத்தமிழ் மக்கள் பெருந்திராளாக பொங்கல் வழிபாடுகளுக்காக ஒன்றுகூடியிருந்தனர்.

அதேபோல் நீதிமன்றக் கட்டளையை மீறி குருந்தூர் மலையில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விகாரையில், விசேட பௌத்த வழிபாடுகளை மேற்கொள்வதற்காக வெளிமாவட்டங்களிலிருந்து பெரும்பான்மை இனத்தவர்கள் பல பஸ்களில் குருந்தூர்மலைக்கு அழைத்துவரப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் இனமோதலைத் தவிர்ப்பதற்காக குருந்தூர்மலைக்குச் செல்லும் வீதி நெடுகிலும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததுடன், குருந்தூர் மலைக்குச் செல்பவர்களை வழிமறித்து பொலிஸாரால் பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

அதேபோல் குருந்தூர்மலையைச் சூழ அதிகளவில் பொலிஸார், கலகமடக்கும் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

அந்தவகையில் குருந்தூர்மலைக்கு பஸ்களில் அழைத்துவரப்பட்ட பெரும்பான்மையினத்தவர்கள் குருந்தூர்மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி அமைக்கப்பட்ட பௌத்த விகாரையில் ஒலிபெருக்கியைப் பயன்படுத்தி பாரிய சத்தத்தினை ஏற்படுத்தி வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

இவ்வாறான சூழலில் பொங்கல் வழிபாட்டிற்கு உழவியந்திரத்தில் எடுத்துவரப்பட்ட பொங்கல் பொருட்களை இடைமறித்த பொலிஸார் உள்ளே செல்லமுடியாதென வழிமறித்திருந்தனர்.

அப்போது அங்கு சென்ற முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் பொலிஸாரோடு பேசியதைத் தொடர்ந்து பொங்கல் பொருட்களை குருந்தூர்மலை அடிவாரப்பகுதிக்கு எடுத்துச்செல்ல பொலிஸார் அனுமதித்திருந்தனர்.

தொடர்ந்து பொங்கல் பொருட்கள் குருந்தூர்மலை உச்சிக்கு எடுத்துச்செல்லப்பட்டு, பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தவகையில் தொல்லியல் திணைக்களத்தின் நிபந்தனைகள் பின்பற்றப்பட்டு, நிலத்தில் கற்கள் வைக்கப்பட்டு அதன்மேல் தகரம் வைக்கப்பட்டு, அதன்மேல் மூன்று கற்கள் வைக்கப்பட்டு, விறகுகள் பரப்பப்பட்டு தீமூட்டி பானை வைக்கப்பட்டு பொங்கல் பொங்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உள்ளிட்ட தரப்பினர், தாம் மற்றுமொரு இடத்தில் பொங்கல் பொங்குவதற்கான முயற்சியில் ஈடுபட்டபோது தொல்லியல் திணைக்களத்தினால் அந்த முயற்சி தடுக்கப்பட்டிருந்தது. அதன்போது தொல்லியல் திணைக்களத்திற்கும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்களுக்குமிடையில் வாக்குவாதங்களும் இடம்பெற்றன.

அத்தோடு அங்கு தொல்லியல் திணைக்களத்தின் நிபந்தனைக்கு அமைவாக தமிழ் மக்களால் வாழையிலை வைக்கப்பட்டு அதில் வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், பூக்கள் என்பன வைக்கப்பட்டு சைவ முறைப்படி மடை பரவுதல் செயற்பாடும் செய்யப்பட்டது. அப்போது தமிழ் மக்கள் பொங்கல் வழிபாட்டில் ஈடுபடும் பகுதிக்கு வருகைதந்த கல்கமுவ சாந்தபோதி தேரர், மடைபரவியது தொடர்பில் கேள்வி எழுப்பியிருந்தார், இதனால் கோபமடைந்த தமிழ் மக்கள் தேரரை அங்கிருந்து விலகிச் செல்லுமாறு கூச்சலிட்டிருந்தனர். அப்போது அங்கு சிறிது குழப்பமான சூழல் நிலவியது. பின்னர் பொலிஸாரின் தலையீட்டுடன் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது.

தொடர்ந்து பொங்கலும் அங்கு படையலிடப்பட்டு, குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் திரிசூலம் இருந்த வளாகத்தினைச் சுற்றி வலம்வந்து, பக்தி பாசுரங்கள் பாடி சைவத் தமிழ் மக்களால் மிகச் சிறப்பாக பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தப் பொங்கல் வழிபாடுகளில்ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகிகள், அரசியல் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## "மோடி ஆட்சி ..

முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு, 9,615 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். மாநாட்டில் முதல்வர் பேசியது:

"தமிழ்நாடு மாநில மீனவர் கூட்டுறவு நல இணையமும், மீனவ சங்கங்களும் இணைந்து இந்த மாநாட்டை நடத்துகிறார்கள். பொதுவாக அரச நிகழ்ச்சிகளில் மீனவ சங்கங்களை இணைத்துக்கொள்ள மாட்டார்கள். மீனவர்கள் மாநாடாக இருந்தால், அதில் அரச அதிகாரிகள் இடம்பெறமாட்டார்கள். ஆனால், இரு தரப்பையும் இணைத்து இந்த மாநாட்டை அமைச்சர்கள் ஏற்பாடு செய்துள்ளனர்.

1076 கி.மீ. தொலைவுக்கு மிக நீளமான கடற்கரையைக்கொண்ட மாநிலம் தமிழகம். நமது கப்பல்கள் பல்வேறு உலக நாடுகளுக்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே சென்றதை தாலமிய நிலவியல் கையேடு சொல்லிக்கொண்டிருக்கிறது. கட்டுமரம், நாவாய், தோணி, வத்தை, வல்லம், மிதவை, ஓடம், தெப்பம், டிங்கி, பட்டுவா, அங்கம், அம்பி, திமில் என்று வகைவகையாக கலம் செலுத்தியவர்கள் தமிழர்கள். நம்மை சூழ்ந்துள்ள அனைத்துக் கடல்களிலும் தமிழர்கள் கலம் செலுத்தியிருக்கிறார்கள். உலகப் பயணிகள் பலரும் தமிழகத்தை நோக்கி வந்தார்கள். அந்தவகையில், தமிழகத்தை உலகத்தோடு இணைத்தது கடல்.

மாநிலத்துக்குள் இருக்கும் மீனவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளை நாங்கள் நிறைவேற்றுகிறோம். ஆனால், கடலுக்குள் செல்லும் மீனவர்கள் சந்திக்கும் பிரச்சினைகள் இன்னும் பிரச்சினையாகவே இருக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் இலங்கை கடற்படையால் தொடர்ந்து தாக்கப்படுவதையும், கைதுசெய்யப்படுவதையும், இந்த மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. இது தமிழக மீனவர்களுக்கு இருக்கக்கூடிய தீராத பிரச்சினையாக இருந்து வருகிறது.

இலங்கையில் தமிழர்களின் உரிமைப் போராட்டம் எப்போது தொடங்கியதோ, அப்போதிலிருந்தே தமிழக மீனவர்களைத் தாக்குவதை இலங்கை அரசு வழக்கமாகக் கொண்டுள்ளது. அதன்பிறகாவது தமிழக மீனவர்கள் நிம்மதியாக மீன்பிடிக்க முடிகிறதா என்றால், அதுவும் இல்லை. அதே கைது, தாக்குதல், சித்திரவதை தொடரத்தான் செய்கிறது. அதிலும் குறிப்பாக 2014இல் ஆட்சி மாற்றம் நடந்தது. பாஜக ஆட்சி அமைந்த பிறகுதான் அடக்குமுறைகள் இன்னும் அதிகமாகியிருக்கிறது.

மீனவர்கள் கைது, தாக்குதல், சிறைச்சாலை என்பதை தாண்டி, மீனவர்களின் பல லட்சம் ரூபா மதிப்பிலான படகுகள், அந்த படகுகளை இலங்கை அரசாங்கம் பறித்துச் செல்வது அதிகமாகியிருக்கிறது. மீனவர்களை விடுவித்தாலும் படகுகளை தருவதில்லை. மீனவர்களுக்கு வாழ்வாதாரமே படகும் வலையும்தான். படகுகளை உடைப்பதும், வலைகளை அறுப்பதும் இலங்கை அரசின் வழக்கமாக உள்ளது. இத்தகைய படகுகள் இலங்கை அரசின் உடைமையாகும் என்று சொல்லுமளவுக்கு இப்போது நிலைமை இன்னும் மோசமாகியிருக்கிறது.

2014 பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக, பாம்பனில் பாஜக சார்பில் கடல் தாமரை என்ற போராட்டம் நடத்தப்பட்டது. அதேபோல், தேர்தல் பிரசாரத்தின்போது இங்கு வந்த பிரதமர் மோடி, நாங்கள் ஆட்சிக்கு வந்தால், தமிழக மீனவர் ஒருவர்கூட இலங்கை கடற்படையால் துன்பப்படமாட்டார். தமிழக மீனவர்களுக்கு இலங்கையால் பிரச்சினை. குஜராத் மீனவர்களுக்கு பாகிஸ்தானால் பிரச்சினை. இரு நாட்டு மீனவர்களையும் இணைத்து பேச்சுவார்த்தை நடத்தி நடவடிக்கை எடுப்போம் என்று கூறினார்.

2014க்குப் பிறகு தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தவில்லையா? 2015ஆம் ஆண்டும் தாக்குதல் நடந்தது. 2016ஆம் ஆண்டும் தாக்குதல் தொடர்ந்தது. 2017இல் தங்கச்சிமடம் மீனவர் பிரிட்டோ கொலை செய்யப்பட்டார். தொடர்ந்து தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இன்றும் இலங்கையை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்க இந்திய அரசு பல்வேறு உதவிகளை செய்யக்கூடிய நிலையிலும் தமிழக மீனவர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்கிறது.

ஒவ்வொரு முறையும் ஒன்றிய அரசுக்கு நான் கடிதம் எழுதிய பிறகுதான், அவர்கள் நடவடிக்கை எடுக்கின்றனர். 2020ஆம் ஆண்டுமுதல் இன்றுவரை தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் 48 தாக்குதல் சம்பவங்கள் நடத்தியுள்ளனர். இதில் தமிழக மீனவர்கள் 619 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 83 மீன்பிடி படகுகள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறது. 604 மீனவர்களையும், 24 படகுகளையும் இலங்கை அரசு விடுவித்திருக்கிறது.

இந்த ஆண்டு மட்டும் 74 மீனவர்களை இலங்கை அரசு கைதுசெய்துள்ளது. இதில் 59 பேரை விடுவித்துள்ளனர். ஆனால், 67 மீன்பிடிப் படகுகள் இலங்கையிடம்தான் இன்னும் இருக்கின்றன. பிரதமர் மோடி ஆட்சியில் மீனவர்கள் மீதான தாக்குதல் தொடரவே செய்கிறது என்றால் என்ன அர்த்தம். மோடி ஆட்சி பலவீனமான ஆட்சி என்று அர்த்தம்" என்று முதல்வர் பேசினார்.

## போதைப்பொருளுக்கெதிராக...

போதைவஸ்து பாவனைக்கு எதிராகவும் போதைவஸ்து விற்பனையாளர்களுக்கு எதிராகவும் காத்தான்குடியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒரே நேரத்தில் வீதியில் இறங்கி பாரிய ஆர்ப்பாட்டம் நடத்தியதுடன் சத்தியப்பிரமாணத்திலும் ஈடுபட்டனர்.

காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் காத்தான்குடி பிரதேசத்தில் உள்ள சகல அமைப்புகளுடனும் இணைந்து ஏற்பாடு செய்து இந்த பாரிய ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

காத்தான்குடி முகைதீன் பெரிய மெத்தை ஜும்மா பள்ளிவாயல் மற்றும் புதிய காத்தான்குடி அக்சா ஜும்மா பள்ளிவாயல் ஆகியவற்றிலிருந்து ஆரம்பமான பாரிய கண்டன ஆர்ப்பாட்டமும் பேரணியும் காத்தான்குடி குர்ஆன் சதுக்கத்திற்கு வந்து அங்கு ஒன்றுதிரண்ட மக்கள் அங்கு அமைக்கப்பட்டிருந்த மேடையில் சத்தியப்பிரமாணம் சொல்லிக் கொடுக்கப்பட்டு பல்லாயிரக்கணக்கான மக்கள் போதைக்கு எதிராக சத்தியப் பிரமாணத்தில் ஈடுபட்டனர்.

காத்தான்குடி பள்ளிவாசல்கள், பள்ளிவாசல்களின் நிர்வாகிகள் அரசியல் பிரமுகர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள், இளைஞர்கள் என ஆயிரக்கணக்கான மக்கள் இந்த சத்தியப்பிரமாண நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அண்மைய நாட்களில் காத்தான்குடி பிரதேசத்தில் போதைவஸ்து பாவனை மற்றும் போதைப்பொருள் விற்பனை என்பன அதிகரித்திருப்பதையடுத்து குறித்த போதையிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் முகமாகவே இவ்வாறானது நிகழ்வை நடத்தியதாக காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். துணைவேந்தராக...

ஆண்டுகளுக்கு செயற்படும் வகையில் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

## நுண் கடன் பிரச்சினைகள்...

இதற்கு முன்னதாகவும் நுண், சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் மற்றும் தொழில்முனைவோர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளைச் சந்தித்து தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலையிட்டு சந்தர்ப்பம் வழங்கியிருந்தார். அதன் மற்றுமொரு கட்டமாக, உலக வங்கியின் பிரதிநிதிகள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்கள், தொழில்முனைவோர் நேற்று இவ்வாறு ஒன்றுகூடினர்.

கடந்த கொரோனா காலத்தில் தம்மால் தங்கள் தொழிலை சரியாக மேற்கொள்ள முடியவில்லை என்றும், கடந்த அரசாங்கத்தின் திறமையற்ற ஆட்சி நிர்வாகத்தின் காரணமாக நாடு வங்குரோத்தடைந்தமையால் தங்களின் தொழில்கள் நஷ்டத்தை எதிர்நோக்கின என்றும், இதன் காரணமாக கடனை செலுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாகவும், கடனை செலுத்துவதற்கு சாதகமான வேலைத்திட்டம் ஒன்றை வழங்குமாறும் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மையாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

தற்போதைய அரசாங்கம் மனிதாபிமானமற்ற முறையில் பரேட் சட்டத்தை அமுல்படுத்துவதால் தாம் உட்பட நாடளாவிய ரீதியில் பரந்து கிடக்கும் நுண், சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்கள் மற்றும் தொழில்முனைவோர் அநாதரவாகியுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இந்நிகழ்விற்கு Alejandro Alvarez (Country Manager,I FC), கிரிஷான் அபேகுணவர்தன (Senior Economist, IBRD) மற்றும் அமில தஹநாயக்க (Economist, IBRD) ஆகியோர் கலந்துகொண்டதோடு மற்றொரு பிரதிநிதிகள் குழுவினர் இணையவெளி ஊடாக இணைந்து கொண்டனர்.

இதில் Faris H. Hadad Zervos (World Bank Country Director, Nepal, Maldives and Sri Lanka), டி. எச்.சி.அதுருபனே(Lead Economist, IBRD), திலினிகா பீரிஸ் (External Affairs Officer, IBRD), சவனி ஜயசூர்ய(ET Consultant, IFC), ரிச்சர்ட் வாக்கர், (IBRD) Senior Economist,IBRD) மற்றும் Peter Mousley(Lead Private Sector Specialist, IBRD) ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், நாலக கொடஹேவா, லக்ஷ்மன் கிரியெல்ல, எரான் விக்ரமரத்ன, நிரோஷன் பெரேரா மற்றும் ஹர்ஷன ராஜகருணா ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

## மாகாண நிர்வாகச் ...

மாகாண ஆளுநர்களுடனும் பிரதம செயலாளர்களுடனும் கலந்தாலோசித்து, ஒரு மாத காலத்திற்குள் இது தொடர்பான அறிக்கையைத் தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

மாகாண ஆளுநர்களுடனும், பிரதம செயலாளர்களுடனும் வெள்ளிக்கிழமை (18) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

மாகாண சபை முறைமையுடன் எதிர்கால நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க:

மாகாண சபைகளின் நிர்வாக முறைமை தொடர்பில் கலந்துரையாட நான் உங்கள் அனைவரையும் அழைத்துள்ளேன். மத்திய அரசின் நிர்வாக கட்டமைப்பு தொடர்பிலும் கவனம் செலுத்தி, இதனை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது குறித்து ஆலோசிக்க வேண்டும்.

சில சமயங்களில் உள்ளூராட்சி மன்றம், மாகாண சபை, மத்திய அரசாங்கம் ஆகிய மூன்று பிரிவுகளாலும் ஒரே மாதிரியான சேவைகள் வழங்கப்படுகின்றன. உதாரணமாக, வடிகால் வெட்டுதல், மின் கம்பம் நடல், வீதிகள் அமைத்தல் போன்றவற்றை சுட்டிக்காட்டலாம். இவ்வாறு நடப்பதால் பெருமளவு பணம் வீணாகிறது. அப்படியானால், இந்த மூன்று பொறிமுறைகளின் செயல்பாட்டை மையமாகக் கொண்டு ஒரு புதிய பொறிமுறையை அமைக்க வேண்டும். மாகாண பிரதம செயலாளர்களுடன் கலந்தாலோசித்து ஒரு மாதத்திற்கு முன்னர் அதற்கான புதிய பொறிமுறையொன்றைத் தயாரிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

மாகாண சபைகள் இயங்காததாலும், மாகாண சபைகளில் அமைச்சர்கள் இல்லாததாலும் இன்று மாகாண சபை முறைமையில் மாகாண ஆளுநர்களாகிய உங்களுக்கே முழுமையான ஆட்சி அதிகாரம் உள்ளது. மாகாண பிரதம செயலாளர்களுடன் கலந்தாலோசித்து, ஒரு மாதத்திற்குள் அதற்கான புதிய கட்டமைப்பைத் தயாரிக்குமாறு நான் ஆலோசனை வழங்கியுள்ளேன்.

கடந்த ஆண்டு நாம் மிகப் பெரிய நெருக்கடிகளை எதிர்கொண்டோம். அதை மீண்டும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நாட்டின் பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும் அதே வேளை, நாட்டின் நிர்வாக முறைமையை வழமைக்கு கொண்டுவர வேண்டும்.

குறிப்பாக கீழ்மட்ட சேவைகள் மாகாண சபைகள் ஊடாகவே மேற்கொள்ளப்படுகிறன. மாவட்ட அளவிலான சேவைகள் மத்திய அரசின் கீழ் மேற்கொள்ளப்படுகிறன. இந்த சேவைகளை வழங்கும்போது அதிகாரப்போட்டியின்றி கூட்டாக முன்னெடுக்கப்பட வேண்டும்.

தற்போது நாடு முழுவதும் உணவுப் பாதுகாப்புத் திட்டத்தை அமுல்படுத்தியுள்ளோம். அதன்படி, எதிர்வரும் பெரும் போகத்தில் அதிக விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம். மேலும், மக்களின் ஊட்டச்சத்து குறைபாடு கடந்த ஆண்டை விட குறைவாக இருந்தாலும், அதில் திருப்தி அடைய முடியாது. அஸ்வெசும திட்டம் நாட்டு மக்களின் ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் குறைக்க வழிவகுத்துள்ளது.

குறிப்பாக பாராளுமன்றம் அடுத்த வருட இறுதிவரை செயற்படும் என்பதால் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மாகாண சபை நிர்வாக செயற்பாடுகளில் இணைவதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். ஆளுநருடன் இணைந்து செயல்பட விசேட ஆலோசனைக் குழுவை நியமிக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம் தொடர்பான மாகாண சபை அதிகாரங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டு வருகின்றது. குறிப்பாக, கல்வி, தொழில்பயிற்சி மற்றும் அந்தந்த மாகாணங்களில் புதிய பல்கலைக்கழகங்களை நிறுவுதல் ஆகிய பணிகளிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் மாகாண மட்டத்தில் சுற்றுலா சபைகளை ஸ்தாபிக்க திட்டமிடப்பட்டுள்ளது. முதலீட்டாளர்கள் மற்றும் வர்த்தகர்களை ஊக்குவிக்கும் வகையில் பல வேலைத்திட்டங்கள் எதிர்காலத்தில் மாகாண மட்டத்தில் முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகிறது என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

மத்திய அரசாங்கத்துடன் பணியாற்றும் போது மாகாண சபைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்க ஜனாதிபதி அலுவலகம் ஒத்துழைப்பு வழங்க தயாராக இருப்பதாக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இதன்போது தெரிவித்தார்.

இங்கு கருத்துத் தெரிவித்த மாகாண ஆளுநர்கள், மாகாண சபைக்குட்பட்ட அதிகார எல்லையில் காணப்படும் ஆசிரியர் வெற்றிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதியிடம் எடுத்துரைத்தனர்.

சில பாடசாலைகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் உள்ளதை சுட்டிக்காட்டிய ஆளுநர்கள், சில பாடசாலைகளில் ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக தெரிவித்ததோடு, ஆசிரியர் பரிமாற்றத் திட்டத்தின் மூலம் அதனை சீராக்க சந்தர்ப்பம் வழங்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற கருத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடிக் கட்டிடங்கள், கட்டி முடிக்கப்படாமல் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதால் சில கட்டிடங்கள் சேதமடைந்து வருவதாகவும், அவற்றை சீர்செய்வதற்கான பணிகளை முன்னெடுக்க வேண்டுமெனவும் ஆளுநர்கள் சுட்டிக்காட்டினர்.

இடைநடுவில் கைவிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்த நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், சில திட்டங்களுக்கு இதுவரை நிதி கிடைக்கப்பெறவில்லை எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அத்துடன், மாகாண மட்டத்தில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த சந்தர்ப்பம் வழங்குமாறும் மாகாண ஆளுநர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நிதி அமைச்சின் செயலாளர், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மற்றும் தொடர்புள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் அதிகாரிகள் இந்த கலந்துரையாடலில் பங்கெடுத்திருந்தனர்.

தேவை

பலசரக்கு கடைக்கு அனுபவமுள்ள சிங்களம் வாசிக்கக்கூடிய வேலையாள் ஒருவர் தேவை. உணவு, தங்குமிடம் இலவசம். சம்பளம் 30,000 ரூபாவுக்கு மேல் பேசித் தீர்த்துக்கொள்ளலாம். கிராம சேவையாளர் அத்தாட்சிப்பத்திரத்துடன் வரவும்.

தும்பரை டிரேடர்ஸ் - பொல்கொல்ல
071 6441210 / 0779304956

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
வியாழக்கிழமை 2023.08.17
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5209 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,424,544.00
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 8 3 5 1 0 5

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3451 — சீட்டிழுப்பு திகதி 2023.08.17 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 73,206,491.20
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 01 38 64 75 — விசேட எழுத்து K — இலட்சாதிபதி பவர் சான்ஸ் வெற்றி இலக்கம் 51287

லக்கி 7 — திகதி 17.08.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0035
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 5 7 8 9 5 2 — L7 இலக்கம் 3 3
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,041,681.52

தன நிதானய — தேதி 2023/08/17 — சீட்டிழுப்பு இலக்கம் 1239 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 105,368,262.40
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 11 16 25 33 — விஷேட ஆங்கில எழுத்து B
Double Chance இலக்கம் 32325

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 518 — சீட்டிழுப்பு திகதி 2023-08-17 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,706,838.00
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள் 20 24 48 54 — விசேட இலக்கினம் விருச்சிகம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1557 — 17/08/2023 — 60238 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 404,530,076.00
ஆங்கில எழுத்து A — சுப்பர் இலக்கம் 14 — வெற்றி இலக்கங்கள் 21 35 39 51
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

## நெல் கொள்வனவு...

விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

நெல் கொள்வனவுக்கு சந்தைப்படுத்தல் சபைக்குப் போதியளவு பணம் ஒதுக்கப்படவில்லை. திறைசேரியிடமிருந்து கிடைத்த நிதியைக் கொண்டு ஓரளவுக்கு நெல் கொள்வனவை மேற்கொண்டுள்ளோம். இருந்தபோதும் எதிர்பார்த்த விலை கிடைக்காத காரணத்தினால் விவசாயிகள் நெல்லை விற்பனை செய்வதில் அக்கறை காண்பிக்கவில்லையென்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் அண்மையில் (09) நடைபெற்ற கமத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் நெல் கொள்வனவு குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்த விடயங்களுக்குப் பதில் வழங்கும் வகையிலேயே அமைச்சர் அமரவீர இதனைத் தெரிவித்தார்.

நெல்லைக் கொள்வனவுக்காக விதிக்கப்பட்டுள்ள ஆகக் குறைந்த விலையில் நெல் கொள்வனவு செய்யப்பட்டாலும் அதனை விடக் குறைந்த விலையிலேயே அரிசியை விற்பனை செய்யும்நிலை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு ஏற்படுவதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார். இவ்வாறான பின்னணியில் நெல் கொள்வனவு தொடர்பில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரை யாடி அவற்றைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

அதேநேரம், மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட விவசாயிகள் முற்கூட்டியே விதைப்பினை ஆரம்பிப்பதால் உரங்களைக் கூடிய விலையில் பெற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாக அந்தப் பகுதிகளைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். இதற்கமைய போகம் குறித்து தீர்மானிப்பதற்காக நடத்தப்படும் கூட்டத்தில் போகங்கள் ஆரம்பிக்கப்படும் காலத்தைப் பொதுவானதாகத் தீர்மானித்து அதனை அறிவிப்பது பற்றிக் கவனம் செலுத்தப்படும் என அமைச்சர் பதிலளித்தார்.

அத்துடன், முட்டை உற்பத்தி குறைந்தமையால் முட்டை விலை உயர்ந்ததாகவும், படிப்படியாக உற்பத்தி அதிகரித்து வருவதால் எதிர்காலத்தில் முட்டை விலையைக் குறைக்க முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இக்கூட்டத்தில் அமைச்சர் (வைத்திய கலாநிதி) ரமேஷ் பத்திரண, இராஜாங்க அமைச்சர்களான டி.பி.ஹேரத், விஜித பேருகொட, மொஹான் பிரியதர்ஷன. சில்வா, கே.காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச்.எம்.பௌசி, சந்திம வீரக்கொடி, ஏ.எல்.எம்.அதாவுல்லா, பிரியங்கர ஜயரத்ன, எஸ்.சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், சாணக்கியன் இராசமாணிக்கம், உபுல் மகேந்திர ராஜபக்ஷ, குணதிலக ராஜபக்ஷ, வருண லியனகே, கிங் நெல்சன், கலையரசன், ஜகத்குமார சுமித்திராரச்சி, குலசிங்கம் திலீபன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.




**த.யுவராஜ்**

★ சஜித்தரை பிரதமர் ஆக்குங்கள் என்ற கோரிக்கையுடன் ஐக்கிய மக்கள் சக்தி குழு ஒன்று ஜனாதிபதி ரணிலரை சந்தித்துள்ளது. கட்சி மாற முடியாது. இப்போது உங்கள் அரசாங்கத்துக்கு வர முடியாது. உள்ளே இழுத்து எம்மை அழித்துவிடுவீர்கள். உங்களை நம்ப முடியாது. ஆகவே, உடன் பாராளுமன்றத்தை கலைத்து, சஜித்தை பிரதமர் என அறிவித்து, புதிய தேர்தலை நடத்தி, சஜித்தரை பிரதமர் ஆக்கி, புதிய அரசை அமையுங்கள். அப்புறம் ஜனாதிபதித் தேர்தலில் உங்களை ஏற்று ஆதரித்து உங்களை நாம் வெல்ல வைக்கிறோம். அந்த ஜனாதிபதித் தேர்தலின் பின் பிரதமர் சஜித்தர் தலைமையிலான அரசாங்கம் தொடர வேண்டும். இதுதான் யோசனை என Focusக்கு தகவல். "அப்படியா, என்னை நம்ப முடியாத உங்களை நான் மட்டும் எப்படி நம்புவதாம்? பாராளுமன்றத்தைக் கலைத்து புதிய தேர்தலை நடத்தி, சஜித்தரை பிரதமர் ஆக்கி, எல்லாம் முடிந்த பின், ஜனாதிபதித் தேர்தலில் என்னை நீங்கள் ஆதரிக்காவிட்டால்.."? என்ற ரணிலரின் எதிர் கேள்விக்கு பதில் கூற தெரியாமல் ஐக்கிய மக்கள் சக்தி குழு தடுமாறி விட்டதாம். "போ, போய், உங்கள் கூட இருக்கும், சிறுபான்மை கட்சி தலைவர்களிடம் பேசி விட்டு வாங்கோவன்" என ரணிலர் வழியனுப்பி வைத்தாராம். இப்படி கதைக்க போனவர்களுடன் கூட சென்ற பெண் எம்பியை, சற்றுநேரம் இருந்துவிட்டு போகும்படியும் ரணிலர் கூற ஏனையோர் அசடு வழிய திரும்பினார்களாம்.

★ சரத் பொன்சேகர் ஏறக்குறைய தனிக்கட்சி அமைக்க முயற்சி செய்ய, அது அது பிசு பிசுத்து விட்டதாம். கொழும்பில் ஊழலுக்கு எதிராக அவர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் எதிர்பார்த்த ஆதரவு அலை திரளவில்லை. ஆகவே, "என்ன, வாங்கோ சஜித்திடம் பேசி முடிவு காணுவோம்" என்று ஒரு குழு கிளம்ப, சஜித்தர் மறுத்துவிட்டாராம். பீல்ட் மார்சலை பீல்ட்டில் ஓரமா உட்கார்ந்து இருக்கச் சொல்லுங்கள் என்று கறாராக கூறி விட்டாராம் என Focus க்கு தகவல்.

★ கணேசருக்கும், பொன்னருக்கும் இடையில் இடம்பெற்ற வாக்குவாதங் களை இன்னமும் ஊதி பெருக்கி பெரிதாக்கி தொடர் செய்தியாக்க வடக்கின் பிரபல ஊடகவியலாளர் எடுத்த முயற்சிக்கு கணேசர் நோ சொல்லி விட்டாராம் என Focusக்கு தகவல். "கஜன் அவர் கருத்தை கூறினார். நான் என் கருத்தை கூறினேன். அவ்வளவுதான். நாம் நல்ல நண்பர்கள்" என்று கணேசர் முடித்து விட்டாராம்.



★ ஹர்ஷா டி சில்வர் மகனை பார்க்க விடுமுறையில் அமெரிக்கா போய் உள்ளார். சஜித்தரின் பிரச்சினை, சில்வா மகனை பார்க்க போனதல்ல. அங்கே போனவரைத் தேடி, ரணிலரின் வலது கை நிமால் லான்சர் போய் சந்தித்தாரா என்பதே இன்று சஜித்தரை வருத்தும் கேள்வி என Focusக்கு தகவல். நிமால் லான்சர் அமெரிக்கா போனாரா, எங்கே போனார் என கண்டறிய முடியவில்லை. எங்கும் சந்திக்கலாம். நிமால் லான்சர் – ஹர்ஷா டி சில்வர் சந்திப்பு நிகழ்ந்தது என்றும் அமெரிக்காவில் இருந்து ஹர்ஷா டி சில்வர் புதிய முடிவுடன் வருவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

★ அமெரிக்கா போன ஹர்ஷா டி சில்வர் தான் வகித்த பொது நிதிக்குழு தவிசாளர் பதவிக்கு சம்பிக்க ரணவக்கரை சிபாரிசு செய்து விட்டு போய் விட்டார். சம்பிக்கர் ஏற் கனவே சஜித்தரை விட்டு பிரிந்தவர். இதுவும் சஜித்தரை கடுப்பேற்றி உள்ளது என Focusக்கு தகவல்.

★ தமிழகத்தின் மறைந்த முதுபெரும் தலைவர் காமராஜர் ஒருமுறை தேர்தலில் தோற்று விட்டார். அதன் பின் மூன்று மாதங்கள் காமராஜர் மௌன விரதம் காத்தார். கட்சியிலும், ஊடகத்திலும் அவர் பேசுவத்கை தவிர்த்தார்.



ஏழை குழந்தைகளுக்கு பகலுணவு தந்து, மாநிலம் முழுக்க பள்ளிக்கூடம் கட்டி கல்வி தந்தையாக இருந்தவர், கர்மவீரர் காமராஜர். தன்னையே மக்கள் தோற்கடித்து விட்டார்கள் என்பதை எண்ணி கர்மவீரர் மனம் வருந்தினார். அதன் பலனாகவே அவர் மௌன விரதம் காத்தார். இதை இங்கே சொல்ல காரணம் உண்டு. அதேபோல் இப்போது இங்கே கொஞ்ச காலமாக சுமந்திரர் மௌன விரதம் காக்கிறார். அவரை இப்போது ஊடகத்திலும் காணோம். பாராளுமன்றத்திலும் காணோம். ஆனால், "காமராஜர் ரேஞ்சில் இவர் என்ன கர்மம் செய்தார் என தெரியவில்லை. எல்லாவற்றிலும் கையை விட்டு, தலையை போட்டு, தன்னிச்சையாக நடந்து, அனைவரையும் பகைத்துக்கொண்டு, பயணம் போன சுமந்திர கர்மவீரர் கொஞ்ச நாள் அமைதியாக மௌன விரதம் காப்பது அவருக்கும் நல்லது. கட்சிக்கும் நல்லது. தமிழின ஒற்றுமைக்கும் நல்லது என அகில இலங்கை தமிழரசின் பிரபல கிளிநொச்சியார் எம்.பி. பாராளுமன்ற லொபியில் வைத்து கூறியதாக Focusக்கு தகவல்.



★ 11ஆம் திகதி ஜனாதிபதியை சந்தித்து விட்டு வெளியே வந்த, சீவன் தொண்டர், வீட்டில் சமையலறையில் பேசுவதைபோன்று ஊடகங்களில் பேசினார். "வடக்கு கிழக்கு பிரச்சினை பத்தி பேச அவங்க எம்.பிகள் எல்லாரும் ஒன்னா வாராங்க. மலையக பிரச்சின பத்தி பேச இங்க நீங்க மூணு பேருதான் வாரீங்கன்னு, ஜனாதிபதி என்னிடம் கேட்டாரு. நான் என் மூஞ்ச எங்க வச்சுகறது? ஒரு இளைஞன் கபினட் மினிஸ்டராக இருப்பதால்தான், இவர்கள் வரவில்லை. இந்த வறட்டு கௌரவத்தை கைவிட வேண்டும்". இப்படி இவர் கூற, அதை அப்படியே ஊடகங்களும் வெளியிட, அது பலர் முகங்களை சுளிக்க வைத்துவிட்டது. "எமது நடைபயணம் ஏற்பாட்டு பணிகளுக்காக நாம் 11ஆம் திகதி நுவரெலியா போகிறோம். கொழும்பில் இல்லை. கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாது" என 10ஆம் திகதி பாராளுமன்றத்தில் மனோ கணேசர், கிளிப்பிள்ளைக்கு சொல்வதைபோல் சொல்லியும், சீவன் தொண்டர் இப்படி பேசியதுதான் இதொகா கலாசாரம். இதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை, என்று மன்னார் –மாத்தளை மலையக நடைபயணத்துடன் தொடர்புடைய சிவில் சொசைட்டிகாரர் ஒருவர் Focus க்கு சொன்னார்.

★ நுவரெலியா நடைபயண ஏற்பாட்டுக்காக 11ஆம் திகதியே நுவரெலியா வந்துவிட்ட கூட்டணி எம்.பிக்களும் சீவனின் பேச்சை கேட்டு ஆத்திரம் அடைந்தார்கள். நடைபயணம் அன்று காலையில் செய்தியை கேட்டறிந்த ராதாகிருஸ்ணர் கடும் சினம் கொண்டு விட்டார் என Focus க்கு தகவல். "உடனே ரணிலை அழைத்து கேளுங்கள். நாங்கள் வராததுக்குக்கான காரணத்தை நீங்கள் அன்றே அவருக்கு கூறினீர்கள்தானே' என்று அழுத்தமாக கூட்டணி தலைவரிடம் கிருஸ்ணர் சொல்ல, மனோ கணேசரும் நுவரெலியாவில் இருந்தபடி ரணிலரை தொலைபேசியில் தொடர்புகொண்டார். "உங்களை சந்திக்க நாம் வராததுக்கு காரணம் நாம் இங்கே நுவரேலியாவில் இருக்கிறோம். இதை உங்களை அழைத்து நான் அன்றே சொன்னேன். அப்புறம் ஏன் சீவன் தொடர்பில்லாமல் பேசுகிறார்? இது நீங்கள் எமக்கு விடுத்த அழைப்பு. நாங்கள் உங்களை மதித்து பதில் கூறுகிறோம். இடையில் இவர் யார்? அமைச்சர் கூட்டத்தில் பிரச்சினைகள் பற்றி பேசட்டும். ஆனால், கலந்துகொள்வது, கொள்ளாதது பற்றி நாம் உங்களுடன் பேசிக் கொள்கிறோம்" என மனோவும் கடுமையாக ரணிலுக்கு சொல்லியுள்ளார்.



★ மலையக தமிழர் பிரச்சினைகள் பற்றி பேச ஜனாதிபதியை சந்திக்க மலையக எம்.பிக்கள் போகவில்லை. வடக்கு, கிழக்கு பிரச்சினை பத்தி பேச அவங்க எம்.பிக்கள் எல்லாரும் ஒன்னா வாராங்க என்று சீவன் தொண்டர் சொன்னதும் பிழை. வடக்கு, கிழக்கு பிரச்சினைகள் பற்றி ஜனாதிபதியை சந்திக்க வடக்கு, கிழக்கு தமிழ் எம்.பிக்கள் ஒன்றாக ஒன்றும் ஓடு வதில்லை. தனித்தனியாக ஆவணம் கொடுக்க ஓடுகிறார்கள். தனித்தனியாக சந்திக்க ஓடுகிறார்கள். இதில் ரணிலருக்கு ரொம்ப பக்கத்தில் ஓடுபவர், நீதியரசர். ரோயல் லவ் கெமிஸ்றி, ரணிலர் – நீதியரசர் இடையில் நன்றாக வேலை செய்கிறதாம் என Focus க்கு தகவல். இப் போது நீதியரசர் கொமிட்டிக்குள்ளும் போய் விட்டார். கூடவே தனது டபல் விக்கியரையும் கூட்டிக்கொண்டு போய்விட்டார். இனி தேர்தல் வரைக்கும் இந்த கமிட்டி ஓடும். நல்லாட்சியின்போது ரணிலருக்கு ரொம்ப பக்கத்தில் ஓடியவர், சுமந்திரர். அந்த "ஜொப்"பைதான் ஒரே ஒரு எம்.பி. நீதியரசர், ஒரே எம்.பி. ஜனாதிபதியுடன் செய்கிறார். ஆனால், இவரது ஜொப், சுமந்திரரின் ஜொப்பை விட வெரி புறொபஷனல். ரணில், நீதியரசர் இடையில் ஏற்பட்டு விட்ட, ரோயல் லவ், நீதியரசர் ரணிலின் கபினட்டில் போய் உட்காரும் வரை போக போகிறது என Focus அப்பவே சொன்னது ஞாபகம் இருக்கோ. இப்படி முன்கூட்டியே சொன்ன பெருமையில் எவரும் பங்கு கேட்க முடியாது.

★ ரணிலர் எல்லாவற்றையும் இன்டர்லிஜன்ஸ் ரிப்போர்ட்படித்தான் காய் நகர்த்துகிறார். நீதியரசருக்கு பெரும் வாக்கு வங்கி வோட்-பேன்க் வடக்கில் இல்லாவிட்டாலும் கூட, ஜனாதிபதி தேர்தலில் தனக்கு வாக்களிக்கவே தமிழ் சனம் முந்தியடிக்கும் எனவும், ரணில் நரியன்தான், ஆனால், மற்றவங்களை விட ஏதாவது செய்வான், நாம் இப் போது நிம்மதியாக வாழ்ந்தால் போதும் என்ற நிலைபாட்டுக்கு வடக்கில் தமிழ் சனம் வந்துவிட்டதாக இன்டர்லிஜன்ஸ் ரிப்போர்ட். கடந்தமுறை பொது தேர்தல் முடிவுகளில் கூட்டமைப்பு அதிக சீற் பெற்றாலும் வாக்குகள் கணிசமாக மாற்று அணிகளுக்கு விழுந்தன. மேலும் வடக்கில் தமிழ் சனம் ஜனாதிபதி தேர்தலில் கூட்டமைப்பு சொல்லி வாக்களித்த காலம் முடி வுக்கு வந்து விட்டது. பிரசாரத்தை முன்னெடுக்க வடக்கில் ஒரு ஏற்பு டைமை கொண்ட முகம் தேவை. அந்த முகம் நிச்சயமாக டக்ளஸ் தேவானந்தர் இல்லை என ரணிலருக்கு தெரியும். அது பிரச்சினை இல்லாத நீதியரசர்தான் என ரணிலரின் இன்டர்லிஜன்ஸ் அடித்து சொல்லிவிட்டது என எமது இன்டர் லிஜன்ஸ் மூலம் Focus க்கு தகவல்.



★ சுமந்திரரை தொடர்ந்து செல்வ அடைக்கலரும், இந்த சீனி சக்கரை சிக்கலுக்கு பின் அமைதியாக இருக்க தொடங்கி விட்டார். உண்மையில் ரணிலர், தனது வடக்கு முகமாக முதலில் தெரிவு செய்தது இவரைத்தான். இவரோடு சேர்த்து சித்தர். அந்த நோக்கில்தான் பாராளுமன்றத்தில் ஜனாதிபதி தேர்தல் வாக்கெடுப்பும் நடந்தது. இந்தியர்கள் தலையிட்டும் ஒன்றும் நடக்கவில்லை. ஆனால், பந்தயத்தில் செல்வ அடைக்கலர் மற்றும் சித்தரின் நால்வர் அணியை, தனி ஒரு எம்பியாக நீதியரசர் முந்தி விட்டார். இனி ஜனநாயக கூட்டணியில் நீதியரசரையும் உள்வாங்க ஒரு திட்டம் தீட்ட வேண்டும். அதற்கு நல்ல நாளை செல்வ அடைக்கலர் பார்ப்பதாக Focus க்கு தகவல்.

★ மலையக மக்கள் பிரதிநிதிகளைஒதுக்கி வைத்து விட்டு, இருபது நாள் நடைபயணம் போன சிவில் சமுக குரூப்பை ஒரே நாள் நடந்து முற்போக்கு கூட்டணி ஓரம் கட்டி விட்டது. இருபதுநாள் நடைப்பயணத்தின் இறுதி நாளில், தமிழ், சிங்கள, ஆங்கில பாரம்பரிய .ஊடகங்கள், சமூக ஊடகங்கள் எல்லாவற்றிலும் முற்போக்கு கூட்டணியின் நடைபயணம்தான் பிரதான செய்தி.

(தொடர்ச்சி 13 ஆம் பக்கம்...)


**தொழில்துறையில் சிறந்து காணப்படும்**
**நிறுவனத்துடன் இணைந்து**
**தேர்ச்சிப்பெற்ற ஒருவராக விளங்குவதற்கு**
**உங்களுக்கும் ஒரு வாய்ப்பு**

**விநியோக முகவர்கள் (Distributors) மற்றும்**
**விற்பனை முகவர்கள் (Sales Representative) தேவை**

இலங்கையின் முன்னணி நுகர்வோர் தயாரிப்பு நிறுவனத்தில்
விற்பனை வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கு
பின்வரும் மாவட்டங்கள் மற்றும் பிரதேசங்களில் விநியோக முகவர்கள் மற்றும்
விற்பனை முகவர்கள் உடனடியாக தேவை.

**வெற்றிடங்கள் காணப்படும் மாவட்டங்கள் / பிரதேசகள்:**

அனுராதபுரம், பண்டாரவளை, வென்னப்புவ, மத்துகம,
அவிஸ்ஸாவளை, மன்னார், கண்டி, மொரட்டுவ, முல்லைத்தீவு, திரப்பனே,
கேகாலை, நொச்சியாகம, கொட்டாஞ்சேனை,
பதவிய, நுவரெலியா, அம்பாறை, மஹியங்கனை, ஓட்டமாவடி

**விநியோக முகவரால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள்:**

- குறித்த பிரதேசவாரியாக ரூ.500,000 முதல் ரூ.1,500,000 வரை வங்கி உத்தரவாதம் காணப்படுதல் வேண்டும்.
- பொருட்களை கொண்டு செல்வதற்கு சிறிய லொரி ஒன்றை வைத்திருத்தல் வேண்டும். (Dimo பட்டா)
- நுகர்வோர் பொருட்களை சேமித்து வைப்பதற்கு ஏற்ற வகையில் 120 சதுர அடிக்கு குறையாத சேமிப்பு வசதி இருக்க வேண்டும்.
- இந்தத் துறையில் மற்றும் நுகர்வோர் பொருட்களின் விநியோகம் தொடர்பான அனுபவம் இருப்பின் மேலதிக நன்மையாக கருதப்படும்.

**விற்பனை பிரதிநிதிகளால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய தேவைகள்:**

- விற்பனை துறையில் குறைந்தபட்சம் ஒரு வருட அனுபவம்
- விற்பனை இலக்குகளை கடந்து செல்லும் திறன் கொண்ட போட்டி ஆளுமை
- வயது 35க்கு கீழ்

**மேலே குறிப்பிட்டுள்ள தகுதிகளை பூர்த்தி செய்யும் நபர்கள்**
**இதற்கு விண்ணப்பிக்கலாம்.**
**உங்கள் விண்ணப்பத்தை மின்னஞ்சல் nandana@gsconsumer.lk மூலம்,**
**WhatsApp: செயலி மூலம் 0710973974 அல்லது**
**விற்பனை முகாமையாளர், இல- 342, காலி வீதி, லக்சபதிய, மொரட்டுவ**
**எனும் முகவரிக்கு எமக்கு அனுப்பவும்.**

வாரவெளியீடு
தமிழன்
THAMILAN WEEKLY
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/ thamilaneditor@gmail.com

ஞாயிற்றுக்கிழமை, ஓகஸ்ட் 20, 2023

## சூடுபிடிக்கும் கச்சதீவு விவகாரம்

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் பகுதியில் மீனவர் நல மாநாடு வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது அதில் உரையாற்றிய தமிழக முதலமைச்சர் ஸ்டாலின், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் தாக்கப்படுவது தொடர்பில் கடுமையாக சாடியுள்ளார்.

கச்சதீவை இலங்கையிடமிருந்து மீட்கவேண்டும் என்று கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், ஸ்டாலினின் இந்தக் கருத்துகள் வெளிப்பட்டுள்ளன.

ஏற்கனவே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஓகஸ்ட் 10ஆம் திகதி இந்திய பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லா விவாதத்தின் போது ஆற்றிய உரையில், கச்சதீவு பற்றி குறிப்பிட்டார்.

ராகுல் காந்தியை கடுமையாகத் தாக்கிய பிரதமர் மோடி, 1974இல் கச்சதீவை இலங்கைக்கு வழங்கியது இந்திரா காந்தி அரசுதான் என்று கூறினார். ராகுலின் காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க. இருப்பது கவனிக்கத்தக்கது.

"கச்சதீவு என்பது தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள ஒரு தீவு. அதை இந்திரா காந்தி அரசு வெளிநாட்டுக்குக் கொடுத்தது" என்றார் மோடி. மேலும், அது பாரத தேசத்தின் அங்கம் அல்லவா எனவும் அவர் கேள்வியெழுப்பினார்.

இன்று இலங்கையின் ஒரு பகுதியாக உள்ள கச்சதீவு, தமிழ்நாட்டில் மிகப்பெரிய அரசியல் பிரச்சினையாக உள்ளது. சமீபத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதுடில்லி பயணத்தை முன்னிட்டு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், தீவை மீட்கக் கோரி பிரதமர் மோடிக்குக் கடிதம் எழுதியிருந்தார்.

அந்தக் கடிதத்தில், "கச்சதீவை மாநில அரசின் அனுமதியின்றி மத்திய அரசு இலங்கைக்கு மாற்றியதால், தமிழக மீனவர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு, அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது" எனத் தெரிவித்திருந்தார்.

கச்சதீவு என்பது இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலுள்ள பாக்குநீரிணையில் 285 ஏக்கர் பரப்பளவில் மக்கள் வசிக்காத பகுதியாகும். இது 1.6 கி.மீ. நீளமும் 300 மீற்றர் அகலமும் கொண்டது.

கச்சதீவு புவியியல் கால அளவில் ஒப்பீட்டளவில் புதியது. இது 14ஆம் நூற்றாண்டு எரிமலை வெடிப்பின் விளைவாகும். ஆரம்பகால இடைக்காலத்தில், இது இலங்கையின் யாழ்ப்பாண இராச்சியத்தால் கட்டுப்படுத்தப்பட்டது. 17ஆம் நூற்றாண்டில், இராமேஸ்வரத்திலிருந்து வடமேற்கே 55 கி.மீ. தொலைவிலுள்ள ராமநாதபுரத்தை மையமாகக்கொண்ட ராம்நாடு ஜமீன்தாரிக்குக் கட்டுப்பாடு சென்றது.

ஆங்கிலேயர் ஆட்சியின்போது இது மெட்ராஸ் நிர்வாகத்தின் ஒரு பகுதியாக மாறியது. ஆனால், 1921ஆம் ஆண்டில், மீன்பிடி எல்லைகளை நிர்ணயிப்பதற்காக இந்தியாவும் இலங்கையும் அப்போது பிரிட்டிஷ் காலனிகளாக இருந்தபோது, கச்சதீவை உரிமை கொண்டாடின. ஆனால், இந்தியாவிலிருந்து வந்த பிரிட்டிஷ் தூதுக்குழு இதை சவால் செய்தது. தீவின் உரிமையை ராம்நாடு இராச்சியம் மேற்கோள் காட்டியது. இந்த சர்ச்சை 1974 வரை தீர்க்கப்படவில்லை.

1974ஆம் ஆண்டில் இந்திரா காந்தி இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல் எல்லையை நிரந்தரமாக தீர்க்க முயற்சி செய்தார். 'இந்தோ-இலங்கை கடல்சார் ஒப்பந்தம்' என்று அழைக்கப்படும் இந்தக் குடியேற்றத்தின் ஒரு பகுதியாக இந்திரா காந்தி கச்சதீவை இலங்கைக்குக் கொடுத்தார்.

அந்த நேரத்தில், தீவின் மீதான இந்தியாவின் உரிமையை நிறுத்துவது அதன் தெற்கு அண்டை நாடுகளுடன் அதன் உறவுகளை ஆழப்படுத்தும் என்றும் அவர் நினைத்தார். மேலும், ஒப்பந்தத்தின்படி, இந்திய மீனவர்கள் கச்சதீவுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். துரதிர்ஷ்டவசமாக, ஒப்பந்தத்தின் மூலம் மீன்பிடி உரிமைகள் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. மீன்பிடி வலைகளை உலர்த்துவதற்கு உரிமை வழங்கப்படவில்லை. ஆலயத்துக்குச் செல்வதற்கும் விதிமுறைகள் வகுக்கப்பட்டன.

1983 மற்றும் 2009க்கு இடையில், இலங்கையில் உள்நாட்டுப் போர் வெடித்ததால், எல்லைப் பிரச்சினை தீவிரமாக இருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து விடுதலைப் புலிகளின் விநியோக வழிகளைத் துண்டிக்கும் பணியில் இலங்கைக் கடற்படையினர் ஈடுபட்டுள்ள நிலையில், இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பிற்குள் ஊடுருவுவது சர்வசாதாரணமாக இருந்தது.

இதனால், பெரிய இந்திய இழுவைப் படகுகள் குறிப்பாக அதிருப்தி அடைந்தன. ஏனெனில், அவை அதிகமாக மீன்பிடிப்பது மட்டுமல்லாமல் இலங்கை மீன்பிடி வலைகள் மற்றும் படகுகளையும் சேதப்படுத்தும்.

2009இல், விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்தது, நிலைமைகள் வியத்தகு முறையில் மாறின கொழும்பு தனது கடல் பாதுகாப்பைப் பலப்படுத்தியது, மேலும் இந்திய மீனவர்கள் மீது கவனம் செலுத்தியது.

கச்சதீவு தமிழக அரசை ஆலோசிக்காமல் இலங்கைக்கு வழங்கப்பட்டது என்று இந்திரா காந்தியின் நடவடிக்கைக்கு எதிராக கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின. ராம்நாடு ஜமீன்தாரியின் வரலாற்றுக் கட்டுப்பாட்டையும் இந்திய தமிழ் மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையையும் எதிர்ப்பாளர்கள் மேற்கோள் காட்டினர்.

1991இல், இலங்கை உள்நாட்டுப் போரில் இந்தியாவின் பேரழிவுகரமான தலையீட்டிற்குப் பிறகு, தமிழ்நாடு சட்டமன்றம் மீண்டும் கச்சதீவை மீட்டெடுக்கவும், தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமையை மீட்டெடுக்கவும் கோரியது. அன்றிலிருந்து தமிழக அரசியலில் கச்சதீவு தொடர்ந்து வந்துகொண்டிருக்கிறது.

இதற்கிடையில், மறைந்த முதலமைச்சர் ஜெயலலிதா, "அரசியல் சட்டதிருத்தம் இல்லாமல் கச்சதீவை வேறு நாட்டுக்கு விட்டுக்கொடுக்க முடியாது" என்று நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். 1974ஆம் ஆண்டு ஒப்பந்தம், இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகள் மற்றும் வாழ்வாதாரத்தைப் பாதித்தது என்று மனுவில் வாதிடப்பட்டது.

2011ஆம் ஆண்டு முதலமைச்சரான பிறகு, அவர் மாநிலங்களவையில் ஒரு தீர்மானத்தை முன்வைத்தார், மேலும் 2012இல், இலங்கையால் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவது அதிகரித்து வருவதையடுத்து, தனது மனுவை விரைவுபடுத்துமாறு உச்ச நீதிமன்றத்துக்குச் சென்றார்.

இருப்பினும், கச்சதீவு தொடர்பான மத்திய அரசின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. தீவு எப்போதுமே சர்ச்சைக்குரியதாக இருந்ததால், இந்தியாவுக்குச் சொந்தமான எந்தப் பகுதியும் விட்டுக்கொடுக்கப்படவில்லை அல்லது இறையாண்மையை விட்டுக்கொடுக்கவில்லை என்று வாதிட்டது.

இந்தியாவில் அடுத்த வருடம் பொதுத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், மீனவர் விவகாரத்தை சுட்டிக்காட்டி பாரதீய ஜனதா தமிழகத்தில் கால்பதிப்பதைத் தடுக்க கச்சதீவு எனும் ஆயுதத்தை கையிலெடுத்திருக்கிறார் ஸ்டாலின். இது இலங்கை அரசியலிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

# வெடிகுண்டைவிடவும் பண்பாடு பலம்வாய்ந்த ஆயுதம்!



ஒரு இனத்தின் பண்பாடு, பாரம்பரியம், பூர்வீகம், வரலாறு என்பது அந்த இனத்தின் தனித்துவ அடையாளங்களாகவும், அவர்களின் தடயங்களாகவும் உள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை ஈழத்தில் தொன்மை வாய்ந்த ஓர் இனமாக தமிழினம் உள்ளது. அவர்களுக்கான பூர்வீக நிலம் உள்ளது, அவர்களை ஆட்சிசெய்த தமிழ் மன்னர்களின் உண்மை வரலாறுகள் பல உள்ளன. ஆனால், தமிழினத்தின் வரலாறுகளை திரிபுபடுத்தும் விதமாக இராவணன் மன்னன் இயக்கர் குலத்தைச் சேர்ந்த சிங்களவர். இராவணனை தமிழர் என்று குறிப்பிடுவதையிட்டு வெட்கப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் வழமையாகவே இனவாதம் பேசுகின்ற சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் ஓகஸ்ட் 11ஆம் திகதி இடம்பெற்ற இராணவன் மன்னன் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரன முன்வைத்த தனிநபர் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இராமாயணம் இரண்டு, மூன்று விதமாக எழுதப்பட்டுள்ளது என்பதை ஆதாரங்கள் எடுத்துக்காட்டுகின்றன. அது வெறும் கற்பனைக் கதை என்றும் விமர்சிக்கப்படுகிறது. அப்படி இருக்கும்போது நாம் ஏன் இராவணன், சிங்களவனா அல்லது தமிழனா அல்லது கிறிஸ்தவனா அல்லது முஸ்லிமா என்று விவாதம் செய்யவேண்டும்? ஒரு கற்பனை கதைக்கு எப்படியும் வடிவம் கொடுக்கலாம். அவர் சிங்களவராகவே இருந்துட்டு போகட்டும் அல்லது தமிழராகவே இருந்துட்டு போகட்டும் அல்லது அரக்கர் வம்சத்தவராகவே இருந்துட்டு போகட்டுமே?

இலங்கையில் எத்தனையோ பிரச்சினைகள் இருக்கின்றன. அவற்றை விடுத்து இதுவா இப்பொழுது பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டிய விடயம்? என சிலர் கேள்விகளை முன்வைப்பதையும் காணலாம்.

நாம் எப்படித்தான் குத்தி முறிந்தாலும் வட இந்தியர்கள் தெற்கில் உள்ளவர்களை இராவணன் உட்பட எல்லோரையும் அரக்கர்கள் என்று எழுதி முத்திரை குத்திவைத்து விட்டார்கள். யாரும் ஒன்றும் செய்ய முடியாது. ஆகையால் யாரும் குரைத்து விட்டுப் போகட்டும். நாங்கள் அமைதியாக இருப்போம் என்பதும் சிலரின் வாதம்.

இராவணன் ஒரு சிவபக்தன். சைவ சமயத்தவன். மொழியில் தமிழர். இராவணன் சிங்களவர் என்றால் சிவபக்தனாக இருந்திருக்க முடியாது. இராவணனின் மகன் பெயர் மேகநாதன் (இந்திரஜித்). இலங்கையில் எங்கேயாவது ஒரு சிங்களவருக்கு மேகநாதன் என்று பெயர் உண்டா? கூக்குரல் இடும் சரத் வீரசேகர உதய கம்மன்பில போன்ற பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரலாற்றுத் தெளிவின்மை போதாது என்று பார்த்தால் நமது பாராளுமன்ற உறுப்பினர்களும் அவசரப்பட்டு வரலாறுகளை மாற்றிக் கூறுவதையும் அவதானிக்க முடிந்தது.

இனவாதம் பேசும் சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள் வேண்டுமென தமிழர்களின் வரலாற்றை மாற்றி பொய் உரைப்பதும் ஓர் இனப்படுகொலைதான் என்பதை முதலில் எல்லோரும் புரிந்துகொள்ளல் வேண்டும். 1956இலிருந்து 2009, மே 18 வரை சிங்கள இராணுவத்தாலும், அவர்களுடன் இணைந்து மேற்கொண்ட முஸ்லிம் ஊர்காவல் படையினராலும் இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் இனப்படுகொலை செய்யப்பட்டனர். உயிர்களை அழிப்பது மட்டும் இனப்படுகொலை ஆகாது. அவர்களின் வரலாற்றுத் தடயங்களையும், பண்பாடுகளையும் அழிப்பதும் (மாற்றுவதும்) ஓர் இனப்படுகொலைதான்.

அந்தவகையில் இனவாத சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் இவ்வாறு இனத்துவேசமாக பேசிகிறார்களெனப் பார்த்தால் உலமா கட்சித் தலைவர் மௌலவி முபாறக் அப்துல் மஜீத்தும் புதுக்கதையாக இராவணன் முஸ்லிம் மன்னன் என வரலாற்றை திரிபுபடுத்துகிறார்.

கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவனே இராவணன். மரிய இராவணன் என்பதே அவனின் பெயர் என அருட்தந்தை பெனடிற் கூறினார் என்றும் ஒரு செய்தி வந்தது.

அடுத்தடுத்த வருடங்களில் சீனர்களும் இராவணன் சீனாவில் இருந்துதான் இலங்கைக்கு வந்தான் எனக் கூறினாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

இராவணன் யாராக இருந்தாலும் இருந்துவிட்டு போகட்டும். முதலில் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் எல்லாம் தமிழர்களாக உள்ளனரா என்பதையும் சிந்திப்பது நல்லது. சலுகைகளுக்காக சோரம்போன தமிழர்கள் பலர் எம் மத்தியில் உள்ளனர்.

சிங்கள இனவாதிகளைப்போன்று இன்னும் பலர் தமிழர்களின் பூர்வீக வரலாற்றை மாற்றி பிரசாரங்களை மேற்கொண்டாலும் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. தமிழ் மன்னனான இராவணனை சிங்கள மன்னன் என்று சிங்கள - பௌத்த இனவாதிகள் கூறுகின்றமை தமிழர்களின் வரலாற்றைத் திரிபுபடுத்துகின்ற தமிழர்களின் வரலாற்றை அழிக்கின்ற செயற்பாடாகும்.

தமிழின வரலாற்றை சிங்கள இனவாதிகள் மாற்றுவதும் ஒருவகையில் இனப்படுகொலைதான். வெடிகுண்டை விடவும் பண்பாடு பலமானது. ஓர் இனத்தை வெற்றிகொள்ள வேண்டுமாயின் முதலில் அந்த இனத்தின் பண்பாட்டை அழிக்க வேண்டும் என்பதே எந்தவொரு ஆதிக்க சக்தியினதும், கோட்பாடாகவும் நடைமுறையாகவும் உள்ளதென கறுப்பின சிந்தனையாளர் அமில்கா கேப்ராயல் "வெடிகுண்டைவிடவும் பண்பாடு பலம்வாய்ந்த ஆயுதம்" எனக் கூறியுள்ளார்.

இவ்வாறான சிந்தனையில் இப்போது தமிழ் இனத்தின் பண்பாடு, வரலாறுகளை மாற்றும் பிரசாரத் தாக்குதல்கள், திட்டமிட்டு ஸ்ரீலங்காவில் சிங்கள இனவாத பாராளுமன்ற உறுப்பினர்களின் பரப்புரைகள் முளைத்துள்ளன.

அதில் ஒன்றுதான் இராவணன் தமிழர் அல்ல. அவர் சிங்களவர் என சர்ச்சையை பாராளுமன்றத்தில் சரத் வீரசேகர கடந்த வாரம் முன்வைத்த கருத்தையும் பார்க்கலாம்.

ஓர் இனத்தை ஆயுதம் கொண்டு அழிப்பது என்பது வெறுமனே மனிதப் படுகொலை மட்டுமல்ல, கூடவே அது ஒரு பண்பாட்டு அழிப்புமாகும்.

அவ்வாறு ஓர் இனத்தை அழிப்பதும் பண்பாட்டு அழிப்புத்தான். அதேவேளை, அந்த இனத்தின் பண்பாட்டை இன்னொரு பண்பாட்டுப் பரவலால் விழுங்கி கபளீகரம் செய்வதும் பண்பாட்டு அழிப்புத்தான்.

இந்தவகையில் இராணுவ ரீதியில் அழிவுக்குள்ளாகி எமது மக்கள் மீது இனப்படுகொலை செய்தவர்கள் இப்போது தமிழின வரலாற்றை மாற்றுவதும் ஒருவகையில் இனப்படுகொலைதான் என்பதை தெளிவாக தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்த் தேசியத் தலைவர்கள் இவ்வாறான சிங்கள இனவாதிகளுக்கு தக்க பதில் கொடுக்கவேண்டும் என்பதற்காக யாழ். மாவட்ட இலங்கை தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கடந்த வாரம் இராவணன் தொடர்பான சில வரலாற்றுத் தகவல்களை வழங்கியிருந்தார். அதில் சில தவறுகள் இருந்தாலும் ஓர் எதிர்ப்பு அவர் மூலமாக காட்டப்பட்டதென்பது உண்மை.

பௌத்தர்கள் வாழாத இடங்களில் பௌத்த விகாரரைகளும் புத்தர் சிலைகளும் வைப்பது போலவே தமிழினத்தின் தொன்மை வரலாறுகளை மாற்றும் சதியும் அரங்கேறுகின்றன. இதை அனுமதிக்க முடியாது.

இராவணன் தொடர்பான வரலாற்றை திரிபுபடுத்தும் இனவாத கருத்துகள் ஒருபுறம் அரங்கேறியுள்ள நிலையில், அடுத்த தெரு சண்டியனான மேர்வின் சில்வா விகாரைகள்மீது கைவைத்தால் வடக்கு, கிழக்கில் உள்ளவர்களின் தலைகளை களனிக்கு கொண்டுவருவேன் என எச்சரித்துள்ளார்.

அவர் கூறியதைப் பாருங்கள்;

நான் வடக்கு, கிழக்குக்கு வருவேன், நீங்கள் (வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள்) விகாரைகளை தடுக்க முற்பட்டால், மகா சங்கத்தினர்மீது கை வைக்க முயன்றால் நான் களனிக்கு சும்மா திரும்பி வரமாட்டேன், உங்களின் (வடக்கு, கிழக்கில் உள்ளவர்கள்) தலைகளை கையில் சுமந்துகொண்டுதான் களனிக்கு வருவேன்."

இவ்வாறு முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த 13ஆம் திகதி முற்பகல் 11.55 மணிக்கு ஹிரு தொலைக்காட்சியில் ஒளிபரப்பான செய்தியில் மேர்வின் சில்வாவின் இந்த உரையும் ஒளிபரப்பட்டது. அவரின் முழு உரையாக அல்லாமல் அவர் ஆற்றிய உரையில் ஒரு பகுதியாகவே அது இருந்தது.

இலங்கை அரசியலில் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாகவே மேர்வின் சில்வா வலம் வருகின்றார். ஊடக நிறுவனத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியமை, அரச ஊழியரை மரத்தில் கட்டிவைத்து தாக்கியமை, முன்னேஸ்வரம் ஆலயத்துக்குள் புகுந்து வேள்வி பூஜையை தடுத்துநிறுத்தியமை என அவரின் அடாவடி செயற்பாடுகளை பட்டியலிடலாம்.

ராஜபக்ஷக்களின் சகாவாக அவர்களின் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த மேர்வின் சில்வா, 2015 ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னர் பொதுத் தேர்தலில் போட்டியிட எந்தவொரு கட்சியும் இடமளிக்கவில்லை. இதனால் அரசியல் ரீதியில் ஓரங்கட்டப்பட்டார். பின்னர் தனது மகனுடன் இணைந்து மக்கள் சேவை எனும் கட்சியையும் ஆரம்பித்தார். ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்தார். பொதுத் தேர்தலில் அநுராதபுரம் மாவட்டத்தில் களமிறங்கினார். அதன்பின்னர் சுதந்திரக் கட்சி பக்கம் தாவினார். தற்போது எந்த கட்சி எனத் தெளிவில்லை.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை அம்மையார் இலங்கைக்கு வந்திருந்தபோது, அவருக்கு திருமண அழைப்பு விடுத்து நாட்டுக்கு அவப்பெயரை ஏற்படுத்தியவர்தான் இந்த மேர்வின் சில்வா. இறுதியில் அது மேர்வினின் தனிப்பட்ட கருத்து எனக் கூறி மஹிந்த அரசுக்கு அப்போது மன்னிப்பு கேட்கவேண்டிய நிலை ஏற்பட்டது.

இப்போது வடக்கு, கிழக்கு தமிழர்களின் தலைகளை களனிக்கு கொண்டுவருவேன் என வீரம் பேசிய மேவின் சில்வா, ஒரு பைத்தியக்காரன் என்று கூறிவிட்டு இருக்கமுடியாது. இது ஒரு கொலைக்குற்றம் என்பதை புரிந்து அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் ஆனால், வழமையாகவே இலங்கையில் இனப்படுகொலை செய்தவர்களுக்கே சட்ட நடவடிக்கை எடுத்து தண்டிக்கப்படாத நாட்டில் மேர்வின் சில்வாவை தண்டிப்பார்கள் என எதிர்பார்க்க முடியாது.

மேர்வினின் இந்த உரையை அவரின் கருத்துச் சுதந்திரம் எனக்கூறி நியாயப்படுத்திவிட முடியாது. இது இனங்களுக்கிடையில் பதற்றத்தை ஏற்படுத்தக்கூடிய கருத்தாகவே அமைந்துள்ளது. எனவே, இந்த உரை தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஜெரோம் பெர்னாண்டோ, நடாஷா ஆகியோரின் உரைகள் எவ்வளவு பாரதூரமாக அமைந்ததோ அதற்கொப்பான செயல்தான் இதுவும். எனவே, சட்டம் தன் கடமையை செய்யுமா அல்லது செய்யாதா என்பது ஒரு புறம் இருக்க, இவ்வாறான கருத்துகள் 13ஆவது அரசியல் யாப்பு அமுலாக்க கதைகளை இல்லாமல் செய்துள்ளன.

பிச்சை எடுக்கும் இந்த நாடு கௌரவ பிச்சை எடுக்க,

உள்நாட்டில் போர் வேண்டும் ..

உலகை ஏமாற்றி பணம் பறிக்க வேண்டும் ..

அவ்வாறான இனவாத ஏற்பாடே இவ்வாறான குரோத கருத்துகள் இப்போது அதிகரித்துள்ளதா என்ற சந்தேகமும் உள்ளது.

விகாரைகளும், புத்தர் சிலைகளும் மலிந்த நாட்டில் இப்போது வடக்கு, கிழக்கிலும் வரலாற்றை மாற்றும் விகாரைகளும் புத்தர் சிலைகளும் அதிகரித்துள்ளன. இதைத் தடுக்க தமிழ்த் தேசிய தலைவர்கள் ஒன்றிணைந்து குரல் கொடுப்பது காலத்தின் கட்டாயம்.



பா.அரியநேத்திரன்

★ திடீரென கலைக்கப்படுமா பாராளுமன்றம்?

★ சனல் ஐ அலைவரிசையால் அமைச்சரவையில் வாக்குவாதம்

★ அரச ஊடகங்கள் மஹிந்தானந்தவின் கீழ்

★ ஈஸ்ரர் தின தாக்குதல் சதி – சனல் 4 வெளியிடவுள்ள பரபரப்பு வீடியோ – கொழும்பு அரசியல் தலைகீழாக மாறுமா?

# சண்டே சாம்பார்



ஆர்.சிவராஜா
mesivaraj@yahoo.com

### பாராளுமன்றத்தை கலைப்பாரா ரணில் ?

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலை நடத்த தீர்மானித்திருந்த ஜனாதிபதி, அதற்கு முன்னர் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கு செல்ல ஆராய்ந்து வருகிறார்.

பாராளுமன்றத்தைக் கலைத்தால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை அடக்கி விடலாம். அவர்களின் தொல்லை இருக்காது. அவர்களுக்கு கட்டுப்பட்டு செயற்படத் தேவையில்லை. அதேசமயம் புதிய அரசியல் கூட்டணி ஒன்றை அமைத்து தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகளை அதில் இணைத்து தேர்தலுக்குச் சென்றால் கணிசமான எம்.பிக்களைப் பெறலாம் என்று கருதுகிறார் ரணில். கூட்டணி ஆட்சியமைத்து அதன் பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்குச் சென்றால், அதனது அரசியல் அணியின் ஆதரவுடன் ஜனாதிபதித் தேர்தலையும் வெல்லலாம் என்று கணக்குப் போடுகிறார் ரணில்.

ஜனாதிபதியாக இருக்கும் ஒருவரின் தலைமையிலான அரசியல் கூட்டணி பொதுத் தேர்தலில் போட்டியிடுமானால், மக்களின் ஆதரவு அந்தக் கூட்டணிக்கு கிடைக்கும் என்ற பொதுவான அரசியல் நம்பிக்கையை அடிப்படையாகக்கொண்டு காய் நகர்த்துகிறார் ரணில். அத்துடன் பொலிஸ், முப்படைகள் தனக்கு கீழ் இருப்பது அவருக்குப் பலம். பாராளுமன்றத்தை ரணில் திடீரென கலைத்தால் பொதுஜன பெரமுன அவருடன் முரண்பட்டு பொதுத் தேர்தலில் தனியாக போட்டியிடும் என ரணில் எதிர்பார்ப்பதாக தெரிகிறது. ராஜபக்ஷக்கள் எங்களுடன் இல்லை. நீங்கள் வந்து இணையுங்கள் என்று அவர் அரசியல் கட்சிகளுக்கு கூறும் வாய்ப்பும் அங்கே இருக்கிறது.

எவ்வாறாயினும், ரணிலையும் சஜித்தையும் இணைத்துவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இதற்கான திரைமறைவு நடவடிக்கைகளை ருவன் விஜேவர்தன மேற்கொண்டு வருகிறார். இந்த முயற்சி சில சமயம் வெற்றியடைந்தால் பாராளுமன்ற கலைப்பு விரைவில் இடம்பெறுமென மற்றுமொரு தகவல் தெரிவிக்கின்றது.

### 2வது குழந்தைக்கு தந்தையான நாமல்



நாமல் ராஜபக்ஷ தம்பதியினர் கடந்த செவ்வாய்க்கிழமை இரண்டாவது குழந்தைக்கு பெற்றோராகியுள்ளனர்.

லிமினி ராஜபக்ஷ இரண்டாவது குழந்தையை பெற்றெடுத்ததாக நாமல் தனது சமூக ஊடகங்களில் குறிப்பிட்டுள்ளார்.

செவ்வாய்க்கிழமை காலை நாமலை தொடர்புகொண்ட பலர் , என்ன உங்களுக்கு குழந்தை கிடைத்துவிட்டதாமே? என்று வினவ, இல்லையில்லை, லிமினிக்குத்தான் ஆண்குழந்தை கிடைத்துள்ளது என்று நகைச்சுவையாக பதிலளித்துக்கொண்டிருந்தாராம் நாமல்.

### சனல் ஐ அலைவரிசையால் சர்ச்சை

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் சனல் ஐ தொலைக்காட்சியை லைக்கா நிறுவனத்திற்கு வழங்குவது தொடர்பான விவாதம் கடந்தவாரம் சூடாக இடம்பெற்றது.

கடந்த திங்கட்கிழமை காலை ஜனாதிபதி செயலகத்தில் அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது. ஜனாதிபதி ரணில் மடு மாதா தேவாலயத்திற்கு செல்லவேண்டி இருந்ததால் திங்கட்கிழமை மாலை நடைபெறவிருந்த கூட்டம் காலையில் நடைபெற்றது.

லைக்கா நிறுவனத்திற்கு சனல் ஐ அலைவரிசையை வழங்குவது சர்ச்சையை கிளப்பியுள்ளதே? என்று அது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை நோக்கியபடி பிரதமர் தினேஷின் பக்கம் திரும்பி கேட்டாராம் ரணில். இதனை கேட்ட கையோடு அமைச்சர் பந்துலவை நோக்கி திரும்பிய பிரதமர் தினேஷ் , அமைச்சரே நீங்கள் சிரேஷ்ட அரசியல்வாதியல்லவா?வெளிப்படைத்தன்மை இல்லாமல் அல்லவா இந்த அமைச்சரவைப் பத்திரம் இருக்கிறது. லைக்காவுக்கு அரச தொலைக்காட்சி அலைவரிசையை கொடுக்கும் ஒப்பந்தத்திற்கு எதிராக எவரும் நீதிமன்றம் செல்வார்களாயின் முழு அமைச்சரவையும் கோர்ட் வாசல் செல்ல வேண்டி வரும். என்று உரத்த தொனியில் கூறினார்.

பிரதமரின் கருத்துக்கு ஆதரவாக அமைச்சர்கள் சுசில் பிரேமஜயந்த , கெஹெலிய ரம்புக்வெல்ல ஆகியோரும் கருத்துகளை வெளியிட்டாலும் அமைச்சர் பந்துல அவற்றை கணக்கில் கொள்ளாமல் பேச ஆரம்பித்தார்.

லைக்கா ஒப்பந்தம் இறுதியாகவில்லை. நான் நாட்டில் இருக்கவில்லை. இப்போதுதான் இது பேசப்படுகிறது. இதிலுள்ள குறைபாடுகளை கவனித்து தீர்ப்போம் என்றார் பந்துல. ஆனாலும் அமைச்சர்கள் பலர் தொடர்ந்தும் எதிர்ப்பினை வெளியிட்டதால், லைக்காவுக்கு ஐ அலைவரிசையை வழங்கும் ஒப்பந்தத்தை திருத்தி புதிதாக ஒப்பந்தமொன்றை தயாரித்து அதற்கான அமைச்சரவை பத்திரத்தை மீண்டும் சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

### அரச ஊடகங்கள் மஹிந்தானந்தவின் கீழ்

அரசாங்கத்தின் செல்வாக்கு நாளுக்கு நாள் சரிந்து வருவதால், அரசாங்க ஊடகங்களை பயன்படுத்தி தீவிர பிரசாரங்களை முன்னெடுக்க ரணில் தீர்மானித்துள்ளாராம்.

ரணில் தலைமையில் அமையவுள்ள புதிய கூட்டணியின் பிரசார செயற்பாடுகள் மஹிந்தானந் தவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அரசியல் ரீதியான வேலைகள் அமைச்சர் காஞ்சன , பிரசன்ன ரணதுங்க ஆகியோரிடம் வழங்கப்பட்டுள்ளன. தினசரி காலை ஜனாதிபதியை சந்திக்கும் மஹிந்தானந்த , அரசாங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பில் ஊடக மட்டத்தில் கிடைக்கும் ஆதரவை விபரிப்பதாக தகவல். பந்துல குணவர்தன ஊடக அமைச்சுப்பொறுப்பை வைத்திருந்தாலும் அவர் மேலதிக அமைச்சுப்பொறுப்புகளை வைத்திருப்பதால் அரச ஊடகங்களை கட்டுப்படுத்தும் பொறுப்பை மஹிந்தானந்த வைத்திருப்பதாக தகவல்.

### நாமலின் வியூகம்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன வில் இருந்து விலகி சுயாதீனமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பினர்களை தனித்தனியாக சந்தித்து பேச்சு நடத்தி வருகிறாராம் நாமல் ராஜபக்ஷ. தந்தையார் மஹிந்த ராஜபக்ஷவை போன்று அனைத்து எம். பிக்களுடனும் சுமூகமாக நட்புறவு பழகி வருகிறார்.

அடுத்த பொதுத்தேர்தலின் பின்னர் எதிர்க்கட்சித்தலைவராக நாமல் இருக்க வேண்டுமென மஹிந்த ராஜபக்ஷ விரும் புகிறார். ஆனால், அடுத்த ஜனாதி பதித் தேர்தலில் நாமல் போட்டியிட வேண்டுமென குடும்பத்தில் பலரும் விரும்புகின்றனர். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பலர் போட்டியிடும் நிலை இருப்பதால் நாமல் சிறந்த போட்டியொன்றை கொடுக்கக் கூடியவர் என்று அவரது குடும்ப உறுப்பினர்கள் கருதுவதாக தகவல்.

### கோட்டாவும் களத்தில்

தேசிய தேசப்பற்று அணி என்ற புதிய அரசியல் கூட்டொன்றை ஆரம்பிக்க பாராளுமன்ற உறுப் பினர்கள் சிலர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

டலஸ் அழகப்பெருமவுடன் இருக்கும் சன்ன ஜெயசுமன எம்.பி இது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நீண்ட பேச்சுகளை நடத்தியுள்ளார். ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை ஒன்றுதிரட்டி அரசாங்கத்தின் 13 ஆவது திருத்த முழு அமுலாக்க முயற்சி உட்பட பல விடயங்களுக்கு எதிர்ப்பினை தெரிவிப்பது இந்த புதிய அணியின் நோக்கமாம். எவ்வாறாயினும், இனவாத சிந்தனை கொண்ட அரசியல் கூட்டணி அமைவது தொடர்பில் அதிருப்தியில் உள்ளாராம் டலஸ் அழகப்பெரும.

### வெளியாகவுள்ள சர்ச்சைக்குரிய வீடியோ

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவம் தொடர்பான சர்ச்சைக்குரிய காணொளியொன்று வெளியாகவுள்ளதாம்.

சனல் 4 தொலைக்காட்சி கடந்த 15 ஆம் திகதி இந்த காணொளியை வெளியிடவிருந்தது. ஆனால், அது பின்போடப்பட்டது. பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் செயலாளராக பணியாற்றிய ஒருவர் தற்போது இங்கிலாந்தில் வசிக்கிறார். அவர் தெரிவிக்கும் பரபரப்பு மிக்க கருத்தொன்றின் காணொளியே வெளியாகவுள்ளதாம். வரும் செவ்வாய்க்கிழமை 22 ஆம் திகதி இந்த காணொளி வெளியாகவுள்ளது.

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்க, பாதுகாப்புத்துறை அதிகாரி ஒருவரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உயர்மட்ட பிரமுகர் ஒருவரும் , வெளிநாடு ஒன்றும் எவ்வாறான கூட்டு வேலைகளை செய்தன என்பது அந்த காணொளியில் விவரிக்கப்படவுள்ளதாம். இந்த குற்றச்சாட்டுகளை மறுக்க இலங்கை அரசாங்கம் தயாராக இருக்கிறதாம்.

இந்த காணொளியின் பின்னணியில் இருப்பதாக கருதப்படும் ஊடகவியலாளர்கள் , அரசியல் பிரமுகர்களை தேடி வலைவீசியிருக்கிறது அரச புலனாய்வுத்துறை.

ஏற்கனவே ஈஸ்டர் தின தாக்குதல் குறித்து விசாரணை நடத்துமாறு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வலியுறுத்தி வரும் நிலையில், மேற்படி வீடியோ வெளிவந்த பின்னர் அது தொடர்பில் ரணில் நடவடிக்கைகளை எடுக்காவிடின், அது ரணிலின் அரசியல் செயற்பாடுகளை பாதிக்கும் என்று கருதப்படுகிறது.



### மஹிந்த குழுவின் கிரிக்கெட் போட்டி

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் ஐந்தாவது நிறைவேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்பாடு செய்த மஹிந்த ராஜபக்ஷ சவால் சம்பியன்ஷிப் பாராளுமன்ற கிரிக்கெட் சுற்றுப்போட்டி கடந்த சனிக்கிழமை (12) நுவரெலியா நகரசபை விளையாட்டு மைதானத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது. .

(தொடர்ச்சி 09 ஆம் பக்கம்...)

24ஆவது
சிறந்த ஊடகவியல்
விருதுகள் 2022

விருது பிரிவுகள் பட்டியல் (அச்சு ஊடகம்)

- ஆண்டின் மிகச் சிறந்த ஊடகவியலாளருக்கான மேர்வின் டி சில்வா விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த புலனாய்வு ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த சுவாரஷ்யமான செய்தி வெளியீட்டிற்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த இளம் ஊடகவியலாளருக்கான டென்ஸில் பீரிஸ் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச்சிறந்த சுகாதார மற்றும் மருத்துவ அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் / தமிழ் /ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சூழலியல் அறிக்கையிடலுக்கான விருது (சிங்களம் /தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த விளையாட்டுத்துறை ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்திரிகை பக்க வடிவமைப்புக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு பரிசு)
- ஆண்டின் மிகச் சிறந்த வணிகவியல் மற்றும் நிதியியல் ஊடகவியலாளருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த நெருக்கடியான சூழ்நிலைகளின் கீழ் அறிக்கையிடலுக்கான பேராசிரியர் கைலாசபதி விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிறிவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- தகவல் அறியும் உரிமை சட்டத்தை பயன்படுத்தி எழுதப்பட்ட ஆண்டின் மிகச்சிறந்த செய்தி அல்லது விவரணத்திற்கான விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- ஆண்டின் மிகச் சிறந்த சமூகப் பிரச்சினைகளை அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது (அனைத்து மொழிகளையும் உள்ளடக்கி ஒரு விருது)
- ஆண்டின் மிகச் சிறந்த விவரண எழுத்தாளருக்கான உபாலி விஜேவர்த்தன விருது (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

விருது பிரிவுகள் பட்டியல் (பத்திரிகை இணையத்தளங்கள்)

- மிகச் சிறந்த பத்திரிகை இணையத்தளம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)
- மிகச் சிறந்த காணொளி ஆக்கம் (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்)

(தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்) : ஒவ்வொரு மொழிப் பிரிவிலும் ஒவ்வொரு பரிசு

2022 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கும் இடையில் பத்திரிகையொன்றில் தமது ஆக்கங்கள், கருத்துப்பட ஓவியங்கள் மற்றும் புகைப்படங்களின் பிரசுரங்களைக் கொண்ட விண்ணப்பதாரிகள் பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட தமது மூல ஆக்கங்கள். கருத்துப்பட ஓவியங்கள் அல்லது புகைப்படங்களை ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 வீதம் சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. மூல பத்திரிகை ஆக்கங்கள் கிடைக்கப்பெறாத பட்சத்தில் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர்கள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவரின் அத்தாட்சிப்படுத்தலுடன் ஆக்கத்தின் பிரதியை அனுப்ப பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சுதந்திர நடுவர் குழுவினர் வெற்றியாளர்களைத் தெரிவு செய்வர்.
விண்ணப்ப முடிவுத் திகதி: வியாழக்கிழமை, ஆகஸ்ட் 31, 2023.

அனைத்து ஆக்கங்களும் சரியாக கோப்புருவாக்கம் செய்யப்பட்டிருக்க வேண்டும். (தளர்வாக கட்டப்பட்ட பத்திரிகை ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது) ஆக்கங்கள் சகிதம் விண்ணப்பங்கள் குழுத் தலைவர், சிறந்த ஊடகவியல் விருதுகள் 2022, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பெர்னார்ட் சொய்ஸா மாவத்தை ( கிருள வீதி), கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

# அதிகாரப்பகிர்வின் அடிமை ரணில்!



## உதய கம்மன்பில காட்டம்

**அதிகாரப்பகிர்வு என்றவொரு விடயத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அடிமையாகிவிட்டார். அதன் காரணமாகவே எத்தனை முயற்சி எடுத்தாலும் வெற்றி கிடைக்காதென்பதை அறிந்தும் மீண்டும் மீண்டும் 13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் பற்றி பேசுவதாக பிவிதுரு ஹெலஉருமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.**

**“தெரண” தொலைக்காட்சிக்கு வழங்கிய நேர்காணலின்போதே இவ்வாறு சுட்டிக்காட்டினார்.**

**அவருடனான உரையாடலின் ஒருபகுதி வருமாறு,**

**13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியால் அழைக்கப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி பங்குபற்றாத பின்னணியில், நீங்கள் உள்ளிட்ட தேசியத்துவம் தொடர்பில் பேசும் சிலர் அதில் பங்குபற்றியிருந்தீர்கள். ஜனாதிபதியின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பில் அறிந்தா இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டீர்கள்?**

ரணில் விக்கிரமசிங்கவின் யுத்திகள் பற்றியும் அவரின் செயற்பாடுகள் பற்றியும் அறிந்து வைத்துள்ளதன் காரணமாகவும், இதுபோன்ற கலந்துரையாடல்களில் கலந்துகொண்டு அவரின் செயற்பாடுகளை தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கை இருந்ததன் காரணமாகவுமே சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொண்டோம். அவர் 2021ஆம் ஆண்டு அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேச ஆரம்பித்த நாளிலிருந்தே அவரின் எதிரான நிலைப்பாட்டிலேயே நாங்கள் செயற்பட்டு வருகிறோம்.

அன்றைய கலந்துரையாடலின்போது ஜனாதிபதி அவரின் யோசனைகளை முன்வைத்தார். அந்த யோசனைகளை வர்ணித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்ரிபால சிறிசேன கருத்து வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து நாங்கள் பல்வேறு விடயங்களை சுட்டிக்காட்டியிருந்தோம். அதிகாரப்பகிர்வு அவசியமென்றால் அதிகாரப்பகிர்வுக்குப் பொருத்தமான பிரிவாக இருக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை குறிப்பிட்ட திகதியில் நடத்துமாறும், நீங்கள் அதிகாரப்பகிர்வு பற்றி பேசினாலும் இன்றும் மக்கள் பிரதிநிதிகளுக்கு இருக்கும் அதிகாரங்களைப் பெற்றுக்கொண்டு மாகாண சபைகளையும் கலைத்து உங்களின் பிரதிநிதிகளான ஆளுநர்கள் நியமித்துள்ளமையானது அதிகாரங்களை ஓரிடத்தில் குவிக்கும் வகையிலான செயற்பாடு என்பதனையும் தெளிவுபடுத்தியிருந்தோம்.

இறுதியில், மைத்ரிபால சிறிசேனவைத் தவிர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதல் ஏனைய சகல கட்சித் தலைவர்களும் மாகாண சபைத் தேர்தலை நடத்திலிட்டு அதிகாரப்பகிர்வு பற்றி பேசுமாறும் அவ்வாறு இல்லாவிட்டால் நீங்கள் ஏமாற்று வேலையே செய்கிறீர்கள் என்றும் கூறினார்கள். அதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு கோபம் தலைக்கேறி, ‘‘என்னுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது வேறொரு விடயத்தைக் கூறினீர்கள். இதனை செய்வோம் என்றீர்கள். ஆனால், ஏன் தற்போது முற்றிலும் புறம்பாக பேசுகிறீர்கள்’’ என்று கேட்டார். அதன்போது அந்த இடத்தில ரணில் தனியாளாகிவிட்டார். எங்களால் முன்வைக்கப்பட்ட தர்க்கத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கோ அல்லது அங்கிருந்த முஸ்லிம் கட்சிகளுக்கோ ஜனாதிபதிக்கு ஆதரவளித்து வாய் திறக்க முடியாத நிலையை ஏற்படுத்தினோம். அதனால், ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதியே தனியாளாக்கப்பட்டார்.

ஒருவேளை, அந்தக் கலந்துரையாடலில் நாங்கள் கலந்துகொண்டிருக்காவிட்டால் என்னவாகிருக்கும். நாங்கள் அங்கு சென்றிருக்காவிட்டால் ரணிலின் நிலைப்பாட்டை மைத்ரி வர்ணித்ததுபோன்று ஏனைய கட்சித் தலைவர்களும் வர்ணித்துவிட்டு சர்வகட்சி மாநாடு வெற்றியடைந்துவிட்டதாக தெரிவித்து சகல கட்சிகளும் ஒன்றிணைந்திருப்பார்கள்.

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் அந்தக் கலந்துரையாடலில் இருந்தார். அவ்வாறிருக்கையில் அவ்வாறு இடம்பெற்றிருக்க வாய்ப்பிருந்திருக்காது அல்லவா?**

அவரும் அங்கிருந்தார். ஜனாதிபதியின் யோசனைகளுக்கு அவரும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தார். ஆனால், அந்த யோசனைகளுக்கு தானும் எதிராகவே கருத்து முன்வைப்பேன் என்று இதற்கு முன்னர் கூறியிருக்கவில்லை. எனவே, எங்களின் நிலைப்பாட்டையே ஏனைய அரசியல் கட்சிகளும் ஏற்றுக்கொண்டன.

பொதுவாக, ஏனைய நாட்களில் அதிகாரப்பகிர்வு தொடர்பான ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டை வர்ணித்துக்கொண்டிருந்தார்களே தவிர, இந்த விவகாரத்தை உண்மையான ஒரு தர்க்கத்துக்கு வந்திருக்கவில்லை. ஒருவேளை நாங்கள் அங்கு சென்றிருக்காவிட்டால் ரணிலுக்கே வெற்றி கிடைத்திருக்கும்.

அதேபோன்று, இதனூடாக மிகப்பெரிய ஏமாற்று வேலையே செய்கிறார்கள். 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதை நாங்கள் எதிர்க்கிறோம். 13ஆவது திருத்தத்தை அமுல்படுத்துக என்று கூறிக்கொண்டு, 13இற்கும் அப்பால் அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது தொடர்பிலேயே அன்று ஜனாதிபதி பேசினார். அதனை நாங்கள் அன்று அடையாளங்காட்டினோம். 13ஆவது திருத்தம் தொடர்பில் பேசப்போவதாக அறிவித்துவிட்டு எங்களுக்கு வழங்கிய அறிக்கைகளில் 13இற்கும் அப்பாலான அதிகாரப்பகிர்வு தொடர்பில் குறிப்பிடப்பட்டிருந்தது. அந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு இந்த ஆவணங்களை பெற்றுக்கொண்டிருக்காவிட்டால் ஜனாதிபதியின் ஏமாற்றுத் திட்டத்தை வெளிப்படுத்தியிருக்க முடியாது.

> நாட்டை வீணப்படிப்பதற்கான செயற்பாடுகளுக்கு எதிராக குரல்கொடுக்கிறோம் என்பதற்காக நாங்கள் இனவாதிகளல்ல.

**ஜனாதிபதியின் யோசனைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரும் எதிராக கருத்து தெரிவித்ததாக நீங்களே கூறுகிறீர்கள். அதன் பின்னர் 13இற்கு அப்பாலான அதிகாரப்பகிர்வை வழஙகவே அவர் முயற்சிப்பதாகக் கூறுகிறீர்கள். அவ்வாறிருக்கையில், ஜனாதிபதி மீதான உங்களின் குற்றச்சாட்டை நாங்கள் எவ்வாறு ஏற்றுக்கொள்வது? 13ஆவது திருத்தத்துக்கு அப்பாலான அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் விவகாரத்தில் டி.என்.ஏ. விருப்பத்துடன் அல்லவா இருக்கிறது?**

ஜனாதிபதியின் யோசனைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணக்கம் தெரிவித்தமையினாலேயே அவர் சர்வகட்சி மாநாட்டுக்கு அழைப்பு விடுத்திருந்தார். ஆனால், நாங்கள் அந்த இடத்தில் ஜனாதிபதி செயற்பாடுகளிலுள்ள உண்மை நிலைக் குறித்து கேள்வி எழுப்பினோம். ஏன் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்தாமல் மக்களின் அதிகாரத்தைப் பறித்துக்கொண்டுள்ளீர்கள்? நீங்கள் நேர்மையானவர் என்றால் முதலில் அந்தத் தேர்தலை நடத்துங்கள் என்று கேள்வி எழுப்பினோம்.

அந்தத் தர்க்கத்தின் முன்னிலையில், டி.என்.ஏ. தரப்பினர் முதலில் ஜனாதிபதியின் யோசனைகளுக்கு இணக்கம் வெளியிட்டிருந்தாலும் ஜனாதிபதியின் உண்மைத்தன்மை தொடர்பில் கேள்வி எழுந்ததும் எங்களின் வாதத்தை அவர்களால் ஏற்றுக்கொள்ள நேர்ந்தது. எங்களின் தர்க்கத்தைத் தொடர்ந்தே முதலில் தேர்தலை நடத்திவிட்டு, பின்னர் அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேசுங்கள். நிலைப்பாட்டுக்கு அவர்களும் வந்தார்கள்.

**தேசியத்துவம் பேசும் குழுவினருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் இடையில் ஏதாவது நேர்மையான தொடர்புகள் இருக்கின்றனவா? ஜனாதிபதியின் யோசனைகளுக்கு இரு தரப்பினரும் எதிர்ப்புத் தெரிவிக்கிறீர்கள்? இடைக்கால ஜனாதிபதி தெரிவுசெய்யும்போதும் இரு தரப்புக்கும் இடையில் உள்ள நட்புறவையும் நாங்கள் அவதானித்திருந்தோம்’?**

இது தவறான நிலைப்பாடாகும். அதற்குக் காரணம் என்னவொன்றால், அதிகாரப்பகிர்வுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முதலில் இணக்கம் தெரிவித்தே இருந்தது. அதன் காரணமாகவே இந்த சர்வகட்சி மாநாட்டுக்கே அழைப்புவிடுக்கப்பட்டது. எனவே, அதிகாரப்பகிர்வு தொடர்பில் அவர்கள் ஜனாதிபதியுடனேயே இருக்கிறார்கள். இந்த விவகாரத்தில் நாங்கள்

> சர்வகட்சி மாநாட்டில், ‘‘என்னுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது வேறொரு விடயத்தைக் கூறினீர்கள். இதனை செய்வோம் என்றீர்கள். ஆனால், ஏன் தற்போது முற்றிலும் புறம்பாக பேசுகிறீர்கள்’’ என்று கூட்டமைப்பினருடன் ரணில் கோபமாக பேசினார்.

அவர்களுக்கு எதிரான நிலைப்பாட்டிலேயே இருக்கிறோம். நாங்கள் அங்கு சென்று ஜனாதிபதியுடன் ஒன்றாக அமர்ந்ததாலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு வெட்கத்தை ஏற்படுத்தும் வகையிலான சூழ்நிலையை உருவாக்கினோம். எங்களின் தர்க்கத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரால் மாற்றுக்கருத்தை முன்வைக்க முடியாததால் அவர்களும் எங்களின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டார்கள்.

**ஜனாதிபதிக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. அவ்வாறிருக்கையில் அவரின் உண்மைத்தன்மை அல்லது நேர்மை என்பன கேள்விக்குறியாக்கப்படுகின்றன. ஆனாலும், தற்போது அவர் இந்த நாட்டின் பாதுகாப்பாளராக அல்லவா செயற்படுகிறார்?**

அவ்வாறான எண்ணம் தோன்றுகின்றது என்றால் அது அரசியல் தொடர்பில் போதிய அறிவின்மையாகும். அதற்குக் காரணம், அதிகாரப்பகிர்வு தொடர்பில் – அவரின் உண்மை நிலை தொடர்பில் யாருக்கும் எந்தச் சந்தேகமும் இல்லை. ஜனநாயகம் தொடர்பில் அவருக்கு இருக்கும் நேர்மைத்தன்மையையே கேள்விக்கு உட்படுத்தினோம். அந்த இடத்தில் ஏன் தேர்தலை உரிய நேரத்தில் நடத்தவில்லை என்பதே எங்களின் கேள்வியாக இருந்தது.

அதிகாரப்பகிர்வுக்கு ரணில் விக்கிரமசிங்க அடிமையாகிவிட்டார் என்றே நான் கருதுகிறேன். 2001ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்தபோது, அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேசியதன் காரணமாகவே மூன்று வருடங்களில் பிரதமர் பதவியிலிருந்து விலக நேர்ந்தது. 2015ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்து 2018 ஆம் ஆண்டு மீண்டும் பதவியை இழக்கக் காரணமும் அதுவே. தவறு என்று தெரிந்தும் ஒரு விடயத்தை மீண்டும் மீண்டும் முயற்சிக்கிறாரென்றால் அதற்கு இரண்டு காரணங்களே இருக்கவேண்டும்.

> நாங்கள் கலந்துரையாடலுக்கு சென்றிருக்காவிட்டால் ஜனாதிபதியும் - டி.என்.ஏவும் இணக்கப்பாட்டுக்கு வந்திருப்பார்கள்.

ஒரு கொள்கையில் ஒரே பரிசோதனையை நீங்கள் மீண்டும் மீண்டும் செய்து வேறு வகையான பிரதிபலன்களை எதிர்பார்க்கிறீர்களென்றால் உங்களுக்குப் பித்து பிடித்துவிட்டது என்று கோட்பாட்டு அறிஞர் எல்பட் ஐன்ஸ்டன் தெரிவித்துள்ளார். அவரின் கோட்பாட்டுக்கமைய ரணில் விக்கிரமசிங்கவுக்கு பித்து தலைக்கேறிவிட்டது என்றே கூறவேண்டும்.

போதைப்பொருள் பயன்படுத்துபவர்கள் போதைப்பொருட்களுக்கு அடிமைப்பட்டுள்ளது போன்று, இன்று ரணில் விக்கிரமசிங்க அதிகாரப்பகிர்வுக்கு அடிமையாகிவிட்டார். சுமந்திரனின் முகத்தை கண்டதும் முழு உலகத்தையுமே மறந்துவிட்டு அதிகாரப்பகிர்வு தொடர்பில் பேச ஆரம்பித்துவிடுகிறார். அதனூடாக தனக்கும் நாட்டுக்கும் ஏற்படும் ஆபத்து தொடர்பில் நன்கு அறிந்திருந்திருந்தும் அதற்கு அடிமையாகிவிட்டதால் அதனையே மீண்டும் மீண்டும் செய்துவருகிறார்.

**உங்களின் முதலாவது தர்க்கத்தின் பிரகாரம், உதய கம்மன்பில எனும் பிரசித்தமான அரசியல்வாதியொருவர் இருக்கிறார். அவரும் அப்படிப்பட்டவரே. அவரும் அமைச்சரவை அமைச்சராக இருந்தார். தேசிய மட்டத்தில் தலைவராகவும் இருந்தார். ஆனால், அவர் இனவாதம் என்பதற்கு அடிமையாகியுள்ளார். தேசிய சமத்துவம் தொடர்பில் ஏதாவது செய்வதற்கான முயற்சிகள் எடுத்தாலும் அதற்கு எதிராகவே கருத்து வெளியிடுவார். இது சரியான தர்க்கமா?**

இது முழுமையாக தவறான தர்க்கமாகும். ஓர் இனமாக – ஐக்கியமாக இருக்கும்போதே எமது நாட்டில் சமத்துவத்தை அவதானிக்க முடியும். வடக்குத் தமிழர்களின் வலயம், கிழக்கு முஸ்லிம்களின் வலயம், மத்தி பெருந்தோட்டத்தினரின் வலயம், ஏனையவை சிங்களவர்களின் வலயம் என்று ஒன்பது துண்டுகளாக பிரித்துக்கொண்டு ஒன்பது கொடிகளின் கீழ் செயற்பட்டாலா தேசிய சமத்துவத்துவம் உருவாகும் என்பதே எங்களின் கேள்வியாகும். சகலரும் ஒற்றுமையாக இருந்தால் மாத்திரமே தேசிய சமத்துவம் உருவாகும். நாட்டை வீணப்படிப்பதற்கான செயற்பாடுகளுக்கு எதிராக குரல்கொடுக்கிறோம் என்பதற்காக நாங்கள் இனவாதிகளல்ல.

தமிழீழ விடுதலைப் புலிகளை யுத்த பொறிமுறையினூடாகவே தோற்கடிக்க முடியும் என்றும் தொடர்ச்சியாகக் கூறிவந்தோம். ஆனால், நாட்டில் 99 சதவீதமானவர்கள் புலிகளை தோற்கடிக்க முடியாது. அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கோரிக்கையை நிறைவேற்றியே நாட்டை மீட்கவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தார்கள். அதன்போது எங்களை யுத்த மூர்க்கர்களாகவே விமர்சித்தார்கள். ஆனாலும், எங்கள் மீதான குற்றச்சாட்டுகளை பொறுத்துக்கொண்டு அந்த நிலைப்பாட்டை சமூகமயப்படுத்தியன் காரணமாகவே இன்று இந்த நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவுகிறது.

நாங்கள் அமெரிக்காவுக்கு எதிராக பேசுகிறோம். 20 வருடங்களுக்கு முன்னர் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை எனக்கு விசா வழங்கப்பட்டிருந்தது. இருந்தபோதும் எம்.சி.சி, சோபா, எக்ஷா போன்ற உடன்படிக்கைகளை கொண்டுவருவதற்கு எதிராக நாங்கள் செயற்பட்டோம். மின்சக்தி, வலுசக்தி அமைச்சராக இருந்தபோது மாநாடொன்றுக்கு அமெரிக்காவிலிருந்து அழைப்பு கிடைத்திருந்தது. இதன்போது எனக்கு இராஜதந்திர கடவுச்சீட்டு வழங்கப்பட்டிருந்தது. எனது கடவுச்சீட்டை தூதரகத்துக்கு வழங்கியதும் எனக்கு விசா வழங்கவில்லை. அதுமாத்திரமல்லாமல் இருந்த விசாவும் இரத்துசெய்யப்பட்டது. அமெரிக்காவுக்கு எதிராக பேசாமல் எங்களாலும் அமைதியாக இருந்திருக்க முடியும். ஆனால், நாங்கள் அன்று அமைதியாக இருந்திருந்தாலும் முழு இலங்கையும் எமக்குக் கிடைத்திருக்காது.

அதிகார வர்க்கத்துக்கு எதிராக நாங்கள் தொடர்ச்சியான எதிர்ப்பை வெளியிட்டு வருப வர்கள். அதன் பின்னணியில் பல்வேறு அர்ப்பணிப்புகளையும் செய்துள்ளோம். நாடொன்றுக் குச் செல்ல விசாவொன்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலையிலேயே இருக்கிறேன். ஆனாலும், நாட்டுக்காக இதுபோன்ற அர்ப்பணிப்புகளை செய்யவும் கஷ்டங்களை அனுபவிக்கவும் நாங்கள் தயாராகவே இருக்கிறோம். வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் வந்து கடமையாற்றுமாறு எங்களுக்கு அழைப்பு இருக்கிறது. ஆனால், நாங்கள் அங்கு செல்லவில்லை. இந்தப் பார்வையிலிருந்து பார்த்தால் நாங்களும் அடிமைப்பட்டுள்ளோம். நீங்கள் கூறுவதும் சரி. நாட்டுக்காக சகல விமர்சனங்களையும் பொறுத்துக்கொண்டு இருக்கும் வளங்களையும் வாயப்புகளையும் இழப்பதற்கு நாங்கள் அடிமையாகிவிட்டோம். உங்களின் கருத்தை ஏற்கிறேன்.

**தொகுப்பு - நா.தினுஷா**

# நீரின்றி அமையாது உலகு!



“விண்ணிலிருந்து மண்ணில் பொழியும் ஒரு துளி நீரையேனும் மனிதனுக்குப் பயன்படாது கடலில் கலக்க விட மாட்டேன்'' - என்றான் மகா பராக்கிரமபாகு மன்னன்.

நீர்ப்பாசனத் துறைக்கான இம்மண்ணில் அளப்பரிய சேவையால் நீர்வளம் பெருகி விவசாயம் தழைத்தோங்கியது. மக்கள் இன்புற்று வாழ்ந்தனர் என்கிறது வரலாறு.

அத்தகைய மன்னர்கள் வாழ்ந்த மண்ணில் இன்று குடிநீருக்கும் கையேந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்தோ துயரம்!

நதிகள், ஏரிகள், குளங்கள், நீரேந்துகள், ஏன் வாய்க்கால் வரப்புகள் கூட வற்றிக் காய்ந்துபோயுள்ளன.

குளங்களும் குட்டைகளும் வற்றிப்போனதால் குடிக்க நீரின்றி வனத்து வாழ் ஜீவராசிகள் செத்து மடியும் நிலை ஏற்பட்டுள்ளதுடன், வயல்நிலங்களும், சேனைப்பயிர்ச்செய்கை நிலமும், ஏன் காடுகளும் கருகிக்கொண்டிருக்கின்றன.

இன்று வறட்சியால் கருகிக்கொண்டிருக்கும் காடுகளால் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயைக் கட்டுப்படுத்த முடியாது உலக நாடுகள் திணறிக்கொண்டிருப்பதை அன்றாட செய்திகளின் வாயிலாக அறிய முடிகிறது.

இது எம் நாட்டில் அரிதென்றாலும் நிலவும் வறட்சியால் ஆங்காங்கே காடுகள் பற்றியெரிந்துகொண்டுதான் இருக்கின்றன. அதில் தம் சுகத்துக்காக காடுகளுக்கு தீ வைப்போரும் இருக்கவே செய்கின்றனர். இதனால் பல ஏக்கர் கணக்கான வனப் பிரதேசம் எரிந்து சாம்பலாகிக்கொண்டிருக்கின்றது.

அண்மையில் சுமார் 2ஆயிரத்து 500 ஹெக்டேயர் வனப்பகுதி தீயில் எரிந்து நாசமடைந்துள்ளது. இதில் 150இற்கும் அதிகமான தீ வைப்புச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

***புகைந்துகொண்டிருக்கின்றன வனங்கள்.***

***மூச்சிறைத்துக்கொண்டிருக்கின்றன வன ஜீவராசிகள்.***

***மழைவேண்டி இறையிடம் இறைஞ்சுக்கொண்டிருக்கிறது மனித இனம்.***

நாட்டில் இன்று நிலவும் கடும் வறட்சியால் 15இற்கும் மேற்பட்ட மாவட்டங்களில் 2 இலட்சத்து 20 ஆயிரத்துக்கும் அதிகமானோர் குளிப்பதற்கும் ஏன் குடிப்பதற்கும் கூட நீரின்றி தவித்து வருகின்றனர்.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் கடன்பெற்றும், கடன் பெற முடியாதவர்கள் காது, கழுத்திலுள்ள நகைகளை அடகு வைத்தும் சிறுகச் சிறுக சேர்த்த பணத்தில் விதைநெல் வாங்கி விதைத்த சந்தோஷத்தில் அறுவடை நாளை எண்ணி காத்திருக்க, விளைந்த பயிர்கள் நீரின்றி கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. நீரேந்துகளிலிருந்து விவசாயத்துக்குத் தேவையான நீரை திறந்துவிடுமாறு கோரி வீதிகளுக்கு இறங்கிப் போராடும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டில் நிலவும் கடும் வறட்சியுடனான காலநிலையால் நாடுமுழுவதும் சுமார் 38 ஆயிரத்து 903 ஹெக்டேயருக்கும் அதிகமான நெல் வயல்கள் நாசமாகியுள்ளதுடன், சுமார் 50 ஆயிரம் வயல்நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள விவசாய அமைச்சு, இதனால் 46 ஆயிரத்துக்கும் அதிகமான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில், நீரின்றி பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்போவதாக அரசு அறிவித்துள்ளது. இது வரவேற்கத்தக்கதே. எனினும், அது தற்காலிகமே.

''முன்னெரெல்லாம் வெயில் காலம் ஆரம்பித்துவிட்டால் குளங்களில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துவிடும். இக்காலப்பகுதியில் வற்றியிருக்கும் குளங்களில் தூர்வாரும் நடவடிக்கை இடம்பெறும். ஆட்சியாளர்களின் ஒத்துழைப்புடன் அப்பகுதி மக்களே ஒன்றிணைந்து குறித்த குளத்தில் தேங்கியிருக்கும் களிமண்ணை அகற்றும் பணி இடம்பெறும்.

மாரி காலம் தொடங்கியதும் தூர்வாரப்பட்ட குளங்கள் நீர் நிரம்பி வழியும். விவசாயம் தழைக்கும். மீண்டும் கோடைகாலம் தொடங்கியதும் தூர்வாரப்பட்ட குளங்களின் நீர்மட்டம் சிறிதும் குறையாது விவசாயத்துக்கு உதவும்.

ஆனால், இன்றோ நிலைமை மோசமாகியுள்ளது. குளங்கள் தூர்வாரப்படாமல் தூர்ந்துபோகும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இன்று பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குவதாக அரசு அறிவித்துள்ளது. அதைவிடுத்து, இக்காலப்பகுதியில் பயிர்கள் வாடிப்போன சோகத்தில் மூழ்கியுள்ள அவ்விவசாயிகளை ஒன்றிணைத்து, அவர்களுக்கு ஊதியம் வழங்கி குளங்களை தூர்வாரும் நடவடிக்கையை முன்னெடுத்தால், அவர்களுக்கும் தற்காலிக தொழிலொன்று கிடைத்ததாகவும் இருக்கும். ஆனால், திட்டமிடல், முகாமைத்துவம், நிர்வாக திறமையற்றவர்களாக இன்றைய ஆட்சியாளர்கள் இருக்கின்றனர். இவ்வாறானவர்கள் தூர்வாரவேண்டியது குளங்களை அல்ல. அவர்களின் தலைகளிலுள்ள களிமண்ணையே. அப்போதுதான் இந்நாடு சிறக்கும் - என்கிறார் பாலித என்ற சகோதர மொழி சகோதரர்.

இப்போதுதான் புரிகிறது வரலாற்று நூல்களில் நாமறிந்த மகா பராக்கிரமபாகு மன்னனின் சிறப்பு.

நாட்டில் தற்போது நிலவும் வறட்சியுடனான காலநிலையால் இரத்தினபுரி, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம், குருநாகல், யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, பதுளை, மொனராகலை, ஹம்பாந்தோட்டை, கம்பஹா மற்றும் மாத்தளை உள்ளிட்ட 15 மாவட்டங்களில் கடந்த வெள்ளிக்கிழமை (18) நிலைவரப்படி 60 ஆயிரத்து 943 குடும்பங்களைச் சேர்ந்த 2 இலட்சத்து 10 ஆயிரத்து 652 பேர் குடிநீர் உள்ளிட்ட வறட்சியின் இன்னோரன்ன அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

(இன்றைய திகதியில் நீங்கள் இந்த எழுத்தாக்கத்தை வாசித்துக்கொண்டிருக்கும்போது பாதிக்கப்பட்டோர், பாதிப்பின் தன்மை மாறியிருக்கக்கூடும்)

மேற்குறித்த மாவட்டங்களில் யாழ்ப்பாணம், குருநாகல், அம்பாறை, மட்டக்களப்பு, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் வறட்சியின் கோரப்பிடிக்குள் சிக்கியுள்ளதுடன், அங்கு அதிக எண்ணிக்கையிலானோர் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளிட்ட பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இதில் குறிப்பாக, குருநாகலில் 11 ஆயிரத்து 333 விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாக அண்மையில் விவசாய அமைச்சின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நிலவும் வறட்சியான காலநிலை காரணமாக 73 பிரதான நீர்த்தேக்கங்களின் நீர் கொள்ளளவு 29 வீதம் வரை குறைவடைந்துள்ளது.

இதன் காரணமாக நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் நீர் முகாமைத்துவப் பிரிவு பணிப்பாளர் சுதர்ஷனி விதான பத்திரண கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்நிலையில், வறட்சியால் நாட்டின் பல மாவட்டங்களில் குடிநீர் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி, குறிப்பிட்டளவு நீர்க்கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் பெரும் திண்டாட்டத்துக்கு மத்தியில் வாழ்க்கையை நகர்த்தும் இடைநிலை மக்கள் தற்போது செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

ஏற்கனவே, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், அதற்கிடையில் மின்கட்டண அதிகரிப்பு, இதில் தற்போது வறட்சியின் பிடிக்குள் சிக்குண்டு வாழ்வாதாரத்தை இழந்துள்ள நிலையில், நீர்கட்டண அதிகரிப்பு வேறு. வறட்சி நீடித்தால் மின்வெட்டும் இடம்பெறும் என்ற அச்சம் வேறு...



ஆக, இந்நாட்டில் வாழும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நொடியும் தம் சந்தோஷத்தை தொலைத்து மனஅழுத்தத்துடன் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறோம். இந்நிலை தொடர்ந்தால், மனநிலை வைத்தியரை நாடுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடிய நிலை உருவாகலாம்.

அண்மையில் விண்வெளி ஆய்வு நிலையமான நாசா உலக நாடுகளுக்கு ஓர் எச்சரிக்கை விடுத்திருந்தது. அதாவது, “கடந்த 140 ஆண்டுகளில் இல்லாதளவுக்கு இவ்வாண்டு ஜூலை மாதத்தில் அதிக புவிவெப்பம் பதிவாகியுள்ளது. எனவே, உலக நாடுகள் புவிவெப்பமடைதலைக் கட்டுப்படுத்த உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்'' என வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு, இன்று அமெரிக்காவின் கலிபோர்னியா, ஹவாய் தீவுகள், கனடா, பொலிவியா, போர்த்துக்கல் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் வீசும் வெப்ப அலையால் காட்டுத் தீயில் சிக்கி அந்நாட்டு அரசும் மக்களும் திண்டாடி வருவதுடன், உயிரிழப்புகளையும் எதிர்நோக்கியுள்ளனர்.

இந்நிலையில், உலக மக்கள்தொகையில் நான்கில் ஒரு பகுதியை உள்ளடக்கிய 25 நாடுகள் ஆண்டுதோறும் கடும் நீர் பற்றாக்குறையை எதிர்கொள்வதாக ஆய்வு அறிக்கையொன்றில் தெரியவந்துள்ளது.

நீர் பற்றாக்குறை என்பது உலகளவில் உச்சந்தொட்டு வருகிறது. மக்கள்தொகை வளர்ச்சி, நகரமயமாக்கல், தொழில் மயமாக்கல், காலநிலை மாற்றம் உள்ளிட்டவை தண்ணீர் பற்றாக்குறை பிரச்சினையில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இது குறித்து, உலக வள நிறுவனத்தின் அக்யூடக்ட் நீர் ஆபத்து வரைபடத்தின்( World Resources Institutes Aqueduct Water Risk Atlas) தரவுகளின்படி, உலக மக்கள்தொகையில் நான்கில் ஒரு பங்குக்கு சமமான நாடுகளுடன் உலக சமூகம் நீர் பற்றாக்குறையை எதிர்கொள்கிறது.

உலகளவில் ஏறத்தாழ 400 கோடி தனி நபர்கள், உலக மக்கள்தொகையில், பாதி பேர் ஆண்டுதோறும் ஒரு மாதமாவது தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர். இந்த எண்ணிக்கை எதிர்வரும் 2050ஆம் ஆண்டு 60 சதவீதமாக அதிகரிக்கலாம்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 70 டிரில்லியன் டொலர் (உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 31%), 2010இல் 15 டிரில்லியன் டொலர் (உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 24%) இருந்து, 2050ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பாதிக்கு மேல் அதிக தண்ணீர் பிரச்சினைக்குள்ளாகும்.

உலக மக்கள்தொகையில் நான்கில் ஒரு பகுதியை உள்ளடக்கிய 25 நாடுகள், ஆண்டுதோறும் மிகக் கடுமையான நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கும். அவற்றில், பஹ்ரைன், சைப்ரஸ், குவைத், லெபனான் மற்றும் ஓமன் ஆகியவை பெரிய பாதிப்பை எதிர்கொள்கின்றன. இந்த பகுதிகள் குறுகிய கால வறட்சியின்போதும் தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படலாம்.

அதிக நீர் பற்றாக்குறையை அனுபவிக்கும் பிராந்தியங்களில் மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா ஆகியவை முதன்மையானவையாகும். அங்கு 83 சதவீத மக்கள் மிக அதிக நீர் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர். தெற்கு ஆசியாவில் 74 சதவீத மக்கள் தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றனர்.

தற்போதைய நிலையில் நம்நாட்டில் சுமார் 3 இலட்சம் பேர் நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளனர்.

காடுகளை அழித்து காசு பணம் தேடிய மனிதன், இன்று மாசு காற்றை சுவாசித்து மருத்துவத்துக்கு பணத்தை வாரி இறைத்துக்கொண்டிருக்கிறான்.

நாம் சுவாசிக்கும் ஒட்சிசனை உற்பத்தி செய்வதும், வெளியிடும் காபனீரொட்சைட்டை ($CO_2$) உறிஞ்சுவதும் மரங்களின் பொறுப்பு.

அத்தகைய மரங்களை இன்று மனிதன் வெட்டி வீழ்த்தி காட்டை அழிவுறச் செய்கின்றான்.

ஒரு காடு பெரியளவு காபனீரொட்சைட்டை உறிஞ்சிவிடும். கூடுதலாக, விலங்கு மற்றும் தாவர இனங்கள் உருவாகி இனப்பெருக்கம் செய்யக்கூடிய இயற்கை வாழ்விடங்கள் இருப்பதால் அவை பல்லுயிரியலைப் பாதுகாக்க உதவுகின்றன.

இது நாம் சுவாசிக்கும் ஒட்சிசனை வழங்குவதோடு மட்டுமல்லாமல், புதிய நீரை சேகரித்து வடிகட்டி நமக்கு வழங்குகின்றது. அது மட்டுமன்றி, கிரகத்தின் நீர்நிலை சுழற்சியைப் பராமரிக்கிறது, வெள்ளம் மற்றும் வறட்சியின் எதிர்மறை விளைவுகளை மிதப்படுத்துகிறது என்பதை நாம் நினைவுபடுத்துகிறோம்.

***'நீரின்றேல் நிலையாது இப்பூமி' நீர்வளத்தைப் பாதுகாப்போம்!!***

**• கே.சுபானி**

**★ இந்நாட்களில் நாட்டில் நிலவும் கடுமையான சூரிய ஒளி காரணமாக புற்றுநோய் ஏற்படக்கூடிய அபாயமுள்ளது. ஆகவே, சருமத்தைப் பாதுகாப்பது மிகவும் அவசியமானது. கடும் சூரிய ஒளியால் சருமத்துக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்படலாம். எனவே இச்சரும பாதிப்புகளை குறைக்க சரும பாதுகாப்பு கிரீம்களைப் பயன்படுத்துவது சாலச்சிறந்தது என தோல்நோய் வைத்திய நிபுணர் வைத்தியர் நயனி மதரசிங்க தெரிவித்துள்ளார்.**

**★ சூரிய ஒளி வலுவாக இருக்கும் 10.00 மணிமுதல் பிற்பல் 2.00 மணிவரை அவசியமின்றி வெளியில் செல்வதைத் தவிர்த்துக்கொள்வது நல்லது. அவ்வாறு வெளியே செல்வதற்கான நிர்ப்பந்தம் ஏற்பட்டால் குடை, தொப்பி போன்றவற்றைப் பயன்படுத்துமாறு நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.**

**★ சிறு குழந்தைகளை கடுமையான சூரிய ஒளியிலிருந்து பாதுகாப்பது கட்டாயமாகும். வெயில் உச்சத்தில் இருக்கும்போது விளையாட அனுமதிக்காத வகையில் தொப்பி அணிவதுடன், சன் கிரீம் பயன்படுத்துவது மிகவும் நல்லது என்றும் வைத்திய நிபுணர் குறிப்பிட்டுள்ளார்.**

**★ வெப்பத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு அடிக்கடி நீர் அருந்துமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்தியர் பு.விஜேசூரிய ஆலோசனை வழங்கியுள்ளார்.**

**★ பிளாஸ்ரிக் குடிநீர் போத்தல்களைப் பயன்படுத்துவது அபாயகரமானது எனவும் எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், முக்கியமாக அதிக குளிர்பானம் அல்லது இனிப்புப் பானங்களை அருந்துவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும் என இலங்கை மருத்துவ சங்கத்தின் செயலாளர் வைத்தியர் இ.ஏ.எஸ்.டி.எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.**

**★ நிலவும் வறட்சியால் நீர் ஆதாரங்கள் மாசடைவதால் வயிற்றுளைவு, வயிற்றுப்போக்கு உள்ளிட்ட உடல் உபாதைகள் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது. கொதித்தாறிய நீரை பருகுவதன் மூலம் இதனை தவிர்க்க முடியும் என சுட்டிக்காட்டப்படுகிறது. வறட்சியால் சாதாரண நீர் ஆதாரங்கள் வற்றிப்போயுள்ளதால் நீரில் கிருமிகள் இருக்க வாய்ப்புள்ளது. இந்நீரை பயன்படுத்தும்போது வயிற்றுப்போக்கு போன்ற நோய்கள் உருவாகும் அபாயம் காணப்படுகிறது. ஆகவே, தண்ணீரைக் கொதிக்க வைத்து அருந்துங்கள் என வலியுறுத்தப்படுகிறது.**



# தொடரும் பேரவலத்தில் புலம்பெயர் தொழிலாளர்



"இலங்கையின் இன்றைய பொருளாதார நிலையானது, ஒரு குடும்பத்தில் எத்தனைப் பேர் இரவு, பகல் உழைத்தாலும் போதாத நிலையிலேயே உள்ளது. அந்தளவுக்கு அத்தியாவசியப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள் உள்ளிட்ட அனைத்துப் பொருட்களின் விலை அதிகரிப்பு மற்றும் மின்சாரம், நீர்க்கட்டண அதிகரிப்பு என்று நாளுக்கு நாள் அதிகரித்துச் சென்றாலும் உழைப்புக்கேற்ற ஊதியமானது விலைவாசிகளை ஈடுகட்டுவதாக அமையவில்லை.

எனவே, அதனை ஈடுசெய்ய இன்று பெரும்பாலான இலங்கையர்கள் புலம்பெயர் தொழிலாளர்களாக நாட்டைவிட்டு வெளியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இவ்வாறு அதிகளவானவர்கள் புலம்பெயர் தொழிலாளர்களாக செல்கின்றமையானது அவர்களின் குடும்பப் பொருளாதாரத்துக்கும் நாட்டின் அந்நிய செலாவணி அதிகரிப்புக்கும் காரணமாக அமைவதோடு, இந்தப் பணப்பரிமாற்றங்கள் தேசிய பொருளாதாரத்துக்குப் பாரிய பங்களிப்பையும் வழங்குகின்றன.

இவ்வாறு செல்பவர்களுள் பலர் முறையாக பதிவுசெய்யப்பட்ட முகவர் நிலையங்கள் ஊடாக சட்டரீதியாகவும் உரிய திறன் பயிற்சிகளையும் பெற்று புலம்பெயர் தொழிலாளர்களாக செல்லும் நிலையில், பலர் அதிக பணத்துக்கு ஆசைப்பட்டு அல்லது முகவர், தரகர்களின் பேச்சில் மயங்கி அல்லது உரிய ஆவணங்களின்றி சட்டவிரோதமாகவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவுசெய்யப்படாத முகவர் நிலையங்கள் ஊடாகவும் சென்று பல்வேறு இன்னல்களைச் சந்திக்கின்றனர்.

அத்துடன், தாம் செல்லும் நாட்டுக்கு உரிய மொழி அறிவு உள்ளிட்ட திறன் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளாமல் புலம்பெயர் தொழிலாளர்களாக செல்வதால் தமது அத்தனை கனவுகளையும் சிதைத்து வெறுங்கையுடன் நாடு திரும்பவேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

இந்நிலையில், பொருளாதாரக் காரணங்கள், சமூகக் காரணிகள், அரசியல் ஸ்திரமின்மை, மோதல்கள், சுற்றுச்சூழல் பிரச்சினைகள், தமது சொந்த நாடுகளில் வேலைவாய்ப்புகள் இல்லாமை, குறைந்த ஊதியம், வறுமை அல்லது சாதகமற்ற வாழ்க்கைச் சூழல்களிலிருந்து தப்பிக்க தங்கள் சொந்த நாடுகளைவிட்டு வெளியேறும் புலம்பெயர் தொழிலாளர்களின் எண்ணிக்கை அனைத்து நாடுகளிலும் நாளுக்கு நாள் அதிகரித்தே செல்கின்றது.

அதற்கமைய இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதிக்குள் 1,79,759 பேர் புலம்பெயர் தொழிலாளர்களாக இலங்கையிலிருந்து பல்வேறு நாடுகளுக்குச் சென்றுள்ளனர்" - என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரசார பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் முகாமையாளர் பிரசன்ன அபேவிக்ரம கூறினார்.

மேலும் இது தொடர்பில் கூறிய அவர், இதில் வீட்டுப் பணியாளர்களாக 66,406 பேரும் ஏனைய தொழிற்றுறைக்கு 1,13,353 பேரும் சென்றுள்ளதுடன், அதிகமான புலம்பெயர் தொழிலாளர்கள் கட்டார், குவைத், சவுதி அரேபியா ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

## சுய கௌரவத்தை இழந்து நாட்டுக்கும் வீட்டுக்கும் வருமானம் தேடும் புலம்பெயர் தொழிலாளர்

நாட்டில் வேலையின்மையைப் போக்குவதற்கும் வறுமையைக் குறைப்பதற்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்பை இலங்கை அரசாங்கமும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகமும் தீவிரமாக ஊக்குவித்து வருவதுடன், பல மத்தியகிழக்கு நாடுகள், ஏனைய சில சட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட ஒப்பந்தங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

இதன் காரணமாக இதுவரை இலங்கையர்களுக்கு தொழில்வாய்ப்பை வழங்காத பல நாடுகளும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்காக பல்வேறு துறைகளில் தமது நாடுகளின் கதவுகளைத் திறந்துள்ளன.

இவ்வாறு பணிகளுக்காக புலம்பெயர் தொழிலாளர்களாக செல்பவர்கள் கவனிக்கப்பட வேண்டிய விடயங்களில் முக்கியமானதொன்று, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர் ஊடாக பயணித்தலாகும். அத்துடன், முறையான திறன் பயிற்சி, உரிய ஆவணங்களுடன் பயணித்தல், தாம் தற்போதைய தோற்றத்துடன் இருக்கும் நிழற்படங்களை தமது ஆவணங்களில் இணைத்தல் போன்றனவாகும்.

## முறையான பயிற்சி வழங்கி அனுப்பினாலும் நிர்க்கதியாகும் பெண்கள் ஏராளம்

எனினும், இந்த விடயங்கள் தொடர்பில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பல்வேறு வேலைத்திட்டங்கள், செயலமர்வுகள், விழிப்புணர்வு கருத்தரங்குகளை நாடு முழுவதிலும் முன்னெடுத்தாலும் அவை பலனற்றுப் போவதை பல சம்பவங்கள் உணர்த்துகின்றன.

அவ்வாறு மொழிப் பயிற்சியின்றி முதற்றடவையாக சவூதி நாட்டுக்குச் சென்று உடலில் குண்டூசிகள் ஏற்றப்பட்ட சிவரஞ்சனி முகங்கொடுத்த சம்பவத்தின் அனுபவங்களைப் பார்ப்போம்.

***சிவரஞ்சனியின் உடலில் ஏன் குண்டூசிகள் ஏற்றப்பட்டன?***

தாய், தந்தை உள்ளிட்ட 5 சகோதரர்களைக் கொண்ட குடும்பத்தில் ஆறாவது பெண்ணாகப் பிறந்த 30 வயதான சிவரஞ்சனி அண்மையில் ஊடகங்களில் பரபரப்பாக பேசப்பட்டவராவார். லிந்துல, கிளனிக்கல்ஸ் தோட்டத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயான இவர், சொந்த வீடு கட்டும் கனவுடன் சவூதிக்கு புலம்பெயர் தொழிலாளியாக சென்று இன்று உடலின் பல இடங்களிலும் குண்டூசிகள் செலுத்தப்பட்டு, பல்வேறு சித்திரவதைகளுக்கு மத்தியில் நாடு திரும்பியுள்ளார்.

"எனக்கு சவூதி மொழி அறிவு இன்மை மற்றும் அங்கு ஆவணங்களில் இணைக்கப்பட்ட புகைப்படத்துடன் என்னை நேரடியாக பார்க்கும்போது வித்தியாசமாக இருப்பதாகக் காரணங்காட்டியே இவ்வாறு சித்திரவதைக்கு உள்ளாக்கினார்கள்.

"எங்களுக்கு தோட்டத்தில் வீடு இருக்கவில்லை என்பதால், கூலி வீட்டிலேயே வசித்து வருகிறோம். வீட்டுக் கூலியாக மாதாந்தம் 3,000 ரூபா செலுத்த வேண்டும்.

"எனவே சொந்தமாக வீடு வாங்கும் கனவுடன் எங்கள் ஊருக்கு அருகில் வசிக்கும் தரகர் ஒருவரின் உதவியுடன் கொழும்பு, சங்கராஜ மாவத்தையிலுள்ள முகவர் ஒன்றின் ஊடாக இந்த வருடம் ஆறாம் மாதம் 17ஆம் திகதி சவூதிக்குப் பயணமானேன்.

"முகவர் எனக்கு எவ்வித திறன் பயிற்சியும் வழங்க நடவடிக்கை எடுக்காததால், "அண்ணா எனக்கு மொழி பிரச்சினை உள்ளது. முதற் தடவையாக சவூதிக்கு செல்கிறேன். எனவே, எனக்கான பயிற்சிகளை வழங்குங்கள்" என்றேன். ஆனால், முகவரோ பயிற்சி குறித்து பிறகு பார்த்துக்கொள்ளலாம். முதலில் நீங்கள் செல்லுங்கள் என்றார்.

"நான் சவூதிக்கு பணிப்பெண்ணாக சென்ற வீட்டில் எனக்கு அவர்களின் மொழி தெரியவில்லை என்று வீட்டு எஜமானி திட்டினார். அதுமாத்திரமல்ல, முகவர் ஊடாக நான் அனுப்பிய புகைப்படத்தில் இருந்ததைப்போன்று நேரடியாக இல்லை என்றும் உன் புகைப்படத்தைப் பார்த்துத்தான் எடுத்தோம். ஆனால், நேரடியாகப் பார்க்கும்போது நீ வித்தியாசமாக இருக்கிறாய் என திட்டினார்கள்.

"அந்த வீட்டின் மலசலகூடத்திலுள்ள உயரமான ஜன்னலை துப்புரவாக்கும் பணி எனக்கு வழங்கப்பட்டபோது, ஏணியில் ஏறி அதனை துப்புரவு செய்தேன். ஏணி வழுக்கியதால் கீழே விழுந்து தலையில் பலத்த காயம் ஏற்பட்டது.

"இவ்வாறு இரண்டொரு நாட்கள் செல்கையில் ஒரு நாள் நான் குளித்துவிட்டு வெளியே வரும்போது, வீட்டு எஜமானி குண்டூசியால் என் கைகளில் குத்தினார். குண்டூசியை குத்திவிட்டு வெளியே எடுத்துவிட்டதாகவே நான் நினைத்தேன். மறுநாள் என் கைகள் வீங்கின. அப்படியே இலங்கைக்கு வந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்பே கை, கால்கள், நெஞ்சில் குண்டூசிகள் இருப்பதை அறிந்துகொண்டேன்.

"புகைப்படத்திலிருந்து வந்த வெறுப்பே இவை அனைத்துக்கும் காரணமாக அமைந்தது. இதனால், என்னை பயிற்சியின்றி அனுப்பிய முகவர் மற்றும் தரகருக்கு எதிராக பசுமலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளேன்" என்றார்.

இதேவேளை, பாதிக்கப்பட்டு நாடு திரும்பிய இப்பெண் அரசாங்கம் அல்லது இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் நலன்புரி விடயங்களையும் இழந்துள்ளார். அதாவது, காப்புறுதிப் பணத்தைக்கூட பெற முடியாமல் போனமைக்குக் காரணம் பதிவு செய்யப்படாத முகவர் ஊடாக சென்றமையாகும்.

## அழகிய பெண்களையே எதிர்பார்க்கும் வீட்டு எஜமானர்கள்

எனவே, இந்தப் பெண்ணுக்கான திறன் மொழி பயிற்சிகளை வழங்காமல் அவரை அனுப்பிய முழுப் பொறுப்பையும் சம்பந்தப்பட்ட முகவர் நிலையமே எடுக்க வேண்டும். ஆனால், போலி முகவர் நிலையங்கள் ஊடாக புலம்பெயர் தொழிலாளர்களாகச் சென்று பாதிக்கப்பட்ட நிலையில் தினம் தினம் பலர் நாடு திரும்பினாலும் சம்பந்தப்பட்ட முகவர் நிலையங்கள் எவ்வித தடையும் பயமுமின்றி தமது சட்டவிரோத செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றுகொண்டிருக்கின்றமை ஆச்சரியமாக உள்ளது.

காரணம், இலங்கை வெளிநாட்டுப் பணியக அதிகாரிகளே இந்த விடயத்தில் கவனமெடுத்து இவ்வாறான போலி முகவரகங்களை தடைசெய்யும் நடவடிக்கையையும் முன்னெடுக்க வேண்டியது கட்டாயமாகும்.

இவ்வாறான சம்பவங்களை தடுக்கவும் தவிர்ப்பதற்காகவுமே இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகமானது தற்போது நாடளாவிய ரீதியில் பல்வேறு

## தொழில் பயிற்சி மட்டுமல்ல, மொழிப் பயிற்சியும் அத்தியாவசியம்

வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதுடன், அதனால் பல குடும்பங்கள் நன்மையடைந்தும் வருகின்றன.

***இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வேலைத்திட்டங்கள்***

அதாவது ஒரு தடவையோ ஒன்றுக்கு மேற்பட்ட தடவையோ உரிய திறன் பயிற்சிகள் மற்றும் முறையான பதிவுகள் ஊடாக புலம்பெயர் தொழிலாளர்களாக சென்று பணிபுரிபவர்கள் மற்றும் பணிபுரிந்து நாடு திரும்பியவர்களை கௌரவித்து,




அவர்களின் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில்கள், கற்றல் உபகரணங்கள் வழங்கும் நடவடிக்கை மே மாதம் 26ஆம் திகதி தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் நடைபெற்றது.

ஊவா மாகாண புலம்பெயர் நலன்திட்ட மத்திய நிலையத்தின் ஊடாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதுடன், இதன்போது, 212 மாணவர்களுக்கு தலா 10,000 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

மேலும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், உயர்தரம் மற்றும் சாதாரண தரம் சித்தியடைந்த மாணவர்கள், பல்கலைக்கழகங்களுக்கு தெரிவான மாணவர்கள் ஆகியோருக்கு இந்த புலமைப்பரிசில்களும் கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

90 பேருக்கு 2.33 மில்லியன் பெறுமதியான புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரசார பொதுமக்கள் தொடர்பாடல் பிரிவின் முகாமையாளர் பிரசன்ன அபேவிக்ரம தெரிவித்தார்.

அதேபோல், சட்டரீதியாக பதிவுசெய்து ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் புலம்பெயர் தொழிலாளர்களாக சென்று வந்த 179 புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு 15 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊவா மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்டமுகாமையாளர் திருமதி கால்லகே தெரிவித்தார்.

அதேபோல், அண்மையில் யாழ்ப்பாணத்திலும் 'GLOCAL FAIR 2023' என்ற வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது புலம்பெயர் தொழிலாளர்களாகச் சென்று நாடு திரும்பி சுயதொழிலில் சிறப்பாக ஈடுபட்டுவரும் பலர் கௌரவிக்கப்பட்டதுடன், பதிவுசெய்யப்பட்ட 25 நிறுவனங்களின் உரிமையாளர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

ஏமாற்றுக்காரர்களிடம் ஏமாறாமல் தொழில் வாய்ப்பைப் பெறுதல், தொழில் பயிற்சி நிலையங்கள், பயிற்சி தொடர்பான தகவல்கள், நலன்புரி விடயங்கள் தொடர்பான அனைத்து விடயங்களும் இதன்போது முன்னெடுக்கப்பட்டன.

அத்துடன், முறையாக பதிவுசெய்து ஆறு தடவைகளுக்கும் மேல் புலம்பெயர் தொழிலாளர்களாக சென்று வந்த 97 பேரின் பிள்ளைகளுக்கு 7 இலட்சத்து 17 ஆயிரம் ரூபா புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தால் பதுளையில் முன்னெடுக்கப்பட்ட குறித்த வேலைத்திட்டத்தால் பயனடைந்த திருமதி எம்.பி நஸீரா இவ்வாறு கூறுகிறார்;

"நான் மஹியங்கனை பகுதியில் வசிக்கிறேன். எனக்கு நான்கு பெண் பிள்ளைகள் இருக்கின்றனர். இதில் தரம் 10இல் கல்வி பயிலும் இரண்டாவது மகளுக்கும் தரம் 6இல் கல்வி பயிலும் மற்றொரு மகளுக்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கீழ், பதுளை புலம்பெயர் நலன் திட்டம், மத்திய நிலையத்தால் கற்றல் உபகரணங்கள்

## திறன் பயிற்சியும் முறையான பதிவும் இருந்தாலும் தொடரும் அவல வாழ்வு

வழங்கப்பட்டன" என திருமதி எம்.பி. நஸீரா தெரிவித்தார்.

"எனது கணவர் தற்போது 9 மாதங்களாக குவைத் வீடொன்றில் சாரதியாக பணியாற்றி வருவதுடன், இதற்கு முன்னரும் முறையாக பதிவுசெய்து திறன் பயிற்சிகள் பெற்று 6 வருடங்கள் குவைத்தில் பணிபுரிந்து நாடு திரும்பினார். அவரது இந்த நடவடிக்கையைப் பாராட்டி எனது பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. மேலும், 10,000 ரூபாயைப் பெறுவதற்கான விண்ணப்பத்தையும் அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளேன்" - என்றார்.

"தற்போதைய பொருளாதார நெருக்கடியின் மத்தியில் பாடசாலை உபகரணங்களின் விலைகள் பன்மடங்கு அதிகரித்துள்ளன. எனவே, எனது பிள்ளைகளுக்குக் கிடைத்த கற்றல் உபகரணங்களால் அந்தப் பொருட்களை கடையில் வாங்கும் செலவு எனக்கு மீதமாகியுள்ளது" என்றார்.

***திறன் பயிற்சி ஏன் அவசியம்?***

"போதுமான பயிற்சி இல்லாமல் செல்லும் புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் அபாயகரமான உபகரணங்களைக் கையாள்வதற்கான அறிவும் திறமையும் இல்லாமல் இருக்கலாம். அல்லது பணிகளைப் பாதுகாப்பின்றிச் செய்யலாம். இது பணியிட விபத்துகள், காயங்கள் மற்றும் உயிரிழப்புகளின் அதிக ஆபத்துக்கு வழிவகுக்கும். அத்துடன், இவ்வாறான தொழிலாளர்கள் பெரும்பாலும் முதலாளிகளால் சுரண்டலுக்கு ஆளாவதுடன் அவர்கள் தங்கள் திறன்களுக்கு அப்பாற்பட்ட பணிகளைச் செய்ய நிர்பந்திக்கப்படலாம் அல்லது சரியான இழப்பீடு இல்லாமல் நீண்ட நேரம் வேலை செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். குறைந்த சம்பளம் வழங்கப்படலாம். பாகுபாடு அல்லது பாரபட்சத்தை தொழில் இடங்களில் சந்திக்கலாம்.

"எனவே இவ்வாறான விடயங்களிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கும் தொழிற் திறன், தொழில்நுட்ப அறிவை வளர்த்துக்கொள்ளவும் அதிக சம்பளத்தைப் பெறுவதற்கும் இலங்கையிலிருந்து செல்லும் ஒவ்வொரு புலம்பெயர் தொழிலாளியும் பதிவு செய்யப்பட்ட முகவர் ஊடாக திறன் பயிற்சி பெற்றுச் செல்வது அவசியம்.

"அதாவது வரையறுக்கப்பட்ட கல்வி வாய்ப்புகள் அல்லது நிதிக் கட்டுப்பாடுகள் போன்ற பல்வேறு காரணிகளால் தொழில், திறன் பயிற்சியின்றி புலம்பெயர் தொழிலாளர்களாக செல்பவர்கள்

## ஒப்பந்தத்தை மீறி தொழில் செய்ய மறுத்தால் குண்டூசி சித்திரவதை

அதன் பாதிப்பை பன்மடங்காக எதிர்கொள்வர்" என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் வடமாகாணத்துக்குப் பொறுப்பான அதிகாரி சுனில் ஹிந்தரமுல்ல தெரிவித்தார்.



**மஹேஸ்வரி விஜயனந்தன்**

# தேர்தல் அரசியலுக்குத் துருப்புச் சீட்டாகப் போகும் இனவாதம்





சின்னத்தம்பி குருபரன்

இலங்கை அரசியல் வரலாறு இனவாதம், மதவாதம், பிரதேசவாதம் என்பவற்றோடு பின்னிப் பிணைந்தது. அரசியல்வாதிகள் தமது சுயலாபத்துக்காகவும் பாராளுமன்ற ஆசனத்துக்காகவும் தமது மக்களிடத்தில் பேரையும் புகழையும் பெறுவதற்காக இந்த மூன்றையும் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். அவை அவர்களின் தேர்தல் வெற்றிகளுக்கான துருப்புச் சீட்டாகவும் அமைந்தன. இலங்கை மக்களும் அவர்களின் இந்தப் போலிப் பிரசாரத்தை நம்பி ஆதரவளித்து வந்திருக்கின்றனர். துட்டகைமுனு காலத்திலிருந்து இன்றுவரை இந்தப் போக்குக் காணப்படுகிறது.

ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் அவர்கள் மதம், மொழி, வர்த்தகம் ஆகியவற்றை முன்னுரிமைப்படுத்தியமையால் சுதேசிகளுக்கும் ஐரோப்பியர்களுக்கும் இடையில் பல எதிர்ப்புகள், கலகங்கள், போராட்டங்கள் நடைபெற்றன. கண்டி இராசதானியில் மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் மீது வெறுப்புக்கொண்ட பிரதானிகளும் சுதேசிகளும் அவனுக்கு எதிராகக் கலகங்கள் செய்ததோடு, மன்னன் மறைந்திருந்த இடத்தை பிரித்தானியரிடம் காட்டிக்கொடுத்து கைதுசெய்வதற்கும் காரணமாக இருந்தனர்.

1818ஆம் ஆண்டு சிங்கள - முஸ்லிம் இனத்தவர்களிடையே இன முரண்பாட்டை ஏற்படுத்தும் நோக்கில் ஆளுநர் ரொபர்ட் பிரௌவுன்றிக் ஊவா- வெல்லஸ்ஸ பிரதேசத்துக்கு சிங்களப் பிரதானி ஒருவரை முகாந்திரமாக நியமிப்பதற்குப் பதிலாக கச்சி மரைக்காரை நியமித்தார். அதனால் ஆத்திரமடைந்த பிரதானிகளும் கலகக்காரர்களும் பிரித்தானிய ஆட்சிக்கு எதிராகக் கலகத்தை ஆரம்பித்தனர். கலகக்காரர்களுக்குப் பயந்து பள்ளிவாசலுக்குள் ஒளிந்திருந்த ஆங்கில அரசாங்க அதிபர் கச்சி மரைக்கார் உட்படப் பல படையினரும் முஸ்லிம்களும் கொல்லப்பட்டனர்.

இந்தக் கலவரம், இலங்கை வரலாற்றில் முதலாவது சுதந்திரப் போராட்டமாகவும் முதலாவது இனக் கலவரமாகவும் வரலாற்றில் பதிவுசெய்யப்படுகிறது. இரண்டாவது இனக் கலவரம், 1915ஆம் ஆண்டு கண்டி கைப்பற்றப்பட்டு நூற்றாண்டு விழாக் கொண்டாட்டம் கண்டியில் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் கம்பளை பள்ளிவாசலுக்கு முன்னால் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்டது. இதனைத் தமது ஆட்சிக்கு எதிராக ஏற்படுத்தப்பட்ட கலகம் எனக் கருதிய ஆளுநர், அக்கலவரத்தோடு சம்பந்தப்பட்ட பல சிங்களத் தலைவர்களை சிறையில் அடைத்தார். அவர்கள் எல்லோரும் சேர். பொன். இராமநாதனின் முயற்சியால் விடுவிக்கப்பட்டனர்.

1919 இல் இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டு அதன் தலைவராக சேர். பொன். அருணாசலம் நியமிக்கப்பட்டார். சிங்களத் தலைவர்களுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையே ஏற்பட்ட சிறு சிறு முரண்பாடுகள் காரணமாக தேசிய காங்கிரஸிலிருந்து விலகிச் சென்ற சேர். பொன். அருணாசலம் 1921இல் தமிழர் மகா சபையை ஆரம்பித்தார். 1919இன் பின்னர் இருந்து ஆரம்பித்த சிறுபான்மையினருக்கு எதிரான இன முரண்பாடுகள், 1939இல் கல்லோயாத் திட்டம் ஆரம்பித்ததிலிருந்து கொழுந்துவிட ஆரம்பித்து 1956 இல் பற்றி எரிந்தது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா பிரித்தானியாவில் கற்றபோது கம்யூனிச வாதிகளுடன் சேர்ந்து பழகி அச்சித்தாந்தத்தைக் கற்று அதில் ஊறி வந்தவர் பிற்காலத்தில் தீவிர இனவாதம் பேசித் தேர்தலில் அமோக வெற்றிபெற்றுப் பிரதமரானார்.

1956இல் இவர் பிரதமராக இருந்தபோது தமிழருக்கு எதிரான முதலாவது இனக் கலவரம் கட்டவிழ்த்துவிடப்பட்டது. அதன்போது பல ஆயிரக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதோடு அவர்களின் வீடுகள், சொத்துகளை எரித்து நாசமாக்கினர். இவ்வாறு கம்யூனிச சித்தாந்தத்தில் ஊறிய பல சிங்களத் தலைவர்கள் அரசியலுக்காகவும் பாராளுமன்றக் கதிரைகளுக்காகவும் அன்றிலிருந்து இனவாதம் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

1972 இல் தமிழர்களுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட கல்வியில் தரப்படுத்தல், சிறுபான்மையினர் தாயகப் பிரதேசங்களில் அத்துமீறிய குடியேற்றங்கள், புதிது புதிதாகத் தமிழர் தாயகப் பகுதிகளில் விகாரைகள், 1974இல் நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின்போது நடந்த சம்பவங்கள். 1977இல் ஒகஸ்ட் கலவரம், 1981இல் யாழ். பொது நூலக எரிப்பு, 1983இல் ஜூலை கலவரம், உள்நாட்டு யுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்புகள், கழுதை தேய்ந்து கட்டெறும்பான 13ஆம் திருத்தத்தை நடைமுறைப் படுத்தத் தவறியமை, வடக்கு, கிழக்குப் பிரதேசங்களைக் கூறு போட்டு தமிழர்களின் பெரும்பான்மையைத் திட்டமிட்டுக் குறைத்தல். ஒதுக்கீடுகளைத் தடுத்தல் ஆகிய எல்லாவற்றையும் காலத்துக்குக் காலம் ஆட்சிசெய்த ஆட்சியாளர்கள் திட்டமிட்டு நிறைவேற்றி வந்தனர்.

**2024 ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்து புரளிகளை கிளப்பிவிட்டு மக்களின் நிலைப்பாடுகளை வெள்ளோட்டம் பார்ப்பதை விட்டுவிட்டு அரசாங்கம் 2022 போராட்டத்தில் வெளியான மக்களின் கருத்துகளை நினைவிற்கொண்டு செயற்பட வேண்டும்**

நிலைமை சுமுகமாகிக்கொண்டிருக்கும் போது ஆட்சியாளர்கள் திடீரென்று ஒரு புரளியைக் கிளப்பிவிடுவார்கள். அதிலிருந்து புதிய பிரச்சினை ஒன்று ஆரம்பமாகி சிறிதுகாலம் தொடர்ந்து கொண்டிருக்கும். அதற்குக் கண், காது, மூக்கு எல்லாம் வைத்து புதியதொரு பிரச்சினை ஆரம்பமாகும். அவை சில நாட்கள் ஊடகங்களில் பேசுபொருளாகிக் கொண்டிருக்கும்.

இங்கு பல அரசியல் கோமாளிகள் இருக்கின்றார்கள். சில நாட்கள் அமைதியாக இருப்பார்கள். அப்படியிருக்கையில் ஆட்சியாளர்கள் ஒன்றை மூடிமறைக்க புதியதொரு துருப்புச் சீட்டை எடுப்பார்கள். அதை வைத்து நாடி பிடித்துப் பார்த்து அது பூதாகரமாகும்போது அதற்குள் பழைய தொன்றை 'முழுப் பூசனிக்காயை சோற்றுள் மறைப்பது'போல் மறைத்துவிடுவார்கள்.

இவ்வாறுதான் காலத்துக்குக் காலம் சில அரசியல்வாதிகள் தமது கருமத்தைச் சிறப்பாகச் செய்து மறைந்துவிடுகின்றனர். விமல் வீரவங்ச, உதய கம்மன்பில, ஞானசார தேரர், சரத் வீரசேகர ஆகியோருடன் பாதாள உலகக் குழுக்கள் தொடக்கம் அரச உத்தியோகத்தர்கள் வரை எல்லோருக்கும் அந்நாளில் சிம்ம சொப்பனமாக இருந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வாவும் இணைந்திருக்கின்றார்.

வடக்கு, கிழக்கில் பொலிஸ் அதிகாரம் பெரும்பான்மையினருக்காகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. பல நீதிமன்றத் தீர்ப்புகள் நடைமுறைப்படுத்தப்படாமல் இருக்கின்றன. சில சிங்கள - பௌத்த கடும்போக்குவாதிகளால் நீதிமன்றமும் தமிழ் நீதிபதிகளும் அவமானப் படுத்தப்படுகின்றனர். இலஞ்சம், ஊழலற்ற பல சிறுபான்மை உயர் அதிகாரிகள் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். சில கடும்போக்கு இனவாத அரசியல்வாதிகளால் சட்டவாக்கம், நிர்வாகம், சட்ட அமுலாக்கம் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

முல்லைத்தீவில் அத்துமீறி விகாரை அமைத்தல் தொடர்பாக நீதிபதியால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்று தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நீதிமன்றத்தையும் நீதிபதியையும் அவமதித்து மிக மோசமாகப் பாராளுமன்றத்தில் திட்டித் தீர்த்திருந்தார். இது சம்பந்தமான செய்திகள் சகல செய்தி ஊடகங்களிலும் வெளிவந்தன. சில பாராளுமன்ற உறுப்பினர்கள் எதிர்த்துப் பேசினர். இது நீதி அமைச்சோடு சம்பந்தப்பட்ட பிரச்சினையாக இருந்த போதிலும் அவர்கூட வாய் திறக்கவில்லை.

பாராளுமன்றச் சிறப்புரிமையைப் பயன்படுத்தி சட்டவாக்க அதியுயர் அமைப்பான பாராளுமன்றத்தில் இருந்துகொண்டே சட்ட நிறைவேற்றுத் துறையான நீதிமன்ற நீதிபதியை அவமானப்படுத்தி இருக்கின்றார். தீர்ப்பு வழங்கிய நீதிபதி தமிழர் என்பதால் சரத் வீரசேகர பேசிய பேச்சு தொடர்பாக சபாநாயகர், நீதியமைச்சர், பிரதமர், ஜனாதிபதியோ அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முன்வரவில்லை.

நீதிபதி ஒருவரின் சிறப்புரிமையை அவமானப்படுத்திய செயலாக இது அமைகின்றது. இத்தகைய பேச்சுகள் எதிர்காலத்தில் நீதித்துறையைக் கேலிக்கு உட்படுத்துவதாக அமைந்துவிடும். வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் சட்டத்தரணிகள் அவரின் பேச்சைக் கண்டித்து எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நீதிமன்றத்தையும் ஒருநாள் புறக்கணித்தனர். முழு நீதித் துறைக்குமான அவமானமாக இருந்தபோதிலும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த சட்டத்தரணிகள் எதிர்ப்புக் காட்ட முன்வரவில்லை.

"இனவாதம் என்பது சுதந்திர இலங்கையின் அரசியல் வரலாற்றில் இனவாத அரசியல்வாதிகள் தமது வாக்குப் பலத்தைப் பெருக்கிக்கொண்டு பாராளுமன்றம் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் இறுதித் துருப்புச் சீட்டாகும். அதுவே மக்களைத் தம்பகடகம் இழுத்தெடுப்பதற்கான மந்திரக் கோலாகவும் அமைகின்றது."

(தொடர்ச்சி 10 ஆம் பக்கம்...)

---

## திடீரென கலையுமா... (சண்டே சாம்பார்)

05 ஆம் பக்கத் தொடர்ச்சி...

ஆரம்ப நிகழ்வில் மஹிந்த ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட, நுவரெலியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அனுருத்த ஹக்மன ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த போட்டியில் கலந்துகொண்டனர்.

இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் இரண்டு போட்டிகள் இடம்பெற்றதுடன், இரண்டு போட்டிகளிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அணி வெற்றிபெற்றது.

போட்டியின் நாயகனாக பாராளுமன்ற உறுப்பினர் கயாஷானும், சிறந்த களத்தடுப்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் சி.பி.ரத்நாயக்கவும், சிறந்த துடுப்பாட்ட வீரராக பாராளுமன்ற உறுப்பினர் டபிள்யூ.டி.வீரசிங்கவும், சிறந்த பந்துவீச்சாளராக பிரேமலால் ஜயசேகரவும் தெரிவு செய்யப்பட்டனர்.



### மாகாணத் தேர்தலுடன் முழுமையாக 13 ஐ அமுல்படுத்த வலியுறுத்தி ஜனாதிபதி ரணிலுக்கு சம்பந்தன் கடிதம்

சமஷ்டிக் கட்டமைப்பிலேயே அர்த்தமுள்ள எந்தத் தீர்வும் சாத்தியம் என்ற நிலைப்பாட்டில் வேறு சமரசம் அல்லது விட்டுக் கொடுப்புச் செய்து கொள்ளாமல் -

அரசமைப்பில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் விரைவாக நடைமுறைப்படுத்தவும் -

நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தலை நடத்தவும் -

நாம் விவரித்துள்ளபடி, தமிழ் மக்களின் அபிலாஷைகளின் அடிப்படையிலும் மற்றும் தொடர்ந்து வந்த அரசுகளினால் தீர்வுக்காக வழங்கப்பட்ட பல்வேறு உறுதிமொழிகளுக்கு இணங்கவும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கையை விரைந்து முடிக்கவும் ஜனாதிபதியாகிய தங்களைக் கோருகின்றோம்.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கடந்த ஞாயிறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் நிலைப்பாட்டை அறியத் தருமாறு ஜனாதிபதி கோரியிருந்தார். அதற்கான காலக்கெடு இன்று முடிவடைய இருக்கையில், சம்பந்தன் தமது ஐந்து பக்கக் கடிதத்தை அனுப்பி வைத்தார்.

அதில் -சுதந்திரம் பெற்ற காலம் முதல் - குறிப்பாக, 1956 முதல் - தமிழர்கள் சமஷ்டி அடிப்படையான தீர்வே தங்கள் அபிலாஷை என்பதை எல்லாத் தேர்தல்களிலும் மாறாமல் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இடையில் அவர்கள் தனிநாட்டு கோரிக்கையையும் கூட வலியுறுத்தினர் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அர்த்தமுள்ள எந்தத் தீர்வும் சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டும் என்பது இந்தக் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினை மற்றும் அவர்களின் நியாயமான அபிலாஷைகள் தொடர்பில் கடந்து வந்த ஒவ்வொரு அரசுகளும் அளித்த வாக்குறுதிகள் மற்றும் முயற்சிகள் இந்த கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

1983 முதல் இந்த விடயத்தில் இந்தியா வழங்கி வரும் பங்களிப்பும் விவரிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையில், தமிழ் மக்களின் அபிலாஷைகளின் உட்கிடக்கைகளைப் புரிந்து கொண்டு, அவற்றுக்கு இணங்கவும், பல்வேறு அரசுகள் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் காலத்துக்கு காலம் வழங்கி வந்த உறுதிமொழிகளைக் கவனத்தில் எடுத்தும், தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை விரைந்து முடிக்குமாறு சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

### 13 ஆவது திருத்தம் விரைவு அமுலில் சி.வி விக்னேஸ்வரனிடம் ரணில் உறுதி

மத்திய அரசாங்கத்தினால் மாகாண சபைகளிடம் இருந்து பறிக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தின் மூலமாக வழங்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் வழங்குவதற்காகச் செயல்படுத்தப்படும் நிபுணர் குழு செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி தமது பணிகளை ஆரம்பிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையிலான குழுவினருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினருக்கும் இடையில் கடந்த செவ்வாய்க்கிழமை (15.08.2023) மாலை இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் மேலும் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளதாவது,

13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முழுமனதுடன் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், தமிழ் கட்சிகளும் தமது பூரண ஆதரவை வழங்க வேண்டும்.

நாட்டின் ஜனாதிபதிகள் பலர் 13ஐ நடைமுறைப்படுத்தப் போகிறோம் என கூறியிருந்தாலும், நானே தற்போது அதனை நடைமுறைப்படுத்துவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளேன் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினர் மாகாண சபைகளிடமிருந்து மத்தியால் பறிக்கப்பட்ட அதிகாரங்கள், மீள மாகாணத்துக்கு வழங்கப்பட்ட பின்னர் தேர்தல் ஒன்றுக்கு செல்லலாம் என ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீள மாகாணங்களுக்கு ஒப்படைப்பது தொடர்பில் நீங்கள் வழங்கிய ஐந்து நிபுணர்களுடன், நானும் சிலருடைய பெயர்களை இணைத்து செப்டெம்பர் முதலாம் திகதியில் பணியை ஆரம்பிப்பதற்காக நடவடிக்கை எடுப்பேன். என தெரிவித்துள்ளார்.

மேலும் 13 தொடர்பில் மாகாண ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காகப் பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிபுணத்துவம் வாய்ந்த பிரதிநிதிகளையும் நிபுணர் குழுவுடன் இணைத்து ஆரம்ப நடவடிக்கைகளை முன்னோக்கிக் கொண்டு செல்லலாம் என ஜனாதிபதி மேலும் கூறியுள்ளார்.

குறித்த சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி சமன் ஏக்கநாயக்க, சட்டமா அதிபர் சார்பில் பிரதிநிதியும், சி.வி.விக்னேஸ்வரன் சார்பில் வடக்கு கிழக்கு இணைந்த மாகாண சபையின் முன்னாள் செயலாளர் கலாநிதி க.விக்னேஸ்வரன், கிழக்கு மாகாண முன்னாள் காணி ஆணையாளர் குருநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மீள்மதிப்பீடு காலதாமதத்தால் வருமானத்தை இழக்கும்




# வவுனியா நகரசபை

பாலநாதன் சதீஸ்

வவுனியா நகரசபையினரால் சொத்துகளுக்கான பெறுமதி ரூபா 1,76,000 குறைத்துக் காட்டப்பட்டுள்ளதோடு, இது நிலையான சொத்துகளுக்கான சொத்து பதிவேட்டில் பதியப்படவில்லை என்பது கணக்காய்வுத் திணைக்களத்தினரால் 2021ஆம் ஆண்டு வெளிவந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபையினர் நிலையான சொத்துகளை உரிய முறையில் மீள்மதிப்பீடு செய்து அவற்றை நிலையான சொத்து பதிவேட்டில் பதியவில்லை. அத்தோடு நிலையான சொத்துகள் சிலவற்றின் பெறுமதிகளை சரியான முறையில் மதிப்பீடு செய்யாது அதன் பெறுமதிகள் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. இதனால் சபையினருக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக 2019ஆம் ஆண்டு கணக்காய்வுத் திணைக்களத்தினரால் வெளிவந்த கணக்கறிக்கையில், ரூபா 3,32,14,563 பெறுமதியான இரண்டு கணக்கு விடயங்களுக்குரிய நிலையான சொத்து பதிவேடுகள் கணக்காய்வின்போது அவற்றை திருப்திகரமாக உறுதிசெய்ய முடியாதிருந்ததென சுட்டிக்காட்டப்பட்டு நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்வுத் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என பரிந்துரையும் வழங்கப்பட்டிருந்தது.

அதற்கு சபையின் கணக்கீட்டு உத்தியோகத்தர், தளபாடம் மற்றும் பொருத்துகள், இயந்திர சாதனங்கள், உபகரணங்கள் ஆகியன இதுவரைகாலமும் இருப்பு பதிவேட்டின் வடிவில் பெறுமதிகளின் அடிப்படையில் பராமரிக்கப்பட்டு வந்தன. தற்போது சொத்து முகாமைத்துவத்துக்கமைய அவை தனியான பதிவேடுகளாக பராமரிக்கப்படுகின்றன - என பதிலளித்திருந்தார்.

2019இல் வெளிவந்த அதே அறிக்கையில் பின்வருமாறும் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. நிதி ஒழுங்குவிதி சபையிலுள்ள 75(12) இணைப்புப் பொருட்களுக்கான பொருட்பதிவேடு தனியாக பேணப்பட்டு பதிவுகள் செய்யப்படவில்லையென சுட்டிக்காட்டி பிரமாணங்களின் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்பட வேண்டும் எனவும் பரிந்துரை வழங்கப்பட்டிருந்தது. அதற்கு சபையின் கணக்கீட்டு உத்தியோகத்தர், எதிர்காலத்தில் இதற்கான முறையான பதிவேடு பேணப்பட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் பதிலளித்திருந்தார்.



அதே ஆண்டு அறிக்கையில், காணி மற்றும் கட்டிடங்களுக்கான பதிவேடும் சபையினரால் முழுமையாக பராமரிக்கப்படவில்லையென சுட்டிக்காட்டி காணி மற்றும் கட்டிடங்கள் மெய்மையாய்வு செய்யப்பட்டு அவ்வாறான சொத்துகள் தொடர்பிலான உரிமை உறுதிப்படுத்தல் வேண்டும் எனவும் பரிந்துரை வழங்கியிருந்தார்கள்.

அதற்கு சபையின் கணக்கீட்டு உத்தியோகத்தர், சபையின் சொத்துகளில் தளபாடங்கள், பொருத்துகள், பொறி இயந்திரங்கள், மோட்டார் வாகனங்கள் என்பன முழுமையாக அடையாளப்படுத்தப் பட்டுள்ளதுடன், காணிகளை மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்துக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கட்டிடங்கள் மதிப்பீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என பதிலளித்திருந்தார்.

அதேபோல் 2020ஆம் ஆண்டு கணக்காய்வுத் திணைக்களத்தினரால் வெளிவந்த கணக்கறிக்கையில் பின்வருமாறு சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. ரூபா 62,67,76,162 பெறுமதியான 03 கணக்கு விடயங்களுக்குரிய நிலையான சொத்து பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின்போது அவற்றை திருப்திகரமாக உறுதிசெய்ய முடியாதிருந்தது என சுட்டிக்காட்டி நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என பரிந்துரை வழங்கியிருந்தார்கள்.


வவுனியா நகர சபை
வவுனியா மாவட்டம்

அதற்கு சபையினரின் கணக்கீட்டு உத்தியோகத்தர், தங்களால் குறிப்பிடப்பட்ட ரூபா 62,67,76,162ஆனது காணி, கட்டிடங்கள் தொடர்பாகவும், நகரசபைக்குரிய காணிகள் மீள்மதிப்பீடு செய்யப்படுதல் தொடர்பாகவும் பிரதேச செயலாளர், நில அளவைத் திணைக்களம் மற்றும் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் ஊடாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என பதிலளித்திருந்தார்.

அதேபோல் 2021ஆம் ஆண்டு கணக்காய்வுத் திணைக்களத்தினரால் வெளிவந்த கணக்கறிக்கையில் நிலையான சொத்து பதிவேட்டின் பிரகாரம் 2021 டிசம்பர் 31இல் உள்ளவாறு காணப்பட்ட இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 17,65,000 ஆல் குறைத்து நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்ததென சுட்டிக்காட்டி சொத்துகளின் பெறுமதி சரியாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட வேண்டும் என பரிந்துரையும் வழங்கப்பட்டிருந்தது. அதற்கு சபையின் கணக்கீட்டு உத்தியோகத்தர் 2022இல் சீர்செய்யப்படும் என பதிலளித்திருந்தார்.

நகரசபை கட்டளைச்சட்டத்தின் கீழ் நகரசபையினருக் கென சில கடமைகளும் பொறுப்புகளும் வழங்கப்பட்டிருக்கும். அவ்வாறு தமக்கு வழங்கப்பட்ட கடமைகளை சரியாக நடமுறைப் படுத்துவது சபையினரின் கடமையாகும்.

அந்தவகையில் சபையினருக்கு காணி, கட்டடங்கள், இயந்திரப் பொறி உபகரணங்கள், வாகனங்கள், தளபாட பொருத்துகள், கட்டட அமைப்புகள், நூலக புத்தகங்கள் என பல நிலையான சொத்துகள் காணப்படுகின்றன. இச்சொத்துகள் மூலம் சபையினர் பலகோடி வருமானங்களைப் பெற்று அதனை நகரின் விருத்தி செயற்பாடுகளுக்குப் பயன்படுத்துகின்றனர். அதேபோன்று வவுனியா நகரசபையினருக்கும் பல கோடி சொத்துகள் காணப்படுகின்றன.

அந்தவகையில் நகரசபையினர் தம்மிடம் இருக்கும் நிலையான சொத்து விபரங்களையும் மீள்மதிப்பீடு செய்து அதன் பெறுமதிகளை நிலையான சொத்து பதிவேட்டில் பதிவுசெய்து அரச சொத்துகளை பத்திரப்படுத்துவது சபையினரின் கடமையாகும். ஆனால், வவுனியா நகரசபையினர் தமக்கு உரித்தான நிலையான சொத்துகளைப் பதிவேட்டில் பதிவுசெய்து முறையாக பராமரிக்கவில்லை.

இது தொடர்பாக கட்டுரையாளனால் தகவலறியும் உரிமைச் சட்டம் மூலம் நகரசபையின் கீழ் எவ்வகையான சொத்துகள், நிலையான சொத்துகள்? அதன் பெறுமதி எவ்வளவு? நிலையான சொத்துகளால் கிடைக்கும் மாத வருமானம் எவ்வளவு? பதிவேட்டில் நிலையான சொத்துகள் பதியப்பட்டுள்ள னவா? பதியப்பட்டிருப்பின் அதன் விபரம் பதிவேட்டில் பதியப்படவில்லை யாயின் அதற்கான காரணம் என்ன? என வினவப்பட்டது.

அதற்கு காணி, கட்டடம், வாகனம், தளபாட பொருத்துகள், அமைப்புகள் அல்லது வீதிகள் மற்றும் பொறிகள், இயந்திரங்கள் என்பன சபையின் நிலையான சொத்துகள் எனவும் கட்டடம் ரூபா 59,09,82,283.87, வாகனங்கள் ரூபா 11,65,72,015.84, பொறி இயந்திரங்கள் ரூபா 36,529,782.54, அமைப்பு / வீதிகள் ரூபா 44,87,04,234.34 பெறுமதியான சொத்துகள் இருப்பதாகவும் நிலையான சொத்துகளால் கடைகளில் 9,92,450.00 ரூபா, குத்தகைக் காணிகளில் 3,11,913.75 ரூபா மாதாந்தம் வருமானம் கிடைப்பதாகவும், அனைத்து நிலையான சொத்துகளும் பதிவேடுகளில் பதியப்பட்டுள்ளன எனவும் நிலையான சொத்துகளின் விபரத்தின் பிரதியை சபையில் பணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கேட்கப்பட்ட சில கேள்விகளுக்குப் பொருத்தமற்ற விதத்திலும் பதிலளித்திருந்தார்கள்.

(தொடர்ச்சி 11 ஆம் பக்கம்)

## தேர்தல் அரசியலுக்கு...
(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

முன்னாள் அமைச்சரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மேர்வின் சில்வா பதவியில் இருந்தபோது சகல சட்டங்களையும் மீறி ரவுடிபோல் செயற்பட்டவர். எப்போதும் இனவாதம் பேசுவதில் வல்லவராவார். சகல பலத்துடனும் பரிவாரங்களுடனும் நடமாடியவர். மீண்டும் அரசியலில் நுழைந்து பாராளுமன்றம் செல்வதற்காக இனவாதம் என்ற துருப்புச் சீட்டைக் கையில் எடுத்திருக்கின்றார்.

களனியில் (ஓகஸ்ட் 12) நடந்த கூட்டமொன்றில் கலந்துகொண்டு பேசிய பேச்சில் இனவாத விஷத்தைக் கொட்டித் தீர்த்திருக்கின்றார். இப்பேச்சு ஹிரு தொலைக்காட்சியில் முழுமையாக ஒளிபரப்பப்பட்டது. தமிழ் அரசியல் வாதிகள், தமிழ் மக்கள், தமிழீழ விடுதலைப் போராட்டங்கள் எல்லாவற்றையும் கொச்சைப்படுத்திப் பேசியிருந்தார்.

இது ஒரு சிங்கள - பௌத்த நாடு. இது எங்களுக்குரிய நாடு. ஏனைய இனத்தவர்கள் விரும்பினால் எங்களுடன் சமாதானமாகச் சேர்ந்து வாழலாம். வடக்கு, கிழக்கிலுள்ள விகாரைகள், மகாசங்கத்தினர்மீது கைவைத்தால் அவர்களின் தலையைக் கொய்து களனிக்கு வருவேன் எனவும் இதைவிட ஒருபடி மேலே சென்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் தலையைக் கொய்து களனிக்குக் கொண்டுவருவேன் எனவும் கூறியிருந்தமை இனங்களுக்கு இடையில் அதிர்வலையை ஏற்படுத்தி இருக்கின்றது.

கிழக்கு ஆளுநர் திருகோணமலையில் ஒருகந்த என்னுமிடத்தில் அத்துமீறி அமைக்கப்பட்டுக்கொண்டிருந்த பௌத்த விகாரையின் கட்டுமானப் பணிகளை நிறுத்தியிருக்கின்றார். "இது சிங்கள, பௌத்த நாடு. எங்கள் நாடு. நாங்கள் இந்த நாட்டில் எதுவும் செய்வோம். அதனை யாராலும் தடுக்க முடியாது. கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் விகாரை கட்டும் பணியை நிறுத்தியிருக்கின்றார். விகாரைகள்மீதும் மகாசங்கத்தினர்மீதும் ஆளுநர் கைவைத்தால் அங்கு சென்று அவரின் தலையைக் கொய்து களனிக்குக் கொண்டு வருவேன்" எனக் கூறியிருக்கின்றார்.

இத்தகைய கருத்து எத்தனை பாரதூரமானது என்பதை உணராமல் கோமாளித்தனமாகக் கூறினாரா அல்லது அரசியல் பலத்தோடு கூறினாரா என்பது ஆய்வுக்குரியது. இருந்தும் ஆளுநர் பதவி என்பது மாகாண பதவிநிலை வரிசையின்படி (Protocol) மிக உயர்ந்தது. இந்த இடத்தில் இருப்பவர் ஆளுநர். ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் மாகாணக் கருமங்களை ஆற்றுவதற்கான அதியுயர் அதிகாரி அவராவார். அவரை அவமானப்படுத்துவது இழிவான செயலாகும். அத்தோடு அவரின் தலையைக் கொய்துகொண்டு வருவேன் என்பது உயிர் அச்சுறுத்தலாகும்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கூறுவதைச் சிறப்புரிமை என்று கூறலாம். இருந்தும் அது இனவாத நோக்குடையதாகக் கொள்ளப்படும். மேர்வின் சில்வா பாராளுமன்ற உறுப்பினர் அல்ல. அவர் இவ்வாறு பேசிப் பல நாட்களைக் கடந்துவிட்டன. இதுவரை அவருக்கெதிராக எந்த விசாரணையும் செய்யப்படவில்லை. ஆளுநர் ஒரு தமிழர் என்பதனால் இதனைக் கண்டும் காணாமல் விட்டிருக்கின்றார்களா என எண்ணத் தோன்றுகிறது.

2024 இல் ஜனாதிபதித் தேர்தல் நடக்கவிருப்பதனால் இவர்கள் மூலமாக இத்தகைய புரளிகளைக் கிளப்பிவிட்டு மக்களின் கருத்து வெளிப்பாடு எப்படி உள்ளது என அறிவதற்கு வெள்ளோட்டம் பார்க்கின்றனரா? 2022இல் அரகலயவின்போது இனம், மதம், மொழி, பிரதேச வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு முறைமை மாற்றம் வேண்டி அரசுக்கு எதிராகப் போராடிய மக்களின் மனநிலையை நாடிபிடித்துப் பார்க்கின்றனரா என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு, கிழக்கு வாழ் தமிழர் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறி அடிக்கடி கிளப்பிவிடும் புரளிகளும் அவ்வாறுதான் அமைகின்றன.

சிங்கள மக்களிடமும் தமிழ் மக்களிடமும் நல்ல பெயரைப் பெற்றுக்கொள்வதற்காக மாபெரும் நடிகனாக நடித்துக்கொண்டிருக்கிறார். திரைப்படங்களில் வரும் கதாநாயகனாகவும் வில்லனாகவும் அவரே தனித்து நின்று வீர தீர சாகசம் புரிந்துகொண்டிருக்கின்றார். அவர் தனது சாணக்கியம், தந்திரம் யாவற்றையும் மிகச் சாதுரியமாக நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார். அதனை நம்பிக்கொண்டு எலும்புத்துண்டுக்கு ஆசைப்பட்டுச் செல்வதுபோல் அவரிடமிருந்து சலுகைகள் வரப்பிரசாதங்களைப் பெற்றுக்கொள்வதற்காக நமது சொல் விளம்பி தமிழ் அரசியல்வாதிகள் சிலர் என்ன, ஏன், எதற்கு எனக் கேள்விகள் கேட்காமல் சென்று அவமானப்பட்டு ஜனாதிபதி ஏமாற்றி விட்டார் எனக் காட்டசாட்டமான அறிக்கை ஒன்றை விடுகின்றனர். இவர்கள் எப்போதுமே திருந்தமாட்டார்கள். இவர்களை மக்கள்தான் மாற்ற வேண்டும்.

சீன கம்யூனிச சித்தாந்தத்தைப் பின்பற்றிக் கொண்டு அவர்களுக்காக வக்காலத்து வாங்கிவரும் சிலர் தமக்கென உறுதியான அரசியல் கொள்கையற்றவர்களாகவும் இனவாதம் பேசும் கோமாளிகளாகவும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு கொள்கையை மாற்றிக்கொண்டு அரசியலுக்காக இனவாதத்தைப் பேசி வருகின்றனர். இவர்கள் பேசுவதற்காகக் காலத்துக்குக் காலம் சந்தர்ப்பத்தை ஆட்சியாளர்கள் உருவாக்கிக் கொடுப்பார்கள். அந்த வாய்ப்பை நழுவ விடாமல் பொது மேடைகளிலும் பாராளுமன்றத்திலும் முழங்கித் தள்ளுகின்றனர். இதனால் தங்களது வாக்குவங்கி உயரும். இந்தச் சூட்சுமத்தைத் தேர்தல் அரசியலில் முதலில் ஆரம்பித்து வைத்தவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவாகும். அதன் பின்னர் வந்த அரசியல்வாதிகளில் பெரும்பாலானோர் வாக்கு வங்கிப் பலத்தை அதிகரித்துக்கொள்வதற்காக இனவாதம் என்ற துருப்புச் சீட்டை இலாவகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர்.

அரகலயவின் பின்னர் சிறிது காலம் ஓய்வில் இருந்த இனவாதப் புயல், ஜனாதிபதித் தேர்தல் நெருங்குவதனால் தூசு தட்டி எடுத்து பல்வேறு உருவங்களில் பல்வேறு இனவாத அரசியல்வாதிகளால் கையாளப்பட்டு வருகின்றது. அரகலயவில் பங்கு கொண்டவர்களை இந்த இனவாதப் புயல் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தப்போவதில்லை. நாட்டில் என்ன நடக்கிறது என்று தெரியாமல் பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்கள் இத்தகைய பிரதேச அரசியல்வாதிகளோடு இணைந்திருக்கின்றனர். அவர்களிடம் இனவாதப் புரளியைக் கிளப்பிவிட்டு ஏதாவது கொடுத்துவிட்டால் வாக்குகள் இத்தகையவர்களுக்கே வந்துசேரும் என்ற நம்பிக்கையோடு தீவிரமாக இறங்கிவிட்டனர்.

அத்தோடு புரையோடிப்போன யுத்த வெற்றியும் தேர்தல் அரசியலுக்கான துருப்புச் சீட்டாக மாறிக்கொணடிருக்கின்றன. சிங்கள அரிசியல்வாதிகளின் கிராம, பிரதேச, வட்டார உறுப்பினர்கள், தொண்டர்கள், குண்டர்கள், அடிவருடிகள், விசுவாசிகள், இனவாதிகள், கைம்மாறுகள் பெறுவோர், கையூட்டுக்கள் பெற்ற எல்லோரும் தவறாமல் இவர்களுக்கே புள்ளடியிடுவார்கள்.

இதுவே இலங்கையின் தேர்தல் ஜனநாயகமுமாகும். தற்போதைய காலவோட்டத்தை மக்களிடமிருந்து நாடிபிடித்துப் பார்த்து தேர்தலில் குதிப்பதற்குப் பலர் பல கோடிகளுடன் ஆயத்தமாகிக்கொண்டிருக்கின்றனர். அவர்களின் சலாமுக்கும் அவிபாகத்துக்கும் மயங்கி மனதுள் பதித்து வைக்கப்பட்டிருக்கும் சின்னத்துக்குப் புள்ளடியிடப் போகின்றனர். இதுவும் நடப்பதற்கான வாய்ப்புகளும் அதிகம் உள்ளன. பாமர சிங்கள மக்களையும் சிறுபான்மையினரையும் சந்தர்ப்பத்துக்கு ஏற்ப கருவியாகப் பயன்படுத்தும் ஜனாதிபதி அடிக்கடி அவர்களைச் சந்தித்துப் பல அறிக்கைகளை விடப்போகின்றார். இதுவும் தேர்தல் காலத் துருப்புச் சீட்டாக இருக்கப்போகின்றது.

# கிழக்கில் முஸ்லிம்களும் தமிழர்களும்

# தேங்காய்ப்பூவும் பிட்டுமே!



**உமர் அலி உஸ்மான்**

ஆடுகள் கூட்டமாக நின்றால் ஓநாய்கள் வேட்டையாடத் தயங்கும். வேட்டையாட ஓநாய்கள் நினைத்தால் ஆடுகளைப் பிரிக்க வேண்டும். ஆடுகள் ஓநாய்களின் சதியில் வீழ்ந்தால் இரையாவது உறுதி. இதுதான் இயற்கையின் நியதி. வடக்கு, கிழக்கில் மொழியால் ஒன்றுபட்ட சமூகங்கள் மதத்தால் பிரிந்துள்ளன. மதங்கள் மனிதர்களை நேர்வழிப்படுத்தவே தவிர, மண்டையை உடைத்துக்கொண்டு சண்டை பிடிக்க அல்ல என்பதையே சகல மதங்களும் வலியுறுத்துகின்றன. யானைக்கு மதம் பிடிக்கலாம். மனிதர்களுக்கு மதம் பிடித்தால் என்ன நடக்கும் என்பதற்கு மட்டக்களப்பு நாவலடி சம்பவம் எடுத்துக்காட்டு.

சட்ட ரீதியாக எமது காணியில் அமைக்கப்பட்ட இல்லிடங்களை கனரக வாகனங்களைக்கொண்டு உடைத்தெறிந்து தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நாவலடி பிரதேசத்தில் குடியேறிய மக்கள் கண்ணீருடன் கவலை தெரிவிக்கின்றனர்.

நாமும் இந்த நாட்டு மக்கள்தான். எமக்கும் இந்த நாட்டில் வாழ அனைத்து உரிமைகளும் உள்ளன. சிங்களவர்கள், தமிழர்களைப்போன்று முஸ்லிம்களும் இந்த நாட்டில் வாழ அனைத்து உரிமையும் பெற்றவர்கள். எமக்கான காணியில் இல்லிடங்களை அமைத்துக் குடியேறுகின்றபோது மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தமிழ் அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் ஒருதலைப்பட்சமாக தமது செயற்பாடுகளை முன்னெடுப்பதும் இன முறுகலை உண்டுபண்ணும் வகையில் கருத்துகளை வெளியிடுவதும் கவலை தருகின்றது.

உண்மைத்தன்மையை அறியாமல் முஸ்லிம்கள் காணி பிடிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் முஸ்லிம்கள் மீது பழிபோடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. அதேநேரம், இதே பிரதேசத்தில் சகோதர இன மக்களும் அரச காணிகளை எந்தவித ஆதாரமுமின்றி அத்துமீறி பிடித்து குடிசைகள் அமைத்து குடியேறியுள்ளனர். அது தொடர்பில் மாவட்டத்தில் எந்தத் தமிழ் அரசியல்வாதியும் வாய் திறப்பதில்லை. எமக்காகவும் எமது உரிமைகளைப்பேசவும் ஒருவருமில்லாத அனாதைச் சமூகமாக மட்டக்களப்பில் நாங்கள் வாழ்கின்றோம்.

இதற்குரிய தீர்வை ஜனாதிபதி, பிரதமர் தலையிட்டு பெற்றுத்தர வேண்டும். எமது காணி என்பதற்கான முழு ஆதாரமும் எம்மிடமுள்ளது. அதனை மகாவலி அதிகாரசபையும் உறுதிப்படுத்தியுள்ளது. இது தொடர்பில் தொடரப்பட்ட வழக்குகளில் ஒரு தீர்ப்பு எமது காணி என்பதை உறுதிப்படுத்துகிறது. ஏனைய வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ள நிலையிலேயே இன்றைய அத்துமீறல் இடம்பெற்றுள்ளது. இது கவலைக்குரிய விடயமாகும் என குறித்த சம்பவத்தில் பாதிக்கப்பட்டோர் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளனர். இந்த அத்துமீறலுக்கு அனுமதி வழங்கிய சட்டம் எவ்வகையானது? இதன் உண்மைத்தன்மைகள் என்ன? என்பது பற்றி ஆராய முன்னர் மட்டக்களப்பின் காணி பிரச்சினைகளை பற்றி ஆராய வேண்டியுள்ளது.




மட்டக்களப்பு மாவட்டம் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளைக்கொண்ட ஒரு நிர்வாக மாவட்டம். இம் மாவட்டத்தின் மொத்த சனத்தொகையில் 72 சத வீதமானோர் இனரீதியாக தமிழர்களாக இருப்பதுடன், 27 சதவீதமானோர் முஸ்லிம்களாகவும் வாழ்ந்து வருகின்றனர். மாவட்டத்தின் மொத்தக் காணிப் பயன்பாட்டில் வெறும் 1.5 சதவீதக் காணியே முஸ்லிம்களின் ஆளுகைக்குள்ளது. அதாவது, 46 சதுர கிலோ மீற்றர் காணிப்பகுதியாகும்.

உண்மையில் இந்த மாவட்டத்தின் இன விகிதாசாரத்தின்படி 769.5 சதுர கிலோமீற்றர் காணி முஸ்லிம் சமூகத்துக்கு கிடைக்க வேண்டும். சனநெரிசல் கூடிய இம்மாவட்டத்தில் மூச்சுவிடக்கூட முடியாமல் இருக்கும் நிலையிலும் கல்வி, பொருளாதாரம், சேவை என்பவற்றில் இம்மாவட்ட முஸ்லிம்கள் கணிசமான பங்களிப்பை எமது நாட்டுக்கு செய்து வருகின்றனர். ஆனால், மட்டு. மாவட்ட செயலகத்தில் நிர்வாக வஞ்சனை உச்சத்தின் காரணமாக காணி மற்றும் அபிவிருத்தி தொடர்பான சகல வளப்பகிர்ந்தளிப்புகளும் ஓரவஞ்சனையாக இருப்பது கவலையான விடயம். காடு பரந்து யாருக்கும் பயன்படாமல் பல ஆயிரம் ஏக்கர் நிலம் பயன்பாடின்றி மட்டக்களப்பில் இருப்பதை எல்லோரும் அறிவர்.

இம்மாவட்டத்தில் முஸ்லிம்கள் காடழித்து காணிகளை அத்துமீறி அபகரிக்கின்றார்கள் என்ற கருத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கின்றபோது கிழக்கின் எந்த விடயங்களையும் ஆழமாக அறியாத ஆளுநர் செந்தில் தொண்டமான் எந்தவொரு முஸ்லிம் தரப்பையும் அல்லது முன்னாள் இன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களை அணுகாது, சிவில் சமூகக் கட்டமைப்புகளைச் சந்திக்காது ஒருதலைப்பட்சமாக முடிவுகளை எடுப்பது ஓர் ஆபத்தான செயலாக கிழக்கு முஸ்லிம்களுக்கு உள்ளது. இதுவரை கிழக்கின் ஆளுநர்களாக இருந்த இராணுவ முன்னாள் தளபதிகள் கூட செய்யாத பல அடக்குமுறை விடயங்களையும், ஓரவஞ்சனையான வேலைகளை யும் இப்போதைய ஆளுநர் செய்துவருவது அப்பட்டமாக தெரிவதாக கிழக்கின் முஸ்லிம் கள் தொடர்ந்தும் குற்றஞ்சாட்டி வருகின்றனர். சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளுக்கு நடக்கும் அநீதிகள் முதல் பாமர மக்களுக்கு நடக்கும் அநீதிகள் வரை நிறைய பட்டியல் முஸ்லிம்களிடம் இருக்கிறது. சமூகவலைத்தளங்களில் இந்த வாரம் முழுவதிலும் கிழக்கின் முஸ்லிம் இளைஞர்கள் ஆளுநரை நோக்கி விரல் நீட்டியதை தவிர்க்க முடியாதிருந்தது.


மாவட்ட செயலகம், மட்டக்களப்பு.
දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, මඩකලපුව.
DISTRICT SECRETARIAT, BATTICALOA.
(Land Administration Unit)

1999ஆம் ஆண்டு சட்டரீதியாக இந்த நாட்டின் அமைச்சரவைத் தீர்மானத்தின்படி அமைக்கப்பட்ட பனம்பலன ஆணைக்குழு வின் சிபாரிசின்பேரில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற காணிப் பிரச்சினைக்குத் தீர்வாக கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவுக்குத் தரவேண்டிய 240 சதுர கிலோ மீற்றர் காணியைப் பெற்றுத்தார வேண்டியது யார்? அல்லது கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட 176 சதுர கிலோ மீற்றரை மீண்டும் கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) உடன் இணைக்க வேண்டும் என்ற குரல் முஸ்லிம்களிடமிருந்து வந்துகொண்டிருக்கும்போது நாவலடி சட்டவிரோதக் காணி வேலிகள் அதிரடியாக அகற்றம் பாரிய வெற்றி என இரா.சாணக்கியன் எம்பி. அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்.

அவர் மேலும், நாம் தொடர்ச்சியாகப் போராடுவோம். வெறுமனே மற்றவர்களைப்போல் வாயால் வடை சுடுபவர்களல்லர். களத்தில் முன்னின்று மக்களுக்காகப் பாடுபடுபவர்கள். இதனை மக்களும் நன்கறிவார்கள். இவ்விடயத்தில் முன்னின்று செயற்பட்ட கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இக்காணிக் கொள்ளையானது இங்குள்ள அமைச்சருக்கு வேண்டப்பட்ட வசதி படைத்தவர்களுக்கு தனது அதிகாரங்களைப் பயன்படுத்தி சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கு வழியமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. காணியில்லாத மக்களுக்கு கொடுக்கப்படுகின்றதென்பது ஒரு கண்துடைப்பாகும். காணியில்லாத மக்களுக்கு இல்லாத காணிகள் பணம் படைத்த வசதி படைத்தவர்களுக்கு வழங்கப்படும் பின்னணிக் காரணம் என்ன?

மட்டக்களப்பு மாவட்டத்திலும் சரி, வடக்கு, கிழக்கிலும் சரி மகாவலி அபிவிருத்திச் சபையின் காணிப் பிரச்சினைகள் மற்றும் எவ்வாறான பிரச்சினையாக இருந்தாலும்,

(தொடர்ச்சி 12 ஆம் பக்கம்)

# மீள்மதிப்பீடு காலதாமதத்தால்

(10 ஆம் பக்கம் தொடர்ச்சி)






ஆனால், 2018, 2019, 2020, 2021 என தொடர்ச்சியாக வெளிவந்த கணக்கறிக்கையில், வவுனியா நகரசபையினரால் நிலையான சொத்துகளுக்கான பதிவேடுகள் சரியான முறையில் பதிவுசெய்யப்பட்டு பராமரிக்கப்படவில்லை எனவும் இறுதியாக வெளிவந்த 2021ஆம் ஆண்டு கணக்கறிக்கையில் 2021 டிசம்பர் 31 வரையில் இயந்திர உபகரணங்களின் பெறுமதி ரூபா 17,65,000 குறைத்துக் காட்டப்பட்டுள்ளது எனவும் கணக்காய்வுத் திணைக்களத்தினரால் சுட்டிக்காட்டப்பட்டதற்கு 2022இல் சீர்செய்யப்படும் என பதில் கூறியிருக்கின்றார்கள்.

ஆனால், கட்டுரையாளனுக்கு தகவலறியும் உரிமைச் சட்டத்தில் கோரப்பட்ட தகவலில் நிலையான சொத்துகளின் விபரம் சொத்து பதிவேட்டில் பதியப்பட்டுள்ளதென மேலோட்டமான முறையில் பதிலளித்துள்ளார்கள். அது ஒருபுறமிருக்க, நிலையான சொத்துகளுக்கான மீள்மதிப்பீடு இதுவரை செய்யப்படவில்லை எனவும் கூறியிருக்கின்றார்கள். இவ்வாறிருக்கையில், சொத்துகளுக்கான மதிப்பீடு செய்யப்பட்டு அதன் பெறுமதிகள் கணிக்கப்படாதவரை வவுனியா நகரசபையினர் எவ்வாறு சொத்து பதிவேட்டில் பதிவுசெய்திருப்பார்கள்?

சபையினர் தம்மிடம் இருக்கும் நிலையான சொத்துகளை மீள்மதிப்பீடு செய்து அதன் பெறுமதிகளை கணிப்பதன் மூலம் அதிகளவான வருமானத்தை வருடாவருடம் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், சபையினர் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக காணிகளுக்கான மீள்மதிப்பீட்டை மேற்கொள்ளவில்லை. அதேபோன்று ஏனைய நிலையான சொத்துகளுக்கான மீள்மதிப்பீட்டையும் இதுவரை செய்யவில்லை. அவ்வாறிருக்கும் போது சபையினரால் எவ்வாறு நிலையான சொத்துகளைப் பெறுமதிக்கேற்ப பதிவேட்டில் பதிவு செய்திருக்க முடியும்.

குறித்த விடயம் தொடர்பாக கட்டுரையாளனால் தகவலறியும் உரிமைச்சட்டம் மூலம் பின்வருவறு வினவப்பட்டிருந்தது.

நிலையான சொத்துகளுக்கு மீள்மதிப்பீடு செய்யப்படுகின்றனவா? மீள்மதிப்பீடு செய்யப்படின் அதன் விபரம்? மீள்மதிப்பீடு செய்யப்படவில்லையாயின் அதற்கான காரணம்? புதிதாக நிலையான சொத்துகள் கிடைக்கப்பெறின் அதனை பதிவேட்டில் சேர்க்கின்றீர்களா? அதன் விபரம்?

அதற்கு சபையினர் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை எனவும் இவ்வருடம் மீள்மதிப்பீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் புதிதாக கிடைக்கப்பெறும் நிலையான சொத்துகளை சொத்து பதிவேட்டில் பதியப்பட்டு பேணப்பட்டு வருகின்றது எனவும் நிலையான சொத்துகளின் விபரத்தை சபையில் பணத்தைச் செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கேட்கப்பட்ட வினாக்களுக்கு பொருத்தமற்ற விதத்திலும் பதிலளித்திருந்தார்கள்

இதனை வைத்துப் பார்க்கும்போது சபையினர் கணக்காய்வுக்கு ஒரு பதில், கட்டுரையாளனுக்கு ஒரு பதில் என பொருத்தமற்ற முறையில் வெவ்வேறான தகவல்களை வழங்கியிருக்கின்றார்கள். அத்தோடு சபையினர் இதுவரை ஆதனங்களுக்கான மீள்மதிப்பீட்டையும் மேற்கொள்ளவில்லை என்பதும் உறுதியாகியுள்ளது. எனவே, சபையினர் நிலையான சொத்து பதிவேடுகளை முறையாக பராமரிக்கவில்லை என்பதும் வெளிப்படையாகி இருக்கின்றது.

இது தொடர்பாக முன்னாள் வவுனியா நகரசபை தவிசாளர் கௌதமனிடம், நீங்கள் தவிசாளராக பணியாற்றிய காலத்தில் நிலையான சொத்துகள் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது தொடர்பாகவும், மீள்மதிப்பீடு செய்யப்படாமை தொடர்பாகவும் வினவியபோது, மீள்மதிப்பீடு செய்து தருமாறு மீள்மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் கேட்டபோது அப்போது ஆளணி பற்றாக்குறையாக இருந்ததாக எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

முதலில் வடமாகாணத்தில்தான் காரியாலயம் இருந்தது. தற்போது அதன் கிளை வவுனியாவில் கடந்த இரண்டு வருடங்களாகத்தான் ஆரம்பிக்கப்பட்டு சேவைகள் இடம் பெறுகின்றன. உடனடியாக மீள்மதிப்பீடு செய்ய முடியாது தற்போது வீடுகளுக்குத்தான் மதிப்பீடு செய்யப்படுகின்றது. அதன்பின்னரே நகரசபையின் அசையா சொத்துகளுக்கான மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்படும். அதற்கு ஒரு குறிப்பிட்ட காலம் தேவைப்படும்.



நிலையான சொத்துகள் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளது என்பதில்லை. மீள்மதிப்பீடு 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் செய்யப்படவில்லை என்பதே உண்மை என பதிலளித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் வவுனியா நகரசபை செயலாளர் பூ.செந்தில்நாதன் அவர்களிடம் வினவியபோது,

நகரசபையின் கீழ் உள்ள ஆதனவரி அளவிடுவதற்காக மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் வழங்கப்பட்டு அவர்களால் சொத்துகளுக்கான தொகை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால், அவை எங்களிடம் இன்னும் கிடைக்கப் பெறவில்லை. கிடைக்கப்பெற்றதும் ஆதனவரி அறவிடும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும். நகரசபையின் அசையா சொத்துகளுக்கான மதிப்பீடு இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான தொடர் நடவடிக்கை எங்களால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என தெரிவித்தார்.

ஆகவே, தகவலறியும் உரிமைச்சட்டம் மூலம் பெறப்பட்ட தகவலையும், கணக்காய்வுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தகவலையும் வைத்து ஒப்பிட்டு நோக்கும்போது வவுனியா நகரசபையினர் நிலையான சொத்துகளுக்கான மீள்மதிப்பீட்டை இதுவரை மேற்கொள்ளவில்லை. இதனாலேயே சொத்துகளுக்கான பெறுமதியை பதிவேடுகளில் குறைத்துக் காட்டியதோடு முழுமையான சொத்துகளைப் பதிவேடுகளில் பதிந்து முறையாக பராமரிக்கவில்லை என்பதும் இதனால் சபையினருக்கு கிடைக்கவேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருக்கின்றது என்பதும் வெளிப்படையாகி இருக்கின்றது.

# வெடிமணியம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனால்தான் இன்றுவரை சிறிலங்காவை ஜெனீவாவில் போர்க்குற்றத்தில் இருந்து "பிணையெடுத்துவருகிறார்கள்".

இனவழிப்பு யுத்தம் முடிந்து சுமார் 14 வருடங்களின் பின்னர் மீண்டும் "றோ" தன்னுடைய விளையாட்டை காட்ட தொடங்கியுள்ளது.

"றோ" விலைகொடுத்து வாங்கியவர்களின் பட்டியல் தமிழ்மக்களுக்கு அதிர்ச்சியளிக்கக்கூடும்.

அந்த பட்டியலில் "தமிழ்த் தேசிய உணர்வாளர்கள்" என்று தங்களை கடந்தகாலத்தில் அடையாளப்படுத்திய பலர் இருக்கிறார்கள்.

ஒரு காலத்தில் ஈழத்தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு மிக உறுதுணையாக இருந்த பழ.நெடுமாறன் ஐயாவில் இருந்து;

விடுதலைப் புலிகளின் வளர்ச்சிக்கும் தலைவர் பிரபாகரனுக்கு மிகவும் நம்பிக்கையுரியவருமான காசி ஆனந்தன் அண்ணை வரை "றோ" போட்ட வலையில் விழுந்துவிட்டார்கள் என்பதுதான் கசப்பான உண்மை.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் பழ.நெடுமாறனும் காசி ஆனந்தனும் "தலைவர் இருக்கிறார். கெதியில வருவார்" என்ற நாடகத்தை தொடங்கிவைத்தார்கள்.

"றோ" வின் தயாரிப்பில் பழ.நெடுமாறன் மற்றும் காசி ஆனந்தன் இயக்கும் இந்த நாடகத்தில் இப்போது...

தலைவர் பிரபாகரனின் மனைவி மதிவதனி அவர்களின் சகோதரி ஒருவர் முக்கிய பாத்திரம் ஏற்று நடிக்க ஆரம்பித்துள்ளார்.

ஆனால் எப்படி பழ.நெடுமாறன் மற்றும் காசி ஆனந்தன் ஆகியோரின் கதையைக்கேட்டு சனம் "சிரிச்சுப்போட்டு" கடந்து சென்றார்களோ;

அதைப்போலவே இந்த சகோதரியின் கதையைக்கேட்டு நகைப்போடு கடந்துசெல்கிறார்கள்.

ஆனால் "றோ" மண்டையை கழுவியதால் ஓரளவு "மனநிலை" பாதிக்கப்பட்டவர் போலவே பேசுகிறார்.

அவர் சொல்லும் விடயங்களும் கூட "சித்தப்பிரமை பிடிச்ச" ஆக்கள் கதைப்பதுபோல இருக்கிறது.

பாவம் அந்த சகோதரி. அவர் வசிக்கும் வெளிநாட்டில் நல்ல ஒரு "மனநல மருத்துவரை" பார்ப்பது அவரது உடல் நலனுக்கு நல்லது.

ஆனால், இந்த நாடகத்தை புலம்பெயர் தேசத்தில் உள்ள ஒரு "போலியான புலிக்கும்பல்" இயக்குவது தெட்டத்தெளிவாக தெரிகிறது.

இந்த "போலியான புலிக்கும்பல்" மிகச்சாதுரியமாக "தமிழ்த் தேசிய உணர்வாளர்கள்" என்ற பற்றைக்குள் பாதுகாப்பாக பதுங்கி இருந்தே இந்த நாசகார வேலையை செய்கிறார்கள்.

இந்திய உளவுத்துறை "றோ" மற்றும் சிறிலங்காவின் உளவுத்துறையும் இணைந்து செய்யும் இந்த "ரகசிய ஒப்பிறேசன்" கடந்த காலத்தில் வெற்றியாக முடிந்ததுபோல இந்த முறையும் அவர்களுக்கு வெற்றியளிக்க வாய்ப்புள்ளது.

புலம்பெயர் தேசத்தில் விடுதலைப் புலிகளுக்கும் அதன் தலைவருக்கும் இருக்கும் "புகழை" மலினப்படுத்தி;

கேவலப்படுத்தி....

முற்றுமுழுதாக அவர்களின் மனங்களில் இருந்து அழித்துவிடுவதே மிக முக்கியமான திட்டமாக இருக்கக்கூடும்.

வரும் வாரங்களில் தலைவர் பிரபாகரன், அவரது மனைவி மற்றும் மகள் துவாரகா ஆகியோரின் அண்மைய புகைப்படம் என்றோ அல்லது அவர்கள் பேசிய "ஒலிப்பதிவோ" வெளிவரக்கூடும்.

இன்றைய காலகட்டத்தில் இருக்கும் அதி நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி போலியான போட்டோ, காணொளி மற்றும் ஒலிப்பதிவுகளை உருவாக்குவது ஒன்றும் கடினமான வேலை அல்ல.

ஆக;

ஏதோ ஒரு "சதிகார திட்டத்துடன்" மீண்டும் களமிறங்கியுள்ள இந்திய உளவுத்துறையான "றோ" இரண்டாம் கட்ட ஆட்டத்தை புலம்பெயர் நாடுகளில் ஆடத்தொடங்கியிருக்கிறது.

இந்த ஆட்டத்தில் பல தமிழ்த் தேசிய உணர்வாளர்களின் "தலைகள்" விழ வாய்ப்புள்ளது.

முக்கியமாக புலம்பெயர் நாடுகளில் பலமாக இருக்கும் "தமிழ் அமைப்புகளை" நிச்சயம் குறிவைத்திருப்பார்கள்.

பொறுத்திருந்து பாருங்கள். பல பிச் புடுங்கல்கள் புலம்பெயர் ஈழத்தமிழர்கள் மத்தியில் வெகு விரைவில் தூண்டிவிடப்படும்.

தாயகத்தில் உள்ள சனத்தையும் புலம்பெயர் ஈழத்தமிழர்களையும் "சிண்டுமுடிஞ்சு" கொழுவிவிட்டு பார்க்கும் விசமத்தனமான வேலைகள் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படலாம்.

ஆகவே;

புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கும் உண்மையான தமிழ்த் தேசிய உணர்வாளர்களுக்கும் இப்போது "ஏழரைச்சனியன்" ஆரம்பித்து இருக்கிறது.

இந்த கடுமையான காலப்பகுதியை புத்திசாலித்தனமாக கடந்து சென்றுவிட்டால் நிச்சயம் பல நன்மைகள் தமிழ்மக்களுக்கு ஏற்பட வாய்ப்பிருக்கு.

அல்லது இந்தியாவின் "றோ"வினது பிடியில் சிக்கி பல புலம்பெயர் அமைப்புகளும் தமிழ் உணர்வாளர்களும் சின்னாபின்னமாகிப்போகவும் வாய்ப்புகள் உள்ளன.

காலம்தான் பதில் சொல்லவேணும்.

இப்பிடியே இஞ்சால ஊர்ப்பக்கம் எட்டிப்பார்த்தால்;

போனகிழமை பத்தியில் எழுதியது போல கிழக்கு மாகாணத்தில் ஒரு சில முஸ்லீம் மக்கள் "வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிராகவும் 13ஆம் திருத்தச்சட்டத்துக்கு எதிராகவும்" ஒரு ஆர்ப்பாட்டத்தை செய்துள்ளார்கள்.

மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களை கண்மூடித்தனமாக "எதிர்க்க" அவர்களை ஒருசிலர் தூண்டிவிட்டுள்ளார்கள்.

இதுதான் நடக்கும் எண்டு போனகிழமை எதிர்வுகூறி இருந்தோம்.

சிறுபான்மை மக்களாகிய நாங்கள் எல்லோரும் "கடந்தகால கசப்பான" நிகழ்வுகளை பரஸ்பரம் மறந்து மன்னித்து கைகோர்த்து பலமாக இருக்கவேண்டிய காலம் இது.

தமிழ்த் தலைவர்களும் முஸ்லீம் தலைவர்களும் ஒன்றாக இருந்து பேசவேண்டிய தருணம் இது.

மாகாணசபைகளை பலமாக்கி எங்களின் இருப்பை உறுதிப்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயம்.

தமிழ்த்தலைவர்கள் தங்களின் கைகளை நீட்டி முஸ்லிம் மக்களை அரவணைத்தால் மட்டுமே;

எங்களை நசுக்கும் சிங்களப் பேரினவாதத்தை பலமாக எதிர்க்கமுடியும்.

இந்த விடயத்தை கனதரம் இந்தப்பத்தியில் எழுதியாகிவிட்டது.

சம்பந்தர் அண்ணர் மீண்டும் மீண்டும் ரணிலுக்கு கடுதாசி எழுதுவதை விட்டுவிட்டு;

ரவூப் ஹக்கீம் போன்ற தலைவர்களுடன் ஊடாடி உறவாடி அவர்களோடு இணைந்து பயணிக்க ஒரு திட்டத்தை செய்யவேணும்.

தயவுசெய்து சம்பந்தர் அண்ணரிடம் இந்த விடயத்தை உறைக்கிறமாதிரி சொல்லிவிடுங்கோ!

# கிழக்கில் முஸ்லிம்களும் தமிழர்களும்

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாக பேசுவதனால மட்டும் இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது. இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தொடர்ச்சியான விடாப்பிடியான அழுத்தங்கள் வழங்குவதன் மூலமே தீர்த்துக்கொள்ள முடியும். அந்த அடிப்படையில் கடந்த வாரம் நாவலடி பிரதேசத்தில் நடந்த காணி அபகரிப்பு தொடர்பாக நேரடியாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்துக்குக் கொண்டுசென்றேன். அவர் அதற்கான அழுத்தங்களை உடனடியாக வழங்கியிருந்தார். அதற்குரிய நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியிருந்தார். அதற்கு நான் மிகவும் நன்றி கூறுகின்றேன்.

அத்துடன், அப்பிரச்சினையை விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரை சந்தித்து தீர்வைக் கேட்டபோது, பார்ப்போம் என்று கூறியிருந்தார். அவரது பதிலானது சரியான முறையில் வழங்கப்பட்டிருக்கவில்லை. அதற்கு அடுத்தகட்டமாக மகாவலி அபிவிருத்திச் சபையானது பாராளுமன்ற கோப் (Coop) குழுவுக்கு சமுகமளித்ததைத் தொடர்ந்து அங்கும் அவர்களுக்கான அழுத்தங்கள் என்னால் பிரயோகிக்கப்பட்டன. எமது பிரச்சினைக்குரிய தீர்வை உடனடியாகப் பெற்றுத்தரும்படி அழுத்தம் கொடுத்தேன். இதனைத் தொடர்ந்து சட்டவிரோதக் காணிகளில் இடப்பட்டுள்ள அனைத்து வேலிகளும் உடனடியாக அகற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கு அடுத்த கட்டமாக மயிலத்தமாடு, மாதவனை பிரதேசங்களிலுள்ள அத்துமீறிய குடியேற்றங் களையும் அகற்றுவதாக உறுதி தந்துள்ளார்கள். எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதென்பது எமது தலையாய பொறுப்புகளில் ஒன்றாகும். தொலைபேசி மற்றும் முகநூல் போன்றவற்றினூடாக அழுத்தங்களைப் பிரயோகித்தால் மட்டும் போதாது. இவ்வாறான தொடர்ச்சியான நேரடிச் செயற்பாடுகளின் மூலமே பல விடயங்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அத்துமீறி அடைக்கப்பட்ட காணிகள் மற்றும் அத்துமீறி குடியேற்றப்பட்ட காணிகளை மீட்கும் நடவடிக்கைகள் தற்போது மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இனிவருங்காலங்களில் இவ்வாறான நேரடி நடவடிக்கைகளை இன்னும் மும்முரமாக மக்கள் சார்ந்து நடைமுறைப்படுத்துவோம். அதற்காக முன்னின்று செயற்படுவோம் என பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தனது நிலைப்பாட்டில் உறுதிப்பட மேலும் தெரிவித்துள்ளார்.





இவற்றுக்குப் பதிலளிக்க முடியாமல் முஸ்லிம் எம்.பிக்கள் கோமாவில் உள்ளார்கள். இவற்றையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த முஸ்லிம் இளைஞர்கள் சிறுபான்மை இல்லாமல் கிழக்கிற்கு சிங்கள ஆளுநர் நியமிக்கப்பட வேண்டும். அதுமட்டுமல்லாது மட்டக்களப்புக்கு சிங்கள மாவட்ட அரசாங்க அதிபர் நியமிக்கப்பட வேண்டும் என்ற கோஷம் எழுப்ப ஆரம்பித்துள்ளனர். ஆனால், அம்பாறைக்கு முஸ்லிம் அரசாங்க அதிபரும், மட்டக்களப்புக்கு முஸ்லிம் மேலதிக அரசாங்க அதிபரும் நியமிக்கப்படவேண்டியது காலத்தின் தார்மீகம்.

நாவலடி - கொழும்பு வீதியில் வேலிகளை அகற்றிய மகாவலி அதிகாரசபையினருடன் மக்கள் வாக்குவாதம் செய்தும் இறுதியில் தோற்றது மக்களே. மிலேச்சத்தனமான நிர்வாகப் பயங்கரவாதம் மட்டக்களப்பில் நடப்பதாக பலரும் தொடர்ந்தும் குற்றஞ்சாட்டிவரும் இந்தச் சூழ்நிலையில் நாவலடி சம்பவம் அதனை மெய்ப்பிக்கும் வகையில் அமைந்துள்ளதெனலாம்.

முஸ்லிம் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட போதும், படைத்தவன் மீது பழி சுமத்தி பரிகாசம் செய்தபோதும், முஸ்லிம் களின் வாக்குகளைப்பெற்று பாராளுமன்றம் சென்றவர்கள் வாய்மூடி மௌனிகளாக இருந்த போதும், முஸ்லிம்களுக்கு ஆதரவாக சாணக்கியன் (எம்.பி.) பேசியபோது பாராட்டப்பட்டார். அன்று எப்படி முஸ்லிம் தலைவர்களின் கையாலாகத்தனம் தெரிந்ததோ அதுபோல் இன்று அதே சாணக்கியன் (எம்பி) அவரது மக்கள் அளித்த வாக்குகளுக்குப் பிரதியுபகாரம் செய்யும்போது இன்றும் வாய்மூடி மௌனிகளாக இருக்கும்போது முஸ்லிம் தலைமைகளின் இயலாமை மீண்டும் தெளிவாகிறது.

அமைகின்ற அரசுக்குத் தேவையான இடத்தில் கையை உயர்த்தி ஆதரவளித்து சுகபோகங்களை அனுபவிக்கும் முஸ்லிம் தலைவர்கள், ஒவ்வொரு தேர்தல் காலங் களிலும் மேடைக்கு மேடை உரிமைக் கோஷமிட மட்டுமே செய்கின்றனர். ஆனால், செயற்பாட்டில் ஒன்றுமில்லை. எதிர்த்தரப்பில் எந்தவித அதிகாரமுமற்ற நிலையிலுள்ள ஒரு சாணக்கியனால் (எம்பி) இவ்வளவு முடியுமென்றால் மாவட்டத்தில் அமைச்சரவை அமைச்சர் இருந்தும் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் அரசியல் அனாதைகளாகியுள்ளனர். அமைச்சரால் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு கிடைத்த நன்மை என்ன? எது எவ்வாறாயினும், சாணக்கியனைப் (எம்பி) போன்று களத்தில் மக்களோடு மக்களாக நின்று முஸ்லிம்களின் உரிமைகளுக்காகப் போராடக்கூடிய ஆளுமைமிக்க அரசியல் தலைமைகளே முஸ்லிம் சமூகத்தின் இன்றியமையாத இன்றைய தேவையாகும்.

கடந்த காலங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் களாகப் பணியாற்றிய பெரும்பாலானவர்கள் மாவட்ட மக்களிடையே பிரிவினையைத் தூண்டி இனக்குரோதத்தை ஊக்கப்படுத்தி தமிழ், முஸ்லிம் மக்களைப் பிரித்து அரசியல் செய்துகொண்டனர். ஒட்டுமொத்த மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு எதிராக கச்சேரியும், மாவட்ட செயலாளரும் (தமிழ்), பிரதேச செயலாளர்களும் (தமிழ்) தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் செய்யும் அநியாயத்தை வெளிப்படையாகவே தட்டிக்கேட்க ஹிஸ்புல்லாஹ், பஷீர் சேகுதாவூத், மௌலானா, ரஹ்மான், அமீரலி போன்ற அரசியல்வாதிகள் தயங்குவது மர்மமாகவே உள்ளது.

1999ஆம் ஆண்டு பனம்பலன ஆணைக் குழுவின் சிபாரிசின்பேரில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் எதிர்கால காணித் தேவையைக் கவனத்திற் கொண்டு கோரளை மத்தி பிரதேச செயலகம் அரசாங்கத்தால் சட்டரீதியாக ஸ்தாபிக்கப்பட்டது. இதற்கென எல்லை நிர்ணய ஆணைக்குழு ஒதுக்கிய காணி 240 சதுர கிலோ மீற்றர். 24 வருடங்கள் கடந்தும் இதனை அமுல்படுத்தாமல் மட்டக்களப்பு கச்சேரி திட்டமிட்டு இழுத்தடிப்பது ஏன்? இதே ஆணைக்குழுவின் இன்னுமொரு சிபாரிசை கனகச்சிதமாக மட்டக்களப்பு கச்சேரி கையாண்டு மற்றுமொரு அநியாயத்தை இன்றுவரை மாவட்ட முஸ்லிம் களுக்கு செய்து வருகிறது.

மட்டக்களப்புக்கு பனம்பலன ஆணைக்குழு 1999இல் மக்களிடம் சாட்சியம் பெற வந்தபோது, முஸ்லிம்களால் முன்வைக்கப்பட்ட கோரளை மத்தி பிரதேச செயலகக் கோரிக்கையின் பின்னர், கோரளை தெற்கு கிரான் பிரதேச செயலகக் கோரிக்கை தமிழ் சகோதரர்களால் ஆணைக்குழுவிடம் முன்வைக்கப்பட்டது.

இக்கோரிக்கையில் அவர்கள் முஸ்லிம் களுக்கு மாவட்டத்தில் அப்போது காணியிருந்த கோரளை மேற்கு (ஓட்டமாவடி) பிரதேச செயலகத்துக்குச் சொந்தமான நான்கு பிரதேசங்களான ஆத்துசேனை, ஊத்துச்சேனை, வடமுனை, கள்ளிச்சை போன்ற கிராமசேவகர் பிரிவுகளைக் கேட்டு தமக்கான கோரளை தெற்கு (கிரான்) பிரதேச செயலகக் கோரிக்கையை முன்வைத்தனர். இக்கோரிக்கையை முன்வைத்தபோது முஸ்லிம் பிரதிநிதிகள் அங்கு இருக்கவில்லை. ஆணைக்குழு இரண்டு அதாவது, கோரளை மத்தி, கோரளை தெற்கு பிரதேச செயலகம் கோரிக்கையையும் அங்கீகரித்தது.

இக்கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டதன் காரணமாக ஓட்டமாவடி முஸ்லிம்களுக்குச் சொந்தமான 155 சதுர கிலோ மீற்றர் காணி பறிபோனது. இன்றுவரை இதனை ஓட்டமாவடி மக்கள் மீளக் கேட்கின்றனர். இதுவரை கச்சேரி வழங்கவில்லை. ஆனால், இதிலும் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்தது. ஆணைக்குழு அங்கீகரித்த இரண்டு பிரதேச செயலகங்களில் ஒன்றான தமிழ் பிரதேச செயலகமான கிரானை அங்கீகரித்து, முஸ்லிம்களுக்கான கோரளை மத்தி பிரதேச செயலகத்தை இன்றுவரை மறுத்து வருகின்றது. கோரளை மத்திக்கு வரவேண்டிய 240 சதுர கிலோ மீற்றர் காணியை கச்சேரி தரவுமில்லை. இதேவேளை, ஓட்டமாவடி முஸ்லிம்களுக்கு சொந்தமான 155 சதுர கிலோ மீற்றர் காணியையும் அடாத்தாகப் பறித்துக்கொண்டது. இந்த அநியாயத்தை யாரும் கேட்கவில்லை.

மாகாண சபைக்கு காணி அதிகாரம் வேண்டும் என்று கேட்கும் தமிழ் அரசியல்வாதிகள் வடக்கு, கிழக்கு இணைக்க முஸ்லிம்கள் சம்மதிக்க வேண்டும் என்று கோருவது எவ்வகையில் நியாயம் ? மாகாண சபைக்கு காணி அதிகாரமில்லாமலேயே தமிழ் பிரதேச செயலாளர்களை வைத்து இவ்வளவு அநியாயம் செய்கின்ற அரசியல்வாதிகள் அதிகாரம் கிடைத்தால் முஸ்லிம்களைத் துடைத்தெறியமாட்டார்களா? என்ற கேள்வியும் இவ்வாறான நிலையில் எப்படி தமிழ் அரசியல்வாதிகளுக்கு பின்னால் வர முடியும்? என்ற கேள்வியும் இப்போது எழ ஆரம்பித்துள்ளது. தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமை கயிறு அறுந்தால் பேரினசக்திகள் வடக்கு, கிழக்கை ஆட்கொள்ளும் என்பதை இனவாதமாக, பிரதேசவாதமாக சிந்திக்கும் நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியம்.

பிட்டுக்குழலில் இரண்டு பிட்டுகளுக்கு இடையிடையே தேங்காய்ப்பூ வைக்கும் காரணமே இன்றைய கிழக்கில் எழுந்துள்ள பிரச்சினைகளுக்கும் காரணம்.

# சூடாகும் தமிழக அரசியல் களத்தில் இறங்கும் தலைவர்கள்

ரமணி

இந்திய பாராளுமன்றத் தேர்தலுக்கு வலு சேர்க்கும் வகையில் தமது பலத்தைக் காட்ட தமிழக அரசியல் கட்சிகள் களத்தில் இறங்கியுள்ளன. நீட் தேர்வு விவகாரத்தில் தமிழக ஆளுநர் அரசியல் செய்கிறார் எனக் குற்றஞ்சாட்டிய திராவிட முன்னேற்றக் கழகம் உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்துள்ளது.

நீட் தேர்வை அகற்றக் கோரி மத்திய அரசையும், தமிழக ஆளுநரையும் கண்டித்து திராவிட முனேற்றக் கழக இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவ அணி சார்பில் தமிழகம் முழுவதும் வருகிற 20ஆம் திகதி அந்தந்த மாவட்டத் தலைநகரங்களில் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எத்தனை மரணங்கள் நிகழ்ந்தாலும் நீட் தேர்வு நடக்கும் என்ற எதேச்சதிகார போக்கில் உள்ள மத்திய அரசையும் இல்லாத அதிகாரம் இருப்பதுபோல் மாளிகையில் கொக்கரிக்கும் ஆளுநரையும் கண்டித்து இந்த உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற இருப்பதாக கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை குரோம்பேட்டையைச் சேர்ந்த மாணவர் ஜெகதீஸ்வரன் என்பவர் நீட் தேர்வு காரணமாக தற்கொலை செய்துகொண்டார். அந்த துக்கம் தாளாமல் அவரது தந்தையும் தற்கொலை செய்துகொண்டார். இது மாநிலம் முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. மேலும், நீட் தேர்வை ஆதரிக்கும் ஆளுநருக்கு எதிராக கடும் கண்டனம் எழுந்துள்ளது.

அதே ஓகஸ்ட் 20ஆம் திகதி அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாநாடு மதுரையில் ந்டைபெற எற்பாடு செய்யப்பட்டுள்ளது. வீர வரலாற்றின் எழுச்சி மாநாடு என பெயர் வைக்கப்பட்டுள்ள நிலையில் மேடை அமைப்பது, பந்தல் அமைப்பது போன்ற பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இருபெரும் கட்சிகளின் மாநாடும், உண்ணாவிரதப் போராட்டமும் தமிழக அரசியலில் கவனம் பிடித்துள்ளன.

எடப்பாடியால் வீழ்த்தப்பட்ட ஓ. பன்னீர்செல்வம் தாந்து பலத்தை நிரூபிப்பதற்காக சென்னையில் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்துக்கு அறிவிப்பு விடுத்துள்ளார். தமிழக பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் அண்ணாமலை, பாதயாத்திரை நடத்துகிறார். பெரும் செலவில் நடத்தப்படும் பாதயாத்திரை வெற்றியளிக்கவில்லை. பாதயாத்திரையா கரவன் பவனியா என்ற விமர்சனமும் எழுந்துளது.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட நீட் விலக்கு மசோதா தற்போது ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மசோதாவை ஆளுநர் ஆர்.என்.ரவி முதலில் திருப்பி அனுப்பி விட்டார். இரண்டாவது முறையாக மீண்டும் நிறைவேற்றப்பட்டதால், சட்டப்படி அது குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். அதன்படி, குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்காக அம்மசோதா அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நீட் தேர்வில் சித்தியடைந்த வைபவம் ஆளுநர் மாளிகையில் நடந்தபோது நீட் மசோதாவுக்கு கையெழுத்திடாதது ஏன் என பெற்றோர் ஒருவர் கேட்டபோது "கையெழுத்திட மாட்டேன்" எனத் திமிராகப் பேசினார். ஆளுநரின் பதிலை ஒட்டுமொத்த தமிழக மக்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. பாரதீய ஜனதா, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியன மௌனம் காக்கின்றன. பாரதீய ஜனதாக் கட்சியின் விசுவாசியான ஆளுநரின் பதிலுக்கு அந்தக் கட்சி வருத்தப்பட மாட்டாது.

நீட்டுக்கு எதிரான நீட்டை விரும்பாத தமிழக மக்களின் வாக்கைப் பெறும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அமைதியாக இருக்கும் அரசியலை மக்கள் அறிவார்கள்.








மதுரையில் நடைபெறும் அண்ணா திராவிட முன்னெற்றக் கழக மாநாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மதுரையில் போராட்டம் நடத்தப்பட்டது. குறிப்பிட்ட ஒரு சமூகத்தின் பாதுகாவலனாக எடப்பாடி தன்னை வெளிப்படுவத்தை எதிர்த்து நடைபெற்ற போராட்டம் கவனம் பெற்றுள்ளது.

முக்குலத்தோர் தேசியக் கழகம் என்ற பெயரில் மதுரையில் ஒட்டப்பட்டுள்ள போஸ்டரில், தேவரினத்திற்கு துரோகம். வராதே வராதே தூங்கா நகருக்கு வராதே என எடப்பாடி பழனிசாமியின் மதுரை வருகைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல் மற்றொரு அமைப்பு சார்பில் ஒட்டப்பட்டுள்ள போஸ்டர்களில் எட்டு தோல்வி எடப்பாடி பழனிசாமி என விமர்சிக்கப்பட்டுள்ளது. மதுரையில் ஒட்டப்பட்டுள்ள இந்த சுவரொட்டிகள் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. எடப்பாடி பழனிசாமிக்கு ஒரு பக்கம் எதிர்ப்புகள் கிளம்பினாலும் கூட மாநாடு நடைபெறும் மதுரை புறநகர் பகுதி விழாக்கோலம் பூண்டுள்ளது.

மதுரையில் நடக்க உள்ள அதிமுக மாநாட்டிற்காக எடப்பாடி பழனிசாமி தீவிரமாக தயாராகி வருகிறாராம். இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன. ஏற்கனவே இந்த மாநாட்டிற்கான ஜோதி ஓட்டம் சென்னையில் இருந்து தொடங்கி நடந்து வருகிறது.

அதிமுக 2.0 இது உணர்த்தும் விதமாக, அதிமுகவை தான் கைப்பற்றிவிட்டோம் என்பதை உணர்த்தும் விதமாக மதுரையில் அவர் பொதுக்கூட்டத்தை நடத்த திட்டமிட்டு உள்ளதாக கூறப்படுகிறது.

மதுரையில் நடத்தவும் முக்கியமான ஒரு காரணம் உள்ளதாம். எடப்பாடி என்றால் கொங்கு மண்டல தலைவர் என்ற இமேஜ் இருக்கிறது. அதை உடைக்க எடப்பாடி நினைக்கிறாராம். கிட்டத்தட்ட இரண்டு லட்சம் பேர் இந்த கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது தொண்டர்களின் தொகை இரண்டுகோடி எனவும் எடப்பாடி அறிவித்துள்ளார்.

கார்களில் மட்டும் 50 ஆயிரம் பேர் கலந்து கொள்ள உள்ளனர். முக்குலத்தோர் அபிமானத்தை பெறும் விதமாக மதுரையில் எடப்பாடி கூட்டத்தை நடத்த உள்ளார் என்கிறார்கள். ஓ பன்னீர்செல்வம் காரணமாக முக்குலத்தோர் அப்செட் ஆக கூடாது என்பதற்காக இந்த கூட்டத்தை அவர் நடத்த வாய்ப்பு உள்ளது. ஆர்பி உதயகுமார் ஏற்பாட்டில் இந்த கூட்டம் நடத்தப்பட வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. ஓ பன்னீர்செல்வம் மட்டுமின்றி திமுக, பாஜகவும் திரும்பி பார்க்கும் அளவிற்கு இந்த கூட்டம் இருக்க போகிறது என்கிறார்கள் விவரம் அறிந்தவர்கள்.

அதிமுக சார்பாக மதுரையில் எடப்பாடி பழனிசாமி மாநாட்டை சீர்குலைப்பதற்கான ஏற்பாடுகளை ஓ பன்னீர்செல்வம் தீவிரமாக செய்து வருகிறாராம். எடப்பாடி கூட்டம் நடத்தும் அதே நாளில் 20ம் தேதி மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை ஓ பன்னீர்செல்வம் நடத்துகிறார். அதே நாளில் கோவையில் கூட்டம் நடத்துவது தொடர்பாகவும் ஓ பன்னீர்செல்வம் அறிவிப்பு வெளியிட உள்ளார். இன்னொரு பக்கம் அதிமுக சார்பாக மதுரையில் எடப்பாடி பழனிசாமி மாநாட்டை சீர்குலைப்பதற்கான ஏற்பாடுகளை ஓ.பன்னீர்செல்வம் தீவிரமாக செய்து வருகிறாராம். அதன்படி எடப்பாடி பழனிசாமியின் இந்த மதுரை மாநாட்டிற்கு செக் வைக்க ஓ.பன்னீர்செல்வம் - டிடிவி தினகரன் ஆகியோர் முக்கிய திட்டம் ஒன்றை வகுத்து உள்ளதாக கூறப்படுகிறது. அதன்படி மதுரை மாநாட்டிற்கு முக்குலத்தோர் பிரிவினர் செல்லக்கூடாது என்று மறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

---

## அரசியல் Focus (03ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பேச்சு. வடக்கு கிழக்கில் போல் மலைநாட்டிலும், சில வெளிநாட்டு நிதி வாங்கும் சக்திகள், மலையக அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள் மத்தியில் முரண்பாடுகளை மூட்டிவிட எண்ணுகிறார்களோ என Focus அலர்ட்டாக அவதானிக்கும் என கூறி இருந்தோம். அது உண்மை. நாமும் நடைபயணம் போய் பலத்தை காட்டுவோம் என்ற திகம்பரரின், ராதாகிருஷ்ணரின் யோசனைகளை கணேசரும் ஓகே செய்ய. மூவரும் நேரடியாக களத்தில் இறங்க, நடைபயணம் களை கட்டியது. பயணத்தின் பின் கணேசர் ஒரு முன்னணி சிவில்காரை அழைத்து நானும் ஒரு சிவில் போராளிதான். கார்ட்போர்ட் போராளி அல்ல. வெள்ளை வான் கடத்தல் கொலை காலத்தில் தெருவில் இறங்கிப் போராடிய போராளி. இதை புரிந்துகொண்டு வாங்கள். இல்லாவிட்டால் விலகி போங்கள் என்று டோஸ் விட்டுள்ளார் என Focusக்கு தகவல். தற்சமயம் முற்போக்கு கூட்டணி, மலையக சிவில் சமூக முன்னணியாளர்கள் இடையில் சமூக நிலைமையை ஏற்படுத்த நடுநிலையாளர் சிலர் முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.



★ எல்லாவற்றையும் இன்டர்லிஜன்ஸ் ரிப்போர்ட்படி காய் நகர்த்தும் ரணிலருக்கு இப்போது சிக்கல் வடக்கு, கிழக்கு அல்ல, தெற்குதான். அனுரரின் செல்வாக்கு கடுமையாக குறைந்து விட்டது. மஹிந்தரின் செல்வாக்கு அப்படியே விழுந்து கிடக்கிறது. ரணிலரின் செல்வாக்கு மெல்லத்தான் ஏறுகிறது. ஆனால், சஜித்தரின் செல்வாக்கு குறையவில்லை. ஆனால், இவை எல்லாம் ஐம்பது விகிதம்தான். எப்போதும் இல்லாத விதமாக மற்ற ஐம்பது விகிதம் அன்–டிசைடட் என்ற மிதக்கும் வாக்கு வங்கியாக அப்படியே நீண்டநாள் நிற்கிறது. புதிய ஒருவர் இறங்கி வருவாரா அல்லது இருப்பவர்களில் எவரும் தேறுவாரா என தேடும் அன்–டிசைடட் மிதக்கும் வாக்கு வங்கி எதை நோக்கி திரும்பும் என்பது ரணிலரின் கேள்வி. மேலும் தெற்கின் தமிழ், முஸ்லிம் வாக்கு வங்கியும், சிறுபான்மை கட்சிகளாக எதிரணியிலேயே தொடர்ந்து இருப்பதும் ரணிலரை மேலும் உறுத்துகிறதாம் என Focusக்கு தகவல்.

★ டில்லிக்கு சென்று முகங்காட்டிவிட்டு வந்த ரணிலர் உடனடியாக தான் போகாமல் பிரதமரை சீனம் அனுப்பி வைத்ததும், சீன உளவுக் கப்பலை மீண்டும் உள்ளே வர விடுவதும் டில்லியை கோபமுற செய்துள்ளதாம். 13ஐ உங்கள் விருப்பப்படி எது வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள், தமிழர் பிரச்சினை எமக்கு பிரியோரிட்டி முன்னுரிமை பிரச்சினை இல்லை, என்று கூறும் அளவுக்கு டில்லி இறங்கி வந்தும் ரணிலர் அசட்டையாக எடுக்கும் முடிவுகள் தொடர்பில் டில்லி கொஞ்சம் சீற்றம் அடைய தொடங்கி உள்ளது. இலங்கை இந்த விளையாட்டை இனி தொடர கூடாது. அடுத்து வரும் தேர்தலில் மீண்டும் வென்று மோடி பலமான ஆட்சியை அமைப்பார். அதன்பின் தடாலடி நடவடிக்கைகளை தேசிய நலன் என்று டில்லி எடுக்கலாம். அதன் அடையாளமாகத்தான் இனப்படுகொலை என்ற சொல்லை அமிட்ஷா பேசினார் என Focusக்கு தகவல். ஆனால், ஏனோ, எல்லா தரப்புகளும் அமித் ஷாவின் அந்த பாரதூர சொற்பிர யோகத்தை அடக்கியே வாசிக்கின்றன.

★ டல்லஸ் கட்சி குழு பாராளுமன்றத்தில் பொருளாதார நீதிக்கான குழு என்ற ஒன்றை அமைக்க ஏற்பாடுகளை செய்து வருகிறது. அதில் ஆளும், எதிர்த் தரப்பு என எல்லா தரப்பு எம்.பிகளுக்கும் இடம் தரப்படும் என ஓடித்திரியும் எம்பி Focusக்கு தகவல் அளித்தார்.

## ஹோமாகமவில்...

ஹோமாகம கட்டுவன கைத்தொழில் பேட்டையில் உள்ள இரசாயன தொழிற் சாலையில் தீப்பிடித்த களஞ்சியசாலை ஒன்றுக்கு தேவையான சுற்றாடல் அனுமதி பெறப்படவில்லை என மத்திய சுற்றாடல் அதிகார சபையின் ஊடகப் பேச்சாளர் அஜித் வீரசுந்தர தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த இரசாயன தொழிற்சாலையில் ஏற்பட்ட தீ விபத்தினால், அப்பகுதியின் வளிமண்டலத்தில் பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதால், தொழிற்சாலைக்கு அருகில் வசிக்கும் மக்கள் முகக்கவசம் அணியுமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபை கேட்டுக்கொண்டுள்ளது.

தீயில் ரசாயனம் கலந்ததால், தொழிற் சாலையை சுற்றியுள்ள மின் கம்பிகள் மற்றும் சுவர்களில் ரசாயன கழிவுகள் படர்ந்திருப்பதையும், மின்சாரசபை ஊழியர்கள் கம்பிகளில் கழிவுகளை அகற்றி சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டதையும் பார்க்க முடிந்தது.

தீ பரவலுக்கான சரியான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்பது டன், தீயை கட்டுப்படுத்த ஹொரணை நகரசபை, தெஹிவளை மற்றும் கோட்டே மாநகரசபையின் சுமார் பத்து தீயணைப்பு வாகனங்கள் சம்பவ இடத்திற்கு வரவழைக் கப்பட்டன.

தீயினால் தொழிற்சாலைக்கு ஏற்பட்ட நஷ்டம் இதுவரை கணக்கிடப்படவில்லை எனவும், தீ விபத்துக்குள்ளான தொழிற் சாலையைச் சுற்றியுள்ள நான்கு தொழிற் சாலைகளுக்கும் சிறிய சேதம் ஏற்பட்டுள் ளதாக ஹோமாகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

## பாராளுமன்றம்...

இதற்கமைய எதிர் வரும் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் மு.ப. 10.30 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை தொல்பொருளியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள், சுற்றுலாப் பயணத்துறைச் சட்டத்தின் கீழான 2324/14 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளை என்பன விவாதிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்படவுள்ளன.

இதனைத் தொடர்ந்து பி.ப. 5.00 மணிமுதல் பி.ப. 5.30 மணி வரை அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை விவாதிக்கப்படவுள்ளது.

ஓகஸ்ட் 23ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 5.00 மணி வரை இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2336/45 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள், ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2336/71 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டளை, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2343/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2339/08 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை என்பவற்றை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இதன் பின்னர் பி.ப. 5.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையான காலப் பகுதியில் ஒத்திவைப்பு வேளையின் போதான வினாக்களுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் 24ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அத்தியாவசிய பொதுச் சேவைகள் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2341/03 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட தீர்மானம் அங்கீகரிக்கப்படவுள்ளது. அதனைத் தொடர்ந்து பிற்பகல் 5.30 மணி வரை இலங்கை கிரிக்கெட நிறுவனம் தொடர்பில் எதிர்க்கட்சியினர் கொண்டுவரும் சபை ஒத்திவைப்பு விவாதம் நடைபெறும். ஓகஸ்ட் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஏ.ஆர். மத்துமபண்டார, பி. சிறிசேன குரே மற்றும் சங்கைக்குரிய உடவத்தே நந்த தேரர் ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணை இடம்பெறவுள்ளது. மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரை இதற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்போது விற்பனையில்!
ஜூனியர் தமிழன் வழங்கும்
2023ஆம் ஆண்டுக்கான
தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை
'வெற்றிக்கு வழிவகுக்கும்'
விசேட மாதிரி வினாத்தாள் பொதி




விலை
ரூ.850/=
மட்டுமே
பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால்
தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது
பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!
பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
0777983308 / 0741684643



காரைக்கவி

# சீத்துவக்கேடு 252



உன்னாண ஏறு தழுவுதல் எண்டது சீறிப் பாஞ்சு வாற காளையளைத் தழுவி அடக்குதல் கண்டியோ. அவங்கள் உப்படி வாற மாடுகளின்ரை கொம்பை நல்லாக் கூராச் சீவி ஒரு பரந்த வெளியான ஏறு தழுவும் இடத்தில விடுவாங்கள். உந்த இடத்தை இலக்கியங்கள் தொழுவம் எண்டு சொல்லுது. பெடியள் போட்டி போட்டு ஏறு தழுவுவாங்கள். அப்படி ஏறு தழுவுகிறவனை இலக்கியங்கள் பொதுவன் எண்டு சொல்லுது. எருமை மாடுகளை வைச்சிருக்கிற கோட்டினத்தாயர்கள் பசுக்களை வைச்சிருக்கிற கோவினத்தாயர்கள் ஆட்டுமந்தைகளை வைச்சிருக்கிற புல்லினத்தாயர்கள் எண்ட மூண்டு பகுதிப் பெடியங்களும் உந்த ஏறுதழுவுதலிலை பங்கு பற்றினவங்களாம்.

ஏறுதழுவல் நடக்கப்போகுது எண்டதை முதல் நாளே பறை அடிச்சு அறிவிப்பினம். அதேநேரம் பெடியளும் தங்கடை சொந்தக்காரருக்கு சிநேகிதருக்கு நாங்கள் மாடு பிடிக்கப் போகிறோம் எண்டு சொல்லி அனுப்புவாங்கள். அதேநேரம் மாடுகளை வைச்சிருக்கிற பெட்டையள் வீட்டுக்காரரும் சொல்லி அனுப்புவினமாம். எல்லாரும் முதல் நாள் இரவே வந்து குரவை பாடுவினமாம். அதே மாதிரி போட்டி முடிஞ்ச பிறகு வெண்டவனையும் சுத்தி நிண்டு குரவை பாடுவினமாம். உந்த மாடு பிடிக்கிற தொழுவத்தைச் சுத்தி நிறையப் பரண்கள் கட்டி இருக்கும். அதிலை ஆக்கள் இருந்து பாப்பினமாம்.

மாடு பிடிக்கிற பெடியள் பிடவம், கோடல், காயா, வெட்சி, தளவம், குல்லை, குருந்து எண்ட மரங்ககளிலை இருந்து பிடுங்கின பூக்களிலை செய்த கண்ணியளை தலையிலை கட்டிப்போட்டு இந்திரன், சிவன், முருகன் எண்ட தங்கடை கடவுள்களைக் கும்பிடுப்போட்டுத்தான் மாடு பிடிக்கப் போவாங்களாம். மாடு பிடி துடங்கேக்கை பறை அடிக்கிற ஒரு பழக்கம் இருந்ததாம். உந்தப் பறைச் சத்தத்தோடை பாத்துக்கொண்டு நிக்கிற சனமும் சேந்து சத்தம் போட மாடுகள் வெருண்டடிச்சு பாஞ்சு ஓடி வருங்களாம். கொம்பைப் பிடித்து அழுத்தல், கழுத்தைப் பிடித்துக்கொண்டு காளையில் மார்பில் தொங்கல், கழுத்தைத் திருகல், இமிழ் என்னும் கொட்டேறியைத் தழுவல், தோளில் ஏறல், நெருக்கிப் பிடித்தல் எண்டு விதம் விதமான உத்தியளைப் பெடியள் பாவிச்சு அந்த மாடுகளை அடக்கு வாங்களாம் .

அப்ப சண்டை பிடிச்ச மாடுகளை அவை காரி, வெள்ளை, குரால், புகர், சேய் எண்டு அஞ்சாப் பிரிச்சிருக்கினம். காரி எண்டது கறுப்புக்காளை, வெள்ளை எண்டது வெள்ளைக் காளை, குரால் எண்டது மயிலைக்காளை புகர் எண்டது புள்ளிக்காளை, சேய் எண்டது சிவப்புக் காளை கண்டியோ. உந்த விபரங்களை அவர் புலவர்,

''வள்ளுருள் நேமியான் வாய்வைத்த வளைபோலத்
தெள்ளிதின் விளங்கும் சுரிநெற்றிக் காரியும்
ஒரு குழையவன் மார்பில் ஒண்தார்போல் ஒளிமிகப்
பொருவறப் பொருந்திய செம்மறு வெள்ளையும்
பெரும்பெயர்க் கணிச்சியோன் மணிமிடற்றணி போல
இரும்பிணர் எருத்தின் ஏந்திமில்குராலும்
அணங்குடை வச்சிரத்தோன் ஆயிரங் கண்ஏய்க்கும்
கணங்கொள் பல் பொறிக் கடுஞ்சினப்புகரும்"

எண்ட வரியளிலை சொல்லுறார் எண்டார் அப்பு .

***(இன்னும் ஆடுவம் )***

---



வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம் சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

# இவ்வார இராசி பலன்கள்

### மேஷ ராசி அன்பர்களே!

பணப்புழக்கம் அதிகரிக்கும். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்து வேறுபாடு மறைந்து அந்நியோன்யம் அதிகரிக்கும். சிலருக்கு அத்தியாவசியமான பயணம் மேற்கொள்ள நேரிடும். உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தந்தைவழி உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் அதற்கேற்ப சலுகைகளும் கிடைக்கும். அதிகாரி களின் ஆதரவு உற்சாகம் தரும். சக ஊழியர்களின் விடயங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது.

வியாபார விடயமாக அலைச்சலும் சோர்வும் ஏற்படும். பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்து ழைப்புத் தருவார்கள். சக வியாபாரிகளுடன் இணக்கமான சூழ்நிலை உண்டாகும். விற்பனை அதிகரிக்கும்.

### ரிஷப ராசி அன்பர்களே!

பணவரவு இருந்தாலும் எதிர்பாராத செலவுகளால் சேமிக்க முடியாத நிலை ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே மூன்றாவது நபர்களின் தலையீடு காரணமாக வாக்குவாதம் ஏற்படக்கூடும்.

பொறுமையுடன் இருப்பது மிகவும் நல்லது. குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் குடும்பப் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

அலுவலகத்தில் கடுமையாக உழைத்தாலும் நல்ல பெயர் கிடைக்கும் என்று சொல்ல முடியாது. அலுவலகப் பணிகளில் கூடுதல் கவனம் தேவை. சிறிய தவறுகூட பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

வியாபாரத்தில் கடினமாக உழைத்தால் மட்டுமே விற்பனையை அதிகரிக்க முடியும். பணியாளர் களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும். சக வியாபாரிகளால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும். வாடிக்கையாளர்களிடம் கனிவான அணுகுமுறை அவசியம்.

### மிதுன ராசி அன்பர்களே!

வருமானம் திருப்தி தரும். ஓரளவு சேமிக்கவும் முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். இளைய சகோதரர்களால் செலவுகள் ஏற்படும் என்றாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும். சிலருக்கு குலதெய்வப் பிரார்த்தனையை நிறை வேற்றும் வாய்ப்புள்ளது.

அலுவலகத்தில் வேலை செய்பவர்களுக்கு இடமாற்றம், பதவி மாற்றம் கிடைக்கும் என்றாலும் அதனால் நன்மையே நடக்கும். அதிகாரிகள் ஆதரவாக இருப்பார்கள்.

வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். பற்று வரவு சுமுகமாக நடக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பங்குதாரர்களால் அனுகூலம் உண்டாகும். வியாபார அபிவிருத்திக்குத் தேவையான கடனுதவி கிடைக்கும்.

### கடக ராசி அன்பர்களே!

பணவரவைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவும் இல்லை என்றாலும், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவைப்படுகிறது. அநாவசிய செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை.

அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். தந்தையின் உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு தந்தைவழியில் எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்புண்டு. வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது.

வேலைக்குச் செல்லும் அன்பர்களுக்கு சக பணியாளர்களின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கும். மேலதிகாரிகளை அணுகும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். சக வியாபாரிகளுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம். அவர்களால் அனுகூலமும் உண்டாகும். விற்பனையை அதிகரிப்பதில் பணியாளர்கள் உற்சாகத்துடன் ஈடுபடுவார்கள்.

குடும்ப நிர்வாகத்தைக் கவனிக்கும் பெண்களுக்கு பொறுப்புகள் கூடும். கணவரின் அன்பு ஆறுதலாக இருக்கும்.

### சிம்ம ராசி அன்பர்களே!

பணவரவுக்கு குறைவிருக்காது. ஆனால், வாரத் தொடக்கத்தில் மனதில் தேவை இல்லாமல் தோன்றும் குழப்பங்களால் குடும்ப நிர்வாகத்தில் கவனம் செலுத்த முடியாது. மூத்த சகோதர வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், அனுசரித்துச் செல்லவும்.

தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அவருடன் ஏற்பட்ட மனவருத்தங்கள் நீங்கும். பழைய கடன்கள் விடயத்தில் கவனம் தேவை.

அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரித்தாலும் அதற்கேற்ற சலுகைகளும் கிடைக்கும் என்பதால் உற்சாகமாகவே காணப்படுவீர்கள்.

வியாபாரத்தில் எதிர்பார்த்ததைவிடவும் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.பணியாளர்கள் நல்ல முறையில் பணி செய்வார்கள். சக வியாபாரிகள் உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் தருவார்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சற்று பொறுப்புகள் கூடுவதால் மனதில் சோர்வு உண்டாகும். வாரப் பிற்பகுதியில் சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள். பிள்ளைகள் மூலம் சுபச்செய்தி ஒன்று கிடைக்கும்.

### கன்னி ராசி அன்பர்களே!

எதிர்பார்த்ததைவிடவும் வருமானம் கூடுதலாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டு மனதில் இலேசான சோர்வை உண்டாக்கும்.

வழக்குகளில் உங்களுக்குச் சாதகமான போக்கு ஏற்படும். பிள்ளைகள் மூலம் பணவரவு உண்டு. சிலருக்கு தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படும். பொறுமையுடன் இருப்பது நல்லது.

வேலைக்கு விண்ணப்பம் செய்திருப்பவர் களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். வேலையில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வுடன் சலுகைகளும் கிடைக்கும்.

வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட இலாபம் அதிகமாக வரும் என்றாலும் அதற்காக கூடுதலாக உழைக்கவும் வேண்டியிருக்கும். வியாபாரத்தை விரிவுபடுத்த வங்கிக் கடனுதவி கிடைக்கும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும்.

### துலா ராசி அன்பர்களே!

குடும்பத்தில் நிம்மதியும் மகிழ்ச்சியும் காணப்படும். ஆனால், புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. இளைய சகோதரர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சியுடன் ஆதாயமும் தருவதாக இருக்கும்.

அலுவலகத்தில் உங்கள் திறமைக்கு உரிய அங்கீகாரமும் அதிகாரிகளின் பாராட்டும் கிடைக்கும். பதவி உயர்வோ அல்லது ஊதிய உயர்வோ கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டாகும்.

வியாபாரத்தில் எதிர்பார்த்த அளவுக்கு இலாபம் கிடைக்காது. போட்டிகளைச் சமாளிக்க கடுமை யாகப் பாடுபடவேண்டி இருக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்ப்பது நல்லது. பங்குதாரர்கள் உதவிக்கரமாக இருப்பார்கள்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மிகவும் மகிழ்ச்சியான வாரம்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

பணவரவு தேவையான அளவுக்கு இருந்தாலும், திடீர் செலவுகளால் கடன் வாங்கவேண்டி வரும். கணவன் - மனைவிக்கிடையே வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது.

பெண் அல்லது பிள்ளையின் திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமை அவசியம். நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் சற்று இழுபறிக்குப் பிறகு சாதகமாக முடியும்.

அலுவலகத்தில் உங்கள் மீதான நிர்வாகத்தினரின் அலட்சியப்போக்கு மாறும். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள். பல வகைகளிலும் முன்னேற்றம் ஏற்படும்.

வியாபார அபிவிருத்திக்காகக் கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். சக வியாபாரிகளின் யோசனை களைப் பொருட்படுத்த வேண்டாம். பணியாளர்கள் முரண்டு பிடித்தாலும் விட்டுப்பிடித்துச் செல்வது நல்லது. விற்பனை வழக்கம்போலவே இருக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். புகுந்தவீட்டு உறவினர்கள் ஆதரவாக இருப்பார்கள். கணவரை அனுசரித்துச் செல்வது நல்லது.

### தனுசு ராசி அன்பர்களே!

வார முற்பகுதியில் நீங்கள் நீண்டநாட்களாக எதிர்பார்த்திருந்த நல்ல செய்தி வந்துசேரும். பேச்சால் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும்போது மிகவும் கவனமாக இருப்பது அவசியம்.

செலவுகள் அதிகரித்தாலும்கூட அதற்கேற்ப பணவரவு இருப்பதால் சமாளித்துவிடுவீர்கள். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கசப்பு உணர்வுகள் நீங்கும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

அலுவலகத்தில் உற்சாகமாகச் செயல்படுவீர்கள். எதிர்பார்த்த சலுகை சற்று இழுபறிக்குப் பிறகு கிடைக்கும். அதிகாரிகள் சிலநேரங்களில் கண்டிப்பு காட்டினாலும், ஆதரவாகவும் இருப்பார்கள்.

வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். புதிதாக வியாபாரம் தொடங்க நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளைத் தொடங்கலாம். அனுகூலமாக முடியும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு செலவுகள் கூடுவதால் சற்று சிரமப்பட்டே சமாளிக்கவேண்டி இருக்கும். வாரப் பிற்பகுதியில் கணவரிடம் எதிர்பார்த்த பணம் கிடைக்கும்.

### மகர ராசி அன்பர்களே!

இந்த வாரம் நீங்கள் எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும். அவசரப்பட்டு யாருக்கும் எந்த வாக்குறுதியும் தரவேண்டாம். பொருளாதார நிலை சுமாராகத்தான் இருக்கும். வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கையுடன் இருக்கவும்.

சகோதரர்களுடன் அனுசரித்துச் செல்லவும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். அவர்களை அனுசரித்துச்செல்வது நல்லது. சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்புண்டு.

வேலைக்கு விண்ணப்பித்திருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும். பணியின் காரணமாக சிலர் வெளியூர்ப் பயணம் மேற்கொள்ள நேரிடும். சிலருக்கு திடீர் பதவி உயர்வு கிடைக்கக்கூடும்.

வியாபாரத்தை விரிவுபடுத்தவும், வாடகை இடத்திலிருந்து சொந்த இடத்துக்கு கடையை மாற்றவும் வாய்ப்பு உண்டாகும். வியாபாரத்தில் சில மாற்றங்களுக்காகச் செலவுசெய்யவேண்டி வரும். விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்கள் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் பக்குவமாக நடந்து கொள்ளவும்.

### கும்ப ராசி அன்பர்களே!

புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. வருமானத்தைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவும் இல்லை. செலவுகளும் அவசியமான செலவுகளாகவே இருக்கும். சிலருக்கு திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும்.

தந்தையின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகும். வழக்குகளில் நிதானம் தேவை. சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

வேலைக்கு விண்ணப்பித்து இருந்தவர்களுக்கு வேலை கிடைக்கும். ஏற்கெனவே வேலையில் இருப்பவர்களுக்கு நிர்வாகத்தினரின் ஆதரவு கிடைக்கும்.

வியாபாரத்தில் இலாபம் எதிர்பார்த்த அளவுக்கு இருக்காது என்றாலும் ஓரளவு திருப்திகரமாக இருக்கும். கடையை புதிய இடத்துக்கு மாற்ற நினைப்பவர்கள் அதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதில் அவ்வப்போது இலேசான சோர்வு ஏற்படக்கூடும்.

### மீன ராசி அன்பர்களே!

குடும்பத்தில் அவ்வப்போது சிறு சிறு பிரச்சினைகள் ஏற்பட்டாலும் உடனுக்குடன் சரியாகிவிடும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு இருக்காது. பழைய கடன்கள் தீருவதற்கு வாய்ப்புண்டு. நீண்டநாட்களாகச் சந்திக்காமல் இருந்த உறவினர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு உண்டாகும்.

அலுவலகத்தில் பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. சக ஊழியர்கள் அனுசரணையாக இருப்பார்கள். சிலருக்கு பணியிடத்தில் மாற்றம் ஏற்படக்கூடும்.

வியாபாரத்தில் முக்கிய முடிவுகள் எதையும் இப்போது எடுக்கவேண்டாம். அவசியம் முடிவு எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டால், தகுந்தவர்களிடம் ஆலோசனை கேட்டு செய்யவும். மற்றபடி வியாபாரம் வழக்கம்போலவே நடைபெறும்.

குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு சந்தோஷமும் நிம்மதியும் தரும் வாரம். செலவுகள் குறைவாக இருப்பதால் சிறிது சேமிக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்படும்.

## தயவானவள்

சோலை மனம்
கொண்டவள்
சோகங்களை தட்டிச்
சென்றவள்
மாசற்ற மலர்ந்த
புஸ்பமவள்
புகுந்த வீட்டில்
புனிதமானவள் !

கண் கண்டவனை
மார்பிலே சுமப்பவள்
தாகமென்றதும்
தண்ணீரானவள்
மோக மென்றதும்
முழுமையானவள்
மூன்றெழுத்திற்கு
உரித்தானவள் !

தன்னிலை மறந்து
தவிப்பவள்
தாயெனும் தரத்தினை
காப்பவள்
தனக்கென எதையும்
எண்ணாதவள்
வஞ்சங்களை என்றும்
நிர்க்கதியாக்குபவள்!

இல்லறம் காத்து
நல்வரம் பெறுபவள்
சொல்வளம்
பெரிதென தன்கு
கொள்பவள்
உள்மன வலிப்
பிம்பங்களை
விதைத்திடாதவள்!

வறுமையிலும்
எப்போதும்
நறுமணமானவள்

ருணவிமோசகரிடம்
வினைக்
கண்ணிரானவள்

புறந்தள்ளி போகா
சரணமானவள்
அதனால் இனி
என்றும் என் வாழ்வில்
தயவானவள் !

*கலா பூஷணம்*
*மாதம்பை கதிர்*

## பக்கமாய் அவள்

என்னவள் பார்வையில்
எத்தனையோ மாயங்கள்
தன்னாலே கரைகிறேன்
தனியாக நானும்

வானத்து நிலவாய்
என் வாழ்விலும் வந்தாள்
கானகத்து குயிலாய்
கனிமொழியும் பேசினாள்

தேசத்து அழகியாய்
தேரினில் ஏறி
பாசத்தின் உறைவிடமாய்
என் பக்கத்தில் வந்தாளே...

*தேவந்தி (சயூரன்)*
*காரைதீவு*

## தாய் மொழியைக் காத்திடுவோம்

தமிழ்தான் எமது தாய் மொழியே
தித்திக்கும் அது வாய் வழியே
தாய்மொழியில் பேசுவதில்
தரக்குறைவு வருவதில்லை
★★★
தாய் மொழியின் தனிமையிலே
தமிழ் மொழியின் இனிமையிலே
சேயாகப் பிறந்தோமே
செந்தமிழில் வளர்ந்தோமே
★★★
தாய் தந்த தாலாட்டு
தமிழ் மொழியின் தேன் பாட்டு
சேயாய் அதை நாம் கேட்டு
செவிமடுத்துத் தூங்கினோமே
★★★
தாலாட்டுப் பாடும் போது
தாய் முகம் மலர்கிறது
பாலூட்டி வளர்த்த பாசம்
பாசையாய் புலர்கிறது
★★★

தமிழைவிட இனிய மொழி
தரணியிலே வேறில்லை
அமுதமென பெயர் கொண்ட
அழகு மொழி கண்டதில்லை
★★★
அன்னத்தின் நடை பழகி - தன்
அழகு நடை மறந்தது போல்
பன்னாட்டுப் பாஷையால் - தனது
பாலர் மொழி புரண்டதேனோ
★★★
உலக மொழி பயின்றாலும்
உரிய மொழி மறக்காது
கலப்படங்கள் செய்தாலும் - தமிழின்
கண்ணியங்கள் இறக்காது
★★★
சாதி மத பேதமின்றி
சகலரும் பேசுகின்ற
ஆதிகால மொழிகளிலே
அழகான மொழியிதுதான்
★★★

சகல மொழியும் பேசுகின்ற
சனம் நிறைந்த கூட்டத்தில்
அகல நின்று கதைத்தாலும்
அன்னை மொழி கவர்ந்திடுமே
★★★
தாயின் தரத்தைக் குறைக்காதே
தாய் மொழியை மறைக்காதே
பேய்கூடப் பேசுவது
பெற்றோரின் பாசையேதான்
★★★
அடுத்த மொழி கலந்ததிலே
அசிங்கப்படுத்த விட்டிடாமல் -
தாய்
கொடுத்த சொத்ததனை
கண்ணாகக் காத்திடுவோம்

*கவிஞர் ஜனதாலத்தீப்*
*ஒலுவில்*

## கம்பித் தோட்டம்

அன்று ஒரு நாள் ....

கம்பித் தோட்டக்
காணிக்கு என்
தம்பியும் என்னோடு
பத்துப்பேர் கூடியே
எட்டு மூலைப்
பட்டம் ஒன்று
கட்டி ஏற்றினோம்
காற்றில் பறந்தது

விட்டு நூலை
விட்டு விட்டு
ஏற்றிய பட்டம்
ஏறிய போது
காற்றுக் கொஞ்சம்
சுழற்றி வேகமாய்
மூசி வீசிட
அறுந்தது பட்டம்

பறந்த நூலுடன்
பனையிற் தொங்கவே
பாத்திக்குள்
வெங்காயம்

பசுமை மாறிடப்
பத்துப் பேரும்
மிதித்து நசுக்கிட
தோட்டக்காரர்
கண்டு துரத்த
ஓட்டம் பிடித்தோம்
ஒன்றாய்க் கூடி

வாங்கடா உங்களை
விடமாட்டெனென
துரத்தி வந்த
தோட்டக்காரர்
தடுக்கி விழுந்தார்
தரையில் சாய்ந்தார்
படுத்தவர் கிடக்கப்
பார்த்துப் பார்த்து
எடுத்தோம் ஓட்டம்
எடுக்கப் பட்டம்

கிளுவை நிறைந்த
கிடுகு வேலியில்
ஏறினான் பாலன்
எடுக்க
முயன்றான்

கொக்கைத் தடியில்
கொழுவி இழுக்கையில்
பட்டங் கிழியப்
பதறிய பாலன்
கால் தடுமாறிக்
கீழே வீழ்ந்த
சம்பவம் இன்னும்
நெஞ்சை வருடுது

செம்மண் சேற்றில்
புதைந்த கால்கள்
எம்மண்ணை நினைத்து
ஏங்கித் தவிக்குது
வெண்பனித் தரையில்
மிதிக்க விறைக்குது

*திருமதி. தங்கமுத்து*
*தம்பித்துரை.*
*ஓய்வுநிலை ஆசிரியை.*

## தூறல்கள்

## பாவ மொழிகள்

கொலைகள்
செய்தால்
நரகத்தில்
புழுக்கள் மகிழும்

களவைக் கற்றால்
சொர்க்கத்தில்
முட்கள் கொஞ்சும்

கள்ளில் குளித்தால்
பாயில் எறும்புகள்
முளைக்கும்

காமத்தில்
களித்தால்
மாத்திரைகள்
அவயங்களை
வாங்கும்

குருவை நிந்தித்தால்
குடும்பங்கள்
சாம்பலைச் சமைக்கும்

இணையத்தில்
மூழ்கினால் கண்கள்
வெளிச்சத்தை விற்கும்

வலைகளில் விழித்தால்
உடல்கள்
ஊனத்தைக் கக்கும்

கைபேசிகளில்
நுழைந்தால்
கறையான்கள்
காசுகளை நீட்டும்

*பூபதிராஜா*
*கொழும்பு*

## சிந்தை குளிரும் தந்தை

தந்தை என்பவர்
தரணியை வென்றவர்
சிந்தை குளிரவே
சீராட்டி நின்றவர்
கந்தை உடையிலும்
களிப்பைக் கண்டவர்
நொந்த உள்ளத்தில்
புன்னகையால் மீண்டவர்

உறவுகள் வாழ
உழைப்பில் செழித்தவர்
இரவுகள் ஆனாலும்
தூங்காது விழித்தவர்
வரவுகள் சேரவே
அயராது துளிர்த்தவர்
நிறைவுகள் கண்டிட
இலக்கில் நிலைத்தவர்

வறுமையை விரட்டிட
பெரும்பாடு பட்டவர்
பொறுமை கொண்டே
சிகரத்தைத் தொட்டவர்
வெறுமை வாழ்விலும்
தைரியத்தை நட்டவர்
முதுமைக்காக என்றுமே
சேமிக்காது விட்டவர்

தனது கனவை
பிள்ளைக்காய்த்
தொலைத்தவர்
மனது நிறைந்திட
அன்பில் திளைத்தவர்
எனது இதயத்தில்
உன்னதமாய் முளைத்தவர்
தினமும் உயரவே
ஏணியாய் நிலைத்தவர்

தோளைத் தொட்டிலாக்கி
நித்திரையில் ஆழ்த்தியவர்
காலை அமுக்கியே
நோவைத் தாழ்த்தியவர்
சாலையில் நடந்திட
கைதட்டி வாழ்த்தியவர்
நாளைய சந்ததிக்காய்(த்)
துன்பத்தை வீழ்த்தியவர்

கரம்பிடித்து நடக்கையில்
உயர்வைக் கண்டேன்
வரம் நீங்களென
வைராக்கியம் கொண்டேன்
தரம் பார்க்காது பழகிடும்
மனிதம் திறம்கொண்டெழும்
நீங்களே புனிதம்..!

*ஏறூர் கவிமாமணி*
*எம்.ரி.எம்.அன்ஸார்.*

# பொருளாதார மேதையின் வாழ்வில்



உலகப் புகழ்பெற்ற பொருளாதார மேதை அமர்த்தியா சென். பொருளாதாரத் துறையில் நோபல் பரிசு வென்று இந்தியாவுக்கு பெருமை சேர்த்தவர். அவரது வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்த ஒரு சம்பவத்தைப் பார்க்கலாம்.

அப்போது சென்னுக்கு பத்து வயது கூட இருக்காது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு உடல் முழுவதும் குருதி வடிய ஓடி வரும் ஒருவரைப் பார்க்கிறார். அவர் ஓர் இஸ்லாமியர். பெயர் காதர்பாய். இந்துக்கள் அதிகமாக இருக்கும் பகுதிக்கு வேலைக்குச் சென்றிருக்கிறார். அவர் ஓர் இஸ்லாமியர் என்று அறிந்த ஒருவன் காதர்பாயைக் கத்தியால் குத்தியிருக்கிறான்.

சென்னின் அப்பா, உயிருக்குப் போராடிக்கொண்டிருக்கும் காதர்பாயை மருத்துவமனைக்குத் தூக்கிச் செல்கிறார். சென்னின் அப்பாவிடம் காதர், "என் மனைவி வீட்டிலிருந்து கிளம்பும்போதே இந்துக்கள் அதிகம் இருக்கும் பகுதிக்கு வேலைக்குச் செல்ல வேண்டாம். சாப்பாடு இல்லை என்றாலும் பரவாயில்லை என்று கெஞ்சினாள். நான்தான் அவள் சொன்னதைக் கேட்கவில்லை. எங்கயாவது வேலை கிடைத்தால் குடும்பம் சாப்பிட கொஞ்சம் பணம் கிடைக்கும் என்றுதான் இங்கு வந்தேன். எல்லாமே தப்பாகிவிட்டது" என்று நொந்துகொண்டே இருந்தார் என்று கூறியதை பிற்காலத்தில் நினைவுகூர்கிறார் சென்.

இந்த நிகழ்வு அமர்த்தியாவை மிகவும் பாதித்திருக்கிறது. "மதவெறி ஒருபக்கம் இருந்தாலும் காதர்பாயின் குடும்பத்திற்குச் சரியாக உணவு கிடைத்திருந்தால் இந்த மாதிரியான இடத்திற்கு அவர் வேலைக்கு வந்திருக்க மாட்டார். வறுமையும், குடும்பத்தின் பசியும் அவரின் இந்த நிலைக்கு மூல காரணம்" என்கிறார் சென்.

இந்த நிகழ்வு சென்னின் மனதை வெகுவாக பாதித்திருக்கிறது. தவிர, வங்கப் பஞ்சத்தில் இலட்சக்கணக்கான மக்கள் புழுக்களைப்போல், பூச்சிகளைப் போல் மடிவதை நேரில் கண்டவர். அவர்களுக்குத் தன்னால் இயன்ற உதவியும் செய்தவர் சென். அவரின் பொருளாதார ஆய்வுகள் வறுமையையும், பஞ்சத்தையும் அடிப்படையாகக்கொண்டவை. வறுமையிலிருந்து மக்களை மீட்பதே அவரின் இலட்சியமாகக் கூட இருந்தது. இப்போதும் அது தொடர்கிறது.

# கறுப்பின பெண் எடிட்டர்!

உலகம் முழுவதும் மரியாதையுடன் உச்சரிக்கும் ஒரு பெயர் டோனி மோரிசன். நாவலாசிரியர், கட்டுரையாளர், எடிட்டர், ஆசிரியர், பேராசிரியர், போராளி என பன்முகங்களுக்குச் சொந்தக்காரர் டோனி. இலக்கியத்துக்கான நோபல் பரிசை வென்ற முதல் கறுப்பின பெண் எழுத்தாளர் இவரே. தவிர, 'ரேண்டம் ஹவுஸ்' என்கிற மாபெரும் பதிப்பகத்தின் முதல் கறுப்பின பெண் எடிட்டரும் டோனியே.

அமெரிக்காவிலுள்ள ஓகியோ மாகாணத்தில் பெப்ரவரி 18, 1931 அன்று ஒரு ஆபிரிக்க - அமெரிக்க குடும்பத்தில் பிறந்தார். அன்றாட வேலை செய்து பிழைப்பை நடத்தும் ஒரு குடும்பம் அவருடையது. டோனிக்கு இரண்டு வயதாக இருந்தபோது அவரது குடும்பம் குடியிருந்த வீட்டுக்கு ஒருவர் தீ வைத்துவிட்டார். விசாரித்ததில் அந்த வீட்டுக்குச் சொந்தக்காரர்தான் வாடகை கொடுக்காததால் தீ வைத்திருக்கிறார் என்பது தெரிய வந்தது. இந்தச் சம்பவம் டோனியை வெகுவாக பாதித்தது. டோனிக்கு அவரது பெற்றோர்கள் நல்ல உடையை வாங்கித்தரவில்லை.





தங்குவதற்கு நல்லதொரு வீட்டைக் கட்டித் தரவில்லை. ஆனால், ஆபிரிக்க - அமெரிக்க நாடோடிக் கதைகளைக் கூறியும், நாட்டுப்புறப் பாடல்களைப் பாடியும் டோனியை வளர்த்தனர்.

அவரின் மனதுக்குள் இலக்கியத்துக்கான விதை இப்படித்தான் தூவப்பட்டது. டோனிக்கு இயல்பாகவே புத்தகத்தின் மீதான ஆர்வம் துளிர்த்தது. ஆறு வயதிலிருந்தே கதைப்புத்தகங்களை வாசிக்க ஆரம்பித்தார். வாசிப்பும், அவரும் அவரைச் சார்ந்த கறுப்பினத்தவர்களும் அனுபவித்த கொடூரங்களும் டோனியை எழுத்தை நோக்கி நகர்த்தின.

வெள்ளையர்களின் ஆதிக்கம் நிறைந்த அமெரிக்காவில் கறுப்பினத்தவர்கள் என்ன மாதிரியான கொடுமைகளையும் பாகுபாடுகளையும் அனுபவித்தார்கள் என்பதை வெள்ளைக்காரர்களும் உணரும்படி அழகான மொழியில் மிக ஆழமாக தனது படைப்புகளில் எடுத்துரைத்தார். 'புலிட்சர்', 'நோபல்' என விருதுகளும் பரிசுகளும் அவரைத் தேடிவந்தன. டோனி மோரிசன் இப்போது உயிருடன் இல்லை என்றாலும், அவரின் எழுத்துக்கு என்றுமே மரணமில்லை.

தமிழன் தர்பார்
இது எங்க ஏரியா

# மாவீரன் நெப்போலியனை எச்சரித்த தீர்க்கதரிசி!

எதிரிகளுக்கு சிம்மசொப்பனமாக விளங்கும் பராக்கிரமசாலி வீரனுக்கும் மனதில் தனது எதிர்காலத்தைப் பற்றிய பீதி கிளம்புவது இயற்கை. அடுத்த எபிசோடில் என்ன நடக்குமோ என்று உள்ளூர நடுக்கம் தோன்றும். இது பிரேக்கிங் நியூஸ் கை நடுக்கமல்ல, இக்கட்டான சூழல் நடுக்கம். பிரெஞ்ச் வீரர் நெப்போலியன், ஒரு சுத்தமான மாவீரர்தான்.

தனது எதிர்காலம் குறித்து தீர்க்கதரிசிகளிடம் ஆலோசனை கேட்பது அவரது வழக்கம். இதில் அவருக்கு மேரி ஆனி அடிலைடு, அடுத்து மர்ம சிவப்பு மனிதர் என இருவர் உதவினர். சிவப்பு மனிதர் நெப்போலியனின் பாதுகாவலர்போல் அவருடனேயே இருப்பார். தன் எதிர்காலம் இந்த இருவரின் வாய்வாக்குகளில்தான் இருக்கிறது என்பது நெப்போலியனின் கொங்க்ரீட் நம்பிக்கை.

1752ஆம் ஆண்டு, நெப்போலியன் தனது நாட்டை விட்டுக் கிளம்பி பிறநாடுகளோடு போர் புரிந்து தனது நாட்டை விஸ்தரிப்பதுதான் அவரது திட்டம். இதற்காக அவர், தனது ஆஸ்தான தீர்க்கதரிசி மேரியின் வீட்டிற்கு கம்பளியைச் சுற்றிக்கொண்டு மரு வைத்துக்கொண்டு மாறுவேடத்தில் சென்றார்.

தன் திட்டத்தை மேரியிடம் கூறியபோது அவள், நெப்போலியன் தன் நாட்டைவிட்டு அச்சூழலில் செல்லக் கூடாது என்று கட்டளையிட்டாள். பிரான்ஸில் இந்த இளம் வீரர் மகத்தான சாதனைகளை எதிர்காலத்தில் நிகழ்த்தப் போகிறார் என்றும், விதவைப் பெண்ணை மணம் செய்து மிகவும் மகிழ்ச்சியோடு வாழ்வார் என்றும், அவர் அரசியலில் நாயகனாவார் என்றும் சொன்னாள்.

அதேசமயத்தில் அவருக்கு ஓர் எச்சரிக்கையை விடுக்கவும் மேரி தவறவில்லை. "நீ நம்பிக்கைத்துரோகம் செய்யத் தொடங்கினால் உனது எதிர்காலம் வீணாகிவிடும் என்பதை மட்டும் மறந்துவிடாதே" என்றாள்.



கலக்கமான மனநிலையில் நெப்போலியன் அங்கிருந்து திரும்புகையில் மேரி, ஷேக்ஸ்பியரின் மாக்பெத் நாடக வரியொன்றை அவருக்குச் சொன்னாள். "நீ இனி மன்னனாக வாழப் போகிறாய்" என்பது அதன் அர்த்தம். 1794ஆம் ஆண்டு மன்னன் இறந்த பிறகு, அவரது மனைவி ஜோஸபின் நெப்போலியனை மணந்துகொண்டாள்.

ஆனால், 1809ஆம் ஆண்டு ஜோஸபினை விவாகரத்து செய்தபின், அவரது செல்வாக்கு படுவேகமாக சரிந்தது. அப்போது பிரான்ஸில் இருந்த இன்னொரு தீர்க்கதரிசி நெப்போலியனைத் தேடி வந்து சந்தித்தார். 1814ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் தேதி சிவப்பு நிற ஆடையில் அரண்மனைக்குள் வந்தவர், உடனே நெப்போலியனைச் சந்திக்க வேண்டும் என்று தடாலடி பேச்சு பேசினார். நெப்போலியனை எடுத்த எடுப்பில் எச்சரித்தார் அவர். இதற்கு முன்பே இரண்டு தடவைகள் அவரை எச்சரித்ததாகவும், இது மூன்றாவது கடைசி எச்சரிக்கை என்றும் சிவப்பு உடை தீர்க்கதரிசி விளக்கினார்.

1799ஆம் ஆண்டு எகிப்து யுத்தத்தின்போது தான் முதலில் எச்சரிக்கை விடுத்ததாகவும் 1809ஆம் ஆண்டு இரண்டாவதாக 'வாக்ராம்' என்ற இடத்தில் நடந்து முடிந்த யுத்தத்தின்போதும் எச்சரிக்கை விடுத்ததாகவும் சொன்னார். அச்சமயத்தில் ஐரோப்பா முழுவதும் கைப்பற்ற 4 ஆண்டுகள்தான் மிச்சமுள்ளன. அதற்குள் இந்த யுத்தத்தை முடித்துக்கொண்டு அதற்குப்பிறகு சமாதான நடவடிக்கைகளில் நெப்போலியன் இறங்கவேண்டும் என அத்தீர்க்கதரிசி நினைவுபடுத்தினார்.

தான் சொன்னவற்றை இன்னும் 3 மாதங்களுக்குள் நிறைவேற்றவில்லை என்றால் "உன் விடயத்தில் எல்லாமே முடிவுக்கு வந்துவிடும்" என்று முடிவாகச் சொல்லிவிட்டார் தீர்க்கதரிசி. ஆனால், அந்த சிவப்பு உடை மனிதரின் பேச்சை நெப்போலியன் அலட்சியப்படுத்தினார். "மூன்று மாதத்திற்குள் எதையும் முழுமையாகச் செய்து விட முடியாது" என்று தீர்க்கதரிசியிடம் நெப்போலியன் வாதிட்டார். ஆனால், தீர்க்கதரிசியோ, நெப்போலியனின் வாதத்தை காது கொடுத்து கேட்கவெல்லாம் ஏது நேரம்? சென்றுவிட்டார்.

அடுத்து வந்த யுத்தங்களில் நெப்போலியனுக்குப் பெரும் சரிவு. படுதோல்வி. அத்துடன் சமாதானத்தக்கும் முயற்சிக்கவில்லை. 1814ஆம் ஆண்டு நெப்போலியன் மன்னர் பதவியிலிருந்து விலக்கப்பட்டு, 1815ஆம் ஆண்டில் நடந்த 'வாட்டர்லூ' போரில் மண்ணைக் கவ்வியது அவரது படை.

போரில் தோற்றுப்போன நெப்போலியன் செயின்ட் எலினா தீவுக்கு நாடு கடத்தப்பட்டு, 1821ஆம் ஆண்டில் அங்கேயே தவித்துப் போய் இறந்ததும் வரலாறு சொல்லும் உண்மைகள். பிரெஞ்சு நாட்டுப் பத்திரிகைகள் அந்த சிவப்பு உடை தீர்க்கதரிசியைப் பற்றி கவர் ஸ்டோரி எழுதின. தீர்க்கதரிசிகளின் வாக்கு காலம் கடந்ததுதான் அல்லவா?

தமிழன் தொடர்கதை

# சூரன் போர்

அத்தியாயம்

பாலா சங்குப்பிள்ளை

ரோஸி கண்களில் பெருகியோடும் கண்ணீருடன் பொலிஸ் நிலையத்தில் நின்றிருந்தாள். கடந்த இரண்டு மூன்று நாட்களாக அவள் பொலிஸ் நிலையமே கதியென்று இருக்கிறாள். அன்று பிறந்த நாள். இரவில் சுடலையப்பனுக்காக தூங்காமல் காத்திருந்தவளுக்கு ஒரு குறுஞ்செய்தி கைபேசிக்கு வந்தது. அப்போது நேரம் இரண்டு மணிக்கு மேலிருக்கும். ''மிக அவசரம். உடனடியாக அல்லிமலை அடிவாரத்துக்கு வரவும். காலம் தப்பினால் காலன் கொண்டுபோய்விடுவான்.''

ரோஸி எந்த கைபேசி இலக்கத்திலிருந்து அந்த குறுஞ்செய்தி வந்திருக்கின்றது என்று பார்த்தாள். அது சுடலையப்பனுடையதுதான். அதற்குப்பின் அவள் தூங்கவேயில்லை. அந்த இரவு நேரத்தையும் பொருட்படுத்தாமல் பித்து பிடித்தவளைப்போல் பொலிஸ் நிலையத்தை நோக்கி அழுதுகொண்டே ஓட, அவளின் அம்மா திரேசா வாசல் கதவை மூடிவிட்டு அவள் பின்னால் ஓடினாள். அங்கே போய் உடனடியாக எதுவும் நடக்கவில்லை. காலையில் சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் வந்தார்கள். விடயத்தைப் பதிவுசெய்தனர். ஆரம்பகட்ட விசாரணையின் பின் அடுத்த நாள்தான் கிட்டத்தட்ட ஐந்து காவலர்கள் உட்பட அல்லிமலை நோக்கிப் பயணப்பட்டார்கள். குறிப்பிட்ட தூரத்துக்குப் பின் வாகனங்கள் போவது மிகக் கடினமாக இருந்தமையால் நடந்தே சற்றுத் தூரம் போனார்கள். ஆனால், எப்படி முயன்றாலும் அல்லிமலையருகே போவதற்குள் நன்றாக இருட்டிவிடும். பின் மறுபடியும் வருவதென்பது இயலாத காரியமாகும். மேலும் ரோஸிக்கு அந்த குறுஞ்செய்தி எங்கிருந்து வந்திருக்கும் என்பதை சரியாக கண்டுபிடிக்க முடியவில்லை.

அவர்கள் பொலிஸ் நிலையத்துக்குத் திரும்பிவிட்டார்கள். ரோஸியை மறுநாள் வரச்சொல்லிவிட்டு இதுவரை அவர்கள் செய்ததை அறிக்கையாக தயாரித்து எழுதினார்கள். அதன் சாராம்சம். சுடலையப்பன் என்பவன் அல்லிமலை அடிவாரத்தில் இருப்பதாகவும் அவனுக்கு ஆபத்து என்றும் உடன் வரும்படியும் குறுஞ்செய்தி இந்த நாளில், இந்த இடத்திலிருந்து வந்தது. நாங்கள் விசாரித்தும் குறிப்பிட்ட இடத்துக்குச் சென்று தேடியும் பார்த்ததில் எந்தவிதமான தடயமும் கிடைக்கவில்லை. எனவே, தடயம் கிடைக்கும்வரை தற்காலிகமாக இந்த பைலை மூடி வைக்க தீர்மானித்ததுடன், அனைத்து தகவல்களும் மேலிடத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அதன் பின் தொடர்ந்து இரண்டு மூன்று நாட்களுக்கு தொடர்ந்து பொலிஸ் நிலையத்துக்கு ரோஸி வந்துபோய்க்கொண்டிருந்தாலும் எதுவும் நடக்கவில்லை.

அது ஒரு ஞாயிற்றுக்கிழமை. இரவு சரியாக ஒன்பது மணி. அல்லிமலைக்கு செல்லும் பிரதான பாதையில் இருந்த குடிசைப்போன்ற அந்த சிறிய வீட்டினுள் சிறிய வெளிச்சத்துடன் நடுவிலிருந்த மேசையின் எதிரெதிரே மாயனும் சுடலையும் அமர்ந்திருந்தனர். மூடப்பட்டிருந்த குடிசையின் வலது பக்கம் முதுகில் தூக்கி செல்லக்கூடிய இரண்டு பெரிய பைகள் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தன. கைக்கு கச்சிதமான இரண்டு நீளமான கத்திகள் கீழே கிடத்தப்பட்டிருந்தன.

அவர்கள் இருவரின் முகங்களும் இறுகிக் கிடந்தன. அதிலும் ஏற்கனவே மோசமான சுடலையின் முகமானது இன்னமும் விகாரமாக இருந்தது.

''ஏய் மாயா, உண்மையிலேயே நாம இரண்டு பேருமே அடிமுட்டாளுங்கடா. இல்லாட்டி அந்த அயோக்கியன் சுடலையானோட பேச்சை கேட்டு இப்படி ஏமாந்துபோயிருப்போமா?''

''நீ சொல்லுறது உண்மை சுடலை. நமக்கு என்ன மாயம், மந்திரம் போட்டானோ தெரியலை. முழுசா அவன் வலையில விழுந்துட்டோம். வேறு யாரோடயோ ஆலோசனையிலத்தான். அவன் நல்ல திறமையா திட்டம் போட்டிருக்கான். தற்செயலா திட்டம் பிழைச்சிடுச்சின்னா நாமத்தான் இதையெல்லாம் செஞ்சோம். தனக்கு எதுவும் தெரியாதுன்னு பொலிஸுக்கு கை காட்டிட்டு பறந்துடலாம் என்று நினைச்சான். அதேமாதிரி அவன் வேற ஆளுங்களோட அல்லிமலையிலத்தான் இருந்தாலும் நான், அவள் மனைவி ரோஸியை நேற்றுக் காலை பார்த்தேன். பொலிஸுலயிருந்து வந்துகிட்டிருந்தா. ஆனா, எந்த வாட்டமோ கவலையோ இல்லை. எல்லாமே திட்டமிட்ட நடிப்பு. அவ புருஷனுக்கு மேல நடிக்கிறா.''

''நீ சொல்றது உண்மைதான். அவனோட கூட்டாளி காளியை காலையில தற்செயலா சந்திச்சப்ப, எங்கே சுடலையான்னு கேட்டதுக்கு, தெரியாதா அவன்தான் போயிட்டானேன்னு எவ்வளவு இலேசா சிரிச்சிக்கிட்டே சொன்னான். எனக்கு எப்பிடி இருந்திருக்கும்.''

''சரி இனி இதையெல்லாம் பேசி வேலையில்லை. நம்ம வேலைய தொடங்குவோம். இப்ப ஆரம்பிச்சாத்தான் சரியா இருக்கும். விடியிறதுக்குள்ள மலையில் ஏறிட்டா அங்கே சுடலையானைக்கூட சந்திக்கலாம். இல்லன்னா நம்ப வேலையெல்லாம் முடிச்சிட்டு கீழே இறங்கினா வாகனத்தோட இதே இடத்துல ஆதவன் தயாரா இருப்பான்.''

அதற்குப் பின் அவர்கள் பேசவில்லை. தோள் பைகளை முதுகில் சுமந்தவாறு நீண்ட வாள், கத்திகளுடன் குடிசையை விட்டு வெளியே வந்தாங்கள். சுற்றும் முற்றும் பார்த்தார்கள். மனித நடமாட்டத்தையோ எந்த வாகனத்தையோ காணவில்லை. விடுவிடுவென வலது புறமாக பிரதான பாதை குறுக்கே இருவரும் பாய்ந்து ஓடினார்கள்.

(தொடரும்)



## மலையகத்தின் சொல்ல மறந்த கதை கோப்பியின் முதல் வீழ்ச்சி

வாய்பேச வழியுமில்ல
கையோங்க தெம்புமில்ல
கோப்பிக்காட்டு
தூருக்குள்ளே
கூனி குறுகி நின்று
காலத்த கடத்துறாங்க...

கொலரா நோவு வந்து
உசுர பறிச்சிக்கிற
கோப்பிக்கூட தப்பவில்ல
வந்துச்சி நோவு ஒன்னு....

தொழிலாளி மக்களோடு
கூடருந்து வாழ்ந்ததினால்
ஒட்டுறவு பாசமிதோ
ஒன்னுமே புரியலியே....

பச்ச எல மஞ்சளாச்சி
வைர கம்பு பட்டுப்போச்சி
மலையாக நின்ன மரம்
மண்ணோட
மண்ணாச்சி...

நம்பி வந்த வெள்ளக்காரே
விம்மலோட நின்னிருந்தா
பரவி வந்த நோயாலே
மாண்டு போனா
தன்னாலே...

மக்களுக்கு செஞ்சி வந்த
பாவத்துக்கு
தண்டனையா
ரட்சகரே யேசு சாமி
வந்திருந்து பாத்தாரோ...

“ஹெமிலியா” என்ற
பேரு நோவோட பேராச்சி
பத்த வெச்ச தீயாக
படர்ந்து தான்
போயிருச்சி...

சிலோனு நாட்டயிங்கே
நிமிர்தியது கோப்பி செய்க
வீழ்ச்சியான பாதையிலே
போய்சேர்ந்த
சோகமென்ன...

ஆண்டாண்டு காலமிங்கே
ஆட்சி நெலமைகளில்
ஆதிக்க செலுத்தியதே
வாசமுள்ள
கோப்பிதானே...

எலிசபெத்து ராணியம்மா
விரும்பியது கோப்பியாமா
சிலோன்னு
கோப்பியின்னா
எல்லாருக்கும்
பிடுச்சிடுமாம்.....

யாரு கண்ணு
பட்டிச்சிங்கோ
இந்த நிலைக்கி என்ன
காரணமோ பழுத்த நல்ல
கோப்பி பாழோ பாழாக
போனதுங்கோ....

தேசங்கள தாண்டிவிட்டும்
சமுத்திரங்கள் தாண்டி
போயும் உலக நாடுகளில்
பரவியது இந்த நோயி...

கோப்பி எல்லாம்
செழிப்பாக இருக்கயிலே
மக்களின் வாழ்க்கையில
செழிப்பு இல்ல...

அழியும் இந்த நேரத்துல
மக்க நிலையை எல்லாம்
சொல்லி தானா
தெரியணுமா

ஆறு மாசோ ஒரு வருசோ
மூணு மாசோ
நாலுமாசோ
இப்படியா தந்த வந்த
சம்பளமும் சரியாக
கிடைக்கவில்ல....

மூணு படி அரிசியோடு
கேப்ப கொடுத்தாங்க
கம்பளி துண்டுக்கூட
இப்போ சரியா
கிடைக்கிதில்ல...

தோட்டம் விட்டு
தோட்டம் விட்டு
மாத்தலாகி போனாலும்
எக்கமான நல்வாழ்க்கை
இன்னமட்டும்
கெடக்கலியே....

(சொல்ல மறந்த கதை
இன்னும் சொல்லப்படும்)

தொடரும்
எம்.ராமதாஸ்
இறம்பொடை

தமிழன் சிறுகதை

# இறைவனின் நாட்டம்

ஜெனீரா தௌபீக் ஹைருல் அமான்

வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பதுபோல் நுஃமான் படிப்பிலும், ஓதலிலும் கெட்டிக்காரன்.

பர்ளு, சுன்னத்துக்களையும் தவறாது செய்து வருவான்.

பெரியோருக்கு மரியாதை செய்வதிலும், உதவி தேவைப்படுவோருக்கு உதவி செய்வதிலும் முன்நிற்பான். இதனால் சிறியோர் முதல் பெரியோர் வரை நுஃமான் மீது மிகுந்த அன்புடன் காணப்பட்டனர்.

நல்லொழுக்கமுள்ளவனுக்கு நுஃமான் சிறந்ததொரு எடுத்துக்காட்டு. அவனைப் புகழாத நாவே இல்லையென்று கூறலாம்.

அவனது வளர்ப்புக்குத் தாய், தந்தையரே முக்கிய காரணமெனலாம். நுஃமானின் தந்தை காதர் ஹஜ் செய்வதை அடிக்கடி நினைவுகூருவார்.

இதனால், நுஃமானின் உள்ளத்தில் சிறுபராயத்திலிருந்து ஹஜ் செய்வதற்கு மிகவும் விருப்பமாக இருந்தது. அவை பற்றி பல கற்பனைகளைச் செய்வான்.

ஊரில் யாராவது ஹஜ் செய்வதென்றால் அவர்களிடம், எனக்கும் அப்பாக்கியத்தைத் தருமாறு துஆ செய்யுங்கள் எனக் கூறுவான். ஆனால், அவர்களிடம் ஹஜ் செய்யும் வசதி வாய்ப்புகளில்லை.

பக்கத்துவீட்டுப் பாகாத்தும், அவர் மனைவியும் ஹஜ் செய்வதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். ஆதலால், பாகாத்தின் வீட்டில் விருந்துபசாரம் தடல்புடலாகக் காணப்பட்டது. சமையல் வாசனை மூக்கைத் துளைத்தது.

வீதியில் நடமாடுவோரின் நாவில் எச்சில் ஊறியது. விருந்துக்குத் தனவந்தர்கள் அழைக்கப்பட்டனர். தரமறிந்து உணவுகள் பரிமாறப்பட்டன. பக்கத்து வீட்டு ஏழைகளும், உடன்பிறப்புகளும் ஒதுக்கி வைக்கப்பட்டனர்.

பாகாத்தின் இச்செயற்பாடுகள் ஊரையே வெறுக்க வைத்தன. போகுமிடமெல்லாம் நெஞ்சில் வேல் பாய்ப்பதுபோல் வார்த்தைகள் குத்திக் குதறின. பாகாத்திற்கு வெட்கம் தாங்க முடியல.

புனித மிகு இடத்துக்குச் செல்லவேண்டிய நாம் இவ்வாறு நடந்து கொண்டது பிழைதான் என்பதைச் சுற்றிக் காட்டியது.

இவ்வாறிருக்கையில், ஹஜ் செய்யும் காலமும் நெருங்கியது. பாகாத்தின் ஹஜ் முகவர் தலைமறைவாகினார். எங்கே தேடுவது..? ஊரிலே தலை காட்ட முடியாது பாகாத்தும், மனைவியும் வீட்டினுள் அடைந்து கிடந்தனர்.

ஊர் கைகொட்டிச் சிரித்தது. சும்மா சப்பும் வாய்க்கு அவல் கிடைத்தால் கேட்கவும் வேண்டுமா?

ஒவ்வொரு வருடமும் ஹஜ் செய்வதற்கு முயற்சித்தும் முடியாமல் போனது.

இதனால் பெரிதும் மனமுடைந்தனர்.

அடுத்தவன் துன்பத்தில் இன்பம் காணக் கூடாது. நுஃமான் ஆறுதல் கூறினான். அல்லாஹ் மிகவும் இரக்க மானவன். அவனிடம் அழுது மன்றாடுங்கள். அல்லாஹ் உங்களுக்கும் ஹஜ் செய்யும் பாக்கியத்தை தருவான். உங்க பொறுமையை அல்லாஹ் சோதிக்கிறான். கைவிட மாட்டான். பொறுமையாளருடன் அல்லாஹ் இருக்கிறான்.

நுஃமானின் அன்பான வார்த்தைகள், பாகாத்துக்கு நெஞ்சில் பால் வார்த்ததுபோலிருந்தது.

அன்றிலிருந் ஏழைகளிடத்தும், உடன்பிறப்புகளோடும் நெருங்கிப் பழகினார்கள். பணமிருந்தால் மட்டும் ஹஜ் செய்யலாது. நல்ல குணமும் இருக்க வேண்டும். அல்லாஹ்விடத்தில் பயபக்தியும் வேண்டுமென்பதை உணர்ந்துகொண்டனர்.

நுஃமானின் தந்தை மிகவும் பேணுதலானவர். ஹஜ் செய்வதற்காகக் காணித்துண்டொன்றை விற்றெடுத்து ஹஜ்ஜுக்கு அனுப்புவதற்காக முடிவு செய்தனர். உடன்பிறப்புகள், சொந்தங்கள், அக்கம் பக்கத்தவர், தெரிந்தவர், தெரியாதவர் எனப் பிழை பொறுக்கச் செய்தார்.

ஹஜ் செய்யும் காலம் நெருங்கியது. காதர் திடீரென ஏற்பட்ட நெஞ்சுவலியால் மௌத்தானார். ஊரும், உறவும் சோகத்தில் ஆழ்ந்தன. காதரின் இழப்பை ஈடு செய்யவியலாது தவித்தனர்.

காதரின் குடும்பம் ஒன்றுகூடி மசூறா செய்தது. நுஃமானை ஹஜ்ஜுக்கு அனுப்புவதாக முடிவு எடுத்தனர்.அதன்படியே நுஃமான் ஹஜ் செய்தார். அல்லாஹ் தான் விரும்பியவரையே அழைப்பான். இறைவன் கொடுக்க நினைத்தால், கூரையைப் பிய்த்துக்கொண்டும் கொடுப்பான்.

யாருமே எதிர்பாராத விதமாக நுஃமான் ஹஜ் செய்வதைக் கண்டு வியந்தனர். ஹஜ் செய்வதானது வெறும் பொழுதுபோக்கல்ல. அல்லாஹ்வின் நாட்டமும் வேண்டும். இது எல்லோரது வாழ்விலும் நல்லதொரு படிப்பினையாக அமைந்தது.



# திருமண வாழ்த்துகள்




VIVAHA விவாஹா

# விவாஹா

## திருமணத்துக்கு முன்னர் உணவுக் கட்டுப்பாடுகள்

திருமண திகதி நெருங்கிக்கொண்டிருக்கும் பரப்பரப்பான நாட்களுக்கு இடையே மணமகள், எளிமையான, நிலையான உணவுத் திட்டத்தை கடைப்பிடிப்பது நல்லது.

திருமணம் நிச்சயம் செய்யப்பட்ட உடனேயே மணமகன் - மணமகள் வீடு விழாக்கோலம் பூண்டுவிடும். திருமண ஆடை, அலங்கார ஷொப்பிங், வரவேற்பு, உபசரிப்புகள், நெருங்கிய உறவினர்கள் அழைப்பு, அழைப்பிதழ் அச்சடிப்பு என திருமணப் பணிகள் சுறுசுறுப்பு அடைந்துவிடும். அதுவே இயற்கையான அழகை பராமரிக்க பக்கபலமாக அமைந்திருக்கும். திருமணக் கோலத்தில் பார்க்கும்போது அழகுக்கு அழகு சேர்க்கும்.

***கடைப்பிடிக்க வேண்டியவை***



1. தினமும் இரவு 7.30 மணிக்குள் இரவு உணவை சாப்பிட்டுவிட வேண்டும்.

2. ஒவ்வொரு நாளும் குறைந்தபட்சம் 45 நிமிடங்கள் உடற்பயிற்சி செய்யவேண்டும். அதில் 30 நிமிட நடைப்பயிற்சி கண்டிப்பாக இடம்பெற வேண்டும்.

3. மூன்று மணிநேரத்திற்கு ஒருமுறை தவறாமல் சிறிதேனும் ஏதாவதொரு உணவை சாப்பிட வேண்டும்.

4. இதுநாள் வரை துரித உணவுகள், நொறுக்குத் தீனிகளை விரும்பி சாப்பிட்டிருக்கலாம். ஆனால், திருமணத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்னர் இவற்றையெல்லாம் அறவே தவிர்த்துவிட வேண்டும். முழு கோதுமை, ராகி, ஓட்ஸ், கோதுமை பிரெட், பாஸ்தா போன்ற கார்போஹைட்ரேட் கொண்ட உணவுகளை சேர்த்துக்கொள்ளலாம். புரதம், பச்சை இலை காய்கறிகள், சலட்டுகள் உணவில் தவறாமல் இடம்பெற வேண்டும். வெள்ளை அரிசி, அரிசி மாவு, மைதா, வெள்ளை சர்க்கரை போன்ற வெள்ளை நிற உணவுப் பதார்த்தங்களை கூடுமானவரை தவிர்த்துவிட வேண்டும்.

5. அவகொடா, நட்ஸ் போன்ற ஆரோக்கியமான கொழுப்புப் பொருட்களை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள். குறிப்பாக பாதாம், அக்ரூட் பருப்புகள், ஆளி விதை, சியா விதைகள், சூரியகாந்தி விதைகள் போன்றவை ஒமேகா 3 மற்றும் ஒமேகா 6 கொழுப்பு அமிலங்களைக் கொண்டுள்ளன. அவை சருமம் மற்றும் முடி ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவும் கொழுப்புகளாக கருதப்படுகின்றன.

6. கீரைகளை மறந்துவிடாதீர்கள். உணவின் ஒரு பகுதியாக ஆன்டிஆக்ஸிடென்ட்கள் நிரம்பிய பச்சை இலை காய்கறிகளைச் சாப்பிடுங்கள்.

7. தினமும் 8 முதல் 10 டம்ளர் தண்ணீர் பருகுவதை இலக்காக நிர்ணயித்துக்கொள்ள வேண்டும். எப்போதும் கைவசம் தண்ணீர் போத்தல் வைத்திருப்பது நல்லது. எல்லா நேரங்களிலும் உடலில் நீர்ச்சத்தை தக்கவைத்திருக்க வேண்டும். இளநீர், அதிக நீர்ச்சத்தை உள்ளடக்கிய பழங்கள், காய்கறி ஜூஸ், எலுமிச்சை ஜூஸ் பருகலாம். அப்படி நீரேற்றமாக வைத்துக்கொள்வது உடலிலுள்ள அனைத்து நச்சுக்களையும் வெளியேற்ற உதவும். பொலிவான சருமம், அழகான நகங்கள், பளபளப்பான கூந்தல் போன்ற அம்சங்களை தக்க வைத்துக்கொள்ளவும் உதவும். உடல் எடை குறைவதற்கும் வித்திடும்.

8. மனதை எப்பொழுதும் மகிழ்ச்சியாக வைத்திருங்கள். இனிப்பு மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளை ஒதுக்கி வையுங்கள். கேக்குகள், பிஸ்கெட், பதப்படுத்தப்பட்ட சாறு போன்ற கொழுப்பு உணவுகளை தவிருங்கள்.

***தினமும் பின்பற்ற வேண்டியவை:***

காலையில் எழுந்தவுடன் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான நீரை பருக வேண்டும். பின்பு சிறிதுநேரம் கழித்து ஊறவைத்த 4 - 5 பாதாம், ஒரு வாழைப்பழம் சாப்பிடலாம். இஞ்சி, எலுமிச்சை கலந்த நீர் அல்லது சீரகம் ஊறவைக்கப்பட்ட நீர் பருகலாம். தண்ணீரில் ஊறவைத்த லவங்கப்பட்டையை சிறிதளவு சாப்பிடலாம். கிரீன் ரீ பருகலாம்.

***காலை உணவு:*** இட்லி, காய்கறிகள் கலந்த சாம்பார் அல்லது ஓட்ஸ், உப்புமா சாப்பிடலாம். ஒரு டம்ளர் ஆரஞ்சு ஜூஸ் பருகலாம். முட்டையை வேகவைத்தோ, ஆம்லேட்டாகவோ சாப்பிடலாம். சிறிதளவு பப்பாளி அல்லது வாழைப்பழம் சாப்பிடலாம்.

***காலை 11 மணி:*** சுண்டல் / வேர்க்கடலை / முளையிட்ட தானியங்களால் செய்யப்பட்ட சாலடுகள் இவற்றுள் ஏதாவது ஒன்றை சாப்பிடலாம். கீரை சாலட்/பழ சாலட்டும் சாப்பிடலாம். சாலட்டுகளுடன் வெங்காயம், தக்காளி, வெள்ளரி, எலுமிச்சைச் சாறு, உப்பு, மிளகுத்தூள் தூவி அலங்கரித்துக்கொள்ளலாம்.

***மதிய உணவு:*** சிறிதளவு அரிசி சாதம் அல்லது சப்பாத்தி சாப்பிடலாம். வெந்தயக் கீரை, முருங்கை இலையில் தயாரான குழம்பை சேர்த்துக்கொள்ளலாம். தயிர் சாதம் அல்லது தயிர் கலந்தும் சாப்பிடலாம்.

***மாலை நேர சிற்றுண்டி:*** பழ சாலட் / நட்ஸ் / ஒரு டம்ளர் மோர் / வேர்க்கடலை சாலட் ருசிக்கலாம்.

***இரவு:*** அசைவம் சாப்பிட விரும்புபவர்கள் சாப்பாத்தியுடன் கோழிக் குழம்பு, கிரில் சிக்கன் சாப்பிடலாம். சைவ பிரியர்கள் சப்பாத்தியுடன் பருப்புக் குழம்பு, சால்ஜி மற்றும் காய்கறி சாலட் சேர்த்துக்கொள்ளலாம்.

திருமண ஏற்பாட்டில் கடைசி நேரங்களில் செய்யும் சிறு தவறுகள் மன அழுத்தத்தை ஏற்படுத்தலாம். அதற்கு இடம் கொடுக்காமல் புன்னகையுடன் காட்சியளியுங்கள். ஊட்டச்சத்தியல் நிபுணர்களின் ஆலோசனைப்படி சீரான உணவுப்பழக்கத்தையும், வழக்கமான உடற்பயிற்சியையும் பின்பற்றுவது திருமணத்திற்கு பிறகும் உடல் எடையை சீராக பராமரிக்க உதவும்.

***சருமத்துக்குப் பிரகாசம் சேர்க்கும் பொருட்கள்:*** திருமணத்திற்கு முன்பு ஒளிரும் சருமத்தைப் பெறுவதற்கு அவசியம் சாப்பிட வேண்டிய ஐந்து உணவுகள்:

***பீட்ரூட்:*** பீட்ரூட்டிலுள்ள அழற்சி எதிர்ப்புப் பண்புகள், விற்றமின்கள் மற்றும் தாதுக்கள் முகப்பருவை தடுக்கும் தன்மை கொண்டவை. மேலும் சருமத்திற்கு பளபளப்பை ஏற்படுத்திக்கொடுக்கும். தினமும் ஒரு டம்ளர் பீட்ரூட் ஜூஸ் பருகி வந்தால் உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றிவிடும். இரத்தத்தையும் சுத்திகரிக்கும் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

***மாதுளை:*** இது மிருதுவான, குழந்தை போன்ற மென்மையான சரும பொலிவை ஏற்படுத்திக் கொடுக்கும். மாதுளை பழத்தை அப்படியே சாப்பிடலாம். ஜூஸாக தயாரித்தும் ருசிக்கலாம்.

***பாதாம்:*** இதில் விற்றமின் ஈ சத்து நிரம்பியுள்ளது. சருமத்தை இளமையாக வைத்திருக்கும் தன்மை கொண்டது.

***தக்காளி:*** இதிலுள்ள ஆன்டி ஆக்சிடெண்ட் லைகோபீன் சருமம் வயதாவதை தடுக்கக்கூடியது. சருமத்திற்கு இயற்கையான பிரகாசத்தையும் அளிக்கும். மேலும் தக்காளியிலுள்ள அமில தன்மையானது, கரும் புள்ளிகள், பருக்களை விரட்டியடிக்கும் சக்தி கொண்டது.

***ஸ்ட்ரோபெர்ரி:*** இது சரும நிறத்தை மேம்படுத்தும் தன்மை வாய்ந்தது. தோல் சுருக்கங்களைக் குறைக்கவும் உதவி செய்யும்.

## மிகவும் விசுவாசமான மனைவியாக இருக்கக்கூடிய 4 ராசி பெண்கள்

திருமண வாழ்க்கை ஆயிரம் காலத்துப் பயிர் என குறிப்பிடக் காரணம், திருமண வாழ்க்கை சிறப்பாக இருந்தால்தான் அவர்கள் அன்றாட வேலைகளைக் கூட முறையாக செய்ய முடியும். ஒவ்வொரு குடும்பமும் சிறப்பாக செயற்பட்டால் சமுதாயமும், நாடும் வளரும். எந்த ராசி பெண்கள் மிகவும் விசுவாசமாக தன் கணவருடன் செயல்படுவார்கள் என்பதை தெரிந்துகொள்வோம்.

அனைவருக்கும் ஒரே மாதிரியான வாழ்க்கை அமைந்து விடுவதில்லை. எப்படிப்பட்ட சூழலையும் சமாளித்துச் செல்லக்கூடிய வாழ்க்கைத்துணை சிலருக்கும், சிறிய குறை, சிறிய விடயத்தையும் பெரியதாக பார்க்கக்கூடிய துணை சிலருக்கும் அமைவது வழக்கம். சில ஆண்கள் தங்களுக்கு அமைந்த மனைவியை நினைத்து மிகவும் பெருமைப்படுவார்கள்.

***கடக ராசி பெண்கள்***

கடக ராசி பெண்கள் பொதுவாக மிகவும் இரக்கக் குணம் கொண்டவர்கள். உறவுகளை அனுசரித்துச் செல்லக்கூடியவர்கள். தங்கள் காதல் மற்றும் திருமண உறவுகளில் மிகவும் விசுவாசமானவர்களாகவும் தமது சுய வாழ்க்கையில் மட்டுமல்லாமல், திருமண வாழ்க்கையிலும் மிகவும் நேர்மையானவர்களாகவும் செயல்படுவார்கள். தங்கள் வாழ்க்கைத்துணையிடம் பொய் சொல்ல மாட்டார்கள்.

***துலாம் ராசி பெண்கள்***

துலாம் ராசி பெண்கள் மிகவும் எளிமையான குணமும், ஆளுமை நிறைந்தவராகவும் இருப்பார்கள். தன் துணையை ஒருபோதும் எந்தவொரு கடின சூழலிலும் தனியாக விடுவதில்லை. அதேபோல் தங்களின் விருப்பங்களைத் துணையின் மீது அதிகமாக திணிப்பது இல்லை. தராசு போல் பணியிடம், வீடு என இரண்டையும் சிறப்பாக நிர்வகிப்பார்கள். ஒருபோதும் கணவரை விட்டுக் கொடுக்காத நபராக இருப்பதால் இந்த ராசி பெண் அமைந்தால் வாழ்க்கை இனிமையாக இருக்கும்.

***மகர ராசி பெண்கள்***

மகர ராசியைச் சேர்ந்த பெண்கள் தங்கள் உறவுகளில் மிகவும் விசுவாசமானவர்களாக இருப்பார்கள். இந்த ராசி பெண்கள் தாங்கள் விரும்பியவரையே திருமணம் செய்துகொள்வதாக நம்புகின்றனர். திருமணத்தின்போது வாழ்க்கைத்துணையை தேர்ந்தெடுக்கும் நேரத்தில், தன் விருப்பத்தை தெரிவிக்க தயங்குவதில்லை. இவர்களிடம் உள்ள நல்ல விடயம் என்னவென்றால் இவர்கள் தேவையற்ற ஆசைபடமாட்டார்கள். மேலும் தன் தேவையற்ற ஆசைகளை தன் துணை மீது திணிக்க மாட்டார்கள். இந்த ராசி பெண்கள் கிடைப்பது பாக்கியம்.

***மீன ராசி பெண்கள்***

மீன ராசிப் பெண்கள் மிகவும் அக்கறையுள்ளவர்களாகவும், சற்று உணர்ச்சிவசப்படக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். இவர்களின் துணையுடனான உறவு மிகவும் இனிமையானதாக இருக்கும். கடினமான நேரங்களில் துணையை சிறப்பாக ஆதரிப்பார்கள். வாழ்க்கையின் எந்தவொரு சூழலிலும், திருப்பத்திலும், தன் துணைக்கு தோளோடு தோள் சேர்த்து வலுதரக்கூடியவராக இருப்பார்கள். இவர்கள் மிகவும் அனுசரித்துப் போகக்கூடியவராக இருப்பதால், துணையுடன் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்துவார்கள்.

***மற்ற ராசி பெண்கள் :***

மற்ற ராசி பெண்கள் விசுவாசமான நபர்களாக இருக்கமாட்டார்கள் என்பது இல்லை. மேலே குறிப்பிட்ட ராசி பெண்கள் மற்றவர்களை விட சற்று கூடுதல் பொறுப்புடனும், விசுவாசமானவர்களாகவும் இருப்பார்கள்.

## திருமணத்தின்போது தவிர்க்க வேண்டியவை :

* மல மாதத்தில் திருமணம் நடத்தக் கூடாது. ஒரே மாதத்தில் இரண்டு அமாவாசை அல்லது இரண்டு பௌர்ணமி வந்தால் அதை 'மல மாதம்' என்கிறோம்.

* சித்திரை, வைகாசி, ஆனி, ஆவணி, தை, பங்குனி தவிர மற்ற மாதங்களில் திருமணம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

* சுக்ல பட்ச காலத்திலேயே, அதாவது வளர்பிறை காலத்திலேயே திருமணத்தை நடத்த வேண்டும்.

* புதன், வியாழன், வெள்ளி போன்ற சுப ஆதிபத்தியம் உடைய கிழமைகளே திருமணம் நடத்துவதற்கு மிகவும் சரியான நாட்களாகும். மற்ற கிழமைகள் திருமணம் நடத்துவதற்கு ஏற்ற காலம் அல்ல.

* ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், தனுசு, மீனம் ஆகிய சுப லக்னங்களில் மட்டுமே திருமணம் நடத்த வேண்டும்.

* துதிவிதியை, திரிதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, திரியோதசி ஆகிய சுப திதிகள் தவிர மற்ற திதிகளில் திருமணம் நடத்துவதை தவிர்க்க வேண்டும்.

* முகூர்த்துக்காக குறித்த நாளில் வரும் முகூர்த்த லக்னத்திற்கு ஏழாம் இடம் சுத்தமானதாக இருக்க வேண்டும்.

* அக்னி நட்சத்திரம், மிருத்யூ பஞ்சகம், கசரயோகங்கள் போன்ற காலகட்டத்தில் திருமணம் நடத்தக் கூடாது.

* திருமணத்தின்போது குரு, சுக்கிரன் போன்ற சுப கிரகங்கள் திருமண லக்னத்துக்கும், மணமக்களின் ஜனன ராசிக்கும் எட்டாம் வீட்டில் இடம்பெற்றிருக்கக் கூடாது.

* திருமணநாள் மணமக்களின் சந்திராஷ்டம தினமாக இல்லாமல் இருப்பது மிக மிக முக்கியமானதாகும்.

* மணமக்களின் ஜனன நட்சத்திர நாளிலும் 3, 5, 7, 12, 14, 16, 21, 23, இரண்டாவதாக வரும் நட்சத்திர தினங்களிலும் திருமணம் நடத்தக் கூடாது.

* மணமக்களின் பிறந்த திகதி அல்லது கிழமைகளிலும் திருமணம் நடத்தக் கூடாது.

## வர்ணப் பொருத்தம் என்றால் என்ன ?



திருமணத்திற்கு 10 பொருத்தங்களில் வர்ணம் என்பது குணமாக மதிப்பிடப்படுகிறது. வர்ணப் பொருத்தம் என்பது வேலை அல்லது தொழிலில் ஒருவரின் நிலையை வலியுறுத்துகிறது. ஒரு நல்ல வர்ணப் பொருத்தம் என்பது, தம்பதிகள் தங்கள் திருமண வாழ்க்கையைத் தொழில் வாழ்க்கையுடன் இணைத்து வாழ்வதைக் குறிக்கிறது.

இங்கு வர்ணப் பொருத்தம் என்பது ஆண் மற்றும் பெண்ணின் ஜாதியையும் குறிக்கும். இது சமூகத்தில் பேசப்படும் ஜாதி முறையல்ல, இது ஜனன ராசியின் அடிப்படையிலான ஜாதி.

***பிறந்த ராசியை அடிப்படையாகக்கொண்ட வர்ணம் என்றால் என்ன?***

பொதுவாக ஜோதிடத்தின்படி, அனைத்து ராசிகளும் வெவ்வேறு வர்ணங்களின் கீழ் குழுவாக உள்ளன. அதன்படி, மீனம், கடகம் மற்றும் விருச்சிகம் அந்தணர் வர்ணத்தைச் சேர்ந்தவை. தனுசு, மேஷம் மற்றும் சிம்மம் ஆகியவை ஷத்திரிய வர்ணத்தைச் சேர்ந்தவை. மகரம், ரிஷபம் மற்றும் கன்னி ஆகியவை வைஷ்ண வர்ணத்தைச் சேர்ந்தவை, கும்பம், மிதுனம் மற்றும் துலாம் ஆகியவை சூத்திர வர்ணத்தைச் சேர்ந்தவை.

***வர்ணப் பொருத்தம்***

வர்ணப் பொருத்தம் பார்க்கும்போது பெண்ணை விட ஆணின் சந்திரப்பார்வை அதிகமாக உள்ளதா என்று பார்க்க வேண்டும். அப்படியானால், திருமண பொருத்தம் சிறப்பாக கருதப்படுகிறது

வர்ணப் பொருத்தம் நன்றாக இருந்தால்தான் திருமணமான தம்பதியர் வீடு மற்றும் தொழில் விவகாரங்களை நிர்வகிப்பது போன்ற காரியங்களில் ஈடுபடுவதில் இணைந்து செயல்படுவார்கள். இல்லையெனில் ஒருவருக்கொருவர் வாக்குவாதம் மற்றும் ஒற்றுமையில்லாத நிலை நீடிக்கும்.

# பிசியோ இல்லாமல் தள்ளாடிய பாக். அணிக்கு

# தோள் கொடுத்த தமிழன்

ஆசியக் கிண்ண ஹொக்கி சம்பியன்ஷிப் தொடரில் ஆடுவதற்காக சென்னை வந்திறங்கிய பாகிஸ்தான் ஹொக்கி அணிக்கு தக்க சமயத்தில் உதவிக்கரம் நீட்டினார் இந்தியத் தமிழர். 2023ஆம் ஆண்டுக்கான ஆசிய ஹொக்கி சம்பியன்ஷிப் தொடர் கடந்த 3ஆம் திகதி ஆரம்பமாகி 12ஆம் திகதி நிறைவுபெற்றது.






விசா பிரச்சினை காரணமாக பிசியோதெரபிஸ்ட் இல்லாமல் இந்தியா வந்திறங்கியது பாகிஸ்தான் அணி. பிசியோ இல்லாமல், போட்டியிலேயே பங்கேற்க முடியாத சூழல். பல மாத கால வீரர்களின் உழைப்பு கேள்விக்குறியானபோது, அவர்களின் கவலைகளுக்கு மருந்தளித்திருக்கிறார் இந்தத் தமிழர். யார் அவர்?

குறித்த தொடரில் பங்கேற்பதற்காக அடாரி வாகா எல்லை வழியாக ஜூலை 31ஆம் திகதி இந்தியாவுக்குள் வந்த பாகிஸ்தான் ஹொக்கி அணி, பிறகு அங்கிருந்து விமானம் மூலம் சென்னை சென்றடைந்தது. கடைசி நேரத்தில் ஏற்பட்ட விசா பிரச்சினையால் பாகிஸ்தான் ஹொக்கி அணியின் பிசியோதெரபிஸ்ட்டால் இந்தியாவுக்குள் நுழைய முடியவில்லை.

**பிசியோதெரபிஸ்ட் ஏன் அவசியம்?**

எந்தவொரு விளையாட்டாக இருந்தாலும் ஒவ்வொரு அணியும் தங்களுக்கென பிசியோதெரபிஸ்டை வைத்துக்கொள்வர். ஒவ்வொரு போட்டியும் எந்தளவுக்கு முக்கியமோ, அதேபோல் அதில் பங்கேற்கும் வீரர்களின் உடற்தகுதியும் முக்கியமான விடயம். வீரர்களின் உடல்நிலை, அவர்களுக்கு காயம் ஏற்படும்போது தகுந்த சிகிச்சையளிப்பது, உடல் தகுதியை மேம்படுத்துவது உள்ளிட்டவை பிசியோதெரபிஸ்ட்களின் முக்கிய பணியாகும். சர்வதேச தொடர்களில் பிசியோதெரபிஸ்ட் இருந்தால் மட்டுமே ஒரு அணியால் போட்டிகளில் பங்கேற்க முடியும்

கடைசிநேரத்தில் தங்களின் பிசியோதெரபிஸ்ட்டை பாகிஸ்தான் அணியால் அழைத்து வர முடியாமல் போனது அந்த அணிக்கு நெருக்கடியாக மாறியது. இது தமிழ்நாடு ஹொக்கி கூட்டமைப்பின் கவனத்திற்கு வரவே, தமிழ்நாடு ஹொக்கி அணிக்கு பரீட்சயமான ராஜகமலை பாகிஸ்தான் அணிக்கு அறிமுகம் செய்துவைத்தது.

உடனடியாக பாகிஸ்தான் அணியின் மேலாளர், பயிற்சியாளர் உள்ளிட்டோர் ராஜகமலை சென்னையிலேயே நேர்காணல் செய்தனர். தனது வேலைகள் குறித்து எடுத்துரைத்த ராஜகமலை தங்கள் அணியின் பிசியோவாக இறுதி செய்தது பாகிஸ்தான் அணி.

**யார் இந்த ராஜகமல்?**

தமிழ்நாட்டின் தென் பகுதியில் அமைந்துள்ள திருச்செந்தூரில், பால்குளம் எனும் கிராமத்தைப் பூர்வீகமாகக்கொண்டவர் ராஜகமல். சொந்த ஊரிலும், சென்னையிலும் படிப்பை முடித்த ராஜகமல், 2016 முதல் பிசியோதெரபிஸ்டாக பணி செய்து வருகிறார்.




தொடக்கத்தில் சிறியளவிலான விளையாட்டுத் தொடர்களில் பிசியோவாக பணியாற்றிய அவர், 2018இல் முதல் தர கிரிக்கெட் போட்டி களுக்காகவும் வேலை செய்தார். 2019இல் தமிழ்நாடு ஹொக்கி அணியின் பிசியோவாக ஒப்பந்தமானார்.

இதுதவிர, 2019 முதல் தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் விளையாடிவரும் நெல்லை ரோயல் கிங்ஸ் அணியின் பிசியோவாக வேலை செய்து வருகிறார்.

''திடீர்னுதான் அழைப்பு வந்துச்சு. விசா பிரச்சினையால பாகிஸ்தான் டீமோடு பிசியோவும் அவரது அசிஸ்டண்டும், கடைசி நேரத்தில் வர முடியாம போச்சு. பாகிஸ்தான் கோச்சும் மேனேஜரும் என்னைக் கூப்பிட்டு பேசுனாங்க. நான் செஞ்ச வேலைகள் பற்றி எடுத்துச் சொன்னேன். அவங்களுக்கு ரொம்ப பிடிச்சுப்போச்சு'' என்றார் ராஜகமல்.


பாகிஸ்தான் ஹொக்கி அணி கேப்டனுடன் ராஜகமல் (இடது)

பாகிஸ்தான் அணியோடு நெருக்கமாக பணியாற்றுகிறீர்களே, சென்னை குறித்து என்ன சொல்கிறார்கள் என ராஜகமலிடம் கேட்கப்பட்டது,

''சென்னை அவங்களுக்கு ரொம்ப பிடிச்சுருக்கு. 16 வருஷம் கழிச்சு இங்க வந்துருக்காங்க. இங்க உள்ள உணவு, விருந்தோம்பல், ரசிகர்களுடைய வரவேற்பு எல்லாமே ரொம்ப நல்லா இருக்குனு சொல்லிருக்காங்க. உணவு விஷயம் குறித்து நிறைய பேசியிருக்கோம். பிரியாணி நல்லா சாப்பிடுறாங்க. எங்க ஊர்லையும் பிரியாணிதான் பேமஸ்னு சொல்லிருக்காங்க. பிரியாணி தவிர்த்து, பில்டர் காப்பி, மசால் தோசையும் இங்க கிடைக்கிற மற்ற நல்ல உணவுகளையும் சாப்பிட்டு பார்க்குறாங்க. பாகிஸ்தானியர்களோடு பேசும்போது ஆங்கிலத்துல பேசுவேன். புரிஞ்சுப்பாங்க. மொழி ஒரு பிரச்சினையா இல்ல'' என்கிறார் ராஜகமல்.

எனக்கு டீம்தான் முக்கியம். வீரர்கள் முழு உடற்தகுதியோட விளையாடணும். என் வேலைகளில் சில சவால்கள் இருக்கு. சில வீரர்களுக்கு காயமும் ஏற்பட்டிருக்கு. எல்லாத்தையும் நான் சமாளிச்சு அவங்கள தயார்பண்ணனும் என்கிறார் ராஜகமல்.

பாகிஸ்தான் அணியில் தமிழரின் பங்களிப்பு குறித்து இந்திய ஹொக்கி சம்மேளனத்தின் பொருளாளரும் தமிழ்நாடு ஹொக்கி கூட்டமைப்பின் தலைவருமான சேகர் மனோகரனிடம் பேசப்பட்டது.

பாகிஸ்தான் அணிக்கு பிசியோ இல்லாததால நம்மகிட்ட உதவி கேட்டாங்க. நம்மள நம்பி நம்ம ஊருக்கு மேட்ச் ஆட வந்துருக்காங்க. நாமதான அவங்களுக்கு ஏதும்னா செஞ்சி குடுக்கணும் என்றார் சேகர் மனோகர்.

ராஜகமல் பற்றி பாகிஸ்தான் டீம்கிட்ட சொன்னோம். அவங்களுக்கும் பிடிச்சுப் போச்சு. ராஜகமலும் நல்ல பண்றார். அவ்ளோ பயிற்சி செஞ்சிட்டு மேட்ச் விளையாட வர்றாங்க. கடைசி நேரத்தில் பிசியோ இல்லைன்னா ரொம்ப கஷ்டம். இப்போ பாகிஸ்தான் நம்ம பண்ண உதவியினால சந்தோஷப்பட்டாங்க. இது ஒரு நல்ல விடயம் என்கிறார் சேகர் மனோகரன்.

**ராஜகமல் கிடைத்தது அதிர்ஷடம்**

ராஜகமல் குறித்து சென்னையில் ஊடகங்களிடம் பேசிய தற்போதைய பாகிஸ்தான் ஹொக்கி அணியின் பயிற்சியாளர் மொஹமட் சக்லைன், ராஜகமல் தனது வேலைகளை மிகச் சிறப்பாகவே கையாள்கிறார். ஒரு உலகத்தரம் வாய்ந்த பிசியோ எங்களுக்கு கிடைத்திருக்கிறார். தக்க சமயத்தில் அவர் எங்களுக்கு கிடைத்தது அதிர்ஷடமானது என குறிப்பிட்டார்.

**நன்றி – பி.பி.சி. தமிழ்**


தற்போது விற்பனையில்...

புலமைப்பரிசில் வழிகாட்டி




நுண்ணறிவு நுட்பங்களும் விளக்கங்களும்

வினாத்தாள் I, II வழிகாட்டி செயலட்டைகள்

மாதிரி வினாத்தாள்

தொடர்புகளுக்கு: 0741684643

விலை ரூ.60 மட்டுமே


# 9ஆவது பீபா மகளிர் உலகக்கிண்ண சம்பியனாவது யார்?

## முதல் மகுடத்தை நோக்கி ஸ்பெயின் - இங்கிலாந்து இன்று மோதல்

(ஏ. அகீல் சிஹாப்)




9ஆவது பீபா மகளிர் உதைபந்து உலகக்கிண்ணத் தொடரின் சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப் போட்டியில் இன்று ஸ்பெயின் - இங்கிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி பி.ப. 3.30 மணிக்கு அவுஸ்திரேலியாவின் சிட்னி ஒலிம்பிக் பார்க்கில் அமைந்துள்ள அரங்கில் ஆரம்பமாகிறது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் 2-1 என்ற கணக்கில் சுவீடனை வீழ்த்தி முதல் அணியாக இறுதிப் போட்டிக்கு ஸ்பெயின் அணி முன்னேறியது. இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை 1-3 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இங்கிலாந்து அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இங்கிலாந்து 2022இல் யூரோ சம்பியனாகிய பின்னர் இரண்டாவது பெரிய போட்டியின் இறுதிப் போட்டியில் விளையாடவுள்ளது. இம்முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ள இரு அணிகளும் இதுவரை சம்பியனாகாத அணிகள். நடப்பு உலகக்கிண்ணத்தில் இங்கிலாந்து அணி தோல்வியே சந்திக்காமல் தொடர் வெற்றிகளைக் குவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# ரொனால்டோவும் மெஸ்ஸியும் முதல் சம்பளத்தில் என்ன வாங்கினார்கள் தெரியுமா?




உதைபந்து உலகின் ஜாம்பவான்களான கிறிஸ்ரியானோ ரொனால்டோவும், லியோனல் மெஸ்ஸியும் தங்கள் முதல் சம்பளத்தில் என்ன வாங்கினார்கள் என்பது குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

போர்த்துக்கலைச் சேர்ந்த வீரர் கிறிஸ்ரியானோ ரொனால்டோ (Cristiano Ronaldo) மற்றும் ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த வீரர் லியோனல் மெஸ்ஸி (Lionel Messi) இடையேயான போட்டி கிட்டத்தட்ட 15 ஆண்டுகளாக நடந்து வருகிறது. இதில் ரொனால்டோ சவூதி அரேபியாவுக்குச் சென்றாலும் இவர்களுக்கு இடையிலான ஒப்பீடுகள் நிற்கவில்லை. ரொனால்டோ தனது உதைபந்து வாழ்க்கையை லிஸ்பனிலுள்ள Sporting கிளப்பில் தொடங்கினார் மற்றும் அவர்களின் முதல் அணியை உருவாக்க தரவரிசையில் உயர்ந்தார். ஸ்போர்ட்டிங் சீனியர் அணியில் அவர் இருந்த காலத்தில்தான், 2004இல் மான்செஸ்டர் யுனைடெட் கிளப்பில் ஒப்பந்தம் செய்யப்பட்டார்.

மறுபுறம், மெஸ்ஸி 2000ஆம் ஆண்டு 14ஆவது வயதில் பார்சிலோனாவால் ஒப்பந்தம் செய்யப்பட்டார், அங்கு பல கோல் சாதனைகளை முறியடித்து, கிளப் ஜாம்பவானானார். மெஸ்ஸி பின்னர் பார்சிலோனா இரண்டாவது அணிக்கு பதவி உயர்வு பெற்றபோது தனது முதல் பாரிய சம்பளத்தைப் பெற்றார். போர்த்துக்கலைச் சேர்ந்த ஊடகமான Antenaவின் கூற்றுப்படி, அவர் தனது முதல் சம்பளத்தில் ஒரு வீட்டை வாங்கினார்.

இதற்கிடையில், ரொனால்டோ ஸ்போர்ட்டிங்கிலிருந்து தனது முதல் சம்பளமாக 80 யூரோவைப் பெற்றார். Antenaவின்படி, அவர் அதை தனது பாடசாலைப் பொருட்களை வாங்க செலவு செய்தார். ரொனால்டோ 2009இல் ரியல் மாட்ரிட்டுக்கு மாறியபோது இரண்டு ஜாம்பவான்களின் பாதைகள் கடந்துவிட்டன, மேலும் 2018இல் ரொனால்டோ ஜுவென்டஸில் சேரும் வரை இருவரும் கடுமையாகப் போட்டியிட்டனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

ஹெல்த்

# ஹெல்த்

மலர் :1 இதழ் : 3 - 20.08.2023



8 வடிவ பயிற்சியின் நன்மைகள்!

குப்பைமேனி இலையில் இத்தனை நன்மைகள் இருக்கின்றனவா?

ஆஸ்துமாவை விரட்டும் ஆடாதோடை!

# கால் வீக்கத்தைக் குறைக்க...



★ **தண்ணீர்:** திரவம் தேங்குவதால் வீக்கம் ஏற்படுகிறது என்றாலும் தண்ணீர் குடித்தால் வீக்கம் குறையும். நாளொன்றுக்கு 8–10 கிளாஸ் தண்ணீர் குடிக்க வேண்டும். போதியளவு தண்ணீர் குடிக்கத் தவறினால், உடம்பில் திரவம் தேங்கி வீக்கம் ஏற்பட காரணமாக அமையும்.

★ **ஐஸ் பேக், பேண்டேஜ்:** காயம் காரணமாக கணுக்கால் மற்றும் பாதத்தில் ஏற்படும் வீக்கத்துக்கு ஐஸ் பேக் வைக்கலாம் அல்லது கம்ப்ரெஷன் பேண்டேஜ் அணிந்துகொள்ளலாம். குளிர்ந்த நீரில் கால்களை ஊறவைக்கலாம்.

★ **காலை உயர்த்தி வைத்தல்:** உட்காரும்போது அல்லது படுக்கும்போது கால்களை உயர்த்தி வைக்கலாம். இப்படிச் செய்யும்போது கால்களின் மீது எந்தச் சுமையும் வைக்கக்கூடாது. சுவற்றில் கால்களை வைத்து முதுகில் சாய்ந்துகொண்டும் இருக்கலாம்.

★ **மது அருந்தக் கூடாது:** மதுவானது உடலில் நீரை வற்றச் செய்து வீக்கத்தை அதிகரிக்கும். மது அருந்துவதை நிறுத்தி இரண்டு நாட்கள் கடந்தும் வீக்கம் நீடித்தால் மருத்துவரை அணுகவும்.

★ **கல்லுப்பு:** வெதுவெதுப்பான நீரில் ஒரு சிட்டிகை கல் உப்பு கலந்து காலை ஊறவைத்தால் வீக்கம் மற்றும் வலி குறையும்.

★ **எலுமிச்சை ஜூஸ்:** உடலிலுள்ள நச்சுப்பொருட்கள் மற்றும் மிகுதியான திரவங்களை நீக்க எலுமிச்சை ஜுஸ் பருகலாம். எலுமிச்சை ஜுஸை தினமும் குடிக்கலாம்.

★ **மக்னீசியம்:** உடலில் நீர் தேங்குவதற்கு மக்னீசியம் குறைபாடு காரணமாக இருக்கலாம். எனவே, மக்னீசியம் அதிகம் உள்ள உணவுகளை சாப்பிட வேண்டும். டோஃபூ, கீரை, முந்திரி, பாதாம், டார்க் சாக்லேட், புரொக்கோலி மற்றும் அவகேடோ ஆகிய உணவுகளில் மக்னீசியம் அதிகம் உள்ளது.

★ **உப்பைக் குறைக்கவும்:** உணவில் உப்பு குறைவாக எடுத்துக் கொண்டால் திரவம் தேங்குவதைக் குறைத்து, வீக்கத்தைக் குறைக்கலாம். பக்கெட் உணவுகள் மற்றும் கொழுப்பு உணவுகளைத் தவிர்க்கவும்.

★ **கால் மசாஜ்:** கால் வீக்கத்துக்கு நிவாரணம் தர மசாஜ் உதவும். தேங்கிய திரவத்தை அகலச் செய்து வீக்கத்தைக் குறைக்கும்.

# வறட்டு இருமலை தடுப்பது எப்படி?

★ பாலில் ஒரு தேக்கரண்டி மஞ்சள் மற்றும் அரை தேக்கரண்டி தேனை கலந்து பருகினால் வறட்டு இருமலைத் தடுக்கலாம்.

★ ஒரு ரீஸ்பூன் சோம்பு, அரை பட்டை மற்றும் ஒரு தேக்கரண்டி இஞ்சித் தூளை நீரில் கலந்து நன்றாக கொதிக்க வைத்து ஆறியவுடன் பருகவும். வறட்டு இருமலுக்கு இதமாக இருக்கும்.

★ வெங்காயத்தை நன்றாக அரைத்து ஒரு ஸ்பூன் தேனுடன் கலந்து சாப்பிட்டால் வறட்டு இருமல் நாளடைவில் பறந்து போய்விடும்.

★ தேனிலுள்ள இருமலைக் குணப்படுத்தும் பண்புகள், வறட்டு இருமல் பிரச்சினையிலிருந்து உடனடி நிவாரணம் அளிக்கும். அத்தகைய தேனை 5 டேபிள் ஸ்பூன் எடுத்து, அத்துடன் 2 டேபிள் ஸ்பூன் தேங்காயெண்ணெய் மற்றும் 1 டேபிள் ஸ்பூன் எலுமிச்சைச் சாறு சேர்த்து கலந்து, அடுப்பில் வைத்து 2 நிமிடம் சூடேற்றி இறக்கி குளிர வைத்து சாப்பிட, வறட்டு இருமல் பிரச்சினையிலிருந்து விடுபடலாம்.



★ கற்றாழையிலுள அழற்சி எதிர்ப்புப் பண்புகள், வறட்டு இருமலுக்கு நல்ல நிவாரணம் அளிக்கும். இதிலுள்ள வலி நிவாரணப் பண்புகள், தொண்டைச் சுவற்றில் இருக்கும் பாதிக்கப்பட்ட திசுக்களை சரிசெய்யும். அதிலும் கற்றாழை ஜெல் ஜூஸில் தேன் கலந்து ஒருவர் தினமும் காலையில் எழுந்ததும் வெறும் வயிற்றில் குடித்தால், வறட்டு இருமல் நீங்குவதோடு, ஒட்டுமொத்த உடல் ஆரோக்கியமும் மேம்படும்.

# பாடாய்ப்படுத்தும் மூட்டு வலி



இன்றைய காலத்தில் மூட்டு வலி என்பது, இளைஞர்கள் முதல் பெரியவர்கள் வரை எல்லோருக்கும் இருக்கும் ஒரு முக்கிய பிரச்சினையாகும்.

மூட்டு வலி வந்து விட்டால், அன்றாட வேலைகளைச் செய்வது கூட மிகவும் சிரமமாக மாறிவிடும். மூட்டு வலி ஏற்படுவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், அதனை தொடக்கத்திலேயே கட்டுப்படுத்துவதுதான் சிறந்தது. அதற்காக உடற்பயிற்சி என்ற ஒன்று பெரிதும் உதவி புரிகிறது. தற்போது மூட்டு வலியைக் குணப்படுத்தும் உடற்பயிற்சியை எப்படிச் செய்யலாம் என்பதை காண்போம்.

## உடற்பயிற்சி முறை

ஒரு பருத்தித் துணியை விரித்து, மல்லாந்து படுத்துக்கொண்டு, இரு கால்களையும் செங்குத்தாக மடக்கிக்கொள்ள வேண்டும்.

இடது உள்ளங்காலில் ரிங்கை வைத்து, ஹோல்ட் செய்யவேண்டும். பின்பு, வலது காலை நேராக நீட்டிக்கொள்ள வேண்டும்.

அதே நேரத்தில், இடது காலை நேராக மேல் நோக்கியபடி 45 டிகிரி கோணத்திற்கு உயர்த்திவிட்டு, வலது புறமாகப் பக்கவாட்டில் கொண்டுவந்து நிறுத்த வேண்டும்.

இப்படிச் செய்யும்போது ரிங்கின் மறுபுறத்தை இரு கைகளால் பிடித்துக்கொள்ள வேண்டும். இதைப் போலவே 10 விநாடிகள் வரை இந்த உடற்பயிற்சியை செய்யலாம்.

இதே மாதிரி வலது காலுக்கும் இந்த உடற்பயிற்சியை செய்யவேண்டும். இரண்டு கால்களுக்கும் செய்து முடித்தால் ஒரு செட் கணக்காகும். இந்த உடற்பயிற்சியை ஐந்து முறை செய்யலாம்.

# இந்த வார பாட்டி வைத்தியம்

★ **இஞ்சி:** உணவுடன் இஞ்சி சேர்த்துக் கொள்ளலாம் அல்லது இஞ்சி தேநீர் அருந்தலாம். இஞ்சியில் ஆண்டி ஆக்சிடண்ட் இருப்பதால் அஜீரணத்தை குணப்படுத்த உதவும். இஞ்சியில் வலி மற்றும் அழற்சியை குணப்படுத்தும் தன்மை உள்ளது.

★ **எலுமிச்சை:** சாப்பிட்ட பிறகு எலுமிச்சை ஜூஸ் குடித்தால் வயிற்றெரிச்சல் மற்றும் வயிற்று வலி குறையும்.

★ **புதினா:** குடல் தசைகளை மிருதுவாக்க புதினா உதவுவதுடன் வாய் துர்நாற்றத்தை நீக்கும், வாய் குமட்டுதலை குணமாக்கும். சாப்பிட்ட பிறகு புதினா இலைகள் அல்லது புதினா தேநீர் பருகலாம்.

★ **சமையல் சோடா:** வயிற்று அமிலத்தை சமன் செய்ய சமையல் சோடா உதவும். அஜீரணம் மற்றும் நெஞ்செரிச்சலுக்கு நிவாரணம் தரும். நாளுக்கு ஒருமுறை ஒரு டேபிள் ஸ்பூன் சமையல் சோடாவை தண்ணீர் அல்லது தேனில் கலந்து சாப்பிடலாம்.

★ **நெல்லிக்காய்:** நாளுக்கு ஒருமுறை நெல்லிக்காய் சாப்பிட்டு வர அஜீரண கோளாறு நீங்கும்.

★ **இலவங்கப்பட்டை:** ஆண்டி ஆக்சிடண்ட் இருப்பதால் அஜீரணத்தை குணப்படுத்த இலவங்கப்பட்டை உதவும். இதனை அப்படியே சாப்பிடலாம் அல்லது தேநீரில் கலந்து நாளுக்கு 2–3 முறை அருந்தலாம்.

★ **பெருஞ்சீரகம்:** இரைப்பை நீர் சுரக்க பெருஞ்சீரகம் உதவும். பெருஞ்சீரகத்தை அப்படியே சாப்பிடலாம் அல்லது நீருடன் கலந்து சாப்பிடலாம்.

★ **தேன்:** பாக்டீரியாக்கள் உற்பத்தியை தடுப்பதன் மூலம் அஜீரணத்தை குணப்படுத்த தேன் உதவும். தேனை அப்படியே சாப்பிடலாம் அல்லது வெதுவெதுப்பான நீரில் கலந்து சாப்பிடலாம்.



# பலாப்பழத்தின் மருத்துவப் பயன்கள்

முக்கனிகளுள் இரண்டாவது கனி பலாப்பழம். இந்தப் பழம் ஒரு குறிப்பிட்ட சீசனில் மட்டுமே கிடைக்கக்கூடியது. பலாப்பழம் சாப்பிடுவதற்கு சுவையானது மட்டுமல்ல, உடலுக்கும் நல்லது.

**மருத்துவப் பயன்கள்:**

பலாப்பழம் மூளைக்கும், உடலுக்கும் அதிக பலத்தைத் தரும். நரம்புகளை உறுதியாக்கும், இரத்தத்தை விருத்தி செய்யும்.

கண் பார்வைக்கு உதவும் விற்றமின் ஏ பலாப்பழத்தில் அதிகளவில் உள்ளது.

அடிக்கடி நோய் தாக்கி அவதிக்குள்ளாகுபவர்கள் பலாப்பழம் சாப்பிட்டு வந்தால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரித்து உடல் ஆரோக்கியம் பெறும்.

பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு பலாக்காயை சமைத்துக் கொடுத்தால் நன்றாக பால் சுரக்கும்.

பலாக்காய் உடல் சூட்டைத் தணிக்கும் ஆற்றல் பெற்றது.

பலாக்காயை சமைத்து சாப்பிட்டால் பித்த மயக்கம், அதனால் ஏற்படும் கிறுகிறுப்பு, பித்த வாந்தி போன்றவை குணமாகும்.

பழுத்த பலாச்சுளையில் பழ சர்க்கரை சத்து அதிகளவு உள்ளதால் நீரிழிவு நோயாளிகள் பலாச்சுளைகளை உண்பதைத் தவிர்ப்பது நல்லது.

பலாவிலிருந்து தயாரித்த உணவுகளை அல்லது பலாச்சுளையை ஒரு கிலோ சாப்பிட்டால்கூட எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

இருப்பினும் பழுத்த பலாச்சுளை மலச்சிக்கலை குணப்படுத்தும் என்பதால் பழக்கமில்லாமல் அதிகம் சாப்பிடும்போது வழக்கத்திற்கு மாறாக வயிற்றுப்போக்கு ஏற்பட வாய்ப்புள்ளது.

சிறுநீரகக் குழாய் புற்றுநோய் பக்டீரியாவால் ஏற்படும் சிறுநீரகக் குழாய் தொற்றுநோய்க்கு தினமும் 2 வேளை பலாப்பழ ஜூஸை தொடர்ந்து ஐந்து நாட்கள் உட்கொண்டால் நோய் தீரும்.

பலாவிலுள்ள தாவர உயிர்ச்சத்துகள் புற்றுநோய் உருவாகாமல் தடுப்பதோடு, அணுக்களுக்கு உயிரூட்டம் கொடுத்து என்றும் இளமையான தோற்றத்தையும் கொடுக்கும்.

பலாப்பழத்தை முறையுடன் சாப்பிட்டால் கெடுதல் இருக்காது.. பலாப்பழத்தை சாப்பிட்ட உடன், சிறிது நெய் அல்லது கொஞ்சம் பாலை அருந்தினால் எந்தத் தொல்லைகளும் ஏற்படாது.

வெறும் பலாப்பலத்தை சாப்பிடாது சிறிது நாட்டுச்சர்க்கரையை கலந்து சாப்பிட உடல் புத்துணர்ச்சி பெறும். தாகம் தணியும். எளிதில் சீரணமாகும். குடலுக்கு வலிமை தரும்.

# குப்பைமேனி இலையில் இத்தனை நன்மைகள் இருக்கின்றனவா?



குப்பைமேனி இலையின் சாற்றைக் குடிப்பதால், சளி, வறட்டு இருமல், தொண்ட கட்டுதல் போன்ற நோய்களில் இருந்து நிவாரணம் பெற முடியும்.

தெரு ஓரங்களிலும், குப்பைமேடுகளில் சர்வசாதாரணமாக கிடைக்கும் குப்பைமேனி செடியை நம்மில் பலரும் கண்டுகொள்ளாமல் விட்டிருப்போம். ஆனால், இந்த குப்பைமேனி செடி பலவகை நோய்களுக்கும் அருமருந்தாகத் திகழ்கிறது.

குப்பைமேனி செடியின் அனைத்து பாகங்களுமே மருத்துவ ரீதியில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை . அதேபோல் குப்பைமேனி இலையின் சாற்றை பிழிந்து ஒரு டீஸ்பூன் அளவு வெந்நீரில் கலந்து குடித்தால் மலச்சிக்கல் சரியாகும். மேலும் வயிற்றிலுள்ள புழுக்களும் வெளியேற்றப்படும். குப்பைமேனி இலை பொடியை விளக்கெண்ணெயில் சேர்த்து சாப்பிட்டு வந்தால் வயிற்றுப் புழுக்கள் அழியும்.

மேலும் குப்பைமேனி இலைச்சாறு குடிப்பதால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிப்பதுடன், சைனஸ் நோய்க்கு சிறந்த தீர்வாகும். இரத்த அழுத்தத்தால் உண்டான வாத நோய் குணமாகும். சொத்தைப் பல் உள்ளவர்கள் பல்லில் வலி ஏற்படும் போது 2 அல்லது 3 குப்பைமேனி இலைகளை நன்றாகக் கழுவி விரல்களால் நசுக்கி சொத்தை பல்லில் வைத்தால், அந்த பல்லிலுள்ள கிருமிகள் வெளியேறி வலி நீங்கும். நோயாளிகளுக்கு நீண்ட நாட்கள் படுத்திருப்பதால் படுக்கைப்புண் ஏற்படும். இந்த படுக்கைப்புண் நீங்க, குப்பைமேனி இலையுடன் வேப்பெண்ணெய் சேர்த்து அரைத்து புண்களில் தடவி வந்தால், விரைவிலேயே புண் ஆறிவிடும்.

படை, சொறி, அரிப்பு போன்ற தோல் நோய் உள்ளவர்கள் குப்பைமேனி இலையுடன் மஞ்சள் மற்றும் கல் உப்பு சேர்த்து அரைத்து, அதை தடவி பின் சிறிதுநேரம் கழித்து கழுவி வந்தால் தோல் நோய் இருந்த தடமே இல்லாமல் போய்விடும். அதேபோல் சர்க்கரை நோய் உள்ளவர்கள் தினமும், குப்பைமேனி இலையுடன் சிறிது உப்பு சேர்த்து அரைத்து, புண்ணில் தடவி வந்தால் புண் விரைவிலேயே ஆறும். தேள், பூரான், விஷப்பூச்சிக்கடிக்கு, குப்பைமேனி இலையுடன் மஞ்சள் சேர்த்து அரைத்து கடித்த இடத்தில் தடவினால் விஷம் முறியும்.

# 30 நிமிடங்களில் பல் வலி நீங்க...



கிராம்பு எண்ணெயை பல் வலிக்கு பயன்படுத்தினால் நிவாரணம் கிடைக்கும். பஞ்சில் சில துளி கிராம்பு எண்ணெயை நனைத்து, 20-30 நிமிடங்கள் பாதிக்கப்பட்ட பல்லின் மீது வைத்துக்கொள்ளுங்கள். இதன்மூலம் வலி குறையும். வெதுவெதுப்பான உப்புநீரில் வாயை கொப்பளிக்கலாம். இதனால் வீக்கம் குறைந்து வலி மட்டுப்படும். பூண்டில் இயற்கையான பக்டீரியா எதிர்ப்பு, அழற்சி எதிர்ப்பு பண்புகள் நிறைந்து காணப்படுகின்றன. ஒரு பூண்டு பல்லை நசுக்கி, அதில் உப்பு கலந்து, வலியால் பாதிக்கப்பட்ட பல்லில் நேரடியாக வைத்துக்கொள்ளுங்கள்.

# எடை குறைப்பு TIPS

★ இஞ்சிச்சாறு ஒரு டம்ளர் மற்றும் தேன் இரண்டு டம்ளர் இரண்டையும் நன்றாகக் கொதிக்க வைத்து எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

★ இஞ்சியை சாறெடுத்து அதில் நெல்லிக்காய் சாறை கலந்து வெறும் வயிற்றில் குடித்து வந்தால் கொழுப்பு குறையும்.

★ தினமும் குறைந்தது 7-8 டம்ளர் தண்ணீர் குடித்தால், உடல் வறட்சியில்லாமல் இருப்பதோடு, உடலில் தங்கியிருக்கும் நச்சுகள் அனைத்தும் வெளியேறிவிடும்.

★ உணவில் அதிகப்படியான உப்பு சேர்த்தால், உடலில் தண்ணீரானது வெளியேறாமல், அதிகமாக தங்கிவிடும். எனவே, உணவில் அதிகப்படியான உப்பு சேர்ப்பதை அறவே தவிர்க்க வேண்டும்.

★ வெறும் வயிற்றில் வெதுவெதுப்பான நீரில் தேன் கலந்து குடித்து வந்தால் உடல் மெலியும். கொதிநீரில் தேன் கலக்கக்கூடாது. மிதமான சூட்டில் மட்டும் தான் தேன் கலக்க வேண்டும்.

★ வயிற்றைச் சுற்றி தொப்பையை ஏற்படுவதற்கு, சர்க்கரையும் ஒரு காரணம். எனவே, உண்ணும் உணவுப்பொருளில் சர்க்கரைக்குப் பதிலாக தேனை சேர்த்துக் கொண்டால், தொப்பை குறைவதோடு, உடல் எடையும் குறையும்.

★ தினமும் காலையில் காபி அல்லது தேநீர் குடிக்கும்போது, அதில் சிறிது பட்டை தூளை சேர்த்து கலந்து குடித்தால், இரத்தத்திலுள்ள சர்க்கரையின் அளவை சீராக வைக்கலாம். மேலும் உடல் எடையையும் ஆரோக்கியமான முறையில் குறைக்கலாம்.

★ அவகோடாவிலும் உடலுக்கு வேண்டிய கொழுப்பானது அதிகம் நிறைந்துள்ளது. மேலும் இதனைச் சாப்பிட்டால், அதில் நிறைந்துள்ள ஊட்டச்சத்துகள், வயிற்றை நிறைத்து, அடிக்கடி பசி ஏற்படுவதைத் தடுக்கும்.



# குறட்டை தொல்லையா? இதோ தீர்வு

**உடல் எடையைக் குறைக்கவும்:** உடற்பருமன் உள்ளவர்கள் குறட்டை விட அதிக வாய்ப்புண்டு. தொண்டை பகுதியில் கொழுப்புத் திசு மற்றும் நலிவான தசை இருந்தால் குறட்டை ஏற்படும். எனவே, உடல் எடையை குறைப்பது அவசியமாகும்.

**மது அருந்தக்கூடாது:** தொண்டை தசைகளை இலேசாக்கி குறட்டை ஏற்பட காரணமாக அமைவதால் மது அருந்துவதைத் தவிர்க்கவும்.

**பக்கவாட்டில் படுக்கவும்:** நேராக படுத்தால் குறட்டை ஏற்பட அதிக வாய்ப்புண்டு. எனவே, பக்கவாட்டில் படுக்கவும்.

**பழங்கள்:** உணவில் மெலடோனின் அதிகம் எடுத்துக் கொண்டால் ஆழ்ந்த உறக்கம் பெறலாம். எனவே, மெலடோனின் அதிகம் உள்ள வாழைப்பழம், அன்னாசிப் பழம், கமலாப்பழம் ஆகியவற்றை சாப்பிடலாம்.

**தலையை உயர்த்திப் படுக்கவும்:** தலையணைகள் கொண்டு தலையை உயர்த்தி வைத்து படுக்கவும். தலையை உயர்த்தி வைத்து படுத்தால் சீராக சுவாசிக்கலாம்.

**புகை பிடிக்காதீர்:** சுவாசப்பாதையில் எரிச்சல் உண்டாகுவதால் புகை பிடிப்பதைத் தவிர்க்கவும். புகை பிடித்தால் குறட்டை தொல்லை அதிகரிக்கும்.

**தேன், இஞ்சி தேநீர்:** எச்சிலை சுரக்கச் செய்வதால் இஞ்சி தொண்டைக்கு இதமளிக்கும். தினமும் 2 முறை தேன், இஞ்சி தேநீர் அருந்தினால் குறட்டை தொல்லை குறையும்.

**தூக்க மாத்திரை வேண்டாம்:** அதிகமாக படுத்தால் குறட்டை ஏற்படும். எனவே, தூக்க மாத்திரைகளை தவிர்க்கவும்.

பால் குடிக்கலாம், ஆனால், பால் மற்றும் பாற்பொருட்கள் தொண்டை மற்றும் நாசியில் வீக்கம் ஏற்படுத்தும் தன்மை கொண்டவை. பால் குடிப்பதை முற்றிலுமாகத் தவிர்க்கத் தேவையில்லை. இருப்பினும், படுக்கும் முன் பால் அருந்த வேண்டாம்.

**தண்ணீர்:** உடலில் நீர் பற்றாக்குறையால் சளி உண்டாகிறது. இதனால் கூட குறட்டை ஏற்படலாம். ஆண்கள் நாளொன்றுக்கு 3.7 லீற்றர், பெண்கள் 2.7 லீற்றர் தண்ணீர் பருக வேண்டும்.



# சூடுபடுத்தி சாப்பிடக்கூடாத உணவுகள்...

முட்டை நம் உடல் ஆரோக்கியத்துக்கு மிகவும் நல்லது. ஆனால், அவற்றை சூடுபடுத்தி சாப்பிடக்கூடாது. அதேபோல் பீட்ரூட், பசலைக்கீரையில் நைட்ரிக் ஆக்சைட் நிறைந்துள்ளது. இவற்றை சூடுபடுத்தினால் புற்றுநோயை உண்டாக்கும் வேதிப்பொருட்கள் உருவாகும் என்பதால் உடலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

கோழிக்கறியில் சால்மோனெல்லா பக்டீரியா தங்கியிருக்கும். இவற்றை சூடுபடுத்தும்போது அவை பாதிப்பு ஏற்படுத்தும்.

# 8 வடிவ பயிற்சியின் நன்மைகள்!



ஒருவர் தினமும் 30 முதல் 60 நிமிடங்கள் நடைப்பயிற்சி மேற்கொள்வதால் ஆரோக்கியம் மேம்படும். பல்வேறு நோய்களிலிருந்தும் பாதுகாத்துக்கொள்ளலாம். நடைப்பயிற்சி சாதாரணமாக செய்யாமல் எட்டு வடிவத்தில் நடப்பது மிகமிகச் சிறந்ததாகும். குறிப்பாக, இன்றைக்கு கொரோனா வைரஸ் தாக்குதல் பாதுகாப்புக்காக அனைவரும் வீட்டில் இருக்கிறார்கள். தொடர்ச்சியாக நடைப்பயிற்சிக்கு செல்ல முடியாதவர்கள் இந்து 8 வடிவ பயிற்சியை மேற்கொள்ளலாம்

இந்தப் பயிற்சியை காலை மாலை ஒரு மணிநேரம் செய்து வந்தால் உள்ளங்கை விரல்கள் இரத்தோட்டத்தால் சிவந்திருப்பதை உணரலாம். 70 வயது 50 வயதாக குறையும். முதுமை இளமையாகும். சர்க்கரை வியாதி குறைந்து முற்றிலும் குணமடையும். குளிர்ச்சியால் ஏற்படும் தலைவலி, மலச்சிக்கல் தீரும். முழுமையாக சுவாசிக்கப்படும் மூச்சுக்காற்றால் 5 கிலோ பிராணவாயு உள்ளே சென்று மார்புச்சளி நீக்கப்படுகிறது. இரண்டு நாசிகளும் முழுமையாக சுவாசிப்பதால் நாசியில் உண்டாகும் சளியிலிருந்து நிவாரணம் கிடைக்கிறது.

கண்பார்வை அதிகரிக்கும் ஆரம்பநிலை கண்ணாடி அணிவது தவிர்க்கப்படுகிறது. மற்றவர்களுக்கு மூக்குக்கண்ணாடியின் பொயிண்ட் அதிகமாகாமல் பாதுகாக்கப்படுகிறது. செவிகளின் கேட்கும் திறன் அதிகரிக்கிறது. உடலினுள் அதிகப்படியான 5 கிலோ பிராண வாயுவால் உடல் சக்தி பெறுகிறது.

காலையிலும் மாலையிலும் ஒரு மணிநேரம் இந்தப் பயிற்சியை செய்து வந்தால் (ஹெர்னியா) குடலிறக்க நோய் குணமாகும். அளவான நடைப்பயிற்சியால் இரத்த அழுத்தம் குறைக்கப்படுகிறது. இரண்டுவேளை 30 நிமிடம் செய்தால் பாத வெடிப்பு, வலி, மூட்டு வலிகள் மறைந்து விடுகின்றன.

முதியோரும் நடக்க இயலாதோரும் பிறர் உதவியுடன் சக்கரவண்டியின் மூலம் பயன் அடையலாம்.

தினமும் 'எட்டு' நடைப்பயிற்சிகளை செய்வதால் நாம் ஆரோக்கியமாக வாழ முடியும். உடல் பருமன், இரத்த அழுத்தம், இதய நோய், ஆஸ்துமா கண் நோய்கள், மூக்கடைப்பு, தூக்கமின்மை, மூட்டுவலி, முதுகுவலி, மன இறுக்கம் போன்ற கொடிய நோய்கள்கூட மெல்ல மெல்ல பூரணமாக குணமாகி விடுகின்றன. நல்ல முறையில் பயன்பெற இந்தப் பயிற்சியை இடைவிடாது குறைந்தது 21 நாட்கள் செய்யவேண்டும்.



# வாய் புற்றுநோய் அறிகுறிகள்

இன்றைய நாகரீக உலகில் பலர் வாய் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர். குட்கா, புகையிலை போன்றவற்றால் ஏற்படும் பின்விளைவுகளால் உயிருக்கே ஆபத்தாக முடிந்து விடுகிறது. இருப்பினும், சில அறிகுறிகளால் வாய் புற்றுநோயைக் கண்டறிய முடியும்.

மெல்லுதல், விழுங்குதல் மற்றும் பேசுவதில் சிரமம் இருக்கும். உணவு தொண்டையை கடக்கும்போது வலி, இரத்தம் வெளியேறுதல் இருக்கும். வாய் புற்றுநோய் பல பிரச்சினைகளையும் ஏற்படுத்தும். புற்றுநோய் வாய் புண்களையும் உண்டாக்கும். இந்தப் புண்கள் வெள்ளை மற்றும் சிவப்பு நிறத்தில் இருக்கும். மருந்து உட்கொண்ட பிறகும் வலியின் தீவிரம் குறையாது.

# இரத்தச்சோகையால் அவதிப்படுபவர்களுக்கு

நாம் உண்ணும் உணவின் மூலம் இரத்தச்சோகை பிரச்சினையை சரிசெய்துகொள்ளலாம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். எள்ளுடன் வெல்லம் கலந்து பேஸ்ட் செய்து சாப்பிட்டால் இரத்தச்சோகை குறையும். இந்தப் பிரச்சினையால் அவதிப்படுபவர்கள் இரும்புச்சத்து நிறைந்த பெருங்காயம், கீரை, வெந்தயம் ஆகியவற்றைத் தொடர்ந்து சாப்பிட வேண்டும். முளைத்த பருப்பு வகைகள், விற்றமின்-சி நிறைந்த நெல்லிக்காய், கொய்யா போன்றவற்றையும் சாப்பிடுங்கள்.



# குளிர்காலத்தில் குழந்தை நலனுக்கு..



குளிர்காலத்தில் குழந்தைகளின் வறண்ட சருமத்தைத் தவிர்க்க, எண்ணெய் கொண்டு மசாஜ் செய்யவும். இந்த எண்ணெய் மசாஜ்கள் குழந்தையின் உடல் வெப்பநிலையை அதிகரித்து இரத்தோட்டத்தை மேம்படுத்துகிறது. குழந்தை மசாஜ் செய்ய உயர்தர இயற்கை எண்ணெய்களை மட்டும் தெரிவுசெய்யவும். குழந்தைகளுக்கு பாதாம், ஒலிவ், அஸ்வகந்தா கலந்த எண்ணெயைப் பயன்படுத்தலாம்.



# நீண்ட நேரம் உட்கார்ந்தே இருப்பவரா நீங்கள்? உஷார்!

தொழில்நுட்ப வளர்ச்சி உச்சந்தொட்டிருக்கும் இந்தக் காலத்தில், உடல் உழைப்பு என்றால் என்ன என்பதே தெரியாதவர்கள் அதிகமாகிவிட்டார்கள். இதன் காரணமாகவே ஆரோக்கியக் குறைபாடுகளும் அதிகரித்துவிட்டன.

வேலை முடிந்து அலுத்து, களைத்துபோய் வீட்டிற்குள் வரும் பலரும், மீண்டும் தங்களைச் சாய்த்துக்கொள்வது நாற்காலியில்தான். ஆனால், அவர்களின் களைப்புக்குக் காரணமே ஒரே இடத்தில், நீண்ட நேரமாக நாற்காலியில் உட்கார்ந்து வேலை செய்ததனால்தான் என்பது தெரிவதில்லை. ஆம், உடலுழைக்கச் செய்யும் வேலைகளைவிட, ஒரே இடத்தில் அமர்ந்து செய்யும் வேலைகளால்தான் நமது உடல் அதிகமாகச் சோர்வடைகிறது.

வீட்டிலும் சரி, வெளியிலும் சரி பெரும்பாலான நேரங்களில் நாம் உட்கார்ந்தபடியே வேலை செய்வது தற்போது வழக்கமான ஒன்றாக மாறிவிட்டது. மேலும், வெளியில் பயணம் செய்யும்போதும் கூட நடந்து செல்லாமல் பைக், கார் என்றே பழகிவிட்டோம். ஆனால், உண்மையில் நீண்ட நேரம் உட்கார்ந்தே இருப்பதனால், உடலில் பல பக்கவிளைவுகள் ஏற்படுகின்றன.

**அவை என்னவென்பதைப் பார்ப்போம்:**

ஒரே இடத்தில் நாற்காலியை விட்டு நகராமல் நாம் வேலை செய்கொண்டிருப்பதால், உடலில் சேரும் கொழுப்பு கரைவதில்லை. இதனால் இதயத்தை சுற்றி உருவாகும் கொழுப்பு அமிலங்கள் இதய நலனை சீர்குலையச் செய்கிறது.

நீண்ட நேரம் உட்கார்ந்தே வேலை செய்யும் முறையானது, உடலில் ஹோர்மோன் சமநிலையை கெடுக்கிறது. இதனால் நீரிழிவு நோய் ஏற்படும் அபாயம் இருக்கிறது. மேலும் இதேமுறை நீண்ட நாட்கள் தொடரும் பட்சத்தில் கணையத்தில் பாதிப்புகள் ஏற்படும் வாய்ப்புகளும் உள்ளன.

உட்கார்ந்தே வேலை செய்வதால் ஏற்படும் உடல்நல உபாதையில், பெருங்குடல் புற்றுநோயும் ஒன்று. அதுமட்டுமன்றி நீண்டநேரம் உட்கார்ந்தே வேலை செய்வது மார்பக புற்றுநோய் மற்றும் கர்ப்பப்பை புற்றுநோய் ஏற்படவும் காரணியாக இருக்கிறது.

நாற்காலியில் 6-7 மணி நேரம் உட்கார்ந்தே வேலை செய்வது இடுப்பு எலும்பை வலுவிழக்கச் செய்கிறது. கால்களை தொங்கவிட்டபடி மணிக்கணக்கில் வேலை செய்வது உங்கள் கால் பகுதிகளுக்கு இரத்த ஓட்டம் சீராக செல்லாமல் தடைசெய்கிறது. இதனால், கால்களில் பிடிப்பு, வலி, அசௌகரியமாக உணர்தல் போன்ற பிரச்சினைகள் ஏற்படலாம்.

ஒரே இடத்தில் நாற்காலியைவிட்டு நகராமல் வேலை செய்பவர்களுக்கு திடீரென கழுத்தை திருப்பக்கூட முடியாத அளவு கடினமான வலி ஏற்படும். இதனால் spondylosis எனப்படும் பாதிப்பு ஏற்படலாம். மணிக்கணக்கில் உட்கார்ந்தே வேலை செய்பவர்களுக்கு ஏற்படும் முதல் பாதிப்பு தண்டுவட வலி. இது தண்டுவட எலும்புகளை வலுவிழக்கச் செய்கிறது.

கணினியில் வேலை செய்பவர்களுக்கு கையை அசைக்காமல் ஒரே நிலையில் தட்டச்சுப் பலகையுடன் உறவாடும்போது இதுபோன்ற தோள்பட்டை வலி அதிகமாக ஏற்படும் வாய்ப்புகள் இருக்கின்றன.

**நாற்காலியில் நீண்டநேரம் அமர்வதைக் குறைக்க சில வழிமுறைகள்...**

அலுவலகத்தில் அமர்ந்துதான் வேலை செய்யவேண்டும் என்ற கட்டாயம் இருந்தாலும், வெளியிடங்களில் நாற்காலியில் அமர்ந்து வேலை செய்வதைத் தவிர்க்கலாம்.

ஒவ்வொரு இரண்டு மணி நேரத்துக்கும் இடையே, இருக்கையைவிட்டு எழுந்து 5 நிமிடங்கள் நடக்கலாம். சூரிய ஒளியில் செல்லும் வாய்ப்பு இருந்தால், சூரிய ஒளி உடலின் மீது படும்படி நடக்கலாம். சூரிய ஒளியில் இருந்துவரும் கதிர்கள் பகலில் உடல் சோர்வால் உண்டாகும் தூக்கத்தை விரட்டும். உடல் செல்கள் புத்துணர்வு பெற உதவும்.

நாம் அமர்ந்திருக்கும் நாற்காலியை சரியாக வைத்துக்கொள்வது மிகவும் அவசியமான ஒன்று. அது, முதுகுத்தண்டுக்குச் சரியாகப் பொருந்தும் அளவுக்குச் சரியான உயரத்தில் இருக்கவேண்டும்.

சாப்பிட்ட பிறகு, உடனே நாற்காலியில் அமர்ந்து வேலை செய்யக்கூடாது. சில நிமிடங்கள் நிற்கலாம் அல்லது நடக்கலாம். நிற்கும்போதும் நடக்கும்போதும் நம் இதயத்துடிப்பு சீராகவும், அதிகமாகவும் இருக்கும். இதயம், சீரான இரத்த ஓட்டத்துக்கு ஓர் உந்துதலைக் கொடுக்கும். அது வளர்சிதை மாற்றத்துக்கு உதவும்.

செல்போனில் பேசவேண்டி வந்தால், நடந்து கொண்டே பேசலாம். எழுந்து நடப்பதால், தசைகள் இயக்கம் பெற்றுக் காலில் இரத்தம் தேங்காமல், இரத்த ஓட்டம் சீராக இருக்க உதவும். நீண்ட நேரம் நாற்காலியில் அசையாமல் அமர்ந்திருக்கக் கூடாது. அதேபோல், நீண்ட நேரம் அசையாமல் நிற்கவும் கூடாது. இரண்டுமே ஆபத்தானவை.

அலுவலகங்களில் லிஃப்டுக்குப் பதிலாக படிக்கட்டுகளைப் பயன்படுத்தலாம். வீட்டுக்குள் முடிந்தவரை தரையில் அமர்ந்து வேலைகளைச் செய்யப் பழகலாம்.

அருகிலுள்ள கடைகளுக்கு நடந்து சென்று பொருட்களை வாங்கலாம் அல்லது சைக்கிளிலில் செல்லலாம்.

# ஆஸ்துமாவை விரட்டும் ஆடாதோடை!

“ஆடாதோடையினால் பாடாத நாவும் பாடும், நாடாது வியாதி தானும்” எனச் சித்தர்கள் சிலாகித்துப் பாடியுள்ளனர். அந்தளவுக்கு இந்த மூலிகை, நம் வாழ்வில் சந்திக்கும் பல வியாதிகளுக்கு எளிய மருந்தாகிறது. சளி நிறைய சேர்ந்து இரவு முழுவதும் இருமும் குழந்தைகளுக்கு இரண்டு மூன்று ஆடாதோடை இலைகளைக் குறுக்கே கிழித்து, இரண்டு ஏலக்காய் போட்டு கொதிக்க வைத்து, வடிகட்டி கஷாயத்தைக் கொடுக்க, சளி வெளியேறி இருமல் நிற்கும்.

ஆஸ்துமா பிரச்சினையால் சரியாக மூச்சுவிட முடியாமல் அவஸ்தைப்படுபவர்கள் ஆடாதோடை இலையை நான்கு பங்கு நீர்விட்டு கொதிக்க வைத்து ஒரு பங்காக வற்றியதும் வடிகட்டி அதனுடன் தேன் கலந்து குடித்து வர ஆஸ்துமா கட்டுப்படும். இதைத் தொடர்ந்து ஒரு மண்டலம் குடித்து வந்தால் காசநோய் கட்டுப்படும். மழைக்காலத்தில் இந்தக் கஷாயத்தை தயாரித்து குடித்தால் சளித் தொந்தரவு அண்டாது.

வயிற்றில் உப்புசத்துடன் கூடிய இரைப்பு நோய், அத்தோடு சளியும் சுரமும் இருந்தால் ஆடாதோடை இலையுடன் மூன்று மிளகு சேர்த்து கொதிக்க வைத்து கஷாயமாக்கிக் கொடுக்க உப்புசமும் இரைப்பும் உடனடியாகக் குறையும். சளி கட்டி, குரல் கம்மலாக கரகரப்புடன் இருக்கும்போது ஆடாதோடை, அதிமதுரத் துண்டு, நான்கு மிளகு சேர்த்து கஷாயமாக்கிக் கொடுக்க கரகரப்பு நீங்கி, இயல்பான குரல் கிடைக்கும். தொண்டையின் உட்பகுதியில் ஒட்டியிருக்கும் சளி வெளியேறும்.

சர்க்கரை வியாதி உள்ளவர்கள், பலருக்கும் இப்படித் தொண்டையின் உட்பகுதியில் சளி ஒட்டி, அதை வெளியேற்ற அடிக்கடி செருமும் பழக்கம்



இருக்கும். அப்படி ஒட்டியுள்ள சளியை வெளியேற்ற இந்தக் கஷாயம் மிக அற்புதமான மருந்து. ஆடாதோடையிலுள்ள வாலிஸின் சத்துதான் இந்த மூலிகையின் சளியை வெளி யேற்றுவது. நுரையீரலில் சுருங்கி விரியும் தன்மையை சீராக்குவது, ஆஸ்துமா மற்றும் சுவாசக் கோளாறுகளை சரியாக்குவது முதலான பல செய்கைகளுக்குப் பின்னணியில் உள்ளது.

ஆடாதோடை இலைச்சாறு இரத்த கழிச்சல், சீதமும் இரத்தமும் கலந்து உண்டாகும் கழிச்சல் இவைகளுக்கு நன்மை தரும். இதன் இலையை அரைத்துச் செய்யும் உருண்டை மாதவிடாய் சமயம் பெண்களைப் பெரிதும் வாட்டும் அதிக இரத்தப்போக்கை உடனடி யாகக் கட்டுப்படுத்தும்.

# தூளியில் ஜாலியா 'ஏரியல் யோகா' செய்யலாமா?



"உடலுக்கும் மனதுக்கும் ஆரோக்கியத்தையும் புத்துணர்வையும் அளிக்கும் யோகாசனங்களை இன்று பெரும்பாலானோர் உடலை வருத்தி, கடமைக்காகச் செய்கின்றனர். அப்படி அல்லாமல், மகிழ்ச்சியாகவும் ஆர்வத்துடனும் செய்தால் முழுமையான பலன்களைப் பெற முடியும். அப்படி மனதை உற்சாகப்படுத்தி, உடலுக்கு சுகத்தையும், உணர்வுகளுக்கு உற்சாகத்தையும் தருவதற்காக உருவானதே ஏரியல் யோகா" என்கிறார் ரெனாசா ஸ்டுடியோ உரிமையாளரும் ஃபிட்னெஸ் பயிற்சியாளருமான சர்வேஷ்.



*ஏரியல் யோகா என்றால் என்ன?*

1991இல் கிறிஸ்டோபர் ஹாரின்சன் என்பவர் முதன்முதலாக அமெரிக்க ஜிம்னாஸ்ரிக் மற்றும் டான்ஸ் கம்பெனியில் 'ஆன்டிகிராவிட்டி யோகா' என்ற பெயரில் 'ஏரியல் யோகா'வை அறிமுகப்படுத்தினார். வழக்கமாக நாம் செய்யும் யோகாவை தொங்கிய நிலையில் செய்வதுதான் 'ஏரியல் யோகா'. இதைச் செய்யும்போது, காற்றில் பறப்பது போன்ற உணர்வு இருக்கும்.

*எப்படிச் செய்யவேண்டும்?*

ஹம்மாக் (Hammock) எனப்படும் பிரத்தியேகத் துணியை உத்திரத்தில் கட்டி, இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்படும். தூளியில் குழந்தைகள் தூங்கும்போது ஒருவித அரவணைப்பை உணரும். உடலுக்கு இதமாக இருக்கும். வலி இருக்காது. நம் பாரம்பரியமான தூளி கான்செப்ட்தான் இந்த யோகாவுக்கான அடிப்படை.

*யோகாவுக்கும் ஏரியல் யோகாவுக்கும் என்ன வித்தியாசம்?*

தரையில் அமர்ந்து செய்வது 'யோகா'. ஹம்மாக்கில் அமர்ந்தும், தொங்கியும் செய்வது 'ஏரியல் யோகா'. யோகாவுக்குத் தரைவிரிப்பைப் பயன்படுத்தப்படுவதைப்போல் இதற்கு ஹம்மாக்கைப் பயன்படுத்துகிறோம். யோகாவை 45 நிமிடங்கள் செய்தால் கிடைக்கக்கூடிய பலன்கள், ஏரியல் யோகாவை 10 நிமிடங்கள் செய்வதிலேயே கிடைத்துவிடும். இப்போது இருக்கும் வேகமான உலகத்தில் யோகா, நடை, தியானம் என நம் ஆரோக்கியத்துக்குக்கூட நேரம் ஒதுக்க இயலாமல் ஓடுகிறோம். இப்படிப்பட்ட சூழலில், இந்த யோகாவுக்கு தினமும் 15 நிமிடங்கள் ஒதுக்கினாலே போதுமானது.

*பிரத்தியேக முன்பயிற்சி தேவையா? யாரெல்லாம் செய்யலாம்?*

உடற்பயிற்சி செய்பவர்கள், முச்சுப் பயிற்சியை மேற்கொள்பவர்கள், ஓரளவு யோகா கற்றவர்கள், ஜிம்னாஸ்ரிக் தெரிந்தவர்கள்தான், ஏரியல் யோகா செய்யத் தகுதியானவர்கள். வயது வரம்பு இல்லை. ஃபிட்டாகவும் ஆர்வமாகவும் உள்ள அனைவராலும் இந்த ஏரியல் யோகாவை செய்ய முடியும். தேர்ந்த பயிற்சியாளரின் உதவியுடன்தான் இந்தப் பயிற்சியைச் செய்யவேண்டும். இதயம், கண் அறுவைசிகிச்சை செய்தவர்கள், வெர்டிகோ பிரச்சினை உள்ளவர்கள், கர்ப்பிணிகள் இந்தப் பயிற்சியைச் செய்யக்கூடாது. தலைகீழாகச் செய்யும்போது, இரத்தம் தலைக்குப் போவதால், ஆரம்பத்தில் சிலருக்கு வாந்தி ஏற்படலாம். பிறகு சரியாகிவிடும்.

*ஏரியல் யோகாவைக் கற்றுக்கொள்ள ஆர்வமாக இருக்கிறார்களா?*

ஏரியல் யோகாவை கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காகவே வருபவர்கள் யோகா கற்றுக்கொள்ளவும், வொர்க் அவுட்ஸ் செய்யவும் ஆர்வம் காட்டுகிறார்கள். இது வரவேற்கத்தக்க விடயம்தான். யோகா, வொர்க் அவுட்ஸ் குறித்து எந்த முன் அனுபவமும் இல்லையென்றாலும், அவர்களுக்கு யோகா, மூச்சுப் பயிற்சி, ஸ்ட்ரெச்சிங் பயிற்சிகளைச் சொல்லித்தந்து, ஏரியல் யோகா பயிற்சிக்கு அனுப்பிவைப்போம். ஒரு வகுப்பில் நான்கு பேருக்கு மட்டும்தான் பயிற்சி அளிக்கிறோம். அப்போதுதான் தனிப்பட்ட, சிறப்பான பயிற்சி அளிக்க முடியும்."

*இந்த யோகாவை வீட்டில் செய்யலாமா?*

பயிற்சியாளர் இல்லாமல் பண்ணக் கூடாது. நழுவி விழ வாய்ப்புள்ளது. ஹம்மாக் ஸ்லிப்பானால் தசைகள் பாதிப்பு ஏற்படலாம். தலைகீழாகச் செய்யும்போது, இன்னும் அதிகக் கவனம் தேவையாக இருக்கும். பயிற்சி காலம் முடியும்வரை பயிற்சியாளரை அருகில் வைத்துக்கொண்டு, நன்றாகப் பயிற்சி பெற வேண்டும். குறைந்தது ஆறு மாதங்கள் முழுமையாகப் பயிற்சி முடிந்த பிறகுதான், வீட்டில் செய்ய முடியும். பயிற்சியாளர் நன்றாகக் கற்றுக்கொண்டார் என்பதை உறுதிப்படுத்திய பிறகுதான், தனியாக வீட்டில் செய்ய அனுமதிப்போம்.

*ஏரியல் யோகாவின் பலன்கள் யாவை?*

யோகா செய்தால் ஏற்படக்கூடிய அத்தனை பலன்களும் இதிலும் கிடைக்கும். யோகாவைத் தாண்டி, டான்ஸ், ஜிம்னாஸ்ரிக்ஸ் இதில் செய்யலாம். ஒருசில யோகாக்களைத் தவிர, பெரும்பாலான யோகாக்களை இதில் செய்ய முடியும். உடலில் வலி இருக்காது.

முழு உடலுக்கான பயிற்சி கிடைக்கும். தசைகள் விரிவடையும். மூட்டு இணைப்பு வலுப்பெறும். முதுகெலும்புக்கு நல்ல ஸ்ட்ரெச்சிங் கிடைக்கும்.

ஏரியல் யோகா வியர்வையை அதிகம் சுரக்கும். செரிமானம் அதிகரிக்கும். இரத்த ஓட்டம் சீராகும். புத்துணர்ச்சி கிடைக்கும். சருமம் பொலிவு பெறும். மன அழுத்தம் குறையும். நினைவாற்றல் அதிகரிக்கும். மூளைக்கு நல்ல ஓய்வு கிடைக்கும்.

மன அழுத்தத்தைக் குறைக்கும். சென்சிட்டிவ், எமோஷனல் உணர்வுகளைக் கட்டுப்படுத்தும்.

புதிய செல்களை உற்பத்தி செய்யும் அளவுக்கு உடலைத் தயார்படுத்தும்.

நேர்மறை எண்ணங்கள் மேலோங்கும்.

**ரிப்ஸ்**

**தளர்வான உடைகளைத் தவிர்க்க வேண்டும்.**

**வெறும் காலுடன்தான் பயிற்சி செய்ய வேண்டும்.**

**எந்த நகைகளையும் அணியக் கூடாது.**

**நகங்கள் நன்றாக வெட்டப்பட்டு இருக்க வேண்டும்.**

**பயிற்சிக்கு இரண்டு மணி நேரம் முன்பிருந்து எதுவும் சாப்பிடக் கூடாது.**

**கைகளில் லோஷன், எண்ணெய் போன்றவற்றைப் பூசியிருக்கக் கூடாது.**

**பயிற்சிக்கு அரை மணி நேரத்துக்கு முன்பிருந்தே தண்ணீர் அருந்தக் கூடாது.**

## நைட்டு நிம்மதியா தூங்கணுமா? அப்ப தினமும் இந்த பானங்களை குடிங்க...



18 வயது இளைஞர்கள் முதல் 60 வயதுக்குட்பட்ட பெரியவர்கள் வரை ஒவ்வொரு இரவும் குறைந்தது ஏழு முதல் ஒன்பது மணிநேரம் தூங்க வேண்டும் என்று நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர். போதிய அல்லது அதிக தூக்கமின்மை பிரச்சினை மனச்சோர்வு, நீரிழிவு நோய், இதய நோய் மற்றும் மரணம் போன்ற அபாயத்தை அதிகரிக்கக்கூடும். இதில் நல்ல செய்தி என்னவென்றால், பலவிதமான தூக்கத்தைத் தூண்டும் பானங்கள் உள்ளன. அவை, நன்றாக தூங்க உங்களுக்கு உதவக்கூடும்.

**செர்ரி சாறு**

தூக்கத்தை அதிகரிக்க செர்ரிகள் உங்களுக்கு உதவும். இதில் டிரிப்டோபான் உள்ளடக்கம் உள்ளது. டிரிப்டோபான் என்பது ஓர் அமினோ அமிலமாகும், இது மெலடோனின் உற்பத்திக்கு உதவுகிறது. சிறந்த முடிவுகளுக்கு, ஒரு நாளைக்கு 2 கப் (480 மில்லி) செர்ரி சாறு குடிக்க நிபுணர்கள் பரிந்துரைக்கிறார்கள். ஒரு நாளைக்கு 2 கப் (480 மி.லீ.) குடிப்பதால் எந்த பக்கவிளைவுகளும் ஏற்படாது.

**புதினா தேநீர்**

புதினா தேநீரானது மாலையில் இரைப்பை குடல் தொந்தரவு மற்றும் அசௌகரியத்தை தணிப்பதன் மூலம் தூக்கத்தை அதிகரிக்கும் என்று ஆராய்ச்சி கூறுகிறது. இருப்பினும், இது குறித்து மேலும் கூடுதல் ஆராய்ச்சி தேவைப்படுகிறது. புதினா ரீயில் காஃபின் இல்லாததால், நீங்கள் நாள் முழுவதும் இந்தத் தேநீரைக் குடிக்கலாம். உங்கள் ஆற்றலை அதிகரிக்க மதிய உணவுக்குப் பிறகும் உறங்குவதற்கு முன்பும் புதினா ரீயைக் குடியுங்கள்.

**சூடான பால்**

தூக்கத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கான பொதுவான மருந்துகளில் பாலும் ஒன்றாகும். பாலில் டிரிப்டோபான் உள்ளது, இது இயற்கையாகவே செரோடோனினை அதிகரிக்கிறது. இது மகிழ்ச்சி மற்றும் உள்ளடக்கத்தை உணரும் ஒரு நரம்பியக் கடத்தியாகும். கூடுதலாக, செரோடோனின் மெலடோனின் முன்னோடியாகும். இது தூக்கத்தை ஒழுங்குபடுத்துகிறது. நீங்கள் லாக்டோஸ் சகிப்புத்தன்மையற்றவராகவோ அல்லது பால் ஒவ்வாமை கொண்டவராகவோ இருந்தால், பால் குடிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

# ஸ்கிப்பிங் பயிற்சி



தினந்தோறும் உடற்பயிற்சி செய்வதால், உடல் எடை கூடுவதைத் தவிர்க்க முடியும். அத்தோடு, பல ஆரோக்கிய நன்மைகளும் கிடைக்கும். உடற்பயிற்சி செய்யும்போது நம் உடலில் கலோரிகள் எரிக்கப்படுகின்றன. இதனால், தினசரி உடற்பயிற்சி அனைவருக்கும் தேவையான ஒன்றாகும்.

***ஸ்கிப்பிங் உடற்பயிற்சி***

பொதுவாகவே ஸ்கிப்பிங் என்பது ஒருவகையான Cardio Exercise போன்றதெனலாம். இந்த உடற்பயிற்சி சீரான சுவாசத்தை ஏற்படுத்தி, இதயக்கோளாறு ஏற்படாமல் தடுத்து, இதயத்தை வலிமைப்படுத்துகிறது. மேலும், ஒரு நபர் தினந்தோறும் 15 முதல் 25 நிமிடங்களுக்கு ஸ்கிப்பிங் உடற்பயிற்சியை செய்தால், அதிகமான நன்மைகளைப் பெற முடியும். இந்த பயிற்சியால் கை மற்றும் கால்களும் வலுவடையும்.

ஒரு நபர் ஸ்கிப்பிங் பயிற்சியை மேற்கொள்ளும் போது, கயிறு முன்னும் பின்னும் ஒரே சீரான வேகத்தில் சென்று வர வேண்டியது அவசியம். இதன் காரணமாக அந்த நபருக்கு கவனச் சிதறல் ஏற்பட வாய்ப்பே இருக்காது. அவ்வகையில் ஒருங்கிணைந்த எளிமையான மன ஆரோக்கியத்துக்கும், மனவலிமைக்கும் இது உதவுகிறது.

***உடல் எடையைக் குறைக்கும் ஸ்கிப்பிங்***

ஸ்கிப்பிங்கை ஓர் உடற்பயிற்சியாக தினந்தோறும் செய்யும்போது, உடல் எடையை அசுர வேகத்தில் குறைக்க முடியும் என்பது நிதர்சனமான உண்மை.

தொடர்ந்து ஒரு நபர் 10 நிமிடத்திற்கு ஸ்கிப்பிங் செய்வது, கிட்டத்தட்ட 8 கிலோ மீற்றர் ஓடுவதற்கு சமம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இதன் காரணமாக ஒரு மணிநேரம் தொடர்ந்து ஸ்கிப்பிங் செய்தால், மிக எளிதாக நம் உடலில் இருக்கும் 1,600 கலோரிகளை எரிக்க முடியும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

***ஸ்கிப்பிங் பயிற்சியின் நன்மைகள்***

ஸ்கிப்பிங் விளையாட்டை தினசரி மேற்கொள்வதன் மூலமாக, வயிற்றில் அதிகமாக இருக்கும் சதைப் பகுதியை மிக எளிதாகக் குறைக்க முடியும்.

ஸ்கிப்பிங் பயிற்சி செய்யும்போது இதயத்தின் துடிப்பு சீராகிறது. இதனால் இருதய ஆரோக்கியம் மேம்பட ஸ்கிப்பிங் உதவி புரிகிறது.

உடலில் இருக்கும் தேவையற்ற மற்றும் கெட்ட கொழுப்புகளைக் கரைப்பதற்கு ஸ்கிப்பிங் பயிற்சி மிகச் சிறப்பாக உதவுகிறது.

ஸ்கிப்பிங் பயிற்சியில் உடலை மிக வேகமாக இயக்குவதால், இது உணவு செரிமானத்துக்கும் உதவியாக இருக்கிறது.

எலும்புகள் வலிமையாவதற்கு ஸ்கிப்பிங் விளையாட்டு அவசியமான ஒன்றாகும்.

குழந்தைகளுக்கு சிறுவயது முதல், ஸ்கிப்பிங் பயிற்சியை சொல்லிக்கொடுத்து, தினசரி செய்ய ஊக்குவிக்க வேண்டும். உடற்பயிற்சியின் அவசியத்தை இளம் தலைமுறையினர் மற்றும் வருங்கால தலைமுறையினருக்கு எடுத்துச்சொல்ல வேண்டியதும் நம் கடமையாகும்.

# சித்த மருத்துவத்தில் கிராம்பின் மகிமை











மனிதனுக்கு நோய் ஏற்படுத்துகின்ற பக்றீரியா (Bacteria), பங்கஸ் (Fungus). வைரஸ் (Virus) ஆகிய நுண்ணங்கிகளுக்கு எதிராக தொற்றுநீக்கி மூலிகைகளை எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற ஆய்வானது இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மட்டுமல்லாது, இன்று உலகம் முழுவதிலும் பரந்து விரிந்து பரவி வளர்ந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மூலிகை மருத்துவ மானது உலகளாவிய ரீதியில் Herbal Medicine, Natural Medicine, Alternative Medicine என பலவித பெயர்களைத் தாங்கிக்கொண்டு பிரபல்யமடைந்து வருகின்றது. இந்தவகையில் தமிழர் மருத்துவமாகிய சித்தமருத்துவத் துறையில் வேம்பு, மஞ்சள், அறுகு, உள்ளி, சந்தனம், மரமஞ்சள், மருதோன்றி, வெங்காயம், புங்கு. சாம்பிராணி. பற்பாடகம், குங்கிலியம், மிளகு, வெற்றிலை, கோரை, கிராம்பு போன்ற பல்வேறு மூலிகைகள் தொற்று நோய் ஏற்படுத்தும் கிருமிகளுக்கு (Micro organisms) எதிராக தொற்றுநீக்கி மூலிகைகளாகப் பயன்படுத்தப்படும்.

கிராம்பு, கரியோபிலஸ் அரோமற்றிக்கஸ் (Caryophyllus aromaticus) எனும் தாவரவியல் பெயரைக்கொண்ட தாகவும் மிரிட்டேசியே (Myrtaceae) குடும்பத்தைச் சேர்ந்ததாகவும் Clove என்னும் ஆங்கிலப் பெயரைக் கொண்டதாகவும், இலவங்கம் எனும் வடமொழிப் பெயரைக்கொண்டதாகவும் காணப்படுகிறது. அஞ்சுகம், திரளி, வராங்கம், கருவாய், உடற்கடம். சோசம் போன்ற பல பெயர்களைக்கொண்டு அழைக்கப்படும் கிராம்பானது இந்தியாவிலும், இலங்கையிலும் பரந்து காணப்படுகிறது.

கிராம்பை இரசாயனப் பகுப்பாய்வு செய்யும்போது Eugenol, Eugenitic, Caryophyllin, byVolatile Oil, Tannic Acid, Salicylic Acid போன்ற பல்வேறு இரசாயனப் பதார்த்தங்கள் காணப்படுவதோடு தொற்று நோய்களுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடிய சிறப்பான தொற்றுநீக்கி (Antiseptic) மூலிகையாகக் காணப்படுகிறது.

கிராம்பானது பசியைத் தூண்டுவதாகவும் (Stomachic), வாயுவை அகற்றுவதுடன் (Carminative) இசிவகற்றியாகவும் (Antispasmodic), நறுமணமூட்டியாகவும் (aromatic), சித்த மருத்துவ உணர்வகற்றியாகவும் (Local Anaesthetic) பயன்படுவதோடு. பல்வலி தணிக்கும் மருந்தாகவும், பற்களில் காணப்படும் பக்றீரியாக்களுக்கு (Bacteria) எதிராக தொழிற்படக்கூடியதாகவும் இருப்பதனால் Clogard போன்ற பற்பசைகளில் கிராம்பு சேர்க்கப்படுகிறது,

கிராம்பானது வாசனைப்பொருளாக சவர்க்காரங்களில் பயன்படுத்தப்படுகிறது. கடுமையான பல்வலி ஏற்படுகின்றபோது பற்சூத்தை உள்ள பல்லின் மீது கிராம்பை வைத்து கடிப்பதனால் அல்லது கிராம்பிலிருந்து பெறப்பட்ட தொற்றுநீக்கி எண்ணெயை (Antiseptic Clove oil) பாதிக்கப்பட்ட பல்லின்மீது வைப்பதன் மூலம் உடனடியாக பல்வலி இல்லாமற்போவதை காணக்கூடியதாக இருக்கும்.

தொண்டையில் ஏற்படும் தொற்று, இருமல், ஆஸ்துமா (Asthma), வயிற்றோட்டம் சிறுநீரகத் தொற்றுகள். விஷக்கடி சுக்கில நட்டம். சுவாச குழல் அழற்சி (Bronchitis), பாரிச வாதம் (Paralysis), தலைச்சுற்று (Giddiness), தொண்டைப் புண் (Sore Throat). சமிபாடின்மை (Indigestion), சிபிலிஸ் (Seconary Syphilis), வாத நிலைமைகள் (Rheumatic pains), கிருத்தசி வாதம் (Sciatica), நாரிநோ (Lumbago) போன்ற நிலைமைகளுக்கு தயாரிக்கப்படும் மருந்துகளில் கிராம்பு சேர்க்கப்படுவது சிறப்பானது.

இலவங்கச் சூரணம் எனும் மூலிகை மருந்தை சுவாசப்பைக் குழாய் அழற்சி (Bronchitis) நிலைமைகளில் பயன்படுத்தலாம். கிராம்பை நீர்விட்டு மைபோல் அரைத்து நெற்றியில் பற்றிட தலைப்பாரம், நீரேற்றம் நீங்கும். பல்வலி நிலைமைகளில் மேலைத்தேய மருத்துவரால் பயன்படுத்தப்படும் "டென்ரோ" (Dento Toothache Drops) என்னும் திரவ மருந்தில் மென்தோல் (Menthol) 1%உம், பென் சோகேய்ன் (Benzocaine) 5%உம், கிராம்பு (Clove) 2.5%உம், கறுவா (Cinnamon) 2% உம், Creosote 6.5%உம், கற்பூரம் (Camphor) போன்றனவும் காணப்படுகின்றன.

யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவப் பிரிவில் உயராய்வு மையம் உருவாக்கப்பட்டு நுண்ணுயிரியல் மூலிகை தாவர நோய் எதிர்ப்புச்சக்திப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு தொற்றுக் கிருமிகளுக்கு எதிரான மருந்துகள், தொற்று நீக்கிகள் உருவாக்கப்படுவதுடன், உலகளாவிய ரீதியில் தமிழர் மருத்துவம் சென்றடைய தமிழ் மருத்துவ பெட்டகங்களான மூலிகை மருத்துவ நூல்கள் ஆங்கிலமொழியில் மொழிபெயர்க்கப்பட வேண்டும். எமது தேசத்தின் முதன்மையான மூலவளங்களில் ஒன்றான மூலிகை வளத்தை விஞ்ஞான இரசாயன பகுப்பாய்வுகள் செய்து செயலாற்றல் திறனுள்ள தொற்றுநீக்கி மூலிகை மருந்துகளை உருவாக்குவது அவசர அவசிய தேவையாக அமைகிறது.




டாக்டர் வெற்றிவேல் சக்திவேல்
A. m c. b
மூலிகை சுகவாழ்வு நிறுவனம்,தெல்லிப்பழை.

## செலவில்லா மருத்துவம்

**குழந்தைகளுக்கு பேதியானால்**
சிறிது வசம்பை சுட்டுப் பொடியாக்கி தண்ணீர் அல்லது பாலில் கலந்து கொடுக்க பேதி நிற்கும்.

**காலில் கரப்பான் வந்தால்**
செம்பருத்தி இலைச்சாற்றில் சீரகத்தை அரைத்துப் போட குணமாகும்.

**வயிற்றுப் போக்கு**
ஜாதிக்காய் 10 கிராம், கசகசா 100 கிராம், இரண்டையும் நன்கு அரைத்து பனங்கற்கண்டு சேர்த்துக் காய்ச்சி நெய், தேன் சிறிய அளவு சேர்த்து குழந்தைகளுக்கு கொடுத்து வர வயிற்றுப் போக்கு மாறி உடல் தேரும்.

**தொண்டைப் புண்ணுக்கு**
திருநீற்று பச்சிலையுடன் சிறிது வறுத்த மிளகு சேர்த்து அரைத்து தொண்டையில் தடவி வர குணமாகும்.

**சொறி சிரங்கு நமச்சல் இருந்தால்**
நாட்டு மருந்துக் கடையில் கிடைக்கும் காட்டு கஸ்தூரி விதையை அரைத்து தேங்காயெண்ணெயில் காய்ச்சி தேய்த்து சீயக்காய் போட்டு குளிக்க குணமாகும்.

**குழந்தைகளுக்கு சளி இருமல் இருந்தால்**
கற்பூரவல்லி இலைச்சாறும் தேனும் சமமாகக் கலந்து காலை மாலை சங்களவு கொடுக்க குணமாகும்.

**சுண்ணாம்பு வாயில் பட்டால்**
தேங்காயை நன்கு அரைத்து வாயில் தடவவும்.

**வயிற்று வலிக்கு**
1 ரீஸ்பூன் சீரகம், 1 ரீஸ்பூன் வெந்தயம் இரண்டையும் பொடித்து மோருடன் கலந்து கொடுக்கவும்.

**குழந்தைகள் மலம் கழிய**
பிறந்த பச்சிளம் குழந்தைகளுக்கு மலம் சரியாக கழியாவிட்டால் நாட்டு மருந்துக் கடையில் கிடைக்கும் மகிழம் விதையை மைபோல் அரைத்து ஒரு சிறு துணி திரியில் அதைத் தடவி மல வாசலில் வைத்தால் உடன் மலம் கழியும்.

**குழந்தைகளுக்கு மலம் நாற்றமாக போனால்**
வயல் வரப்புகளில் கிடைக்கும் பொடுதலையின் காய், இந்துப்பு, 2 பூண்டு, மிளகு சம அளவு எடுத்து வறுத்து இடித்து குடிநீர் செய்து கொடுக்க மாறும்.

**குழந்தைகளுக்கு சாதாரண காய்ச்சல் இருந்தால்**
கிராம்பு, கறுவாப்பட்டை, ஏலம், நிலவேம்பு கசாயம் செய்து சங்களவு காலை – மாலை கொடுக்க குணமாகும்.

# கர்ப்பக் காலத்தின் தைரொய்ட் அளவுகளும், தீர்வுகளும்!

கர்ப்பக் காலத்தில் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுப்பது அவசியம். இதில் தைரொய்ட் சோதனை என்பது பிரதானம். ஏனெனில், கர்ப்பக் காலத்தில் தைரொய்ட் இருந்தால் அது கருவிலிருக்கும் குழந்தையையும் பாதிக்கும். எனவே, அதைக் கட்டுப்படுத்த மருத்துவரின் தகுந்த ஆலோசனைகளைப் பெறுவது மிக அவசியம்.

***தைரொய்ட் அறிகுறிகள்***

தைரொய்ட் ஹைப்போ தைரொய்டிசம் மற்றும் ஹைப்பர் தைரொய்டிசம் என இரண்டு வகைகள் உள்ளன. ஹைப்போ தைரொய்டிசத்தில் தைரொய்ட் சுரப்பி தேவையானதை விட குறைவான ஹோர்மோனை உற்பத்தி செய்கிறது.

ஹைப்பர் தைரொய்டிசத்தில் தைரொய்ட் சுரப்பி அதிக ஹோர்மோன்களை உற்பத்தி செய்கிறது. உடல் எடை அதிகரிப்பு, முகம் வீக்கம், மலச்சிக்கல் மற்றும் சோர்வு ஆகியவை இதன் அறிகுறிகளாகும்.

***கர்ப்பக் காலத்தில் பரிசோதனை***

ஹைப்பர் தைரொய்டிசத்தின் அறிகுறிகள் தோன்றும்போது TSH (தைரொய்ட் தூண்டுதல் ஹோர்மோன்) சோதனை செய்யப்படுகிறது. சாதாரண TSH அளவை விட குறைவாக இருந்தால் உங்களுக்கு ஹைப்பர் தைரொய்டிசம் உள்ளது என்று அர்த்தம். உடலிலுள்ள ஹோர்மோன் அளவை சமநிலைப்படுத்த மருத்துவர்கள் தைரொய்ட் எதிர்ப்பு மருந்துகளை பரிந்துரைக்கின்றனர். இந்த மருந்து கருவில் இருக்கும் குழந்தைக்கு நல்லது என்று கூறப்படுகிறது. கர்ப்பக் கால திட்டத்துக்கு முன், கர்ப்பக் காலத்தில் தைரொய்ட் பரிசோதனை செய்ய வேண்டும் என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

***கர்ப்பக் காலத்தில் தைரொய்ட் அளவு***

கர்ப்பக் காலத்தில் சாதாரண தைரொய்ட் அளவு 0.4–4மிலியூ/லி ஆக இருக்க வேண்டும்.

முதல் மூன்று மாதங்களில் தைரொய்ட் அளவு 0.1 முதல் 2.5 மிலியூ/லி வரை இருக்க வேண்டும்.

அதாவது 0.1மிலியூ/லி க்கு குறையாது, 2.5மிலியூ/லி க்கு மேல் இல்லை.

இரண்டாவது மூன்று மாதங்களில் தைரொய்ட் அளவு 0.2 முதல் 3.0 மிலியூ/லி வரை இருக்க வேண்டும். அதாவது 0.2மிலியூ/லி க்கும் குறைவாக இல்லை, 3.0மிலியூ/லி க்கு மேல் இல்லை. மூன்றாவது மூன்று மாதங்களில் தைரொய்ட் அளவு 0.3மிலியூ/லி க்கும் குறைவாக இருக்கக்கூடாது. 3.0மிலியூ/லி ஐ விட அதிகமாக இருக்கக்கூடாது.

***கர்ப்பக் காலத்தில் தைரொய்ட் வந்தால் என்ன செய்வது?***

கர்ப்பக் காலத்தில் ஹைப்போ தைரொய்டிசத்தைக் குறைக்க உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

மேலும் நடக்கவும். மூச்சுப் பயிற்சிகள் மற்றும் யோகா செய்ய வேண்டும். தைரொய்ட் அளவை தவறாமல் பரிசோதிக்க வேண்டும். கர்ப்பக் காலத்தில் நல்ல உணவை உட்கொள்ள வேண்டும். பழங்கள் மற்றும் காய்கறிகளை சாப்பிடுங்கள். குடும்ப உறுப்பினர்களில் யாருக்காவது தைரொய்ட் இருந்தால், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கவும்.

***சாப்பிட வேண்டிய உணவுகள்***

அயோடின் குறைவாக உள்ள உணவுகளை உண்ணுங்கள்.தைரொய்ட் ஹோர்மோன்களின் உற்பத்தியில் அயோடின் முக்கிய பங்கு வகிக்கிறது.அயோடின் குறைந்த உணவுகள் தைரொய்ட் ஹோர்மோன்களைக் கட்டுப்படுத்த உதவுகின்றன.



## சமையல் ரிப்ஸ்

★ வாழைப்பூ சுத்தம் செய்யும்போது கையில் எண்ணெய் தடவிக் கொண்டால் கையில் கறை ஒட்டாது.

★ குழம்பில் காரம் அதிகமானால் சிறிது வெல்லம் சேர்த்தால் காரம் குறைந்துவிடும்.

★ மாவு பிசையும்போது சிறிது பால் சேர்த்து பிசைந்தால் சப்பாத்தி மிருதுவாக வரும்.

★ சாதம் வெள்ளை யாகவும், உதிரியாகவும் வர, அரிசி ஊறவைக்கும் போது சில ஐஸ்கட்டிகள் சேர்த்து ஊறவைத்தால் சாதம் உதிரியாக வரும்.

★ கருவேப்பிலை நீண்ட நாள் வாடாமலும், நிறம் மாறாமலும் இருக்க, கருவேப்பிலையை தண்ணீரில் அலசி உலர வைத்து, பின்னர் காற்று புகாத டப்பாவில் போட்டு பிரிட்ஜில் வைத்தால் ஒரு மாதம் வரை கெட்டுப் போகாது.

## முதலுதவி

**மயக்கம்**

வேலை செய்யும்போதோ மற்ற நேரங்களிலோ மயக்கம் வருவதுபோல் தெரிந்தால், உடனே தாமதிக்காமல் மேலுதட்டில் இருக்கும் சிறிய பள்ளத்தில் மூக்குக்குக் கீழ் ஆட்காட்டி விரலை வைத்து 1 நிமிடம் இலேசாக அழுத்தம் கொடுத்து கசக்கி விடுவதன் மூலம் மயக்கத்திலிருந்து உடனடி நிவாரணம் பெறலாம்.

**வயிற்றுப் பிரச்சினைகள்**

தொப்புளிலிருந்து இடது பக்கம் 2 அங்குலம் உங்கள் கைவிரல் அளவு அளந்து உங்களின் ஆட்காட்டி விரலால் ஒரு நிமிடம் அழுத்தம் கொடுங்கள். சாதாரண வயிறு உபாதைகள் நீங்கும்.

கால் கட்டை விரலிலிருந்து மூன்றாவது விரலுக்கும் (நடுவிரல்) இரண்டாவது விரலுக்கும் இடைப்பட்ட சவ்வுப் பகுதியில் ஒரு நிமிடம் அழுத்தம் கொடுங்கள்.

**பாம்புக் கடி**

இறுக்கி கட்டுப் போடவேண்டாம். இறுக்கி கட்டுப் போடுவதன்மூலம், சில சமயங்களில் விஷம் ஓரிடத்திலேயே தங்குவதால் கடித்த பகுதி அழுகிப்போகும். இலேசான இறுக்கத்துடன் கட்டுப்போடு வது நல்லது.

காயப்பட்ட இடத்தை ஓடும் நீரில் சோப்பு போட்டு மூன்று முறை கழுவவும்.

பாம்பு கடிபட்டவர் பதற்றமடையக்கூடாது. அவர் பதற்றமடையும்போதும் இரத்த ஓட்டம் அதிகரிக்கும்.

பாம்பு கடித்துவிட்டால் வேகமாக நடக்க கூடாது. ஏனெனில் நாம் வேகமாக நடக்கும் போது இரத்த ஓட்டம் அதிகரிக்கும். அதனால் நம் இரத்தத்தில் கலந்துள்ள விஷம் விரைவில் நம் உடல் முழுவதும் பரவி உயிரிழப்பை விரைவுபடுத்தும்.

இயன்றவரை பாம்புக் கடிக்குள்ளானவரை தைரியமூட்டவும். எந்த அளவுக்கு அவரின் இதயத்துடிப்பைக் கட்டுப்படுத்து கின்றோமோ, அந்தளவுக்கு அவரைக் காப்பாறுகின்றோம்.

பாம்பு கடித்த இடத்தை, இதயத்தைவிடத் தாழ்த்தி வைக்கவும். பாம்புக் கடிக்குள்ளான வரை படுக்க வைத்து மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லவும்.

பாம்பு கடித்துவிட்டால், பாம்புக் கடிக்கு உள்ளானவரை தனியார் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லாதீர்கள். ஏனெனில் பெரும்பாலான தனியார் மருத்துவமனைகளில் பாம்புக் கடித்தோரை சேர்ப்பதில்லை. எனவே, கால தாமதம் செய்யாமல், உடன் அரச மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லவும்.

இயலும் என்றால் பாம்பு பற்றிய விபரங் களைப் பெறவும். சில சமயங்களில் அடித்துக் கொல்லக்கூடிய நிலை ஏற்படலாம். எனினும், இவ்வாறு அடிக்க நேர்ந்தால், பாம்பின் தலையில் அடித்துக் கொல்ல வேண்டாம். ஏனென்றால், தலையை வைத்துத்தான் பாம்பை இனம் காணலாம். கடிபட்ட நேரம் போன்ற தகவல்கள் முக்கியமானவை.

பாம்பு கடித்தால் கிட்னியையும், கண்களையும் உடன் பாதிக்கக்கூடும். உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07

# தமிழ் முரசு

தமிழ் முரசு

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மலர் : 3 இதழ் : 08 - 20.08.2023



ஈழத்தின்
தனித்துவ ஓவியர்
ஆசை இராசையா



வைத்தியராக
இருந்தாலும்
என்னால்
நடனத்துறையை
விட்டுக்கொடுக்க
முடியவில்லை

ரேக்காஞ்சலி ஜோன் சிவராஜ்

மூத்த கலை
இலக்கிய ஆளுமை
ஜவாத் மரைக்கார்

பேராதனைப் பல்கலைக்கழகத்
தமிழ்த்துறை நடத்திய
மலையகம் 200
ஆய்வு மாநாடு

# தமிழ் முரசு

තමිල් මුරසු

Thamil Murasu

நிகரென்று கொட்டு முரசே - இந்த நீணிலம் வாழ்பவ ரெல்லாம்

மின்னஞ்சல்: thamilanmurasu@gmail.com

தொலைபேசி: 0115 200 900/011 588 6187

விளம்பரம் : 0114 846 097


## பல்கலைக்கழகங்களின் சமூகப் பொறுப்பு

மலையகப் பல்கலைக்கழகம் ஒன்றின் தேவை குறித்தான சமூகக் கேள்வி கடந்த இரு தசாப்தத்துக்கும் மேலாக இலங்கை மலையகத்தில் ஒலித்து வருகிறது.

அத்தகைய பல்கலைக்கழகம் மலையகத்தில் அமைவது என்பதாக மட்டும் கொண்டால், ஏற்கனவே மலையகத்தில் அமையப் பெற்றுள்ள மூன்று பல்கலைக்கழகங்கள் அந்தத் தேவையைப் பூர்த்திசெய்துவிட்டன எனலாம்.

பேராதனைப் பல்கலைக்கழகம் (கண்டி மாவட்டம்), சப்ரகமுவ பல்கலைக்கழகம் (இரத்தினபுரி மாவட்டம்), ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் (பதுளை மாவட்டம்) ஆகிய மூன்றுமே மலையகப் பல்கலைக்கழகங்கள்தான்.

ஆனாலும் மலையக மக்களின் கோரிக்கையாக எழும் மலையகப் பல்கலைக்கழகம் என்பது அதன் அமைவிடத்தால் மட்டுமல்லாது அதன் உள்ளடக்கத்தாலும் மலையக கருத்தியலுக்கும் கலாசார பண்பாட்டு ஆய்வியலுக்கும் முக்கியத்துவம் அளிப்பதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுவே அந்த எதிர்பார்ப்பாகும்.

உதாரணமாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வடபகுதி தமிழர் பண்பாட்டு அம்சங்களையும், கிழக்குப் பல்கலைக்கழகம் கிழக்குத் தமிழர் பண்பாட்டு அம்சங்களையும், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் முஸ்லிம் பண்பாட்டு அம்சங்களையும், ஏனைய தேசிய பல்கலைக்கழகங்களில் சிங்கள பண்பாட்டு அம்சங்களையும் முன்னிறுத்திச் செயற் படுவதைப்போல் மலையகத் தமிழ் பண்பாட்டு அம்சங்களை முன்னிறுத்திய தேசிய பல்கலைக்கழகம் ஒன்றின் தேவையே மலையக மக்களின் கோரிக்கையாக உள்ளது. இதன்மூலம் அவர்களது வாழ்வியல், பண்பாடு, மொழி, கலை, கலாசாரம், கல்வி, சமூகப் பொருளாதாரம் உள்ளிட்ட வரலாறும் எதிர்காலமும் ஆய்வுக்கு உட்படல் வேண்டும். அந்தச் சமூகத்தின் அடையாளமாக அந்தப் பல்கலைக்கழகம் திகழ வேண்டும் என்பதே வேட்கையாகும்.

மலையகம் 200 ஆண்டுகளைக் கடக்கும் இந்த காலகட்டத்திலும் கூட கடந்த 20 வருடங்களாக முன்வைக்கப்படுவரும் இத்தகைய மலையகப் பல்கலைக்கழக கோரிக்கை கானல்நீராகவே கடந்து செல்கிறது.

ஆனாலும் மலையகம் 200 அடைவுகளில் ஒன்றாக, பேராதனைப் பல்கலைக்கழகம் மலையகம் 200 ஆய்வு மாநாடு ஒன்றை நடத்தியுள்ளமை ஆறுதலளிப்பது மட்டுமல்லாது, பேராதனைப் பல்கலைக்கழக உருவாக்க காலத்திலிருந்து இன்றைய நாள் வரைக்குமான80 ஆண்டு காலத்தில் இப்படியான மாறுதல் ஒன்றாகவும் கூட அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக, சூழவும் மலையகத் தமிழ் மக்கள் வாழும் கண்டி, பேராதனை பிரதேசத்தில் அமைந்த பல்கலைக்கழகம் அந்த மக்கள் குறித்த ஆய்வு மாநாடு ஒன்றைச் செய்த முதல் சந்தர்ப்பமாக இது அமைகிறது. இந்த ஆய்வு மாநாடு இலக்கியத்துக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந்தது என்பதும், தமிழ்த்துறை இதனை ஏற்பாடுசெய்து நடத்தியிருந்தது என்பதும் கவனிக்கத்தக்கது. வேறு துறையினரும் இதுபோன்ற முயற்சிகளைச் செய்யலாம்.

உதாரணமாக, அரசறிவியல் துறை மலையக அரசியல் குறித்தும், சமூகவியல் துறை இந்தச் சமூகம் குறித்தும், விவசாய பீடம் மலையக விவசாயம் குறித்தும், விஞ்ஞான பீடம் STEM கல்வியல் மலையக நிலை குறித்தும் ஆய்வு மாநாடுகளை நடத்தலாம்.

பேராதனைத் தவிர, சப்ரகமுவ பல்கலைக்கழகம் பெருந்தோட்டத்துறை முகாமைத்துவ கற்கைநெறியைக் கொண்டுள்ள பல்கலைக்கழகம் என்றவகையில் அதனை மலையகம் 200 உடன் தொடர்புடையதாக ஆய்வு மாநாடு ஒன்றை நடத்தலாம். ஊவா பல்கலைக்கழக பொது நிர்வாகத்துறை அரச பொது நிர்வாகம் சார்ந்து இலங்கையில் மலையகத் தமிழ் மக்களின் நிலையை ஆய்வுக்கு உட்படுத்தலாம்.

யாழ்ப்பாணம், கிழக்கு, தென்கிழக்குப் பல்கலைக்கழகங்கள் தமிழ் பேசும் சகோதர இனம் என்றவகையிலும் ஏனைய பல்கலைக் கழகங்கள் சகோதர சிங்கள மக்களுக்குள் மலையகத் தமிழர் குறித்த உரையாடலைச் செய்வதற்கான தளமாகவும் இதுநாள்வரை அமையாத மலையகப் பல்கலைக்கழகத்தின் அவசியத்தை நாட்டுக்கு உணர்த்துவதான ஒரு முன்னெடுப்பாகவும், அடையாளமாகவும் ஆய்வு மாநாட்டை ஒழுங்கு செய்யலாம்.

இந்தச் சமூகப் பொறுப்பை இலங்கைத் தேசிய பல்கலைக்கழகங்கள் நிறைவேற்றுவதற்கான ஓர் ஆரம்பத்தை வழங்கியுள்ள பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஒழுங்குசெய்த மலையகம் 200 ஆய்வு மாநாட்டை கொள்ளலாம். ஒழுங்குசெய்த தலைவர் உள்ளிட்ட குழுவினருக்கு 'தமிழ் முரசு' தனது வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் பதிவுசெய்து கொள்கிறது. ஏனைய துறையினரும் பல்கலைக்கழகங்களும் இதுபோன்று செயற்பட வேண்டும் என எதிர்பார்க்கிறது.

## சிறப்பாக நடந்து முடிந்த 'ஓயாத ஆளுமைகள்' நூல் வெளியீட்டு விழா




காலி மாவட்ட ஓய்வுபெற்ற கல்வியிலாளர்கள் அமைப்பு ஏற்பாடுசெய்த ஓயாத ஆளுமைகள் நூல் வெளியீட்டு விழா அண்மையில் காலி முஸ்லிம் மகளிர் கல்லூரி கேட்போர் கூடத்தில் அமைப்பின் தலைவர் கலாபூஷணம் ஏ.சி.எம்.ஜிப்ரி தலைமையில் நடைபெற்றது.

இந்த விழாவில் கொழும்பு பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானப் பிரிவு சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ்.அனீஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டதோடு மின்சக்தி எரிசக்தி அமைச்சின் பணிப்பாளர் நாயகம் ரிஸ்னா அனீஸ் விசேட அதிதியாக கலந்து சிறப்பித்தார்.



கௌரவ அதிதிகளாக தென் மாகாண முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஜே.மொகமட், தென் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர்(தமிழ்) அஷ்ஷெய்க் எம்.ஏ.எம்.மசாயிர், எலிஜன் ஜுவலரி உரிமையாளர் எஸ்.எச்.எம். நிசாம், சீ பெயார் நிறுவனப் பணிப்பாளர் ஏ.எச்.எம்.அம்ஜத், லங்கா ஜெம் என்ட் ஜுவலரி முகாமைத்துவப் பணிப்பாளர் இப்லால் குத்தூஸ், மாணிக்கக்கல் வர்த்தகர் ஏ.டபிள்யு.எம்.பாரூக், தௌபீக் செரமிக் முகாமைத்துவப் பணிப்பாளர் எம்.ரீ.அக்ரம், லங்கா ஹாட்வெயார் உரிமையாளர் சப்ராஸ் மொஹமட் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அமைப்பின் தலைவர் கலாபூஷணம் ஏ.சி.எம். ஜிப்ரி வரவேற்புரை நிகழ்த்தியதோடு, இந்த அமைப்பை ஆரம்பிக்க எடுத்த முயற்சிகள், தடைகள், எதிர்கொண்ட பிரச்சினைகள் குறித்து விளக்கினார். ஓய்வுபெற்ற தென் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான அல்ஹாஜ் எம்.ஜே. முஹம்மத், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் புருஹானுத்தீன் ஜலால்தீன் மற்றும் தற்போதைய தென் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம்.மஸாஹிர், காலி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஐ.எம்.பாரூக் ஆகியோர் விசேட சொற்பொழிவு ஆற்றினர். இவ்வாறான அமைப்புகளை ஏனைய மாவட்டங்களில் ஆரம்பிப்பதன் அவசியத்தையும் கல்விச் சமூகத்தின் உயர்வுக்கு கல்வியலாளர்களின் பங்களிப்பு பற்றியும் அவர்கள் கருத்துத் தெரிவித்ததோடு கல்வியலாளர்கள் ஆற்றிய பங்களிப்பிற்கு அவர்களை கௌரவிப்பதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்கள்.

முஸ்லிம் சமூகத்தின் வரலாறு பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவை ஆவணப் படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் பிரதம அதிதியாக கலந்துகொண்ட கலாநிதி அனீஸ் தெளிவுபடுத்தினார். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான உறவில் ஏற்பட்டுள்ள தூரம் கல்விச் சமூகமொன்றை உருவாக்க கல்வியியலாளர்கள் ஆற்றவேண்டிய பங்களிப்பு பற்றியும் அவர் எடுத்துரைத்தார். மின்சக்தி வலு அமைச்சின் பணிப்பாளர் ரிஸ்னா அனீஸும் முக்கிய உரையாற்றினார்.

ஓயாத ஆளுமைகள் நூலின் தொகுப்பாசிரியர் முன்னாள் ஆசிரிய ஆலோசகர் எம்.எஸ்.ஹிசாம் நூல் பற்றி விளக்கியதோடு, இதில் காலி மாவட்டத்தைச் சேர்ந்த 79 ஆளுமைகளின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வின்போது மூத்த ஆளுமையான எம்.ஜே.எம்.ஹம்மாத் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டதோடு கல்வியியலாளர்களுக்கு அதிதிகளால் நூல்கள் வழங்கப்பட்டன.

**பாஹிம்**



## பவள இதழாக 'கலைமுகம்'

திருமறைக் கலாமன்றத்தால் வெளியிடப்படும் கலைமுகம் கலை, இலக்கிய சமூக இதழின் 75ஆவது இதழ் பவள இதழாக இருநூறுக்கும் அதிகமான பக்கங்களுடன் அறுபதுக்கும் மேற்பட்ட படைப்பாளர்களின் ஆக்கங்களைத் தாங்கி இந்த வாரத்தில் வெளிவந்துள்ளது.




கலை இலக்கியம், நாடகம், ஓவியம், சினிமா உட்பட பல்வேறு துறை சார்ந்த கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், மொழிபெயர்ப்புக் கவிதைகள், மொழிபெயர்ப்புச் சிறுகதை, நூல் மதிப்பீடுகள், பத்தி என்பவற்றுடன் இந்த இதழின் மற்றுமொரு சிறப்பம்சமாக இலங்கையிலிருந்து வெளிவந்த, மிக முக்கியமான உரையாடல்களை முன்னெடுத்த சரிநிகர் பத்திரிகையின் ஆசிரியர்களில் ஒருவராக இருந்து அதன் உருவாக்கத்திலும் உள்ளடக்கத்திலும் காத்திரமான பங்காற்றிய எஸ்.கே.விக்கேனஸ்வரன் உடனான விரிவான நேர்காணலின் முதலாவது பகுதியும் வெளிவந்துள்ளது.

இதழின் விலை 1,200 ரூபா

தொடர்புகளுக்கு - 077 6692657

# இடர்கால இலக்கியங்கள்

# மௌனத்தீவு



கடந்த காலங்களில் வெளியிடப்பட்ட எந்தவொரு வரலாற்று நூல்களிலும் கற்பனை இல்லை என்று சொல்லிவிட முடியாது. அதில் வரும் கதாபாத்திரங்களைச் சுவைபடப் பேசவைத்து, அவற்றுக்குக் கலைவடிவம் கொடுத்து அவர்களை உயிரூட்டமுள்ளவர்களாகக் கற்பனை உலகில் நடமாட வைத்ததே பிரபலம்பெற்ற வரலாற்றுக் காதாசிரியர்களின் வெற்றி எனலாம். பொதுவாக வரலாற்றுக் கதைகளில் பாத்திரங்கள் பேசத் தொடங்கிவிடுவதோடு அவை வாசகர்களோடு ஒன்றித்துப் பயணிக்கும் ஆற்றலைக் கொண்டுவிடுவதுதான் கதாசிரியர்களின் திறன். பல வரலாற்றுப் படைப்புகள் காலங்கடந்தும் நிலைகொள்வதற்கு அதுவே மூலகாரணமாகவும் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

வரலாற்றுக் கதைகளில் மட்டுமல்ல, கலைவடிவங்களாக வெளிப்பட்ட அனைத்திலும் கற்பனைகள் உள்ளன. கற்பனைகள் இல்லாத கலைவடிவங்கள் இல்லை என்று சொல்லுமளவுக்குக் கற்பனைகள் அவற்றுக்குச் சுவை சேர்த்திருக்கின்றன.

அந்தவகையில் எழுத்தாளர் வேலுபரியை ஆசிரியராகக்கொண்டு வெளிவந்திருக்கிறது மௌனத்தீவு. அந்த நூல் கடந்த 12.08.2023 அன்று சனிக்கிழமை நல்லூரிலுள்ள துர்க்கா மணிமண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெற்ற நூல் வெளியிட்டு விழாவில் வாழ்த்துரையை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் மற்றும் விரிவுரையாளர் வை.ஈழலிங்கம் ஆகியோர் வழங்கினர். ஹெச்.என்.பி. வங்கியின் பிராந்திய முகாமையாளர் மகேசன் தயாகரன் வெளியீட்டுரையை நிகழ்த்தினார். யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறை விரிவுரையாளரான கலாநிதி மகேந்திரன் திருவரங்கன் நயப்புரையை வழங்கினார். நூலாசிரியர்வே.பரிபுரபவன் (வேலு பரி) ஆற்றிய ஏற்புரையோடு நிகழ்வு முற்றுப்பெற்றது.

வேலு பரி தற்போது அவுஸ்திரேலியாவிலுள்ள சர்வதேச தமிழர் நிவாரண உதவி வலையமைப்பு என்ற நிறுவனத்தின் கல்விப் பொருளாளராகவும், யாழ்ப்பாணம், நாவற்குழியில் அமைந்துள்ள சிவபூமி அருங்காட்சியகத்தின் காப்பாளராகவும், அவு. சிட்னி முருகன்கோவில் தொண்டர் சபையிலும் இணைந்து நற்பணியாற்றி வருகிறார். யாழ்ப்பாணம் சங்கானையைப் பிறப்பிடமாகக்கொண்டவர். தமிழ்மொழியில் ஆர்வம் மிக்கவர். அதனால் தமிழ் தொடர்பில் பணியாற்றும் பல நிறுவனங்களில் அவருக்குத் தொடர்பு உண்டு.

இந்நூலுக்கு கலாநிதி ஆறு திருமுருகன் எழுதியிருக்கும் வாழ்த்துரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்.

வரலாற்று நூல்களில் கற்பனைக்கு இடமில்லை என்று சொல்பவர்கள் உண்டு. ஆனால், வரலாற்றை மக்கள் மனதில் இருத்துவதற்கு எழுத்தாளர்கள் கற்பனைகளை இணைத்துக்கொள்வது வழக்கம். பொன்னியின் செல்வன் எழுதிய கல்கி, வெறும் மன்னர்களையும், மன்னர்கள் நிகழ்த்திய போர்களையும் எழுதியிருப்பாராயின் அவை பிரபல்யம் பெற்றிருக்க மாட்டாது. இயற்கை வர்ணனைகளும், கதாபாத்திரங்களின் காதல், வீரம், தந்திரம் போன்ற உணர்சிகளுக்கு உயிரோட்டம் கொடுத்ததினால் நூற்றாண்டு கடந்தும் பொன்னியின் செல்வன் வாழத்தகுதி பெறுகின்றது. அந்தவகையில் மௌனத்தீவு சில தகவல்களை தமிழ் உலகிற்குத் தருகிறது. இது சாதாரண விடயமல்ல. பல நூல்களைத் தேடி ஆராய்ந்து படைக்கப்பட்டுள்ளது. தென்கிழக்கு ஆசிய நாடுகள் பற்றிய முழுமையான ஆராய்ச்சி முடியவில்லை என்பது நூலாசிரியரின் ஆதங்கம். தான் அறிந்ததை ஏதோ ஒரு வகையில் சமூகத்துக்குக் கொடுக்க வேண்டும் என்பதும், பல நாடுகளுக்குச் சென்று அந்நாடுகள் பற்றிய வரலாறுகளை ஆர்வத்துடன் அறிந்து அவற்றை அகத்தில் சுமந்துள்ள நூலாசிரியர் ஒரு பகுதியையாவது பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்று முனைந்ததன் விளைவே இந்த நூலாகும். நூலாசிரியர் பணியை மனதார வாழ்த்துகிறேன். அவரைக் கடந்த இருபத்து மூன்று ஆண்டுகளாக அறிவேன். அவரில் சில ஆக்கபூர்வமான அவதானிப்புகள் உள்ளன என்பதை உணர்ந்தேன். – என செஞ்சொற்செல்வர் தனது வாழ்த்துரையை முடித்திருக்கிறார்.

விரிவுரையாளரும், அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணப்பாளருமானவை.ஈழலிங்கம் அந்நூலுக்காக அவர் எழுதிய ஆசிரியர் அறிமுகத்தில்...

வேலு பரியின் கன்னிப்படைப்பாக மலர்ந்துள்ளது இந்த இனிய நாவல். இளவயது முதலாக அவரது உள்ளத்தில் தேங்கிக் கிடந்த இலக்கிய ஆர்வம் புலம்பெயர்ந்து பல ஆண்டுகளுக்கு முன்னர் வேறு நாட்டுக்குச் சென்று மாறுபட்ட கலாசாரத்தில் வாழ்ந்து வந்தாலும், தற்போது அது நூல் வடிவம் பெற்று வெளிவந்துள்ளது. பல ஆண்டுகள் வெளி நாடுகளில் வாழ்ந்தாலும் இவரது இளமைக் கால நினைவுகள், சம்பவங்கள் என்பன இந்நாவலுக்குத் தளமாக அமைந்துள்ளன.

வரலாற்று நாவல் படைப்பது கடினமானதொரு பணி. வரலாற்றுப் பின்புலம் உண்மையானதாக இருத்தலை உறுதி செய்துகொண்டு அந்த வரலாற்றுப் பின்புலம் பிறழ்வுபடாமல் கற்பனையில் கதையை நகர்த்திச் செல்லல் வேண்டும். இந்தவகையில் இந்நூலாசிரியர் வரலாற்றுப் பின்னணிச் சம்பவங்களை இந்தக் கதையில் துல்லியமாகக் கையாண்டு கொண்டுள்ளமை போற்றப்பட வேண்டிய ஒன்று. கதை சொல்லும் விதம், வசன நடை ஓட்டம், கதையில் வரும் திருப்பங்கள் என்பன கதையைப் படிப்பவர்களைக் கதையுடன் ஒன்றிவிடச் செய்கின்றன. நூலாசிரியரின் இலக்கிய ஆர்வமும், விடாசியற்சியும் இந்த வரலாற்று நாவலை அச்சேற வகை செய்துள்ளது என்று சொல்லலாம். நூலாசிரியரின் பணி சிறந்து மேலோங்க எனது நல்வாழ்த்துகள். – என அவர் அறிமுகம் முற்றுப்பெறுகிறது.

நூலின் பின் அட்டைக் குறிப்பில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் "ஈழத் தமிழர் வரலாறு, பண்பாடு என்பவற்றை ஆராய்ந்து ஆவணப்படுத்த வேண்டும் என்பது நூலாசிரியரின் நீண்டகாலக் கனவாக இருந்தது. அதன் ஒரு பகுதியை நிறைவு செய்வதாகவே "மௌனத்தீவு" என்ற இந்நூலைப் பார்க்கிறேன்" எனத் தனது கருத்தைப் பதிவு செய்திருக்கிறார்.

மொத்தத்தில் சிறந்தொரு முயற்சி. பாராட்டுகள்.

**கணபதி சர்வானந்தா**




ஸ்ரீநந்தகுமார் எழுதிய 'யோகியர் சிகிச்சை இரகசியம்' எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் அமைந்துள்ள சபாலிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரீகத் தலைவர் கலாநிதி முகுந்தன் தலைமையில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவிற்கு, பிரதம விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு திருமுருகன் கலந்துகொண்டார்.

இதேவேளை, யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவபீடத் தலைவர் கலாநிதி லிவியன் இந்நூலுக்கான ஆய்வுரையாற்றினார். இந்நிகழ்வில் கலைத்துறை சார்ந்தோர், பொதுமக்களெனப் பலர் கலந்துகொண்டனர்.

**பு.கஜிந்தன்**

# பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடத்திய மலையகம் 200 ஆய்வு மாநாடு

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் ஏற்பாட்டில் 'மலையகம் 200' எனும் தமிழ் இலக்கிய ஆய்வு மாநாடு கடந்த செவ்வாய்க்கிழமை (15) பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடக் கருத்தரங்கு மண்டபத்தில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழகப் பொருளியல்துறைப் பேராசிரியர் ச.விஜேசந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேல் சுவாமி ஆலயத்தின் அறங்காவலர் முத்தையாபிள்ளை ஸ்ரீகாந்தன், பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பீடப் பீடாதிபதி கலாநிதி இ.எம்.பி.சி.எஸ். ஏக்கநாயக்க ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர். மாநாட்டின் ஆரம்ப நிகழ்வுகளாக மங்கல விளக்கேற்றல், தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியன இடம்பெற்றன.

மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் செல்வி த.ஜெலானியின் வரவேற்புரையைத் தொடர்ந்து கலைப்பீடப் பீடாதிபதி கலாநிதி இ.எம்.பி.சி.எஸ்.ஏக்கநாயக்கவின் உரை இடம்பெற்றது. பீடாதிபதியின் உரை மலையக மக்களைப் பற்றிதாகவும், சமூக பண்பாட்டுப் புரிந்துணர்வு பற்றியதாகவும் அமைந்தது.

பேராதனைப் பல்கலைக்கழக வரலாற்றில் மலையக மக்களுக்கெனத் தனியான ஆய்வு மாநாட்டை இன்றைய நாள் தமிழ்த்துறை ஏற்பாடு செய்து நடத்துவது வரவேற்கத்தக்க விடயம் என்றும் சிங்களம், தமிழ், முஸ்லிம் என்ற பாகுபாடு இல்லாமல் யாவரும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்றும் கூறினார்.

மேலும் மாணவர் பாடநூல்களில் இணைக்கப்பட்டுள்ள இலங்கையின் வரலாற்று எழுதுகையானது சிங்கள மக்களின் தாக்கத்திற்கு அதிகம் உள்ளாக்கப்பட்ட காரணத்தால் அவற்றின் நம்பகத்தன்மை என்பது குறைவாக உள்ளது. இலங்கையின் உண்மையான வரலாறு என்பது நாட்டின் மூவின மக்களின் பங்குபற்றுகையினூடாகவே எழுதப்படுதல் அவசியம் எனவும் தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

கலைப்பீடப் பீடாதிபதியின் உரையைத் தொடர்ந்து மாநாட்டின் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ.பிரசாந்தன் தலைமையுரை வழங்கியிருந்தார்.

அவர் தமது உரையில், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையானது பல ஆய்வு மாநாடுகளை நடத்தி வருகின்றது. அதன் தொடர்ச்சியாக இம்முறை மலையக மக்களின் அரசியல், சமூக, வாழ்வியல் இலக்கியம் ஆகியன குறித்து இடம்பெறும் இம்மாநாடானது தமிழ்த்துறை வரலாற்றிலும் மலையக தமிழ் இலக்கிய வரலாற்றிலும் மிகுந்த முக்கியத்துவம் பெறும் ஒன்று எனக் குறிப்பிட்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கும் மலையக இலக்கியத்துக்கான தொடர்பு மிக நீண்டது. மலையக இலக்கிய வரலாற்று எழுதுகைக்கு அடித்தளமிட்டதில் தமிழ்த்துறையின் பங்கு அளப்பரியது. பேராசிரியர் சு.வித்தியானந்தனின் நாட்டுக்கூத்துகளின் மேடையேற்றுகையோடு ரம்பமாகிய இம்மரபானது பேராசிரியர் க. அருணாசலம், பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், பேராசிரியர் துரை.மனோகரன், கலாநிதி சோதிமலர் ரவீந்திரன், கலாநிதி பெருமாள் சரவணகுமார், சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம். ஜெயசீலன் வரை இம்மரபு நீள்கிறது எனக் குறிப்பிட்டிருந்தார்.

தொடர்ந்து மாநாட்டின் பிரதம விருந்தினர் பேராசிரியர் ச.விஜேசந்திரனின் உரை இடம்பெற்றது. இவ்வுரையில், மலையகத் தமிழர்களின் வாழ்விட பிரச்சினை, அவர்கள் இன்றுவரை நிலமற்றவர்களாகத் தொடர்கின்ற அவலம், இன்னும் ஒரு ஐம்பது வருடங்களுக்குள் நிவர்த்திசெய்யப்பட வேண்டும் என்ற ஒருதூர நோக்கையும் வெளிப்படுத்தியிருந்தார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்திருந்த நாவலப்பிட்டி ஸ்ரீ கதிர்வேல் சுவாமி ஆலயத்தின் அறங்காவலர் முத்தையாபிள்ளை ஸ்ரீகாந்தன் தமது உரையில், மலையக மக்களின் அவல நிலையை நீக்கவேண்டும். மலையக மாணவச் சமுதாயத்தின் கல்வி நடவடிக்கைகளை ஊக்கப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார்.

அத்துடன், மலையகத் தமிழ் மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்த வேண்டும் என்றும் இதற்கு கணித, விஞ்ஞானப் பாடங்களுக்கு ஆசிரியர்ப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து போதியளவு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்றும் வசதி படைத்தவர்கள் மலையக மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உதவ முன்வர வேண்டும் என்றும் கூறினார்.

இதனை விட மலையகச் சமூகப் பிரச்சினைகளைப் பல்வேறு வழிகளிலும் வெளிக்கொண்டு வரவேண்டும் என்றும் கூறினார்.

விருந்தினர் கௌரவிப்பைத் தொடர்ந்து இடம்பெற்ற எழுத்தாளர் சு. தவச்செல்வனின் மலையக சமூகமும் இலக்கியமும் எனும் நூல் வெளியீடு இடம்பெற்றது. மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் செல்வி வினோஜாவின் நன்றியுரையுடன் மாநாட்டின் ஆரம்ப நிகழ்வுகள் நிறைவடைந்தன.

தொடர்ந்து நடேசையர் மீனாட்சியம்பாள் அரங்கு, சி.வி.வேலுப்பிள்ளை அரங்கு, பேரா.க. அருணாசலம் அரங்கு, சாரல்நாடன் அரங்கு ஆகிய அரங்குகளில் ஆய்வுரைகளும் கலந்துரையாடலும் இடம்பெற்றன.

மலையக இலக்கியம் பற்றிய கலந்துரையாடலோடு மாநாடு நிறைவுற்றது.

-ஸ்ரீ



















# வைத்தியராக இருந்தாலும் என்னால் நடனத்துறையை விட்டுக்கொடுக்க முடியவில்லை

## - DR. ரேக்காஞ்சலி ஜோன் சிவராஜ்



**உரையாடியவர் - ஜீவா சதாசிவம்**

**இலங்கையைச் சேர்ந்த DR. ரேக்காஞ்சலி ஜோன் சிவராஜ் கல்வித்துறையில் மிருக வைத்தியராக பட்டம் பெற்று திருமணம் முடித்த பின்னர் தற்போது அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் நகரில் வசித்து வருகின்றார். தான் வைத்தியராக இருந்தாலும் நடனத்துறையில் அதீத ஆர்வம் கொண்டிருந்தமையால், பிரிஸ்போன் நகரிலேயே நடனப்பள்ளியை ஆரம்பித்து இரண்டு வருடங்களாக நடத்தி வருகின்ற நிலையில், நடனப்பள்ளியின் முதலாவது ஆண்டுவிழாவை எதிர்வரும் 26ஆம் திகதி தனது மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளுடன் இணைந்து கொண்டாடவுள்ளார்.**

**இந்நிலையில், அவரது நாட்டியத்துறைசார் பயணம் குறித்து உரையாடியபோது அவர் பகிர்ந்துகொண்ட விடயங்கள் எமது வாசகர்களுக்காக....**

**உங்களது நாட்டியத்துறை பயணம் குறித்து எங்களுடன் பகிர்ந்துகொள்ள முடியுமா?**

அறியாப்பருவத்திலேயே நாட்டியத்தில் ஈடுபட்டுள்ளேன். எனது அம்மாவை இயக்குநராகக்கொண்டு உருவாகியுள்ள நிர்மலாஞ்சலி நடனப்பள்ளியில் நடனம் பயில வரும் மாணவர்கள், பயிற்சி எடுத்துக்கொண்டிருக்கும்போது அவர்கள் முன் நானும் நடனமாடுவேனென எனது அம்மா சொல்வார். காலப்போக்கில் என் சக நண்பிகளுடன் இணைந்து நாட்டியத்தை முறையாக கற்க ஆரம்பித்துவிட்டேன்.

நிர்மலாஞ்சலி நாட்டியப்பள்ளியின் மூலம் பல மேடைகளில் நாட்டியம் ஆடியுள்ளதுடன், தொலைக்காட்சிகளிலும் நடனம் ஆடியுள்ளேன். அத்துடன், இலங்கையில், நிர்மலாஞ்சலியால் வருடாந்த விழாக்களின் போது அம்மாவுக்கும் உதவியாக நடனங்களைத் தயாரித்து வழங்கியுள்ளேன்.

**வெளிநாட்டில் வசிக்கும் நீங்கள் அங்கு நாட்டியத்துறை எவ்வாறு இருக்கின்றது?**

பெரும்பாலான மாநிலங்களை உள்ளடக்கியுள்ள அவுஸ்திரேலியாவில் மெல்பேர்ன், சிட்னி ஆகிய பகுதிகளில் தமழ் மக்கள் குறிப்பாக, இந்தியர்களும் அதிகளவு வாழ்கின்றனர். ஆகையால், அப்பகுதிகளில் பரதநாட்டியம் பெரும்பாலும் கலை, இலக்கியத்துறையில் ஈடுபடுபவர்களை அதிகமாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன், வருடாந்தம் துறைசார் பல நிகழ்வுகள் இடம்பெறுவதை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஆனால், நான் வசிக்கும் பகுதியில் இத்துறைசார் விடயங்கள் அரிது. தமிழ் பேசும் மக்கள் குறைந்தளவிலானோரையே காணக்கூடியதாக உள்ளது. நான் வாழும் அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேன் பகுதியில் நாட்டியத்துறையில் பெரும் வளர்ச்சி கண்டதாக தெரியவில்லை.

அதிகளவிலானோர் மலையாளிகளும் வட இந்தியர்களுமே காணக்கூடியதாக உள்ளது. ஏன் என்னிடம் கற்பவர்களில் 90 வீதமானோர் மலையாளத்தைச் சேர்ந்தவர்கள். பரதத்தைப் பற்றிய முழுமையாக தற்போது அறியதவர்களாக இருந்தாலும் இன்று சில வருடங்களில் நாட்டியத்துறையில் இப்பகுதியிலும் வளர்ச்சி ஏற்படும் என நம்புகின்றேன்.

**அம்மாவை குருவாகக்கொண்ட உங்களது உணர்வு பற்றி...**

அம்மாவை குருவாகக்கொண்ட நான் அதிர்ஷ்டசாலியாகவும் பாக்கியசாலியாகவும் நினைக்கின்றேன். சிறுவயதில் நாட்டியத்துறை மீது ஆர்வமில்லாமல் இருந்தபோதிலும் வளர்ந்துவரும் காலத்தில் நாட்டியத்துறையில் அதீத ஆர்வம் ஏற்பட்டது. அதற்குக் காரணம் எனது அம்மாவுடன் நான் இருந்தமையே பிரதான காரணம். நானும் எனது தங்கையும் சிறுவயது முதல் அம்மாவிடம் துறைசார் விடயங்களில் பயணித்தது மாத்திரம் அல்லாமல் நிறைய விடயங்களைக் கற்றுக்கொள்ளும் ஒரு பெரிய வாய்ப்பும் கிடைக்கப்பெற்றது அதிர்ஷ்டமே. அத்துடன், உலகப் புகழ்பெற்ற உலகளாவிய ரீதியில் நடனத்துறையில் பல ஆளுமைகளை உருவாக்கிய பெருமைக்குரிய தனஞ்ஜெயன் மாஸ்டரிடமும் அவ்வப்போது கற்றுக்கொள்ளும் வாய்ப்பும் கிடைக்கப்பெற்றது. அதுவும் பெரும் வரமே.

எனது அம்மாவே தனது துறையில் கலாநிதி பட்டம் பெறுவதற்கான தேடல்கள் மூலம் எமக்கும் கற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பையும் ஆர்வத்தையும் தந்தது. திருமணம் முடித்த பின்னர் அவுஸ்திரேலியாவுக்கு வந்து மூன்று வருடங்களாகின்ற நிலையில் இலங்கையில் மூன்று தசாப்தங்களைக் கடந்து நாட்டியத்துறையில் பல மாணவர்களை உருவாக்கிய எனது அம்மா கலாநிதி நிர்மலா ஜோனின் நிர்மலாஞ்சலி என்ற நடனப்பள்ளியை அவுஸ்திரேலியாவில் நான் வசிக்கும் பிரேசின் மாநிலத்தில் ஒரு கிளையாக நடத்துவதற்கு அம்மாவுடன் இணைந்த பயணமும் அவர் வழங்கிய ஆசியுமுமே ஆகும்.

**நீங்கள் வசிக்கும் பகுதியில் மாணவர்களின் கலைத்துறை ஆர்வம் எவ்வாறு இருக்கின்றது?**

நான் வசிக்கும் பகுதியிலிருந்து என்னிடம் நடனம் கற்க சுமார் 30க்கும் மேற்பட்ட மாணவர்கள் வருகின்றனர். அதில் ஒருவர் மாத்திரமே தமிழ் மொழியைச் சேர்ந்தவர். ஏனையவர்கள் மலையாளிகள், வட இந்தியர், தெலுங்கு மொழி பேசும் மாணவர்கள் என பல மொழிகளைச் சேர்ந்தவர்கள். இப்குதியில் நாட்டியத்துறையின் வளர்ச்சி மிகவும் குறைந்தளவிலேயே இருப்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. பெரும்பாலான மாணவர்கள் அதிகளவான ஈடுபாட்டுடனும் சிலர் பெற்றோர்கள் அனுப்புவதால் தாம் கற்க வேண்டும் என்ற மன நிலையிலும் இருப்பதையும் அவர்கள் என்னிடம் கற்கும்போது என்னால் அறியக்கூடியதாக இருந்தது. நாட்டிய நிகழ்வுகளை ரசிக்கும் இவர்களுக்கு காலப்போக்கில் தானும் இத்துறையில் மிளிர வேண்டும் படைப்புகளை வழங்கவேண்டும் என்ற எண்ணம் விரைவில் ஏற்படும் என்பது எனது எதிர்பார்ப்பு.

**உங்களது நாட்டிய நிலையத்தின் ஆண்டு விழா பற்றியும் நாட்டிய நிலையத்தை பற்றியும் கூற முடியுமா?**

நான் ஒரு மிருகத்துறைசார் வைத்தியர். 2019ஆம் ஆண்டு திருமணம் முடித்து அவுஸ்திரேலியா வந்துவிட்டேன். வைத்தியராக இருந்தாலும் நடனத்துறையின் மீது அதீத ஆர்வம் இருந்தமையால் நடனப்பள்ளியை உருவாக்கினேன். அதுவும் இலங்கையில் 3 தசாப்தங்களைக் கடந்து கலைக்காக சேவைகளை செய்த நிர்மலாஞ்சலி நடனப்பள்ளியை கிளையாக ஆரம்பித்தேன்.

நான் உட்பட எனது மாணவர்களும் இணைந்து இந்த முதலாவது ஆண்டுவிழாவை நடத்தவுள்ளோம். பரத அனுபவம் என்ற பெயரிலேயே இதனை நடத்த உள்ளோம். எதிர்வரும் 26ஆம் திகதி அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது. இந்த முதலாவது ஆண்டு விழாவிற்கு எனது அம்மா கலாநிதி நாட்டிய பூரண நிர்மலா ஜோன் பிரதம அதியாகக் கலந்து கொள்ளவுள்ளமை சிறப்பம்சமாகும்.

**அங்கு மொழிப் பிரச்சினையை எவ்வாறு கையாள்கின்றீர்கள்?**

ஆங்கிலம், தமிழ்மொழியில் எனக்கு தேர்ச்சியாக இருப்பதால் எனக்கு பெரும் பிரச்சினை இல்லை. வகுப்புகள் ஆங்கில மொழியிலேயே கற்பிப்பது வழக்கம். கலைக்காவிரி பல்கலைக்கழகத்தில் பரதநாட்டியத்தில் டிப்ளோமா கற்கையை பூர்த்தி செய்துள்ளேன். ஆகையால் மொழிப்பிரச்சினை பெரிதாக ஏற்பட்டதில்லை.





# இலக்கியத் தகவற் களஞ்சியமாக இயங்கும் மூத்த கலை இலக்கிய ஆளுமை ஜவாத் மரைக்கார்

## ஆளுமைகளின் அடையாளம்

பாவேந்தல் பாலமுனை பாறூக்

எழுத்து, இலக்கியம், திறனாய்வு, வானொலி, தொலைக்காட்சி இலக்கிய நிகழ்ச்சிகள், கல்விசார் கட்டுரைகள் என்பவற்றில் கரிசனை செலுத்துபவராக, ஈழத்தில் முன்னணி வகித்துவரும் படைப்பாளி ஜவாத் மரைக்கார்.

சிறுவயதிலேயே இலங்கை, இந்திய சஞ்சிகைகளை வாங்கிப் படிப்பதில் ஆர்வம் செலுத்திய அவரின் எழுத்துலகப் பிரவேசம் 1968இல் தினபதி கவிதா மண்டலத்தில் எழுதியதன் மூலம் நிகழ்ந்தது.

ஆரம்பத்தில் மரபுக் கவிதைகளை எழுதி வந்த அவர், 70களின் தொடக்கத்திலிருந்து புதுக்கவிதைகளையும் எழுதத் தொடங்கினார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் அவருக்கு கிடைத்த திக்குவல்ல கமால், அன்பு ஜவஹர்ஷா, மூதூர் முகைதீன், கலைவாதி கலீல், ஹாஃபீஸ் இஸ்ஸத்தீன், எம்.எஸ்.அமானுல்லாஹ், ஓவியர் ரமணி, ரைத்தளாவள அஸீஸ் போன்ற நண்பர்களின் சகவாசத்தாலும், உந்துதலாலும் கலை, இலக்கியத் துறையில் ஆர்வம் மேலெழுந்தது. அக்காலத்தில் தமிழகத்தில் இயங்கிவந்த வானம்பாடிக் கவிஞர் பலருடன் தொடர்பு ஏற்பட்டது.

தமிழக சஞ்சிகைகளின் இறக்குமதி இலங்கையில் கட்டுப்படுத்தப்பட்டிருந்த அக்காலகட்டத்தில் இலங்கையில் பெறமுடியாதிருந்த வானம்பாடி, பிரக்ஞை, சதங்கை, தேன்மழை, விவேகச்சித்தன், கணையாழி போன்ற பல்வேறு சிற்றிலக்கிய வெளியீடுகளைத் தமிழக நண்பர்களிடமிருந்து தொடர்ச்சியாகப் பெற்றுவந்ததோடு, மேலதிகப் பிரதிகளை இலங்கை நண்பர்களுக்கு இலவசமாக அனுப்பியும் வைத்தார். அந்தப் பழக்கம் இன்றுவரை தொடர்கின்றது. அவருடைய வீட்டு நூலகம் பல்துறை சார்ந்த பல்லாயிரம் நூல்களால் நிரம்பியுள்ளதை அதனைத் தரிசித்தவர்கள் எடுத்துக் கூறுவர்.

இலங்கை - இந்திய இலக்கிய உறவுப் பாலமாகவும் இலக்கியத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய தகவற் களஞ்சியமாகவும் திகழ்பவர் அவர்.

யாப்பிலக்கண, மொழி இலக்கணத் தேர்ச்சி பெற்றிருக்கும் அவர், மரபுக் கவிதை பற்றிய அறிவோடும், புதுக்கவிதை நுட்பங்களைப் புரிந்துகொண்டும் எழுதுபவர்.

அச்சு ஊடகத்தில் மட்டுமல்லாமல் தொலைக்காட்சி, வானொலி, மேடை நிகழ்ச்சிகளிலும் பல்துறைகளில் இலங்கியவர். தொலைக்காட்சிகளில் கவியரங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டும், தலைமை தாங்கியும், கலந்துரையாடல் நிகழ்ச்சிகளில் பங்குகொண்டும் புகழ் பூத்தவர்.

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் 'இலக்கிய மஞ்சரி' என்ற வாராந்த சஞ்சிகை நிகழ்ச்சியை (1982-1984) இரண்டு வருடங்களும், மேலும் (1995-2000) ஐந்து வருடங்களும் திரும்பட நடத்தியதன் மூலம் இலக்கிய நேயர்களின் அபிமானத்தை வென்றவர். அவருடைய இலக்கிய மஞ்சரிப் பணியையும், இலக்கியப் புலமையையும் பாராட்டி





தமிழகத்தைச் சேர்ந்த இறையருட் கவிமணி பேராசிரியர் அப்துல் கபூரும், திருச்சி றசூலும் முஸ்லிம் சேவைக் கட்டுப்பட்டாளருக்கு அனுப்பியிருந்த கடிதம் அவரின் இலக்கியப் பணிக்குக் கிடைத்த கௌரவமாகும்.

பத்திரிகையில் மாணவர், ஆசிரியர்கள் தொடர்பாக எழுதிய பக்கங்கள் மற்றும் சமூக விமர்சனங்கள் என்பவை இன்றும் மறக்க முடியாதவை.

தினகரன் நாளிதழில் புதன், வியாழன் தினங்களில் பல வருடங்கள் மாணவர்களுக்காக வித்தியாகரன் என்ற புனைபெயரில் அவர் எழுதி வெளிவந்த கல்விக் கதிர் என்ற பக்கமும், குருபீடம் என்று தனது சொந்தப் பெயரில் ஆசிரியர்களுக்காக எழுதிய பக்கமும், திக்குவல்ல - யோனகபுர (லிபிய நட்புறவு) மக்கள் காங்கிரஸினால் வெளியிடப்பட்ட அஷ்ஷுரா (ஆசிரியர் எம்.எச்.எம்.ஷம்ஸ்) என்ற மாதாந்த இதழில் கர்பலா என்ற தலைப்பில் புத்தீட்டி என்ற புனைபெயரில் எழுதிய சமூக விமர்சனக் கண்ணோட்டமும் கல்வியியலாளர்களாலும், சமூகவியலாளர்களாலும் வரவேற்கப்பட்டவை.

கல்பிட்டி அல்-அக்ஸா மகா வித்தியாலயத்தில் அவர் கற்பித்த போது (1980) பாடசாலையின் வெள்ளிவிழா மலரின் ஆசிரியராக இருந்து ஆற்றிய பணி பலராலும் போற்றப்பட்டது. அச்சு வசதிகள் நவீனத்துவமடையாத அக்காலத்தில், செம்மையான அமைப்பு, உள்ளடக்கம் என்பவை கொண்டதாக மலரை அமைத்திருந்தார் ஆசிரியர் ஜவாத் மரைக்கார். (திறனாய்வாளர்களான பேராசிரியர் க.கைலாசபதி, பேராசிரியர் எம்.ஏ.நுஹ்மான் போன்றோரின்



பாராட்டு களையும் அம்மலர் பெற்றுக்கொண்டது.)

அல்ஹாஜ் ஜவாத் மரைக்கார் புத்தளம் நுரைச்சோலையில் 1949 இல் பிறந்தவர். தந்தை - அபூபக்கர் மரைக்கார், தாய் அப்துல் ஹமீது நாச்சியா.

புத்தளம் நுரைச்சோலை முஸ்லிம் வித்தியாலயம், கற்பிட்டி அல்-அக்ஸா மகா வித்தியாலயம், யாழ் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை என்பவற்றில் கற்றவர். 1971இல் ஆசிரிய நியமனம் பெற்ற அவர், கல்விமாணி, விஞ்ஞானமாணி பட்டங்களையும் பெற்றவர். பள்ளிவாசல்துறை முஸ்லிம் வித்தியாலயம், பறகஹதெனிய முஸ்லிம் மகா வித்தியாலயம், புத்தளம் ஸாஹிறாக் கல்லூரி, கற்பிட்டி அல்-அக்ஸா மகாவித்தியாலயம் என்பவற்றில் கற்பித்தவர். அவருக்கு விஞ்ஞானபாட ஆசிரிய ஆலோசகர் நியமனம் 1980இல் கிடைத்தது. இப்பதவிக் காலத்தில் கல்வி அமைச்சின் பாடவிதான அபிவிருத்தி நிலையத்திலும் தொடர்ந்து மஹரகம கல்வி நிறுவகத்திலும் விஞ்ஞானம், ஆரம்பக் கல்வி, இஸ்லாமியத் துறை, தமிழ்மொழித் துறை வளவாளராகவும் பணியாற்றி ஆசிரியர்களுக்கான பாடவழிகாட்டி நூல்களை ஆக்குவதிலும், தேசிய ரீதியில் ஆசிரிய ஆலோசர்களைப் பயிற்றுவிப்பதிலும் ஈடுபட்டுக் கல்விப் பணி புரிந்தார்.

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் போதனாசிரியராக இருந்ததோடு, அதன் பொறுப்பாளராகவும் சிரேஷ்ட போதனாசிரியராகவும் சிறப்பாகச் செயற்பட்டு மேலதிகாரிகளிடம் நன்மதிப்பையும் பெற்றுக் கொண்டவர் அல்ஹாஜ் ஜவாத் மரைக்கார், இலங்கை அரச பாடசாலைகளில் கற்பிக்கப்பட்ட (1980) இஸ்லாமிய பாட நூல் ஆக்கக் குழுவிலும் இடம் பெற்றிருந்தார்.

1999இல் போட்டிப் பரீட்சை மூலம் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு உள்ளீர்க்கப்பட்ட அவர், புத்தளம் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பின்னர் புத்தளம் கல்வி வலயத் தமிழ்ப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி 2009இல் ஓய்வு பெற்றார்.

(தொடர்ச்சி 7ஆம் பக்கம்...)

# ‘வேர்கள்’ நூல் வெளியீட்டு விழா









பேருவளை நகர சபை முன்னாள் நகரபிதா மர்ஹூம் ஐ.எல்.எம்.யூஸூப் பற்றியும் அவர் வாழ்ந்த சீனன்கோட்டை சம்பந்தமான வரலாற்றுக் குறிப்புகளையும் தாங்கிய ‘வேர்கள்’ எனும் நூலின் வெளியீட்டு விழா கடந்தவாரம் அல்-ஹூமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம்.எம்இஜாபிர் ஹாஜியார் ஞாபகர்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

நூலின் ஆசிரியரும் மர்ஹூம் ஐ.எல்.எம். யூஸூப்பின் இளைய மகனுமான அஷ்ரப் யூஸூப்பின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக சீனன்கோட்டை பள்ளிச் சங்கத் தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.முக்தார் கலந்துகொண்டார்.

விசேட அதிதிகளாக பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் ஜும்ஆ பள்ளிவாசல் ஜமாஅத் சபைத் தலைவர் வழக்கறிஞர் அல்-ஹாஜ் எம்.ஏ.எம்.ஹனபி பாராளுமன்ற உறுப்பினர்களான அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் மற்றும் அல்-ஹாஜ் மர்ஜான் பளீல் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் நூல் அறிமுக உரையை ‘அரும்பு’ சஞ்சிகையின் ஆசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீனும் நூலின் விமர்சன உரையை ஜாமியா நளீமியாவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷேஹ் அரபாத் கரீமும் (நளீமி) நிகழ்த்தினர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் மூத்த பத்திரிகையாளருமான என்.எம்.அமீன், மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இப்திகார் ஜமீல், பேருவளை நகர சபை முன்னாள் உப தலைவர் சுகைப் யூஸூப், சீனன்கோட்டை பள்ளிச்சங்க உப தலைவர் ஏ.ஆர்.எம்.ஸூலைமான், இணைச் செயலாளர் எம்.எம்.ஷிஹாப், இணைப் உட்பட பள்ளிச்சங்க உறுப்பினர்கள், பேருவளை மருதானை அப்ரார் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் அதாஉல்லாஹ் அபூபக்கர், அல் ஹூமைஸரா தேசிய பாடசாலை அதிபர் எம்.ஸீ.இப்றாஹீம், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் ஏ.டபிள்யூ.எம்.அஜ்வாத் உட்பட உலமாக்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட குடும்ப உறுப்பினர்கள், பெருமளவிலான ஊர் மக்கள் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

அகில இலங்கை அஹதியா சம்மேளன தேசிய அமைப்பாளர் ஏ.எல்.எம்.அஸ்வர், சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூஷணம் ஏ.எல்.எம்.ஸத்தார் ஆகியோர் நூல் ஆசிரியரை பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

அஷ்ஷெய்க் மக்கிமன்ஸூர் (நளீமி) நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியதோடு அபான் யூஸூப் நன்றியுரை நிகழ்த்தினார்.

**(படங்கள்: பேருவளை பீ.எம்.முக்தார்)**



# ‘குடும்பம் ஒரு கதம்பம்’ நூல் வெளியீட்டு விழா







ஈழத்து எழுத்தாளரும், சமூக சிந்தனையாளரும், உளவள ஆலோசகருமான கோகிலா மகேந்திரனின் 'குடும்பம் ஒரு கதம்பம்' நூல் வெளியீட்டு விழா கடந்தவாரம் யாழ். வடமராட்சி அல்வாயில் அமைந்துள்ள கலையகத்தில் கலாநிதி தி. செல்வமனோகரன் தலைமையில் இடம்பெற்றது.

நூலாசிரியரான கோகிலா மகேந்திரன் 'உறவுகள்' எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றினார். அதனைத் தொடர்ந்து வாசகர்களின் பல்வேறு கேள்வி களுக்கும் நூலாசிரியர் பதிலளித்தார். தலைமையுரையைத் தொடர்ந்து நூல் வெளியீட்டுரையை எழுத்தாளர் கந்தர்மடம் அ. அஜந்தன் நிகழ்த்தினார்.

'குடும்பம் ஒரு கதம்பம்' நூலின் முதற்பிரதியை நூலாசிரியர் கோகிலா மகேந்திரன் வெளியிட்டு வைக்க வடமாகாண கல்வித் திணைக்கள வடமராட்சி வலய உளவள ஆலோசகரான சி. கருணாகரன் பெற்றுக்கொண்டார். நூல் தொடர்பிலான கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்களான அஜந்தகுமார், இராஜேஷ்கண்ணன் ஆகியோர் நிகழ்த்தினர். ஏற்புரையை நூலாசிரியர் கோகிலா மகேந்திரன் நிகழ்த்தினார்.

இறுதியாக நன்றியுரையை இந்நிகழ்வின் ஏற்பாட்டாளரும், 60ஆவது நிகழ்வாக இந்நூல் வெளியீட்டை ஒழுங்குசெய்த ஜீவநதி இதழின் பிரதம ஆசிரியருமா பரணீதரன் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் கல்வியலாளர்கள், வாசகர்கள், ஊரவர்கள், நண்பர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நூலில் வெளியான திருமணம், குடும்பம், பெற்றோரியம் சார்ந்த உளவியல் மைய கட்டுரைகள் ஜீவநதி இதழில் தொடராக வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

**செ. கிரிசாந்**

## இலக்கியத் தகவற்...
(6ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பல்துறை ஆற்றல்மிக்க, ஆறு தசாப்தங்களுக்கும் மேலான கலைத் துறை அனுபவம் கொண்ட அவருக்கு கலை, கல்வி, இலக்கிய சமூகப் பணிகளுக்காக பல உயர் விருதுகள் கிடைத்தன.

1. - அரச கலை, இலக்கிய உயர் விருதான கலாபூஷணம் - 1996 (விண்ணப்பம், சிபார்சு என்ற தற்போதைய நடைமுறைகள் இல்லாமல் கலாசார அமைச்சின் தெரிவுக்குழுவே தெரிந்து கொடுத்த விருது)

2. - அகில இலங்கை சமாதான நீதவான் -2000 (வரலாற்றில் முதல் தடவையாக விண்ணப்பம் பொலிஸ் அறிக்கை, சிபார்சு என்பன இல்லாமல், கலாசார அமைச்சு 150 கலைஞர்களை தேசிய ரீதியில் தெரிவுசெய்து நீதி அமைச்சின் மூலம் இப்பதவியை வழங்கி வைத்தபோது கிடைத்தது.)

3. - 2002இல் உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் பொன்னாடை போர்த்திக் கௌரவம்.

4.- 2005இல் அகில இலங்கை சமாதான நீதிபதிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரால் வழங்கப்பட்ட தேசகீர்த்தி விருது.

5. - 2008இல் பௌத்த மத பீடங்கள் பலவற்றின் ஒன்றிணைந்த அமைப்பான ஸ்ரீலங்கா விஷ்வ சமாதி பதனமவின் ஏற்பாட்டில் கிடைத்த தேசபந்து விருது.

6. - 2011இல் அதே ஸ்ரீலங்கா விஷ்வ சமாதி பதனமவின் ஏற்பாட்டில் கிடைத்த தேச மானிய, லங்கா திலக, சமாஜ சுபசாதன சூரி என்ற விருதுகள். (இவற்றில் எந்த விருதும் விண்ணப்பித்துக் கேட்டுப் பெற்றுக்கொண்டதோ, சிபாரிசு மூலம் தேடிப் பெற்றுக்கொள்ளப்பட்டதோ அல்ல. நாடி வந்தவை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.)

இலங்கையின் கல்வித் துறையிலும், கலை இலக்கியத் துறையிலும் கண்ணியம் பெற்றிருக்கும் எழுத்தாளர் ஜவாத் மரைக்கார்,

இலங்கை கலாசார அமைச்சின் முஸ்லிம் நுண்கலைக் குழு உறுப்பினராகவும், அகில இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சம்மேளனத்தின் உப செயலாளராகவும், அகில இலங்கை ஊடகவியலாளர் சங்கத்தின் உப தலைவராகவும் மதிப்போடு இயங்கியவர்.

இப்பொழுதும் அமைதியாக இருந்து அரும் பணியாற்றி வருபவர் மூத்த கவிஞர் ஜவாத் மரைக்கார். அணிந்துரைகள், மதிப்புரைகளை வழங்கி புதியவர்களை ஊக்குவித்து வருகின்றார். முகநூல் தளத்தில் பயன்மிக்க இலக்கியத் தகவல்களையும், பழந்தமிழ் இலக்கியப் பாடல்களின் சொற்சுவை, பொருட்சுவை குறித்தும் உரைநிகழ்த்தி வருகின்றார். அண்மையில் இப்படிப் பாடினரே என்ற தலைப்பில் அவர் முகநூல் தளத்தில் ஆற்றிய உரை, புதியவர்களை ஈர்த்திருந்ததை அவதானிக்க முடிந்தது. அவர் தேகநலத்தோடு இன்னும் பல்லாண்டு காலம் வாழவேண்டும் அவரின் நூல்கள் வெளிவர வேண்டும் . அதனால் நமது இலக்கிய உலகம் பயன் பெற வேண்டும் என்பவையே நமது விருப்பமும் பிரார்த்தனையுமாக உள்ளது.



# ஈழத்தின் தனித்துவ ஓவியர்

# ஆசை இராசையா

புகழ்பூத்த ஓவியர் ஆசை இராசையாவின் 77ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு 'பிரம்மம்' என்ற தலைப்பிலான நினைவுகூரல் நிகழ்வு மற்றும் ஓவியக் கண்காட்சி என்பன 19, 20ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறுகிறது. ஓவியர்களையும் ஓவியக் கலையையும் கொண்டாடும் விழாவாக இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறைப் பேராசிரியர் தா.சனாதனன் தலைமையில் நடைபெறும் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு கட்புலக் கலைகள் மற்றும் நிகழ்த்துகலைகள் பல்கலைக்கழகப் பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பேராசிரியர் சரத்சந்திர ஜீவாவால் வடிவமைக்கப்பட்ட ஓவியர் ஆசை இராசையாவின் உருவச்சிலையும் வைபவரீதியாக கையளிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படவுள்ளது. கவிஞர் சோ.பத்மநாதன், விரிவுரையாளர் ஓவியர் பி.பிரசாந் ஆகியோரும் நிகழ்வில் வெவ்வேறு கருப்பொருளில் உரையாற்றவுள்ளனர். சிரேஷ்ட விரிவுரையாளர் சி.ரமணராஜா நினைவுப் பேருரையை ஆற்றவுள்ளார். ஓவியர் ஆசை இராசையாவின் வாழ்க்கையை மையப்படுத்திய நடன ஆற்றுகை ஆசிரியர் எஸ். ஸ்ரீகண்ணனின் நெறியாள்கையில் இடம்பெறவுள்ளது. அத்துடன், காயத்ரியின் நெறியாள்கையில் அவருடன் இணைந்து ராகவி பங்குபெறும் பரதம் மற்றும் யோகாவின் தெய்வீக இணைப்பு என்ற ஆற்றுகையும் இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து கண்காட்சி நடைபெறும். சித்திர பாடத்தைப் பயிலும் மாணவர்களுக்கு இந்நிகழ்வு பெரிதும் உதவும் என்பதால் மாணவர்கள் இந்நிகழ்வுகளில் பங்குபற்றுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர்.




ஈழத்தின் புகழ் பெற்ற ஓவியர் ஆசை இராசையா மறைந்து 3 வருடங்களாகின்ற நிலையில் அதனை யொட்டியதான விசேட நிகழ்வுகள் யாழில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. கலாபூஷணம் விருது – 2010, ஆளுநர் விருது – 2009, கலைஞானச்சுடர் விருது – 2009, கொழும்பு தமிழ்ச்சங்க விருது – 2012, ஓவியக் கலாகீர்த்தி ஞானம் சஞ்சிகை 2012 தமிழியல் விருது – 2013, கலைஞான பூரணன், திருமறைக் கலாமன்றம் – 2014, அச்சூர்க்குரிசில் அச்சுவேலி கலை பண்பாட்டு மன்றம் 2014 ஆகிய விருதுகளுக்குச் சொந்தக்காரன். இலங்கை கலாசாரப் பேரவை உறுப்பினராக மூன்று ஆண்டுகள் கடமையாற்றியவர். இராமநாதன் நுண்கலைத் துறையின் சித்திரமும் வடிவமைப்பும் துறையில் வருகை விரிவுரையாளராக கடமையாற்றி பின்னர் மறைந்த ஆளுமையை கௌவிக்கும் முகமாகவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



இவர் வாழ்ந்த காலப்பகுதியில் இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலொன்றில் தன்னை பற்றி பின்வருமாறு பதிவு செய்கின்றார். எனது சிறுபராயக் கற்றல் காலங்களில் பார்த்ததை அப்படியே வரையும் வல்லமை வெளிப்பட்டு நின்றது நினைவில் உண்டு. இயல்பாகவே என்னுள் இருந்த இயல்பூக்கம், கலை ஈடுபாடு அதில் இருந்ததை உணர்கிறேன். அதில் ஓர் ஆத்ம திருப்தியை உணர்ந்தேன். என் ஆத்மாவுக்குத் தீனி போடும் முயற்சியே என் நீண்ட இந்தக் கலைப்பயணமாகலாம். G.C.E. (O.L) பரீட்சையில் கேத்திர கணிதப் பொறிமுறை வரைதல் (Geometrical and Mechanical Drawing) என்னும் பாடத்தில் 'D' என்னும் அதிஉயர் சித்தி பெற்றேன்.



ஓவியத்துக்கு 'C' என்னும் திறமைச் சித்திதான் கிடைத்தது. இதன் நிமித்தம் நான் 'கட்டடக்கலை' (Architect) படிக்க வேண்டும் என்பது பெற்றோர் உட்பட எல்லோரது விருப்பமாகவும் இருந்தது. ஆயினும் ஓவியத்தில் (Drawing and Painiting) அதி உயர் நிலைக்கு வரவேண்டும் என்ற அவா என்னுள் மேலோங்கி நின்றதனால் பிடிவாதமாக ஓவியம் கற்பதற்கே முடிவெடுத்தேன்.



கொழும்பிலுள்ள (College of Art and Crafts) என்னும் நுண்கலைக் கல்லூரியில் (1966-9969) கற்ற காலம் எண்ணெய் வர்ண ஓவியம் (Oil Paintings) கற்றுத்தரப்படவில்லை. ஆயினும் கல்லூரிக்கு அண்மையில் கொழும்பு கலாபவனத்தில் (Colombo Art Gallarey) பல ஓவிய விற்பன்னாளின் ஓவியப் படைப்புகள் காட்சிப்படுத்தப் பட்டிருந்தமை எனக்கு வரப்பிரசாதமாக அமைந்தது எனலாம். J.D.A.Perera, David Paynter. A.C.G.S. Amarasekara, Lanka Tilake. Stanly Abeyasinghe போன்ற மேதைகளின் எண்ணெய் வர்ண ஓவியங்கள் என்னை மிகவும் கவர்ந்தன.



ஏற்கனவே என்னுள் இருந்த எண்ணெய் வர்ண ஓவியத்தில் இருந்த ஈடுபாடு மேலும் என்னுள் ஓர் உத்வேகத்தைக் கொடுத்தது எனலாம். தொடர்ந்து என்னுடைய சுயமுயற்சியில் எண்ணெய் வர்ண முறையைப் பயின்று இன்று பலராலும் மதிக்கப்படக்கூடிய நிலையை அடைந் திருப்பது மனதுக்கு பெரும் திருப்தியாக உள்ளது. அது மட்டுமல்ல, 1969ஆம் ஆண்டு Ceylon Cold Stores Ltd ஸ்தாபனத்தினரால் வெளியிடப்பட்ட நாட்காட்டியில் எனது எண்ணெய் வர்ண ஓவியம் ஒன்று முதன்முதலாக வெளியிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து இன்று வரை என்னுடைய ஓவியப்படைப்புகள் பலதும் ஓவியத்தை நேசிப்பவர்களிடம் உயர்ந்த இடத்தைப் பிடித்திருப்பது பெருமைப்படக் கூடியதே. இத்துடன் Oil Paint, Water Colour, Oil Pastels ஆகிய மூன்று வர்ண ஊடகங்களையும் எப்படிக் கையாள்கிறது என்பதில் தொடரும் எனது பயிற்சியால் ஓர் உயர்ந்த நிலையை அடைந்திருப்பது என் ஆத்மாவுக்கு கிடைத்திருக்கும் தீனியே. ஏனெனில், ஒவ்வொரு ஓவியனுக்கும் இந்த ஊடகக் கையாளுகை ஒரு பெரும் சவாலே. ஒரு ஓவியனின் கலை ஆளுமை விருத்திக்கு இந்த ஊடகக் கையாளுகை முக்கிய பங்கு வகிக்கிறது என்பது முக்கியமானது.



**தொகுப்பு: ஜீவா**

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

கிக்
கிக்
வாசிக்க
வாசிக்க...
மலர் : 02, இதழ் : 38 - 20.08.2023

**பாபா குகையில்
தியானம் செய்யும் ரஜினி**

**செப். 12 இல்
வெளியாகிறது**

**ஜக்குலினுக்கு
மகிழ்ச்சிச் செய்தி**



ஜக்குலின்

# விஜய் அன்டனியின் புதிய படம் அறிவிப்பு




இசையமைப்பாளரும் நடிகருமான விஜய் அன்டனி நாயகனாக நல்ல கதைகளைத் தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார். இறுதியாக, இவர் நடிப்பில் வெளியான 'பிச்சைக்காரன் 2', 'கொலை' ஆகிய படங்கள் வசூல் ரீதியாக நல்ல வரவேற்பைப் பெற்றன.

இதனைத் தொடர்ந்து, விஜய் அன்டனி இயக்குநர் விநாயக் வைத்தியநாதன் இயக்கத்தில் 'ரோமியோ' என்கிற காதல் படமொன்றில் நடிக்கவுள்ளதாக அறிவித்துள்ளார். நாயகியாக மிருணாளினி ரவி ஒப்பந்தமாகியிருக்கிறார்.

விஜய் அன்டனியே தயாரிக்கும் இப்படம் அடுத்த வருடம் கோடை வெளியீடாக திரைக்கு வரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.






# 'குஷி' இசை வெளியீட்டில் சமந்தா – விஜய் தேவரகொண்டா இமோஷனல் டான்ஸ்!

ஷிவா நிர்வாணா இயக்கத்தில் விஜய் தேவரகொண்டா, சமந்தா நடித்துள்ள படம் 'குஷி'.

ஹிஷாம் அப்துல் வஹாப் இசையமைத்துள்ள இப்படத்துக்கு முரளி ஒளிப்பதிவு செய்துள்ளார்.

எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி வெளியாகவுள்ள இந்தப் படத்தின் இசை நிகழ்ச்சி கடந்த செவ்வாய்க்கிழமை ஹைதராபாத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் இப்படத்தின் பாடல்கள் மேடையில் பாடப்பட்டன. சமந்தா, விஜய் தேவரகொண்டா இருவரும் இணைந்து நடனமாடினர்.

மேடையில் நடனமாடும்போது சமந்தாவை விஜய் தேவரகொண்டா தூக்கிய புகைப்படங்கள், வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் உலா வருகின்றன. மேலும், இந்த நிகழ்ச்சியை நேரில் பார்த்தோருக்கு நல்ல விருந்தாக அமைந்ததாக பின்னூட்டங்கள் மூலம் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

# ஜக்குலினுக்கு மகிழ்ச்சிச் செய்தி



நிதி மோசடி வழக்கில் சிக்கிய ஜக்குலின் பெர்னாண்டஸ் வெளிநாடு செல்ல டில்லி நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளதால் அவர் நிம்மதியடைந்துள்ளார்.

ரூ. 200 கோடி பணமோசடி வழக்கில் சிக்கிய பொலிவுட் நடிகை ஜக்குலின் பெர்னாண்டஸ் மீதான வழக்கு டில்லி பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இவ்வழக்கில் தான் வெளிநாடு செல்ல அனுமதிக்க வேண்டும் என்று ஜக்குலின் பெர்னாண்டஸ் நீதிமன்றத்தில் முறையிட்டிருந்தார். இந்நிலையில், பாட்டியாலா ஹவுஸ் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில், ''குற்றஞ்சாட்டப்பட்ட ஜக்குலின் பெர்னாண்டஸ், வெளிநாடு சென்று வர அனுமதி அளிக்கப்படுகிறது. ஜாமீன் நிபந்தனைகள் தளர்வு செய்யப்படுகிறது. இந்தியாவை விட்டு அவர் வெளியேறும் மூன்று நாட்களுக்கு முன்னர், நீதிமன்றம் மற்றும் அமுலாக்கத்துறைக்கு தெரிவிக்க வேண்டும். ரூ. 50 இலட்சத்துக்கான நிரந்தர வைப்பு ரசீதை டெபாசிட் செய்ய வேண்டும்'' என்பது போன்ற கட்டுப்பாடுகளை நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அதனால் ஜக்குலின் பெர்னாண்டஸ் விரைவில் வெளிநாடு செல்வார் என்றும், நீதிமன்ற உத்தரவால் அவர் நிம்மதியடைந்துள்ளதாகவும் அவரது வழக்கறிஞர்கள் கூறினர்.

**கிக் – 'வார இதழ்'**
இல. 91, விஜேராம மாவத்தை,
கொழும்பு 7.
தொலைபேசி : 011 588 6187
வட்ஸ்அப் : 076 139 3805
தொலைநகல் : 011 267 3442
g l tk mk
Kick - கிக்
g l tk m h l tk n l
h g l tk m
தொகுப்பு: நிர்ஷன் இராமானுஜம்
வடிவமைப்பு : ஆர்.எஸ்.தர்ஷி

# பேய்களாக இரு அழகிகள்



எம்மா ரொபர்ட்ஸ் மற்றும் கிம் கார்டஷியன் ஆகியோரின் நடிப்பில் வெளியாகவுள்ள American Horror Story (AHS) ஹொலிவூட்டில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது 12ஆவது பாகமாக எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 20ஆம் திகதி வெளியாகுமென படக்குழுவினர் அறிவித்துள்ளனர். கர்ப்பிணியொருவர் தன்னைத்தானே துன்புறுத்திக் கொள்ளும் பயங்கரமான நோயால் பாதிக்கப்பட்டுள்ளதைப் போன்று இதன் கதை வடிவமைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பயங்கரமான காட்சிகளைக்கொண்டு திரைப்படமாக்கப்பட்டுள்ளதால் ரசிகர்கள் பெரும் எதிர்பார்ப்பில் காத்திருக்கின்றனர்.

**செப். 12இல் வெளியாகிறது**






# பிரெடி – ஷெய்க் புதிய உறவா?

**ஊடகங்களால் கசிந்த இரகசிய சந்திப்பு**

விளையாட்டு, சினிமா உள்ளிட்ட துறைகளில் மிகப் பிரபல மானவர்களை மேற்குலக ஊடகங்கள் கண்காணிக்கும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் அண்மையில் விவாகரத்துப் பெற்ற உதைபந்தாட்ட வீரர் டொம் பிரெடியை (வயது 46) துரத்தித் துரத்திப் படமெடுத்த ஊடகங்கள் அவரது இரகசிய உறவு குறித்த தகவலை வெளியிட்டு பரபரப்பை உருவாக்கியுள்ளன.



ரஷ்யாவைச் சேர்ந்த மொடல் அழகியான ஐரினா ஷெய்க் (வயது 37) என்பவருடன் லண்டனிலுள்ள விடுதியொன்றில் இரு நாட்களை அவர் கழித்துள்ளார். இதனை இரகசியமாக அவதானித்துள்ள ஊடகங்கள் தகவல்களை வெளியிட்டுள்ளன.

ஷெய்க்குடன் விடுதிக்கு வந்த பிரெடி 24 மணித்தியாலங்களை அங்கு கழித்துள்ளார். அதன் பின்னர் அவர்கள் இருவரும் தனித்தனியாக அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

உதைபந்தாட்ட வீரர் டொம் பிரெடி, மொடல் அழகியான கிசெலே பன்ட்செனுடன் திருமண வாழ்க்கை வாழ்ந்து வந்தார். அவர்களுடைய திருமண வாழ்க்கை கடந்த 2022ஆம் ஆண்டு நிறைவுக்கு வந்தது. அவர்கள் 13 வருடங்கள் ஒன்றாக வாழ்ந்து, விவாகரத்துப் பெற்றமை குறித்து பல்வேறு தகவல்கள் உலாவந்தன. இந்நிலையில், கிசேலே, தனது விவாகரத்து குறித்து அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

“வாழ்க்கையில் ஒவ்வொரு விடயமும் ஏதோவொரு காரணத்துக்காக நிகழ்கிறதென நம்புகிறேன். எந்தவொரு சவாலும் எமது வளர்ச்சிக்கான உந்துசக்தியாகும். நான் பல்வேறு சவால்களை சந்தித்து வருகிறேன். அதில் முக்கியமானது எனது கணவருடனான விவாகரத்தாகும். அது இலகுவானதல்ல” என அவர் நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

விவாகரத்தான இந்த தம்பதியினருக்கு பெஞ்சமின் என்ற 13 வயது மகனும் விவியன் என்ற 10 வயது மகளும் உள்ளனர். அவர்களை வளர்த்து ஆளாக்குவதும் தொழில் ரீதியான புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதுமே தனது நோக்கம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# எம்மி விருது விழா ஒத்திவைப்பு




தொலைக்காட்சித் தொடர்கள் மற்றும் வெப் தொடர்களுக்காக அமெரிக்காவில் வழங்கப்படும் எம்மி விருது மிகவும் பிரபலமானதாகும். ஒஸ்கர் விருதுக்கு இணையாகக் கருதப்படும் இந்த விருது உலகம் முழுவதும் கவனத்தைப் பெற்றுள்ளன. இந்த விருது விழா வழக்கமாக செப்டெம்பர் மாதம் நடைபெறும். இந்த வருடத்துக்கான 75ஆவது எம்மி விருது விழா, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 17ஆம் திகதி நடத்தப்படவிருந்தது.

இந்நிலையில், ஹொலிவுட் வேலை நிறுத்தம் கடந்த மே மாதம் முதல் நடந்து வருகிறது. இந்த வேலை நிறுத்தம் இன்னும் முடியாததால், எம்மி விருது வழங்கும் விழா ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்த விருது விழா, அடுத்த வருடம் ஜனவரி 15ஆம் திகதி லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.




# 'இந்தியன் 2' கமலின் புதிய தோற்றம்

இயக்குநர் ஷங்கரின் இயக்கத்தில் கமல் நடித்துள்ள படம், 'இந்தியன் 2'. 'விக்ரம்' படத்தின் வெற்றிக்குப்பிறகு கமல் நடிக்கும் இந்தப் படத்தில், காஜல் அகர்வால், சித்தார்த், ராகுல் ப்ரீத் சிங், பிரியா பவானி சங்கர், சமுத்திரக்கனி, பாபி சிம்ஹா உட்பட பலர் நடித்துள்ளனர். அனிருத் இசை அமைக்கும் இந்தப் படத்தை லைகா நிறுவனம் தயாரிக்கிறது. இதன் பெரும்பாலான படப்பிடிப்பு முடிந்துவிட்டது. கிராபிக்ஸ் பணிகள் அமெரிக்காவில் நடந்து வருகின்றன.

இந்நிலையில், சுதந்திர தினத்தை முன்னிட்டு இப்படத்தின் சிறப்புப் போஸ்டரை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். அதில் 'சேனாபதி' கமல் தோற்றத்தில் வெளியான அந்த போஸ்டர், சமூக வலைத்தளத்தில் வேகமாகப் பரவி வருகிறது.



# இயக்குநரானார் திஷா பதானி

பிரபல ஹிந்தி நடிகை திஷா பதானி. பூரி ஜெகநாத் இயக்கிய லோஃபர் என்ற தெலுங்கு படம் மூலம் சினிமாவில் அறிமுகமான இவர், இப்போது ஹிந்தியில் முன்னணி நடிகையாக இருக்கிறார்.

இவர் தமிழில் சூர்யாவின் 'கங்குவா' படத்தில் நாயகியாக நடித்து வருகிறார். இந்தப் படத்தை சிவா இயக்கி வருகிறார். அமிதாப் பச்சன், கமல்ஹாசன், பிரபாஸ் நடிக்கும் 'கல்கி 2829 ஏடி'படத்திலும் முக்கிய வேடத்தில் நடித்து வருகிறார்.

இவர் இப்போது இயக்குநராகி இருக்கிறார். 'கியூன் கரு ஃபிக்கர்- கோர்ஸ் ஆன்தம் 23' என்ற இசை ஆல்பத்தை இயக்கியுள்ளார். அத்தோடு அதில் அவர் நடனமாடியும் உள்ளார். வைபவ் பானி இசை அமைத்துள்ள இந்த ஆல்பத்தின் டீஸர் இன்று வெளியாகிறது. பாடல் விரைவில் வெளியாகும் என்று தெரிகிறது.

# விஜய்க்கு வில்லனாகும் தோனி



தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகரான விஜய் தற்போது லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் 'லியோ' திரைப்படத்தில் நடித்து வருகிறார்.

திரைப்பிரபலங்கள் பலர் இணைந்துள்ள இப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து பின்னணி பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்படத்தைத் தொடர்ந்து விஜய்யின் 68ஆவது படத்தை இயக்குநர் வெங்கட் பிரபு இயக்க கல்பாத்தி எஸ்.அகோரமின் ஏஜிஎஸ் எண்டர்டெயின்மென்ட் நிறுவனம் தயாரிக்கிறது.

இப்படத்திற்கு யுவன் சங்கர் ராஜா இசை யமைக்கிறார். தற்காலிகமாக 'தளபதி 68' என்று பெயரிடப்பட்டுள்ள இப்படம் 2024ஆம் ஆண்டு வெளியாகவுள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் வில்லன் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, 'தளபதி 68' திரைப்படத்தில் வில்லனாக கிரிக்கெட் வீரர் தோனி நடிக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தத் தகவலை ரசிகர்கள் சமூக வலைத்தளத்தில் பகிர்ந்து ட்ரெண்டாக்கி வருகின்றனர்.

# துல்கருக்கு ஜோடியாகும் கல்யாணி பிரியதர்ஷன்





துல்கர் சல்மான் ஹீரோவாக நடிக்கும் தமிழ் படத்தில் அவருக்கு ஜோடியாகிறார் கல்யாணி பிரியதர்ஷன்.

துல்கர் சல்மான், கல்யாணி பிரியதர்ஷன் இருவரும் மலையாள நட்சத்திரங்கள். அதேசமயம் இவர்கள் தமிழிலும் நடித்துள்ளனர்.

இந்நிலையில், இயக்குநர் அட்லியின் உதவியாளர் கார்த்திகேயன் வேலப்பன் படம் இயக்குகிறார். இதில்தான் துல்கர் சல்மானுக்கு ஜோடியாக கல்யாணி பிரியதர்ஷன் நடிக்கவுள்ளார். தமிழில் உருவாகவுள்ள இந்தப் படத்துக்கு கோலி என பெயர் வைக்க யோசித்து வருகிறார்கள். இது முழு நீள ரொமான்டிக் படமாக உருவாகிறது.

துல்கரும் கல்யாணியும் நடிப்பதால் இந்தப் படத்தை மலையாளத்திலும் வெளியிடத் திட்டமிட்டுள்ளனர். இப்படத்தை ஜியோ ஸ்டுடியோஸ் நிறுவனம் தயாரிக்கவுள்ளது.

ஆக்‌ஷன் படங்களை இயக்கிவரும் அட்லி, தனது முதல் படமாக ராஜா ராணி என்ற காதல் கதையைத்தான் படமாக எடுத்தார். அதே பாணியில் தானும் காதல் ஜானரில் படம் செய்யப்போவதாக கார்த்திகேயன் வேலப்பன் கூறுகிறார்.

# சக நடிகைகளுக்கு கியாரா கூறும் எட்வைஸ்



பொலிவுட்டின் முன்னணி நடிகையாகத் திகழும் கியாரா அத்வானி, நடிகர் சித்தார்த் மல்ஹோத்ராவை காதலித்து திருமணம் செய்துகொண்டார். திருமணத்துக்குப் பிறகு மீண்டும் நடிக்க வந்திருக்கிறார். தற்போது ஷங்கர் இயக்கத்தில் ராம்சரண் ஜோடியாக கேம் சேஞ்சர் படத்தில் நடித்து வருகிறார்.

நடிகர்,-நடிகைகளின் சம்பள விடயம் குறித்து கியாரா அத்வானி சில கருத்துகளைத் தெரிவித்துள்ளார். அவர் கூறியிருப்பதாவது:-

சம்பளம் விடயத்தில் கதாநாயகர்களை விட கதாநாயகிகள் குறைவான சம்பளமே பெறுகிறார்கள். இது நீண்டகால பிரச்சினை என்றாலும், இதைப் பற்றி பேசி எந்தவித பிரயோசனமும் இல்லை. நமது திறமையைப் பொறுத்துத்தான் சம்பளம் நிர்ணயிப்பார்கள். ஹீரோயின்கள் எந்தளவு ரசிகர்களைக் கவர்வார்கள் என்பதைப் பொறுத்துத்தான் சம்பளம் நிர்ணயிக்கப்படுகிறது.

அதனால் இந்த விடயத்தில் யோசிக்காமல் நடிகைகள் தங்கள் நடிப்புத் திறமையை மெருகேற்றிக்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். நமது திறமைக்கு யார் அதிக மதிப்பு கொடுக்கிறார்களோ, அவர்களுடன் இணைந்து பணியாற்ற முயற்சிசெய்ய வேண்டும். அப்போது சம்பள விடயத்தைப் பற்றி யோசிக்க வேண்டிய அவசியமே இருக்காது.

இவ்வாறு கியாரா அத்வானி தெரிவித்துள்ளார்.

# புலனாய்வு த்ரில்லராக உருவாகும் 'லெவன்'

'கலகலப்பு 2', 'வந்தா ராஜாவா தான் வருவேன்', மற்றும் 'ஆக்ஷன்' ஆகிய திரைப்படங்களில் இயக்குனர் சுந்தர். சி.யிடம் உதவி இயக்குனராகப் பணியாற்றிய லோகேஷ் அஜில்ஸ் இயக்கத்தில் உருவாகும் திரைப்படம் 'லெவன்'.

தமிழ் மற்றும் தெலுங்கு ஆகிய இரு மொழிகளில் ஒரே நேரத்தில் உருவாகவுள்ள இத்திரைப்படத்தில் 'சரபம்', 'சிவப்பு' மற்றும் 'பிரம்மன்' உள்ளிட்ட படங்களில் நடித்த நவீன் சந்திரா நாயகனாக நடிக்கிறார்.

'லெவன்' திரைப்படம் குறித்து இயக்குனர் லோகேஷ் அஜில்ஸ் பேசியதாவது, ''ஆரம்பம்முதல் இறுதிவரை பார்வையாளர்களை இருக்கையின் நுனிக்கே கொண்டுவரும் விறுவிறுப்பான புலனாய்வுத் த்ரில்லராக 'லெவன்' அமையும் என்று நம்புகிறேன்" என்று கூறினார்.



# ரஷ்மிகாவுக்கு புதிய வாய்ப்பு

தனுஷின் 'ரி51' படத்தில் அவருக்கு ஜோடியாக நடிக்க நடிகை ராஷ்மிகா மந்தனா ஒப்பந்தமாகியுள்ளதாக படக்குழு அறிவித்துள்ளது.

நடிகர் தனுஷ் 'கேப்டன் மில்லர்' படத்தை முடித்துவிட்டார். இதில் பிரியங்கா அருள் மோகன், சிவராஜ் குமார் உட்படப் பலர் நடிக்கின்றனர். சத்ய ஜோதி பிலிம்ஸ் தயாரிக்கும் இதை அடுத்து, தனது 50ஆவது படத்தை இயக்கி நடிக்கிறார். இதை சன் பிக்சர்ஸ் தயாரிக்கிறது. இதில் துஷாரா விஜயன், சந்தீப் கிஷன் உட்படப் பலர் நடிக்கின்றனர். இதையடுத்து தெலுங்கு இயக்குநர் சேகர் கம்முலா இயக்கும் படத்தில் நடிக்கிறார் தனுஷ். தலைப்பிடப் படாத இப்படம் 'ரி51' என அழைக்கப்படுகிறது.

தமிழ், தெலுங்கு, ஹிந்தி மொழி களில் இந்தப் படம் வெளியாக இருக்கிறது. இதில் நடிகர் நாகார்ஜுனா நடிக்க இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில், இப்படத்தில் தனுஷுக்கு ஜோடியாக நடிகை ராஷ்மிகா மந்தனா நடிக்கிறார் என படக்குழு அறிவித்துள்ளது. ராஷ்மிகாவை பொறுத்தவரை அவர் 'அனிமல்' படத்தை முடித்துள்ளார். அடுத்து 'புஷ்பா', 'ரெயின்போ' படங்களில் நடித்து வருவது குறிப்பிடத்தக்கது.




# 'லியோ' - அர்ஜுனின் மாஸ்

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகி வரும் படம் 'லியோ'.

இப்படத்தை செவன் ஸ்கிரீன் ஸ்டுடியோஸ் சார்பில் லலித் குமார் தயாரிக்கிறார். அர்ஜுன், சஞ்சய் தத், திரிஷா, பிரியா ஆனந்த், மன்சூர் அலிகான், மிஷ்கின், கௌதம் வாசுதேவ் மேனன், சாண்டி, மெத்யூ தோமஸ் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கும் இப்படத்திற்கு அனிருத் இசையமைக்கிறார்.

இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து போஸ்ட் புரொடக்ஷன் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில், நடிகர் அர்ஜுனின் பிறந்தநாளை முன்னிட்டு அவரது கதாபாத்திரமான ஹரோல்ட் தாஸின் கிளிம்ப்ஸ் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த வீடியோவை ரசிகர்கள் இணையத்தில் அதிகம் பகிர்ந்து வருகின்றனர்.

# வீட்டுக்கு வந்த மருமகள் - பொன் விழா ஆண்டில் இந்தப் படங்கள்

## ஸ்வீட் கிக்ஸ்டி

ச.சுந்தரதாஸ்

ஒரு திரைப்படம் எப்படித்தான் எடுக்கப்பட்டிருந்தாலும் அப்படத்தை விறுவிறுப்பான படமாக மாற்றும் சாமர்த்தியம் அப்படத்தின் படத் தொகுப்பாளரிடமே இருக்கும். அவ்வாறு எடிட்டிங் துறையில் தன் திறமையை வெளிப்படுத்தி சாதனை புரிந்தவர்தான் அண்மையில் மறைந்த எடிட்டர் ஆர்.விட்டல். நூற்றுக்கும் மேற்பட்ட படங்களை எடிட்டிங் செய்த இவர், 1973ஆம் ஆண்டு பட இயக்குனராகவும் அவதாரம் எடுத்தார். அப்படி இயக்குனரா னவர் முதன் முறையாக இயக்கிய படம்தான் 'வீட்டுக்கு வந்த மருமகள்'.

குடும்பக் கதைகளை குறைந்த பட்ஜெட்டில் எடுத்து வெற்றிகண்டு கொண்டிருந்த தயாரிப்பாளர் சுப்ரமணிய ரெட்டியார் இந்தப் படத்துக்கு கதை எழுதி தயாரித்திருந்தார். பணத்திமிர் பிடித்த பாட்டி அந்தத் திமிரால் தன் சொந்த மருமகனையே அடிமைபோல் நடத்துகிறாள். அவனின் மனைவியும் அவனை துச்சமென எண்ணுகிறாள். அதனால் மனமுடைந்துபோகும் அவனுக்கு சித்த சுவாதீனம் ஏற்றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறான். இங்கோ அவனின் குடும்பம் பாட்டியின் முழுக் கட்டுப்பாட்டில் நடக்கிறது. பேரப்பிள்ளைகள் வளர்ந்து அவரவர் இஷ்டத்துக்கு காதலிக்கத் தொடங்கும்போது பிரச்சினைகள் சூறாவளிபோல் எழுகின்றன. பாட்டியின்



எதிர்ப்பை மீறி நடக்கும் திருமணத்தால் வீட்டுக்கு வந்த மருமகள் எவ்வாறு பாட்டியை திருத்துகிறார் என்பதே கதை.

ஆணவமிக்க பாட்டியாக நடிப்பவர் அப்பாத்திரங்களுக்கு என்றே முத்திரை குத்தப்பட்ட பழம்பெரும் நடிகை ஜி.வரலக்ஷ்மி. குலேபகாவலி, ஆரவல்லி, குழந்தையும் தெய் வமும், வீட்டுக்கொரு பிள்ளை போன்ற படங்களில் இது போன்ற வேடங்களில் நடித்துப் பாராட்டைப் பெற்ற வரலக்ஷ்மி இதிலும் அதே வேலையே செய்திருந்தார். மிடுக்கான தோற்றம், நடிப்பு. அவரிடம் அடங்கி அவமானப்படும் மருமகனாக உருக்கமாக நடித்திருந்தார் ஏ.வி.எம்.ராஜன். அவரின் மகனாக ரவிச்சந்திரன். அவரின் மனைவியாக வீட்டுக்கு வந்த மருமகளாக லதா. பேத்தியாக மனோரமா, வெண்ணிற ஆடை நிர்மலா, மனோரமாவின் கணவனாக சோ, நிர்மலாவின் ஜோடி முத்துராமன்.

எம்.ஜி.ஆரின் கதாநாயகியாக அறிமுகமான லதா இதில் ரவிச்சந்திரனுக்கு ஜோடியாக நடித்திருந்தார். கிளாமராக நடித்ததோடு ஒரு காட்சியில் நீச்சல் உடையிலும் தோன்றினார் அவர்.

இவர்களுடன் எம்.என்.ராஜம், தேங்காய் சீனிவாசன், வி.எஸ். ராகவன், ஒரு விரல் கிருஷ்ண ராவ், காந்திமதி, அங்கமுத்து, ஐசரிவேலன், தாம்பரம் லலிதா, கரிக்கோல் ராஜு ஆகியோரும் நடித்திருந்தார்கள். முதல் படத்திலேயே இத்தனைப் பேரிடமும் வேலை வாங்கும் வேலை விட்டலுக்கு. படத்தின் கதை பழசு என்றாலும் படத்துக்கான வசனங்கள் புதுசு. ஏ.எல்.நாராயணன், ச.அய்யாபிள்ளை இருவரும் இணைந்து அருமையான வசன விருந்தை படைத்திருந்தார்கள்.

கண்ணதாசன் பாடல்களை இயற்ற இசையமைத்தவர்கள் சங்கர் கணேஷ். இந்தப் படத்தில்தான் வாணி ஜெயராம் தமிழுக்கு அறிமுகமானார். ரி.எம்.எஸ்ஸுடன் அவர் பாடிய ஓரிடம் உன்னிடம் என் தேவையை நான் கேட்பது வேறாரிடம் பாடல் இனிமையாக ஒலித்துப் பிரபலமானது. ஏ.எம்.ராஜா, ஜிக்கி குரலிலும் ஒரு பாடல் இடம்பெற்றது.

என்.கே.விஸ்வநாதன் படத்தை ஒளிப்பதிவு செய்தார். தாமோதரம் படத் தொகுப்பை கவனித்தார். முதல் படத்தை நேர்த்தியாக டைரக்ட் செய்த விட்டல் அதன் பின் மேலும் சில படங்களை டைரக்ட் செய்து பிரபலமானார். ஏ.வி.எம். பட நிறுவனத்தில் உருவான இவர், பின்னர் 1979ஆம் ஆண்டு முதல் எஸ்.பி.முத்துராமன் இயக்கத்தில் ஏ.வி.எம். தயாரித்த ரஜினி, கமல் படங்களுக்கு எல்லாம் எடிட்டராக பணியாற்றி புகழ் பெற்று சமீபத்தில் புகழுடம்பேவினார்.



rrtmsd c r nsl h nl

# பாபா குகையில் தியானம் செய்யும் ரஜினி







நெல்சன் இயக்கத்தில் நடிகர் ரஜினி நடித்துள்ள ஜெயிலர் திரைப்படம் உலகம் முழுவதும் நாளை வெளியாகவுள்ளது. காவாலா, டைகர் ஹுக்கும் பாடல்கள் மற்றும் ஜெயிலர் ஆடியோ வெளியீட்டு விழாவில் நடிகர் ரஜினிகாந்தின் பேச்சு ஆகியவை படத்தின் எதிர்பார்ப்பை ரசிகர்களிடம் பெரிதும் தூண்டியுள்ளது.

இப்படியிருக்கையில், ஜெயிலர் படம் வெளியாவதற்கு முந்தைய நாள் நடிகர் ரஜினிகாந்த் ஆன்மீகப் பயணமாக இமயமலை புறப்பட்டுச் சென்றார். அண்ணாத்த படம் தொடங்குவதற்கு முன்பு கடந்த 2019ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ரஜினிகாந்த் இமயமலைக்கு சென்று வந்தார்.

கொரோனா பரவல் மற்றும் தனது உடல்நிலை காரணமாக கடந்த 4 ஆண்டுகளாக வெளியிடங்களுக்குச் செல்வதை ரஜினி தவிர்த்து வந்தார். இந்நிலையில், அவர் மீண்டும் இமயமலைக்கு ஆன்மிகப் பயணம் மேற்கொண்டுள்ளார். உத்தரகாண்ட் மாநிலம் ரிஷிகேஷில் உள்ள தயானந்த் சரஸ்வதி மடம், வியாசர் குகை, சரஸ்வதி நதி மறையும் இடத்திற்கு ரஜினி சென்ற புகைப்படங்கள் சமூகவலைத்தளங்களில் வைரலாகி வருகின்றன.

இந்நிலையில், மகாவதார் பாபாஜி குகைக்கு செல்வதற்காக பொலிஸ் பாதுகாப்புடன் சுமார் 2 மணிநேரம் ரஜினிகாந்த் மலையேறிய புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளன. மேலும் அவர் பாபா குகையில் தியானம் செய்த புகைப்படங்கள் வைரலாகி வருகின்றன.





# புரிதலில் மகிழ்ச்சி

கோபம் ஓர் இயற்கையான மனித உணர்வாகும். நியாயமான காரணங்களுக்காக கோபப்படுவது எப்போதும் தவறில்லை. கோபத்தை உணரவும், அதனை வெளிப்படுத்தவும் ஒருபோதும் தயங்கக்கூடாது. காதல் உறவில் அடிக்கடி கோபம் கொள்வது மிகவும் சகஜமானதுதான்.

கோபம் நியாயமான காரணத்துக்காகவும், பாதிப்பை ஏற்படுத்தாத வகையிலும் இருக்கும்வரை உறவுகளில் அதனை அனுமதிக்கலாம். ஆனால், உங்களின் கோபம் உங்கள் துணையை கடுமையாகப் பாதிக்கும் வகையில் இருந்தால் நிச்சயம் அதனை குறைத்துக்கொள்ள வேண்டும்.

உங்கள் துணை கோபமாக இருக்கும்போது அவர்கள் உங்களின் வார்த்தைகளுக்கு ஒத்துழைக்காதவர்களாக இருக்கலாம். உங்கள் துணை கோபமாக இருக்கும்போது பதிலுக்கு நீங்களும் கோபம் கொள்வது புத்திசாலித்தனமானதாக இருக்காது.

உங்கள் துணையை கோபமாக இருக்க அனுமதிப்பது நல்லது. சிறிது நேரத்துக்குப் பிறகு அவர்களாகவே அமைதியாகிவிடுவார்கள். நீங்கள் எவ்வளவு அமைதியாக இருக்கிறீர்களோ, அவ்வளவு விரைவாக அவர்களின் கோபம் குறையும்.

வார்த்தைகளில் கவனம் வேண்டும். உங்கள் துணையிடம் நீங்கள் பயன்படுத்தும் வார்த்தைகளில் எப்போதும் கவனமாகவும் பொறுமையாகவும் இருங்கள். உங்கள் துணை கோபமாக இருக்கும்போது நிலைமையை மோசமாக்கும் எதையும் நீங்கள் கூறக்கூடாது.

உங்கள் துணையை மேலும் கோபப்படுத்தாமல் இருக்க, நடுநிலையான வார்த்தைகளைப் பயன்படுத்த முயற்சிக்கவும்.

உங்கள் துணையின் கோபத்தைத் தூண்டும் அல்லது மோசமாக்கும்படி நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதைப் பற்றி சிந்தியுங்கள். உங்கள் துணையின் இயல்பான குணமே அதுதானா அல்லது உங்களின் செயல்பாடுகளால் அவர்கள் கோபம் கொள்கிறார்களா என்பதை சிந்தியுங்கள். எந்தவித நியாயமும் இல்லாமல் உங்களின் மீது பொய்யான குற்றஞ்சாட்டினால் நீங்கள் உங்கள் உறவு குறித்து மறுபரிசீலனை செய்யவேண்டிய நேரமிது.

பொறுமையாக இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். பெரும்பாலும் கோபத்துக்கான அடிப்படைக் காரணமாக பயம், சோகம் அல்லது வலி போன்ற ஆழமான மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய உணர்ச்சிகள் உள்ளன.

அவர்கள் எந்த உணர்ச்சிகளால் அடிக்கடி கோபம் கொள்கிறார்கள் என்பதை சிந்தியுங்கள். ஒருவேளை உங்கள் துணை இந்த உணர்வுகளால் கோபப்பட்டால் அவர்களிடம் கருணைக் காட்டுங்கள். அந்த இடத்தைவிட்டு நகருங்கள் உங்கள் துணையின் கோபம் அவர்களாலும், உங்களாலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்குச் சென்றால் உடனடியாக அந்த இடத்தை விட்டு நகர்ந்து விடுங்கள்.

ஏனெனில், அந்தத் தருணத்தில் நீங்கள் பேசும் வார்த்தைகள் உங்கள் துணையால் தவறாக புரிந்து கொள்ளப்படும். இது பிரச்சினைகளை மேலும் பெரிதாக்கும். உங்கள் நிலையை விளக்கவும் உங்கள் துணையின் உணர்ச்சி நிலை அதிகமாக இருக்கும்போது, அவர்களின் அறிவாற்றல் நிலை பாதிக்கப்படலாம். கோபம் ஆதிக்கம் செலுத்தும் வரை உங்கள் பிரச்சினையைப் பற்றி உங்கள் துணையுடன் பேசுவதில் எந்த அர்த்தமும் இல்லை. உங்கள் துணையின் கோபம் குறைந்தவுடன் அவர்கள் கோபத்தில் எப்படி நடந்து கொண்டார்கள், அதனால் நீங்கள் எப்படி பாதிக்கப்பட்டீர்கள் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளும்படி விளக்குங்கள்.

# ஜிகினாவிடம் கேளுங்கள்!

**நீங்கள் முட்டாள்தனமாக நினைக்கும் விடயங்கள் எவை?**
**மாதினி - அப்புத்தளை**

ஆடியில் குழந்தை பிறந்தால் குடும்பத்துக்கு ஆகாது என்று சொல்லுவது –

சனிக்கிழமை யாரேனும் இறந்தால் அடுத்தடுத்து இறப்பு நிகழும் எனக் கூறுவது –

பல்லி தலையில் விழுந்தால் மரணம் ஏற்படும் என்பது –

பூனை குறுக்கே போனால் போகும் காரியம் தடைப்படும் என்பது –

விதவைப்பெண்ணை எதிரில் கண்டால் அன்றைய பொழுது சுகமாக இருக்காது என்பது –

மகப்பேறு மருத்துவர் உதவியுடன் பிறக்கப் போகும் குழந்தையை நல்ல நேரம் பார்த்து எடுப்பது –

பெண்களின் கால் விரலில் பெருவிரலின் அருகேயுள்ள பக்கத்து விரல் கொஞ்சம் உயரமாக இருந்தால் யாருக்கும் அடங்காதவள் என்பது –

அட்சயதிரிதியை அன்று நகை வாங்கினால் பணம், நகைகள் பன்மடங்கு பெருகும் என்பது –

**என்ன வார்த்தைகள் ஒருவரை அதிகம் புண்படுத்தும்?**
**அன்ரன் - மத்துகம**

★ உங்களை இதையெல்லாம் செய்யச் சொல்லி நான் கேட்டேனா? பெற்றோரிடம் பிள்ளைகள் கூறும்போது.

★ நீங்கள் தெரிவு செய்யப்படவில்லை. ஏதும் வாய்ப்பு இருந்தால் தகவல் தருகிறோம் – வேலை தேடி அலையும்போது.

★ இது உனக்கு சரியா வராது விட்டுரு – கனவு கண்டுகொண்டிருக்கும் வாழ்க்கை இலட்சியத்தை குடும்பத்துக்காக விட்டுவிட சொல்லும்போது.

★ உன்னைவிட அவ பெட்டர் – ஒப்பிட்டுப் பேசுவது எப்பவுமே வலிக்கும்.

★ உன்னை எனக்குப் பிடிக்கலை – காதலை தெரிவிக்கும்போது ஏற்றுக்கொள்ளாமல் போகும்போது.

★ இது கூட உனக்கு தெரியாதான்னு நக்கலா கேட்பவர்களிடம் திரும்பி பேசுற நிலைமையில நாம இல்லாதபோது.

★ உன் மேலே எனக்கு நம்பிக்கையில்லைன்னு யார் நம்மல நம்புவாங்கன்னு நினைச்சோமோ அவங்க சொல்லும்போது.

★ வீட்டுல சும்மா தானா இருக்கன்னு மனைவியிடம் கணவன் கூறும்போது.

★ இன்னும் திருமணம் ஆகலையான்னு பெண்ணிடமும், இன்னும் வேலை தேடிக்கிட்டுதான் இருக்கியான்னு ஆணிடமும் கேட்பது.

★ சில நேரங்களில் வார்த்தைகள் தான் புண்படுத்தணும்னு இல்லை. நாம ரொம்ப அன்பு வைச்சிருக்கவங்க மௌனம் கூட மனதை புண்படுத்திவிடும்.

**ஒரு காலத்தில் நீங்கள் வாழ்க்கையைப் பற்றி புரிந்து கொண்ட சில விஷயங்கள் எவை?**
**சுகுமார் தெமட்டகொட**

பணத்தால் வாங்க முடியாத விஷயங்கள் நிறைய உள்ளன.

எதையும் எதிர்பார்க்காத உறவுகள் கிடைப்பது அரிது.

நம் உறவுகளைத் தக்கவைத்துக் கொள்ள நாம் எவ்வளவு போராடினாலும் அதை முடிவு செய்வது என்னவோ பணம்தான்.

மூத்தோர் வாக்கு என்றும் பொய்க்காது.

மற்றவர்களுக்கு நன்மை செய்தால் என்றாவது பலன் கிடைக்கும். கெடுதல் செய்தால் உடனே பலன் கிடைக்கும்.

நட்புக்காக பழகுபவர்களைவிட தேவைக்காக பழகுபவர்களே அதிகம்.

உண்மையான அன்பு கிடைக்காவிடில், அதிக பணமிருந்தாலும் அவர் ஏழை தான்..



உங்கள் கேள்விகளை 65 0 8 7 என்ற வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்பிவைக்கலாம்.
**'ஜிகினாவிடம் கேளுங்கள்'**
**வட்ஸ்அப் : 076 139 3805**




# விமர்சனம்

காவல்துறையிலிருந்து ஓய்வுபெற்ற முத்துவேல் என்கிற டைகர் முத்துவேல் பாண்டியன் (ரஜினிகாந்த்) குடும்பத்துடன் முதுமைப் பருவத்தை அமைதியாகக் கழிக்கிறார். முத்துவேலின் மகனும் காவல்துறை துணை ஆணையருமான அர்ஜுன் பாண்டியன் (வசந்த் ரவி), வர்மன் (விநாயகன்) என்னும் சிலை கடத்தல் மாஃபியாவை எதிர்க்கிறார். திடீரென்று அர்ஜுன் இறந்துவிட்டதாகத் தகவல் வருகிறது. மகனின் மரணத்துக்குக் காரணமான வர்மன் குழுவைப் பழிவாங்கக் கிளம்புகிறார் முத்துவேல். அந்தக் குழுவில் ஒவ்வொருவராக



அழித்து வர்மனை நெருங்கினால், அர்ஜுன் உயிரோடு இருப்பது தெரிகிறது.

ஆந்திராவில் ஆதி நாராயணர் கோயிலில் இருக்கும் பழங்கால வைரம் பதித்த கிரீடத்தைத் திருடிக் கொடுத்தால் அர்ஜுனை விடுவதாக முத்துவேலிடம் பேரம் பேசுகிறார் வர்மன். மகனுக்காக அதை ஏற்கும் முத்துவேல் பிறகு என்ன செய்கிறார்? அர்ஜுன் காப்பாற்றப்பட்டாரா? எனும் கேள்விகளுக்கு விடை சொல்கிறது மீதிப் படம்.



தனது ‘டிரேட் மார்க்’ ‘டார்க் காமெடி’யையும் ரஜினி ரசிகர்கள் எதிர்பார்க்கும் மாஸ் ஆக்‌ஷன் காட்சிகளையும் சரிவிகிதத்தில் கலந்து ரசிகர்களைத் திருப்திப்படுத்த முயன்றிருக்கிறார் இயக்குநர் நெல்சன்.

முதல் பாதி நிதானமாகத் தொடங்கினாலும் விரைவில் கதையின் மைய முடிச்சுக்குள் நுழைந்துவிடுகிறது திரைக்கதை. தொடக்கக் காட்சிகளில் வீட்டு வேலையில் மனைவிக்கு (ரம்யா கிருஷ்ணன்) உதவிக்கொண்டும் பேரனின்(ரித்விக்) யூடியூப் சேனலுக்கு காணொளி தயாரிக்க உதவியபடியும் பொழுதைக் கழிக்கும் முதியவராக ரஜினியைப் பார்ப்பது ஆச்சரியம்.

முதல் பாதியைப் பெருமளவில் ரஜினியின் மாஸ் காட்சிகளுக்காக ஒதுக்கியிருக்கிறார். அந்தக் காட்சிகளில் ரசிகர்களின் விசில் சத்தத்தைக் கேட்க முடிகிறது. ஆனால் முத்துவேல், ‘ஒத்தையாக’ சென்று சிலை கடத்தல் வலைப்பின்னலின் ஆட்களைக் கொல்லும் காட்சிகள் சாதாரணமாகக் கடக்கின்றன. ரஜினிக்கு இருக்கும் மிகை நாயக பிம்பத்தால் அவர் எதைச் செய்தாலும் ரசிகர்கள் ஏற்பார்கள் என்பதால் இயக்குநர் இந்தக் காட்சிகளுக்கு அதிகம் மெனக்கடவில்லையோ என்று தோன்றுகிறது.



அதேநேரம் அவருக்கும், யோகிபாபுவுக்குமான உரையாடல்களில் வெளிப்படும் நகைச்சுவை, பெங்களூரில் முன்னாள் கைதியைச் (சிவராஜ்குமார்) சந்திக்கும் காட்சி, முத்துவேலின் சுயரூபம் வெளிப்படும் இடைவேளைக் காட்சி ஆகியவற்றால் முதல் பாதி கலகலப்பாக நகர்ந்துவிடுகிறது.

இரண்டாம் பாதியில் ஜெயிலர் முத்துவேலின் ஃப்ளாஷ்பேக் ஓரளவு ஈர்க்கிறது. பிறகு கிரீடத்தைத் திருடும் பணியை முத்துவேல் ஏற்றுக்கொண்ட பின் திரைக்கதை தடுமாறுகிறது. முத்துவேலுக்கு உதவும் இன்னொரு தாதா மோகன்லால் வரும் காட்சி ரசிக்க வைக்கிறது. கிரீடம் கடத்தப்படுவதும் அடுத்த சில காட்சிகளும் திரைக்கதைக்கு சுவாரஸ்யம் கூட்டுகின்றன. பிறகு வரும் ‘ட்விஸ்ட்’ வழக்கமானதாக இருக்கிறது.

இறுதியில் ர ஜி னி சிவராஜ்குமார், மோகன்லால் மூவரும் சேர்ந்து எதிரியை வீழ்த்தும் புத்திசாலித்தனம் ரசிக்க வைக்கிறது.

யூஃஏ சான்றிதழ் பெற்றிருக்கும் இதில் கழுத்தை வெட்டுவது உட்பட அப்பட்டமான வன்முறைக் காட்சிகளை அனுமதித்திருப்பது கண்டனத்துக்குரியது.

ரஜினிகாந்த் மகனின் இழப்பை எதிர்கொள்ளும் காட்சிகளில் நுட்பமான உணர்வுகளை அழகாக வெளிப்படுத்தி நடிப்பில் யாருக்கும் சளைத்தவரல்ல என்பதை நிரூபித்திருக்கிறார். கொடூர வில்லனாக விநாயகன் சிறப்பாக நடித்திருக்கிறார். யோகிபாபு, சுனில், சுனில் ரெட்டி, ஜாஃபர் சாதிக் ஆகியோர் ஆங்கங்கே சிரிக்க வைக்கிறார்கள். ரம்யாகிருஷ்ணனுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லை. வசந்த் ரவி, சரவணன் என முக்கிய துணை கதாபாத்திரங்களுக்குப் பெரிதாக வேலை இல்லை. தமன்னா ஒரே ஒரு பாடலுக்கு ஆடிவிட்டு சில காட்சிகளில் வந்து செல்கிறார்.

னிருத் இசையில் ‘காவாலா’ ஆட்டம் போட வைக்கிறது. பின்னணி இசை மாஸ் காட்சிகளின் தாக்கத்தை அதிகரித்திருக்கிறது. விஜய் கார்த்திக் கண்ணனின் ஒளிப்பதிவு, ரஜினியை வெவ்வேறு கோணங்களில் மிடுக்காகக் காண்பித்திருக்கிறது. ஆர்.நிர்மலின் படத்தொகுப்பு திரைக்கதையின் சீரான பயணத்துக்குத் துணைபுரிந்திருக்கிறது.

எதிர்பார்ப்புகளை ஓரளவு நிறைவேற்றி ரசிகர்கள் ஏமாற்றம் அடைவதைத் தவிர்த்திருக்கிறது ‘ஜெயிலர்’. திரைக்கதைக்குக் கூடுதலாக மெனக்கெட்டிருந்தால் நிறைவைத் தந்திருக்கும்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo - 07